m211, N14
N14.2
160962

160963

GLOSSARY

அரும்பத விளக்கம்

பக்கம்	பாரா	அரும்பதம்	விளக்கம்
1	1	இறந்தாள்	செத்தாள்
,,	,,	தந்தை	தகப்பன்
,,	,,	ஆதரவு	உதவி
,,	,,	அற்றவர்கள்	நீங்கினவர்கள்; இல்லாதவர்கள்
,,	2	நாழிகை	இருபத்துநான்கு நிமிஷநேரம்
,,	,,	உணவு	ஆகாரம்
,,	,,	அரிதாக	அருமையாக
,,	,,	குடிகொண்டிருக்கிறது	நீங்காமல்இருக்கிறது (வாசஞ் செய்துகொண்டிருக்கிறது)
,,	,,	அன்னை	தாய்
,,	,,	மேனி	சரீரம்
2	3	பொழுதுசாய்ந்ததும்	பொழுதுபோனதும், அதாவது இரவு வந்ததும்
,,	,,	அயர்ந்து	சோர்ந்து
,,	4	புலர்ந்தது	விடிந்தது
,,	,,	நாவறட்சி	நீர்த்தாகம்
,,	6	அடைந்தார்கள்	சேர்ந்தார்கள்
,,	,,	அவல்	ஆசை
,,	,,	பருகலாம்	குடிக்கலாம்
3	6	சிறுமி	பெண்
,,	,,	அருந்தாதே	குடிக்காதே
,,	,,	தமக்கை	அக்காள்
,,	7	நீர்நிலை	குளம்; மடு
,,	,,	தென்படும்	காணப்படும்
4	9	தலைப்பட்டது	ஆரம்பித்தது
,,	10	அணிந்தாள்	தரித்தாள்
,,	11	கறித்தது	புசித்தது; தின்றது
,,	12	பின்னர்	பிறகு
,,	,,	உறங்கினாள்	தூங்கினாள்
5	1	விளங்கினது	பிரகாசித்தது
,,	,,	திரண்டு	கூடி

அரும்பதவிளக்கம்

பக்கம்	பாரா	அரும்பதம்	விளக்கம்
,,	2	ஒலிக்க	சப்திக்க
,,	3	வேட்கை	ஆசை
,,	5	எதேச்சையாய்	தன் இஷ்டப்படி
6	,,	வியக்கும்படி	அதிசயப்படும்படி
,,	,,	சிக்கிக்கொண்டதாக	அகப்பட்டுக்கொண்டதாக
,,	,,	அகன்றது	நீங்கினது
,,	6	பைம்புல்	பசும்புல்
,,	1	அவ்வனத்தில்	அந்தக்காட்டில்
,,	,,	வரவை	வருகையை
,,	,,	இம்முறை	இந்தத்தடவை
,,	2	முயற்சி	ஊக்கம்
7	3	அந்தரங்கத்தை	இரகசியத்தை
,,	4	உதிரத்தினை	இரத்தத்தினை
,,	5	அளிக்கும்படி	கொடுக்கும்படி
,,	6	இடையில்	நடுவில்
,,	,,	கொலையுண்பாய்	கொல்லப்படுவாய்
,,	,,	தன்னந்தனியளாய்	ஒண்டியாக
8	,,	தவிப்பேன்	இளைப்பேன்
,,	,,	இராரே	இருக்கமாட்டார்களே
,,	,,	உகுத்தாள்	சிந்தினாள்
,,	7	சிக்கேன்	அகப்படமாட்டேன்
,,	2	அங்ஙனமே	அப்படியே
,,	4	கோமான்	அரசன்
9	6	சவரக்ஷணை	ஆதரவு
,,	,,	அரையன்	அரசன்
9	7	புரி	கயிறு
,,	9	பக்ஷிக்கப்பட்டு	தின்னப்பட்டு
,,	,,	க்ஷேமமாக	சுகமாக
10	2	செவிலித்தாய்	குழந்தையை வளர்க்குந்தாய்
,,	3	இருத்தினாள்	இருக்கச்செய்தாள்
,,	,,	நேர்ந்தது	சம்பவித்தது
11	7	அனைத்தையும்	எல்லாவற்றையும்
,,	9	கரத்தைப்பற்றி	கையைப்பிடித்து
12	10	திங்களை	செந்திகளை
,,	11	உடலம்	சரீரம்.

K. R. Press, Madras—1915.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 JUN 1916
MADRAS

பொன்மான்

முதல் அத்தியாயம்

பல வருஷங்களுக்கு முன்னே பிரபு ஒருவர் இருந்தார். அவருக்கு நெடுநாள் பிள்ளையில்லா திருந்தது. பிறகு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு வயது ஐந்தானபிறகு வேறு ஒரு குழந்தை பிறந்தது. அது ஆண்குழந்தை. அதற்கு வயது நான்கு நிறைந்ததும் தாய் இறந்தாள். தாய் இறந்த சில மாதங்களுக்குள் தந்தை இறந்தான். தாயும் தந்தையும் இறக்கவும் அவர்கள் ஆதரவு அற்றவர்களானார்கள். அப்படி ஆகவும் அவர்களுக்குத் துக்கம் அதிகரித்தது.

2. ஒருநாள் சிறுவன் தன் சகோதரியின் கையைப்பிடித்துக் கொண்டு, "நம்தாயார் இறந்ததுமுதல் ஒரு நாழிகைப்பொழுதாவது நாம் சந்தோஷமாக இருந்ததில்லையே! நமக்கு அன்னம் அளிப்பவர்கள் நம்மை மிகவும் கொடுமையாக நடத்துகிறார்களே! வயிற்றுக்கு நல்ல உணவு அகப்படுவது அரிதாக இருக்கிறதே! வயிறு நிரம்பச் சாப்பிட்டு எவ்வளவோ காலமாயிற்றே! எப்பொழுதும் வயிற்றில் பசி குடிகொண்டிருக்கிறதே! தெரு நாய்களைவிட இழிவான நிலையில் இருக்கிறோமே! இப்படி இருப்பதை - இப்படிப் பசியால் வருந்துவதை, நம் அன்னை அறிந்தால் சகிப்பாளோ? அவள் இருக்கையில் நம்மேனி இப்படி வாடினதில்லையே! இப்படி முகம் கருகினதில்லையே! இப்படிப் பசி வயிற்றில் குடிகொண்டதில்லையே! இப்படி எல்லாவிதமான சுகத்தையும் இழந்து இவ்விடத்தில் இருந்து வருந்துவதைப்பார்க்கிலும் வேறு எவ்விடத்திற்காவது போய்விடலாம் என்று நினைக்கிறேன். எங்குப்போனாலும் இதைவிடத் தாழ்ந்தநிலை நமக்கு இனிவர இடமில்லை. இப்பொழுது இருக்கும் நிலையே மிகத்தாழ்ந்தது" என்று சொன்னான்.

3. வேறு இடத்திற்குப் போவதைப்பற்றி அவன் சகோதரியும் சம்மதித்தாள். உடனே அவர்கள் இருவரும் கைகோர்த்துக்கொண்டு புறப்பட்டார்கள். அன்று பகற்பொழுதெல்லாம் நடந்து, பொழுது சாய்ந்ததும் ஒரு பெரிய காட்டை அடைந்தார்கள். ஒருநாளெல்லாம் நடந்த அலுப்பினால், என்றும் அவ்வளவு தூரம் நடந்தறியாத அக்குழந்தைகள், மரத்தடியில் படுத்ததும் நன்றாய் அயர்ந்து தூங்கிவிட்டார்கள்.

4. மறுநாள் காலையில் பொழுது புலர்ந்தது. சூரியன் 'தக' 'தக' என்று பிரகாசித்துக்கொண்டு கீழ்த்திசையில் உதித்தான். சிறுவர்களும் நித்திரை தெளிந்து எழுந்து, கைகால் கழுவ நீர் தேடிச் சென்றார்கள். செல்லுகையில் சிறுவன், "இவ்வளவு காலையில் எனக்கு அதிக நாவறட்சியாக இருக்கிறது. ஓர் ஓடையாவது ஊற்றாவது அருகில் இருந்தால் என் நாவறட்சியைத் தீர்த்துக் கொள்வேன்" என்று சொன்னான்.

5. அப்பொழுது, 'சல, சல' என்னும் சப்தம் கேட்டது. சிறுவன் நின்று அச்சத்தம் வரும்வழியைக் கவனித்து, "ஓடையில் நீர் ஓடுகிறதுபோல் காணப்படுகிறது" என்றான். உடனே சிறுமி, சிறுவனை அழைத்துக்கொண்டு அவ்வோடையைத் தேடிச் சென்றாள்.

* * * * * *
* * * * * *

இச்சிறுவர் இருவரும் தம்வீட்டை விட்டு வந்ததைப் பொல்லாத மந்திரக்காரி யொருத்தி பார்த்திருந்து, அவர்களைப் பின் தொடர்ந்து வந்தாள். அந்தக்காலத்தில் இவ்விதமான மந்திரக்காரிகள் தங்கள் மந்திரபலத்தால் ஆறுகளிலும் குளங்களிலும் சில மாயச்செய்கை செய்வது வழக்கம். அப்படியே இந்த மந்திரக்காரியும் மந்திரத்தால் அக்காட்டிலுள்ள ஓடை ஊற்றுகளிலெல்லாம் மாயங்கள் செய்து விட்டாள்.

* * * * * *
* * * * * *

6. ஓடையில் நீர் ஓடும் சப்தம் வரும்வழியே நடந்து வந்து கடைசியில் ஓடையைச் சிறுவர்கள் அடைந்தார்கள். சிறுவன் தன் ஆவலடங்க - நாவறட்சிதீரத் தண்ணீரை அள்ளிப் பருகலாமென்று குனிந்தான். அப்பொழுது அந்த ஓடை,

"என்னிடத்தில் நீர் பருகுவோன், புலியாக மாறிவிடுவோன்"

என்று மிருதுவாக மொழிந்தது.

அதைக்கேட்ட சிறுமி, "தம்பி! பொறு, பொறு. இங்கே நீர் அருந்தாதே. அருந்தினால் நீ ஒரு புலியாக மாறி என்மீது பாய்ந்து என்னைக்கொன்று விடுவாய்" என்று சொல்லித் தன் சகோதரனைத் தடுத்தாள்.

சிறுவனுக்குத் தாகம் அதிகமாய் இருந்தபோதிலும், தண்ணீரைக் குடிக்காமல் தன் சகோதரியைப்பார்த்து, "என் அருமைத் தமக்கையே, நான் நீர் பருகுவது உனக்குச் சம்மதம் இல்லாமையால் என் நாவறட்சியை இப்பொழுது அடக்கிக்கொள்கிறேன். நீ சீக்கிரத்தில் வேறு ஓடையைக்காட்டும் வழியைப் பார்" என்றான்.

7. பிறகு அவள், அவனை அழைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுப்போனாள். சற்று நேரத்திற்கெல்லாம் அவர்கள் ஓர் ஊற்றண்டை வந்தார்கள். அவர்கள் நெருங்கினதும் அது,

"என்னிடத்தில் நீர் குடிப்பவன், நரியாகி விடுவோன்"

என்று சொல்லிற்று.

அதைக்கேட்ட சிறுமி, "தம்பி, கொஞ்சம் பொறுத்துக் கொள். இதில் நீர் அருந்தினால் நீ நரியாகமாறி என்னைத்தின்று விட்டு ஊளையிடுவாய்" என்று மொழிந்தாள்.

அதைக்கேட்டு அவன் ஒருவாறு தாகநோயைப் பொறுத்துக்கொண்டு, "தமக்கையே, வேறு நீர்நிலை யொன்றைத் தேடிப் போவோம் வா. இனித்தென்படும் நீர்நிலையில் அவசியம் நீர் குடித்தே தீருவேன்; எனக்குத் தாகவிடாய் அதிகரித்திருக்கிறது" என்றான்.

8. சற்று நேரத்திற்கெல்லாம் அவர்கள் ஒரு சிறு ஓடையைக் கண்டார்கள். அவ்வோடையில் ஓடும் ஜலம் முத்தைப் போல வெண்மையாயும் சுத்தமாயும் இருந்தது. அந்த ஜலத்தைக் கண்டதும் சிறுவன் நீர் குடிக்க அதிக ஆவலோடு குனிந்தான். அப்பொழுது அவ்வோடை,

"என்னிடத்தில் நீர் குடிப்பவன், ஓர் இளமானவான்"

என்று கூறியது.

சிறுமி அதனைக்கேட்டு, "தம்பி, இந்த ஓடையில் நீரினை அருந்தாதே. அருந்துவாயானால் நீ ஓர் இளமானாகி என்னைவிட்டுப் பிரிந்து துள்ளித் துள்ளிக் குதித்து ஓடி விடுவாய்" என்றான்.

9. அவள் அப்படிச் சொல்லி என்ன பிரயோசனம்? ஒன்றுமில்லை. அவள் வாயைவிட்டு அவ்வார்த்தைகள் வெளிப்படுமுன்னரே அவன் அத்தண்ணீரை அள்ளிப்பருகினான். நீர் நாவினிற்பட்டமாத்திரத்தில் அவன் ஓர் இளமானாக மாறிவிட்டான். மானுருவடைந்த தன் சகோதரனைக் கண்டதும் அச்சிறுமியின் மனம் வருந்தத் தலைப்பட்டது. அவளுடைய கண்கள் நீரைத் தாரைதாரையாகச் சொரியத் தலைப்பட்டன. அந்த மானும் கண்ணீர்விட்டு வருந்தி, அவளைநெருங்கி, அவள்மீது தன்னுடல் படும்படி நின்றது.

10. அவள் தன் கழுத்தில் அணிந்திருந்த மெல்லிய தங்கச் சரடு ஒன்றினைக் கழற்றி அம்மானின் கழுத்தில் அணிந்தாள். பிறகு அங்கு வளர்ந்திருந்த நீண்ட பசும்புற்களிற் சிறிது பிடுங்கி ஒரு கயிறாகத்திரித்து, அதன் கழுத்தில் தான் முதலில் அணிந்த சரட்டிற் கட்டினாள்.

11. அதன்பின், அவர்கள் அவ்விடத்தினின்றும் நீங்கி நடுக்காட்டுள் நுழைந்து சென்றார்கள். வெகுதூரஞ் சென்றதும் பாழடைந்த மாளிகை யொன்று இருக்கக் கண்டார்கள். கண்டதும் இருவருக்கும் ஒருவிதமான மகிழ்ச்சி யுண்டாயிற்று. உடனே அம்மாளிகையை யடைந்து அதில் தங்கி இளைப்பாறினார்கள். சிறிது நேரங்கழிந்ததும் சிறுமி எழுந்து தன்சகோதரனாகிய மானுக்கு வேண்டிய உணவுக்கும் படுக்கைக்கும், புல்லும் தழையும் சேகரித்து வரச்சென்றாள். சென்ற அவள் புல்லுடனும் தழையுடனும் சற்று நேரத்திற்கெல்லாம் திரும்பிவந்தாள். அவளைக் கண்டதும் அம்மான்கன்று துள்ளிக்குதித்தோடி அவள் கையிலிருந்த பசும்புல்லினைக் கறித்தது.

12. பொழுது சாய்ந்ததும் சிறுமியானவள் அங்கு காணப்படும் கிழங்குகளையும் காய்கனிகளையும் பொறுக்கித் தின்றுவிட்டுக் கடவுளை நினைத்துத் துதித்துப் பின்னர்ப் பட்டுத் தலையணைபோல் மழமழவென்றிருக்கும் அம்மானுடைய வயிற்றின்மீது தன்தலையை வைத்துப் படுத்துறங்கினாள். இவ்விதமாகவே பலநாள் கழித்தாள் அவ்விடத்தில் அப்பெண்மணி.

இரண்டாம் அத்தியாயம்.

1. பலநாள் கழிந்தபிறகு அப்பெண் யௌவனமடைந்தாள். மான்குட்டியும் வயது முதிர்ந்து கண்ணுக்கு இனியதொரு கலைமானாக விளங்கினது. அப்படி யிருக்கையில் ஒருநாள் அக்காட்டில் அந்நாட்டரசன் வேட்டையாட வந்தான். அவனோடு அநேக வேடர்கள் திரண்டு வந்தார்கள்.

2. ஊதுகொம்பின் ஓசையும், வேட்டைநாய்களின் குரைப்பும், காட்டைக்கலக்க வேடர்கள் இடும் முழக்கொலியும் ஒன்றுகூடிக் காடெங்கும் 'கல்' என்று ஒலிக்க ஆரம்பித்தன. சிறுமியின் சகோதரனான மான், அவ்வொலியைக்கேட்டு மற்ற மான்களோடு போய்ச்சேர விரும்பியது.

3. அது தன் சகோதரியைப்பார்த்து, "தமக்கையே, அரசன் வேட்டைக்கு வந்திருக்கிறான்; மான்கள் ஓடுகின்றன; நானும் அவைகளுடன் சென்று அரசன் வேட்டையாடுவதைப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன். வேட்டையாடுதலைப்பார்க்க எனக்கு வேட்கை அதிகமாயிருக்கிறது. எனக்குத் தயைசெய்து உத்தரவு அளிக்க வேண்டும்" என்று சொல்லிக் கெஞ்சினது.

4. அதை அனுப்பச் சிறுமிக்கு ஒரு சிறிதும் இஷ்டமில்லை. அப்படி யிருந்தும் அது பிடிவாதமாய்த் தொந்தரை செய்ததின் பேரில் அரை மனதோடு அதை அனுப்ப உடன்பட்டு, "நல்லது, உன் இஷ்டப்படியே போய்வா. நீ போனதும் நான் கதவைத் தாழிட்டுக் கொள்ளப்போகிறேன். அப்படிக் கதவைச்சாத்தித் தாழிட்டாற்றான் வேடர்கள் உபத்திரவம் இல்லாதிருக்கும். நீ சாயங்காலம் திரும்பி வந்ததும் கதவைத்தட்டி, 'என் அருமைத் தமக்கையே, கதவைத்திற' என்று சொல்லவேண்டும். அப்பொழுதுதான் அத் தட்டுதலை உன்னுடையதென வறிந்து கதவைத் திறப்பேன். இல்லாவிடில் திறக்கமாட்டேன். இவ்விஷயம் உன் மனத்தில் நன்றாகப் பதிந்திருக்கட்டும்" என்று சொன்னாள்.

5. அவள் இவ்வாறு சொல்லி முடித்ததும், அந்தமான் காட்டில் எதேச்சையாய் ஓடித்திரியலாம் என்று எண்ணி ஆனந்தித்

துத் துள்ளிக் குதித்துக்கொண்டே ஓடிப்போயிற்று. போகையில் அரசனும் வேடர்களும் இந்த அழகிய மானைக் கண்டார்கள். கண்டதும் அதைப்பிடிக்க விரும்பினார்கள். விரும்பி அதை வெகு தூரம் துரத்திக்கொண்டே சென்றார்கள். அந்த மானோ, மாரீசனைவிட அதிசமர்த்தியம் படைத்தது என்று வியக்கும்படி அவர்கள் கையில் அகப்படவில்லை. ஒரு முறை அது தம்முடைய கையில் சிக்கிக்கொண்டதாக அவர்கள் நினைத்துக் கண்மூடி கண் திறப்பதற்குள் பல செடிகளைத்தாண்டி அவர்கள் கண்ணைவிட்டு அகன்றது.

6. அச்சமயத்தில் சூரியனும் மேல் கடலிற் குளிக்கச் சென்றான். காடும் ஒருவாறு இருள் தொடரப் பெற்றிருந்தது. அதனால் அரசன் கண்ணுக்குத் தப்பிய அம்மான், மாளிகையை நெருங்கி, "என் அருமைத் தமக்கையே, கதவைத்திற" என்று சொல்லிக் கதவினைத் தட்டினது. உடனே அப்பெண்மணியும் கதவினைத் திறந்தாள். திறந்ததும் மான் உள்ளேசென்று தனது பைம்புற் படுக்கையில் சுகமாய்ப் படுத்தது.

மூன்றாம் அத்தியாயம்.

மறுநாட்காலையும் வேடர்கள் அவ்வனத்தில் வேட்டையாட வந்தனர். அவர்கள் வரவை அறிந்து அம்மான் முந்தினதினத்தைப்போல் போய்விளையாட ஆசைகொண்டு தமக்கையிடஞ் சென்று உத்தரவுகேட்டது.

அவள், "நல்லது, இம்முறையும் உன்னை யனுப்புகிறேன். ஆனால் சாயுங்காலம் திரும்பிவந்து கதவைத் தட்டுகையில் சொல்லவேண்டியதை மறந்துவிடாதே" என்று கூறி அதை அனுப்பினாள்.

2. கழுத்தில் பொற்சரட்டுடன் விளங்கும் அம்மானை, வேடர்கள் பார்த்து அரசனுக்குக் காட்டினார்கள். அரசன் அதைப்பிடித்துவரும்படி உத்தரவு செய்தான். அவர்கள் அதைப்பிடிக்கப் பெரிதும் முயற்சி செய்தார்கள். அது அன்று பகல்முழுவதும் அவர்கள் கைக்கு அகப்படாது ஓடியது. கடைசியாக அவர்கள் கோபத்துடன் அம்பு ஒன்றினை எடுத்து வில்லிற்பூட்டி எய்தார்

கள். அது அம்மானின் காலில்தைத்தது. அதனால் அது நொண்டிக்கொண்டே வீடு நோக்கிச் சென்றது.

3. வேடர்களில் ஒருவன் அதற்குத் தெரியாமல் அதைப் பின்தொடர்ந்துபோனான். அது வீட்டுக்குப்போய்க் கதவைமுட்டி "என் அருமைத் தமக்கையே, நான் உள்ளேவரவேண்டும். கதவைத்திற" என்று சொன்னது. அப்பொழுது அம்மானைப் பின்தொடர்ந்து சென்ற வேடனுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவே கிடையாது. அவன் திரும்பிவந்து தான் கண்டதையும் கேட்டதையும் அரசனிடம் எடுத்துரைத்தான்.

அரசன், "நல்லது. நாளையதினமும் வேட்டையாட நாம் இங்குவந்து இதன் அந்தரங்கத்தை அறிய முயற்சிப்போம்" என்றான்.

4. தனது சகோதரனாகிய கலைமான் காலிற்பட்ட புண்ணுடன் வீட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்தச் சிறுமி, பெரிதும் விசனப்பட்டாள். புண்ணிலிருந்தொழுகும் உதிரத்தினைக் கண்டாள்; மயங்கினாள்; பதைத்து வீழ்ந்தாள். பின் எழுந்து உதிரத்தினைத் துடைத்தாள். துடைத்த பின்னும் உதிரம் நீங்காது ஒழுகுவதனைக் கண்டு "இதற்கு என் செய்வது?" என்று யோசித்தாள். எழுந்து காட்டுக்குட் சென்று காயத்தினை ஆற்றும் சிலமூலிகைகளைக் கொண்டுவந்து புண்ணில் வைத்துக்கட்டி, "தம்பீ, இம்மருந்து நாளைக்குள் அப்புண்ணையாற்றும்; அது ஆறிச் சௌக்கியமாகும் வரையில் அசையாமற் படுத்திரு" என்று சொன்னாள்.

5. மறுநாள் காலையில் மானின் கால்காயம் பெரிதும் ஆறியிருந்தது. அதனால், அம்மான்கன்று அன்றையதினமும் காட்டுக்குச்செல்ல விரும்பிச் சகோதரியை உத்தரவளிக்கும்படி கெஞ்சிக்கேட்டது.

6. அச்சிறுமி அதனைநோக்கி, "என் அன்புள்ள சகோதரா, உன்னை ஒருவேளை அவ்வேடர் கொலைசெய்தால் என்செய்வது? வேடர்கள் இரக்கமற்றவர்களாயிற்றே. அவர்களுக்குப் பிறவுயிரை வதைசெய்வதில் அதிக விருப்பமுண்டு. அவர்களுடைய நாவிற்கு மாமிச போசனத்தின்பேரில் பிரியம் அதிகம்; அப்படியிருக்கையில் நீ அவர்களுக்கு இடையில் அகப்பட்டால் கொலை யுண்பாய், அப்பொழுது நான் தன்னந்தனியளாய் இருந்து தவிப்

பேனே! என் தவிப்பைக்கண்டு ஆறுதல் சொல்பவர் ஒருவரும் இராரே!" என்று கூறிக் கண்ணீர் உகுத்தாள்.

7. அப்பொழுது அம்மான், "அக்கா, நீ அஞ்சவேண்டாம். என் கால் குணப்பட்டு விட்டது. நான் நன்றாக ஓட்முடியும். வேடர்கையிற் சிக்கேன்" என்று கூறியது. அதன்மேல் அச்சிறுமி மிகுந்த வருத்தத்துடன் கதவைத்திறந்து விட்டாள். மான்கன்று ஒரேகுதிகுதித்துக் காட்டுக்குள் நுழைந்தோடிற்று.

நான்காம் அத்தியாயம்.

1. அரசன் தங்கச் சரடணிந்த அம்மானைக் கண்டதும் தன் வேடர்களைப்பார்த்து, "அந்தமானைத் தொடர்ந்து பிடியுங்கள். பிடிக்கையில் அதைக் காயப்படுத்தாதீர்கள்" என்று கூறினான்.

2. அவர்கள் அங்ஙனமே நாளெல்லாம் அதைத் தொடர்ந்து போனார்கள். ஆனால் அதைப்பிடிக்க முடியவில்லை. பொழுதுசாயவும், அரசன், முந்தினதினம் அதைத் தொடர்ந்து சென்ற வேடனை அழைத்து, அது போன இடத்திற்கு வழிகாட்டச் சொன்னான். அவன் அவ்வாறே காட்ட, இருவரும் அந்த மானுக்கு முன்னாக, அதன் இருப்பிடத்திற்குச் சென்று சேர்ந்தார்கள்.

3. அரசன் அந்தப் பாழடைந்த மாளிகையின் கதவைத் தட்டி, "என் அருமைத் தமக்கையே, கதவைத்திற; நான் உள்ளே வரவேண்டும்" என்று சொன்னான். உடனே அச் சிறுமி கதவைத் திறந்தாள். அரசன் உள்ளே நுழைந்தான். நுழைந்ததும் அழகிற்சிறந்த பெண்மணி யொருத்தி இருக்கக் கண்டான்.

4. அப்பெண் தன்னெதிரில் கலைமான் நிற்கக் காணாமல் கோமான் அழகிய தங்கமுடியுடன் நிற்பதைக்கண்டு பயந்து விட்டாள். ஆனால் அவன் அவளோடு இனிமையாய்ப் பேசி அவள் பயத்தைப் போக்கியபிறகு தன் வரலாற்றைச் சொன்னான். அதன் பின் அவளை நோக்கி, "நீ, என்னோடு எனது அரண்மனைக்கு வந்து என்னைக் கலியாணஞ் செய்துகொள்ள உனக்கு மனமுண்டோ?" என்று கேட்டான்.

5. அவள், "அரசே, தங்கள் கட்டளையின்படி நடக்க எனக்கு யாதொரு தடையுமில்லை. ஆனால் எனது அருமையான மானை என்னுடன் கொண்டு வருதற்குத் தேவரீர் உத்தரவளிக்க வேண்டும்" என்று கேட்டாள்.

6. "அதற்கு என்னதடை? அதையும் அழைத்துக்கொண்டே வரலாம். அரண்மனையில் அதற்கு வேண்டிய சவரக்ஷணை செய்யப்படும். அப்படிச் செய்யப்பட்ட போதிலும் அதனை நீ உன்னுடனேயே வைத்துக்கொண்டு இரு" என்று சொன்னான் அரையன்.

7. அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அம் மான்கன்று களிப்புடன் துள்ளிக் குதித்துக்கொண்டே, ஓடிவந்தது. சிறுமி அதன் கழுத்துச் சரட்டைப் புற்புரியினால் மறைத்து வெளியே கொண்டுவந்தாள்.

அரசன் அக்குமரியைக் குதிரையின்மீதேற்றித் தானும் ஏறிக் கொண்டு அரண்மனையை நோக்கிச் சென்றான். மான் கன்று குதிரையின் பிறகே ஓடியது. பொழுது சாய்வதன்முன் எல்லோரும் மாளிகையை யடைந்தனர்.

8. சிலநாள் கழிந்ததும், அரசன் அப்பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டான். கலியாணமும் வெகு சிறப்புடன் நடந்தேறினது. இராஜனும் இராணியும் களிப்பாகவே இருந்தார்கள். மானும் வெகு எச்சரிக்கையுடன் காப்பாற்றப்பட்டு வந்தது. அது அரண்மனைத் தோட்டத்தில் தன் மனம்போலத் திரிந்து விளையாடிக்கொண் டிருந்தது.

9. இப்படி யிருக்கையில், சிறுமியின் சகோதரனை மானாக மாற்றிய அந்தக் கொடிய மந்திரக்காரி, சிறுமி காட்டு மிருகங்களால் பக்ஷிக்கப்பட்டு இறந்துபோயிருப்பாள் எனவும், அவள் சகோதரனாகிய மானும் வேடர்கள் கண்ணிற்பட்டுக் கொல்லப் பட்டிருக்குமெனவும் எண்ணி யிருந்தாள். அவர்க ளிருவரும் இப்பொழுது க்ஷேமமாக இருக்கிறார்கள் என அறிந்ததும் அவளுக்குக் கோபம் அதிகமாக மூண்டது. அவர்களை எப்படி அழிப்பது அல்லது எப்படிக் கெடுப்பது என்னுங் கவலை அதிகரித்தது. அதைப்பற்றி அதிகமாக ஆலோசிக்க ஆரம்பித்தாள்.

10. அப்பால் அவ்வரசி, அக்கொடிய மந்திரக்காரியின் மாயச் செய்கைகள் அனைத்தையும் எடுத்துரைத்தாள். அவள் தனக்குச் செய்த தீங்குகளை மொழிந்தாள். அரசன் மிகவுங் கோபங்கொண்டு மந்திரக்காரியையும் அவள் மகளையும் வரவழைத்து, அவர்களை விசாரித்து, இருவருக்கும் மரணதண்டனை விதித்தான். இருவரும் அத்தண்டனையால் உயிர் இழந்தபிறகு மகளுடலைக் காட்டு மிருகங்களுக்கு இரையாக்கிவிட்டுக் கிழவியின் உடலைச் சுட்டெரிப்பித்தான்.

11. மந்திரக்காரியின் உடலம் எரிந்து சாம்பலாகவும், அவள் மந்திரவலி போயிற்று. அதனால் இராணியின் சகோதரன் மானுருவம் நீங்கி உண்மை உருவமான மானுட வுருவம் பெற்றான். அதைக்கண்டு அரசனும் அரசியும் அதிக மகிழ்ச்சி யடைந்தார்கள். பிறகு நெடுங்காலம் வரையில் மூவரும் சந்தோஷமாகவே வாழ்ந்திருந்தார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 2 1915

உபாத்தியாயர்கட் கேனவே உலவிவரும்

மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" —தமிழ்மறை

தொகுதி—உ	1915௵ ஜூலை௴	பகுதி—க

OURSELVES

1. A year has passed quickly, and this month sees us entering our second volume. We go forward with much courage, because the year which has closed has more than fulfilled our hopes. True it is we have not been able to do all we hoped to, but our faith has been left intact.

2. We set out with a very definite aim—to provoke thought by discussion, and considering the short time we have been in the field, we are very gratified at the quick response from our readers, to all of whom we tender our grateful thanks. A special word of thanks is due to M. R. Ry. Parimanapallavaroy for starting the first serious discussion the discussion on Reading. We trust our remarks have help

ed towards giving a clear view of the *function of this* important subject, which we consider to be the very life of the elementary curriculum. To the Inspecting Officers who have honoured us with their valuable contributions we are deeply indebted, and we beg to thank them for their kind interest in our journal and to solicit further contributions.

3. The past year has taught us many things, and we are determined to let no opportunity slip of improving our journal. But we need the co-operation of our readers. Just as a school building without scholars is no school, so a journal without thinkers is no journal. Every teacher can help, if not with suggestions for the improvement of the journal and aid in the shape of articles, then with a statement of his difficulties. The ideal we wish to work up to is this—that take up which number he will, a teacher should find somewhere in its 24 pp. either food for thought or practical help of some sort.

4. In our last number we called for enquiries from teachers. With a sufficient number of enquiries we should be able to include a permanent section of "answers to correspondents." We say to our readers, "Write to us in all your difficulties. We guarantee to help you."

5. The choice of articles receives our most anxious care, and we shall always endeavour to make them stimulating and instructive. We hope in the course of this the second year of our existence to fix a workable standard of efficiency in regard to articles, and we shall be careful not to publish matter which falls short of the ideal.

6. May we, as this new year closes, have as much cause for gratification as we have now, as we go to press.

சுயவிஷயம்

ஒரு வருடகாலமாக இப்பத்திரிகையை நடாத்தியதில் எமக்குப் பல விஷயங்கள் தெரிய வந்தன. அதனால் இனி ஒரு நிமிஷத்தையும் வீணாக்காது பத்திரிகையை விருத்தி செய்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கத் தீர்மானித்துள்ளோம். அப்படி யாம் மாத்திரம் தீர்மானித்தாற் சாலுமோ? இதனை வாசிக்கும் உபாத்தியாய நண்பர்களின் உதவியும் வேண்டியதில்லையோ? அந்நண்பர்களும் இப்பத்திரிகை செழித்தோங்கத்தக்க வுதவியினைப் புரிவார்களென்றே நம்புகிறோம்.

சென்ற வருடத்தில் உபாத்தியாயர்கள் மாத்திரமல்ல; சில பரீக்ஷாதிகாரிகளும் விஷயதானஞ் செய்து எமது பத்திரிகையைக் கௌரவப்படுத்தினார்கள். வாசகபாடத்தினைப்பற்றி ஆராய்ச்சி தோன்றுவதற்கு மூலகாரணராயிருந்தனர் நமது நண்பராகிய பரிமணப்பல்லவராய ரவர்கள். இவர்களுக்கும் உதவிபுரிந்த ஏனைய நண்பர்களுக்கும் மனப்பூர்வமான வந்தனம் அளிக்கின்றோம்.

உபாத்தியாய சிரோமணிகள் தாம் தாம் கருதும் கருத்துகளையும், எண்ணும் எண்ணங்களையும் ஆராயும் ஆராய்ச்சிகளையும் நவிலும் நவிற்சிகளையும் நமது பத்திரிகையின் வாயிலாக அறிவித்துத் தர்க்கித்து உண்மைப்பொருளை யறியவேண்டுமென்பது எமது கோரிக்கை. அப்படி விஷயதானஞ் செய்யாவிட்டாலும் நண்பர்கள் தமது சந்தேகங்களையாவது எமக்குத் தெரிவித்து உதவி புரிவார்களாக. சந்தேகங்களை நீக்குவதே எமது தொழில்; ஆகையால் இவ்வருடம் "வினா உத்தரம்" என்னுந் தலைப்பெயரிட்டு இப்பத்திரிகையுள் ஒருபாகத்தினைத் தனியாக அமைக்கலா

மென்று கருதுகிறோம். எமக்கு அனுப்பப்படும் வினாக்களுக்குத் தெளிவான விடை இத்தலைப்பின் கீழ் அளிக்கப்படும்.

இப்பத்திரிகையில் எவ்விஷயத்தினைப் பிரசுரிக்கலாம் எதைப் பிரசுரிக்கலாகா தென்னும் கவலை எம்மை விட்டு நீங்கவில்லை. பிரசுரிக்கப்படுவனவற்றிலெல்லாம் இனிமையும் உற்சாகமும் நல்லறிவும் ஒருங்கே விளையவேண்டும். ஆனபடியினால் பிரசுரம் பெற வரும் விஷயங்களை யாம் அப்படியே வெளியிடாது வேண்டிய விடத்துப் பண்படுத்தியோ அல்லது சுருக்கியோ வெளியிடுவாம். இருபத்து நான்கு பக்கங்கொண்ட எமது பத்திரிகையின் ஒவ்வொரு பக்கமும் அறிவினை வளர்க்கக்கூடிய விஷயத்தையாவது அனுபவப்பயனைப் பெறக்கூடிய சமாசாரத்தையாவது கொண்டு விளங்கவேண்டு மென்பதே எம்முடைய முழுநோக்கமாகும்.

சொற்ப காலத்துக்குள் இவ்வளவாவது செய்து முடிக்க எமக்குத் துணையாயிருந்த தனிப்பெருஞ்சோதியின் தனிப்பெருங் கருணை, இனி, அதிக ஊக்கத்தினையும் தைரியத்தினையும் தந்து காரியத்தினை மேன்மேலும் நடாத்த முன்னெழுமென்று நம்புகின்றோம்.

NOTES OF THE MONTH

மாதாந்தரக் குறிப்புகள்

சேலம் ஜில்லா-சின்னப்பம்பட்டி உபாத்திமைச் சங்கம் Teachers' association, Chinnappam-patti, Salem Dt:

மார்ச்சுமீ 20உ சின்னப்பம்பட்டியில் நடந்த உபாத்திமைச் சங்கத்தின் விவகாரமனைத்தினையும் அன்புகூர்ந்து எழுதியனுப்பிய உபாத்தியாயருக்கு அன்புடன் வந்தனம் அளிக்கின்றோம். அவர் எழுதியனுப்பிய விஷயம் மிகவும் விரிந்திருப்பதால் அதனை முற்றும் இங்கு பிரசுரிக்கக்கூடாமையாயிருக்கிறது. முற்றும் பிரசுரிக்கலாமென்றாலோ அதற்கு எம்மாராய்ச்சி இன்றியமையாததா யிருக்கிறது. இரண்டையுஞ்சேர்த்து வெளியிடுவதானால் பத்திரிகையில் மற்றெவ்விஷயத்திற்கும் இடமில்லாமற்போகும். ஆனதுபற்றி அதிலடங்கிய விஷயத்தினைத் தொகுத்துரைக்கத் துணிந்தாம்.

அந்தச் சங்கத்திற்குத் தலைவராக அவ்விடத்திய சூபர்வைசர் அமர்ந்தாராம். அப்பொழுது தேலூர்போர்ட் ஸ்கூல் தலைமை உபாத்தியாயராகிய ம-ா-ா-ஸ்ரீ நரசய்யரென்பவர் முதல்வகுப்பிற்கு 'அடிக்கோலும் அதன் உட்பிரிவுகளும்' என்னும் பாடத்தினைப் போதிக்க வேண்டிய விதத்தினைப் பற்றி எடுத்துரைத்தாராம். அவர் அவ்விஷயத்தினைத்தீர்க்க யோசித்தே எடுத்துரைத்திருப்பதாகத் தெரியவருகிறது. ஆயினும் அங்குவந்திருந்தவர்கள் கருதியபடி அதிகமாக எடுத்துரைத்திருப்பதாகவே யாமும் கருதுகிறோம். முதலிற்போதிக்கவந்த பாடமா யிருப்பதனால் அடிக்கோலானது படி, ஆழாக்கு என்பவற்றைப்போல ஒருவகை அளக்குங் கருவியென்பதைக்காட்டி முடித்தாற்போதும். இதை மாணவர்கள் பிரத்தியக்ஷமாய்த் தெரிந்துகொள்ள அடிக்கோலால் அளக்கப் பல அப்பியாசங்களைக் கொடுத்திருக்கலாம். சரியாய் அளப்பது இலேசான காரியம் அல்லவென்று மாணவர் தெரிந்துகொள்ளவேண்டும். பல் வேறு உருவங்களோடுங்கூடிய பொருள்களை அளக்கவேண்டும். அப்படி அளந்தபின்னர் அங்குலம் என்ற உட்பிரிவைப் பற்றிச் சொல்வதற்குக் கணக்குகள்தானே நேரிடும். ஒரு நியாயமுமின்றி வீணாக அங்குலங்களைப்பற்றிப் பாடஞ்சொல்வோமாகில் அடிக்கோலின் உபயோகம் நன்கு விளங்காது, 'அங்குலம்' என்ற வார்த்தைமாத்திரம் மனத்தில் பதியும். உபயோகந்தான் சிறந்த உபதேசம்,

சின்னப்பம்பட்டிபோர்ட்ஸ்கூல் தலைமைஉபாத்தியாயராகிய ம-ா-ா-ஸ்ரீ வேங்கடேச ஐயங்காரென்பவர் "கல்வி அவசியம்" என்னும் விஷயத்தைப்பற்றிப்பேசினர். அவர் பேசியவற்றுள் பலரிடையில் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசிப்பழகுவது ஆராய்ச்சிக்கும், அறிவின் அபிவிருத்திக்கும், நடுக்கமின்மைக்கும் காரணமாயிருக்குமென்று எடுத்துரைத்த விஷயத்தினை யாம் பெரிதும் மெச்சுகின்றோம்.

*   *   *   *   *   *

கார்பொரேஷன் எலிமெண்டரி பாடசாலைகள்
Corporation Elementary schools

சென்னைக் கார்பொரேஷன்காரர் கொஞ்ச காலத்திற்கு முந்தி ஒருமாதத்தில் இரண்டு பள்ளிகள் திறந்தார்கள். சென்னைத் தேனாம்பேட்டைப் பள்ளியைத் திறக்கையில் அவ்விடத்திய கமிஷனராகிய ம-ா-ா-ஸ்ரீ இராமானுஜம் செட்டியாரவர்கள் எலிமெண்டரி பள்ளிகள் தேசநன்மைக்குரிய கல்வியினையும் தேசாசார கல்வியினையும் போதித்தற்கு ஆதாரவாயிருக்கின்றன வென்றெடுத்துரைத்து உள்ளன்புடன் ஊரார் ஒத்துழைத்தல் இல்லாவிடில் நன்மை யொன்றும் விளையாதென்றும் கூறினர். அவர் எலிமெண்டரி பள்ளியினிடத்தும் கல்வியினிடத்தும் தமக்குள்ள ஊக்கத்தினை மொழியால் மொழிந்த தன்றி அப்பள்ளிப்பிள்ளைக ளொவ்வொருவருக்கும் இவ்விரண்டு வேஷ்டிகளும், பழங்களும் தின்பண்டங்களும் கொடுத்துச் செய்கையாலும் அதனை நிலைநிறுத்திக்காட்டினர். அதன் பின்னர் அப்பள்ளியினிடத்துத் தனது நாட்டம் என்றும் நீங்காமலிருக்கு மென்றுஞ் சொல்லி அதற்குத் துணையாக அவ்வூராருடைய ஆதரவும் வேண்டு மென்றும் வேண்டினர்.

*   *   *   *   *   *

"கஷ்டமான பின்னம்"
"Difficult Task"

இத்தலைப்பின்கீழ் நமது நண்பரிலொருவர் ஒருவியாசமெழுதி அனுப்பியுள்ளனர். அதனை அப்படியே பிரசுரிக்க இடம் இல்லாமையினால் அவர் எழுதியுள்ள வியாசத்தில் அரியதாகக் காணப்படும் வாக்கியம் ஒன்றினை மாத்திரம் எடுத்துக் காட்டுவோம். அது வருமாறு:—

"பையல்களின் குணதிசயங்களை உற்றுநோக்கி, அவற்றிற்கேற்ப தீயவைகளை விலக்கி நல்லவைகளையே போதித்து நன்னடக்கையில் பழகச்செய்பவரே இன்றியமையா உபாத்தியாயராவார்."

*   *   *   *   *   *

தசாம்ச பின்னம்
Decimal

தசாம்ச பின்ன ஆரம்ப பாடக்குறிப்புகளையும் சில பொது விஷயங்களையும் எழுதியனுப்பிய சோம்பையனூர்த இந்து எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயராகிய K. A. K. ஆதம்சாயப்பு அவர்களுக்கு வந்தனஞ் செலுத்துகிறோம். அவருடைய பாடமுறை வருமாறு— "ஓர் எண்ணைக் கற்பிப்பதைக்குறித்து, ஸ்தான பேதங்களைப்பற்றிக் கேள்விகேட்டு, ஒன்றைப்பத்து பிரிவுகளாகப் பிரித்தால் ஒவ்வொரு பிரிவும் தசாம்ச பின்னமாகும் என்று சொல்லி, வார்த்தையை 'தசம் - அம்சம் - பின்னம்' என்று பிரித்து ஒன்றைப் பத்து அம்சங்களாய்ப் பிரிப்பதால் வரும் பின்னத்திற்குத் தசாம்ச பின்னமென்று சொல்லப்படும்—என்னும் விஷயங்களைக்கற்பிக்க வேண்டும்" என்கின்றார் நமது நண்பர். அவ்வாறு போதித்தல் வார்த்தைகளைப்பற்றிக் கற்பிப்பதாக முடிந்து பொருள்களைப்பற்றிய ஞானத்தைவிருத்தி செய்யாம லிருப்பதால் இப்போதனையால் உண்டாகும் அறிவானது நிலைத்திராது. மேலும் இத்தகைய பின்னத்தைப்பற்றிக் கற்றுக்கொள்வதால் லாபம் இன்னது என்பது விளங்காமற்போகும். ஆகையால், முதற்பாடத்தினை-அடிக்கோலின் பிரிவுகளைப்பற்றிச் சொல்லும்போது கற்பித்தால் நலமாயிருக்குமென்று எமக்குத் தோன்றுகிறது. பலவித அளவு வேலை நடந்தேறிய பின்னர் தசாம்ச பின்னம் என்ற வார்த்தையை விளக்கிக் கற்பிக்கலாம். முன்னர்ப் பொருள்களைக்காட்டிக் கையாரச்செய்த பின்னர்ப்பெயர்களைக் கற்பிப்பது தானே முறையெனப்படும்?

*   *   *   *   *   *

உத்தேசக் கணக்குகள்
Rough Checks

பரிமணப் பல்லவராய ரவர்கள் நமது 'சற்குரு' வின் 228 - ஆம் பக்கத்தில் காணப்படும் அச்சுப்பிழையொன்றை நமக்குத் தெரிவித்திருக்கிறார். 4 - ஆம் வரியில் 50 - என்னும், எண் 60 - என்று இருத்தல் வேண்டும்.

*   *   *   *   *   *

உணவு
Food

புருஷர்களுக்குத் தகுந்த இயற்கை உணவு மரக்கறிபதார்த்தங்களே யென்று பொள்ளாச்சி தாலூக்கா இராமப்பட்டணத்திலிருக்கும் K. R. இராதாகிருஷ்ண ஐயரவர்கள் தர்க்கித்துள்ளார். அவர் எழுதினது ஒருவாறு உண்மையாயிருந்த போதிலும் சில இடங்களில் அவர்கூறும் விஷயம் சரியாயிருப்பதாகக் காணப்படவில்லை.

ஜப்பனியர் மரக்கறிகளைப் புசிப்பதை விட்டு இப்பொழுது மாமிசத்தைத் தின்ன ஆரம்பித்திருக்கிறார்கள். நண்பர் சொல்லியவாறு மரக்கறிகளை மாத்திரம் புசிப்பதில்லை.

*   *   *   *   *   *

உணவு விஷயத்தில் பலர் பலவாறு எழுதுவார்கள். அமெரிக்காவில் உணவுப் பத்திரிகைகளென்று சில பத்திரிகைகளுண்டு. ஒன்றில் உப்புசாப்பிடலாகாதென்று கூறியிருக்கிறது. நமது சற்குருவிற்கு 248 - ஆம் பக்கத்தில் விஷயதானம் செய்த K. R. இராமசாமி ஐயரவர்கள் காப்பி குடிக்கலாகாதென்று வற்புறுத்திக்கூறியிருக்கிறார். அவர் கோரிக்கையாவது - காப்பி குடிக்கும் பழக்கத்தை அனுசரித்தவர்கள் தங்களால் கூடுமான மட்டும் அதனின்றும் நீங்கக்கூடியவளவு முயற்சி செய்வதனோடு, பழக்கமில்லாத சிறியவர்களும் சிறுமிகளும் துர்ப்பழக்கத்தை அனுசரிக்காவண்ணம் அவர்களையும் பாதுகாக்க வேண்டுமென்பதே. காப்பி குடிப்பதால் பலதீமைகள் விளைவது உண்மையே. ஆனால் அதை முற்றும் விட்டுவிடுவதற்கு நியாயமில்லைபோலும். காலராமுதலிய கொடியநோய் அணுகப்பெற்றவர்களுக்குக் காப்பி கொடுப்பதுண்டு. அது அந்நோயின் வலியைக் கெடுக்குமென்று சொல்லுகிறார்கள். துர்நாற்றமுள்ள இடங்களுக்குப் போகவேண்டியவர்கள் காப்பி குடித்துப் போகிறார்கள். அது நோயைத்தடுக்குமாம். ஜுரம் கண்டவர்கள்கூட காப்பி குடிக்கிறார்கள். இதனால் பெறப்படுவது என்னென்றால் மிதமிஞ்சி காப்பி குடிக்காலா தென்பதே யொழிய அதைக்குடிக்கவே கூடாதென்பதன்று.

* * * * * *

கவனிக்கவேண்டியதோரு கேள்வி
A Question that needs attention

'ப்ராரம்ப வித்யா' என்னும் தெலுங்கு பத்திரிகையில் அடியிற்குறித்த கேள்வி மே மாதத்திய சஞ்சிகையில் 224 - ஆம் பக்கத்தில் தோன்றுகிறது. நமது சந்தாநேயர்கள் கேள்விக்குத்தக்க விடை கூறுவரென்று நம்புகின்றோம்.

கேள்வி :— "தென் இந்தியாவில் மேல் வகுப்புகளைக் காட்டிலும் பாலர் வகுப்புகளில் தான் பிள்ளைகள் அதிகமாய் வந்து சேருகிறார்கள். இதற்குக் காரணம் யாது?"

மதுரைத் தமிழ்ச் சங்கம்
The Madura Tamil Sangam

மதுரையிலுள்ள சேதுபதி மகாராஜாவின் பாடசாலையில் இச்சங்கத்தின் பதினான்காம் வருடோற்சவம் ஜூன் மாதம் 13வ நடந்தேறினது. அவ்வுற்சவகாலத்தில் கனம் - திவான் பஹதூர் - L. D. சுவாமி கண்ணுப்பிள்ளை M. A., B L., L. L. B, (Registrar of Co-operative Societies, Madras) என்பவர் அக்கிராசனம் வகித்தனர். புலவர்கள் சூழத்தாமிருக்க நேர்ந்த விருக்கை தமக்கு மிகுந்த களிப்பினைத் தருவதாகஅவர் எடுத்துரைத்தார். பொது ஜனங்கள் புத்தகங்களை வாசிக்கவேண்டியகடமை பாடசாலைகளில் செய்யுட்பாடத்தைப் பழைய நூல்களினின்று கற்பிப்பது என்னும் இவ்விரண்டு விஷயங்களைப் பற்றி அவர் எடுத்துக்கூறியதெல்லாம் எமக்கு மிகுந்த மகிழ்ச்சியினைத் தருகின்றது. அகன்ற கல்வியும் ஞானமும் பொருந்தப்பெற்ற அவருடைய வாயிலிருந்து எம்மாலெடுத்துரைக்கப்பட்ட அவ்விஷயமே அந்த உற்சவதினத்தன்று வெளிவந்ததனால் எமக்கு மகிழ்ச்சி விளையாமலும் இருக்குமோ?

அந்த விசேஷகாலத்தில் திவான் பகதூர் பிள்ளையவர்கள் எடுத்துரைக்க மனங்கொண்டதற்காக யாம் பெரிதும் நன்றி யறிதலுடையவரா யிருக்கின்றோம்.

தமிழின் அபிவிருத்தியை நாடியுழைத்துவரும் மாட்சிமைதங்கிய இராமநாதபுரத்து மகாராஜா அவர்களுக்குத் தமிழுலகமே வந்தன மளிக்கக்கடமைப்பட்டுளது. அவர் தமிழ்நாட்டிற்குச்செய்யும் நன்றியை நமது எலிமென்டரி யுபாத்திகளறிந்து தமது தாய்ப்பாஷையாகிய நற்றமிழை நன்றாகக் கற்றுணர்ந்து அஞ்ஞான விருளையகற்றும் ஞானவாதித்தனைத் தமதுள்ளத்தினின்று மெழச்செய்து மேம்பாடுறுவார்களென்று நம்புகிறோம்.

* * * * * *

திரிசிராப்பள்ளி ஜில்லாச் சங்கம்
The Trichinopoly District Conference

இந்தச் சங்கத்திற்குத் தலைவராக நமது கனம் - சிதம்பரநாதமுதலியாரவர்கள் அமர்ந்தனர். அவர், அந்த ஜில்லாவில் எலிமென்டரிபடிப்பு அதிக விருத்தியை யடையாதிருப்பதற்காக விசனமுற்றதோடு அவ்வூரார் அப்படிப்பின் அபிவிருத்தியைக் குறித்து அதிக நோக்கங் கொள்ள வேண்டு மென்றும் எடுத்துரைத்தார். அதன் பின்னர் இந்த எலிமென்டரிபடிப்பே இழிகுல மாக்களுக்குள்ள மனநோயினையும் உடல்வலியினையும் ஒழிக்கும் சிந்தாமணி யென்றும், அது அவர்களுக்குப் புனர் ஜனனத்தைத்தரும் சஞ்சீவியைப் போன்று தோன்றி யிருக்கிறதென்றும் ஞயம்பட வெடுத்துரைத்தார்.

* * * * * *

உபாத்திகளைக் கஷ்டப்படுத்துதல்
Sweating the School Master

ஜூன் மீ 12வ காலை சென்னை டைம்ஸ் பத்திரிகையில் (The Madras Times) இத்தலைப்பெயருடன் வெளிவந்த விஷயத்துள் அப்பத்திரா காசிரியர் எலிமென்டரி ஸ்கூல் உபாத்திகட்கு அனுகூலமாகத் தமது அபிப்பிராயங்களிற் சிலவற்றை யெடுத்துரைத் திருக்கின்றார். அப்படி யவர் எடுத்துரைத்ததற்காக அவர்க்கு யாம் வந்தனம் அளிக்கின்றோம். மைசூர் கல்வியிலாகாவுக்கு இன்ஸ்பெக்டர் ஜெனரலாக விளங்குபவருடைய வேண்டு கோள்கள் - கட்டளைகள், நீதிக்கு விரோதமானவைகளா யிருப்பதாக எடுத்துக்காட்டி யிருக்கின்றார். அவர்காட்டியது சரியென்றும் தவறென்றும் யாமெடுத்துரைக்குந் துறையில் யாம் இறங்கப்போக வில்லை. அதிகமாக உழைக்கும் உபாத்திகளையும் அவ்வாறு உழைக்காதவர்களையும் அவர் அளவிடும் விதத்தினைப்பற்றியே குறிப்பிக்க வந்தோம். அவ்வுபாத்திகள் பிறருடைய பழிப்புரைகட்கெல்லாம் மௌனமாக விருக்கவேண்டியகாலம் இதுவரை யிருந்தொழிந்தது; இனி அவர்கள் மெல்லென வாயைத்திறந்து பதிலளிக்குந்திறமையோடு விளங்கவேண்டியகாலம் சமீபிக்கின்றதாகத் தெரியவருகிறது.

* * * * * *

பால பாடம்
Infant Primer

சேலம் அம்மாபேட்டை மெயின் ரோட்டுப் பாடசாலை உபாத்தியாயர், தா. முத்தச்சாமிப்பிள்ளை பாலர்களுக்கு ஓரசை ஈரசைச்சொற்களைக் கற்பிக்கும் விதத்தினை இப்பத்திரிகையில் விளக்க வேண்டுமென்று கேட்கிறார். அவ்வேண்டுகோளுக்கிணங்க அடுத்த மாதத்திய சஞ்சிகையிலாவது அதற்கு அடுத்த சஞ்சிகையிலாவது எழுதிக்காட்ட முயலுவாம்.

* * * * * *

விஷக்காற்று
Malaria

அடுத்த சஞ்சிகையில் விஷக்காற்றைப்பற்றி ஒருவியாசம் எழுத உத்தேசித்திருக்கிறோம். அந்த வியாசம் வெளிவருதற்குள் இதனை வாசிக்கும் எமது நண்பர்கள் அகன்ற வாயினையுடைய கண்ணாடிப்புட்டிகள் இரண்டெடுத்து, ஒன்றில் குளத்து ஜலத்தையும் மற்றொன்றில் நன்றாகக்காய்ச்சின ஜலத்தையும் விட்டுநிரப்பி, காகிதத்தால் நன்றாக அப்பாத்திரங்களை மூடிக்கட்டி, அதன்பின் என்ன நடந்தேறுகிறது என்று பதினைந்து 'தினம் வரையில் கவனித்துப்பார்த்து வரவும்.

* * * * * *

கல்வியில் தேர்ச்சிகுறைந்த மக்களுடைய பிள்ளைகட்கு உபகாரச் சம்பளம்
Grants for pupils belonging to backward classes

சில தினங்கட்கு முன் வெளிவந்த கவர்ன்மெண்ட் ஆர்டரினால் கல்வியில் தேர்ச்சிகுறைந்த ஜனத்தார் பிள்ளைகட்கு உபகாரச் சம்பளம் உயர்த்தப்பட்டு ஒரு ரூபாயாக வாக்கப்பட்டது. கல்வியில் தேர்ச்சிகுறைந்த ஜனத்தார் இன்னாரென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது; பட்டி வரவரப்பெரிதாகிறது. அது வளர்ந்து வருவதற்குக் காரணம்தணிக்கை ஆபீசர்களின் ஊக்கமே தவிர வேறொன்றுமில்லை. ஜாதி யென்ன வானாலும் ஒவ்வொருவனும்படித்தவனாயிருக்க வேண்டுமென்னும் பரோபகார சிந்தை அப்பட்டியால் வெளியாகிறது.

* * * * * *

விசனகரமான சமாசாரம்
Sad news

நமது சற்குரு பத்திராதிபராகிய தமிழ்ப்பண்டிதர் சே. சோமசுந்தரப் பிள்ளை யவர்களின் மனைவியார் சென்ற ஏப்ரல் 10வ யன்று இவ்வுலகவாழ்வைவெறுத்து விண்ணுலகடைந்த சமாசாரத்தைக்குறிக்க மிகவும்விசனகரமாயிருக்கிறது. அவர்கட்கு வயது இருபத்தொன்றாம். அவ்வம்மையாருக்குத் தமிழில் வன்மையுண்டாம்; ஆங்கிலத்திலுஞ் சிறிது பழக்கமுண்டாம். அவர்கள் கதை சொல்லும் உரிமை தந்தைமாருக்கிருப்பதைவிடத் தாய்மாருக்கே அதிகமுண்டென்று அடிக்கடி கூறுவார்களாம். அவர்கள் அதுசம்பந்தமாகக்குறித்து வைத்துள்ள விஷயம் பின்னால் வெளிவருமென்று எதிர்பார்க்கிறோம்.

பரிதபிப்போன்.

LITERACY AND FALSE PRIDE

கல்வியும் பொய்க்கோலமும்

நம் இந்திய நாடுமுழுவதும் கல்வி யபிவிருத்தியடைய வேண்டுமென்று முறையிட்டுக்கொண்டு வருகையிலே அந்தக் கல்வியறிவானது கைத்தொழில்களைத் தலையெடுக்க வொட்டாது நசுக்கிக்கொண்டே வருகிறது. என்றாலும் இப்படிச் செய்து வருவது நிறைகல்வியன்று, குறை கல்வியே. குறைகல்வியினால் கைத்தொழில்கள் நாசமடைகின்றனவாயின் அத்தகைய குறை கல்வியை நாம் தடுப்பது நியாயமே யன்றோ?

நமது இந்தியாவைவிட அதிகமாக இக்குறைகல்வி பரவப் பெற்றிருந்தவிடத்தில் விளைந்தகேடு என்னவென்று சற்று விசாரிப்போம். இங்கிலாந்து உண்மையில் இந்தியாவைவிட பிரைமரி படிப்பில் சிலாக்கியம் பெற்றவிடமே. அவ்விடத்தில் இக்குறைகல்வி ஒரு காலத்தில் எங்கும் பரவினது. பரவவும் பிரைமரி படிப்பில் தேறியிருந்த மாணவர்களுக்கெல்லாம் அவ்விடத்தில் தமது படிப்பிற்கேற்ற உத்தியோகத்தினை நாடும் நாட்டம் ஜனித்தது. அவர்களுக்குத் தமது நாட்டத்தின்படி கிடைக்கக்கூடிய உத்தியோகம் சாதாரணமான இலகிதர் வேலையே (Clerkship). சொற்பசம்பளமுள்ள அவ்வேலையை நாடப்பிரைமரி மாணவர்கள் திரண்டுவர ஆரம்பித்தனர். அதைக்கண்டு இங்கிலாந்து கல்விப்போர்டார் பலவித உபாயங்கள்செய்து அக்கல்வியைத்தடுத்து அவர்களைப் பல கைத்தொழிற்றுறைகளில் இறக்கினார்கள். நாளடைவில் அவர்கள்செய்த தெல்லாம் பலித்தது. மே மாதத்திய "ஜர்னல் ஆப் எட்யுகேஷன்" (Journal of Education) என்னும் பத்திரிகையில் ஒருவர் இதைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றார்:—

"கைத்தொழில் வேலை செய்துவரும் பட்டணம் ஒன்றில் இருபது

வருடத்துக்கு முன் இலகிதர் வேலையொன்றிற்கு இருபது முப்பதுபேர் முன்னிற்ப இப்பொழுது அதேவிதமான வேலைக்கு ஒருவர்கூட முன்னிற்கக்காணோம். இப்பொழுது அப்பட்டணத்திலிருக்கும் எலிமெண்டரி பிள்ளைகளெல்லாம் நெசவுத்தொழில், தச்சுவேலை, கருமார்வேலை, முதலிய வேலைகளைக் கற்கப்பெரிதும் ஆவலுறுகின்றார்கள். அப்படி அவர்கள் ஆவலுறுவதால் கைத்தொழிலாளர்கள் அபிவிருத்தியாகி கைத்தொழில்கள் உச்சநிலையையடைந்திருக்கின்றன"

இந்த நிலைமைக்கு அவ்விடத்தாரைக் கொண்டுவந்தது அவ்விடத்திய எலிமெண்டரி படிப்பின் பாடக்கிரமமே. அப்பாடக்கிரமத்துள் கைத்தொழிற் கல்வியும் இடம்பெற்றிருக்கின்றது. அது இடம் பெற்றமையினாற்றான் அவ்விடத்தார் முன்னுக்கு வரலானார்கள்.

ஆனபடியினால் நம்முடைய இந்திய நாடு முன்னுக்கு வருதற்குப் பிள்ளைகளுக்குக் குறை கல்வியைக்கொடுத்துக் கெடுக்காமல் அவர்களுக்குக் கைத்தொழிற் படிப்பையும் போதித்துச் செம்மையாக்கல்வேண்டும். அவர்கள் கைத்தொழிற் படிப்பையும் பெறுவார்களானால் குறை கல்வியாளர் கொள்ளும் பொய்க்கோலத்தை நீக்கி உண்மையாகவும் கௌரவமாகவும் கைத்தொழில் வேலையைச்செய்து தமது மக்களையும் குடும்பத்தையும் தேசத்தையும் முன்னுக்குக் கொண்டு வருவார்கள் என்பதற்குத் தடையில்லை.

INFORMATION FOR OBJECT LESSONS

பொருட் பாடங்களை நடத்துவதற்கான விஷயம்

குறிப்பு:—பொருள்களைக் கொண்டு பாடங்களை நடத்தவேண்டுமென்று ஐரோப்பிய வித்வசிரோமணிகள் சென்ற 400 வருஷகாலமாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆகையாற்றான் நமது பாட அட்டவணையிற் "பொருட் பாடம்" என்று தனியாய் ஒருபாடம் தோன்றி யிருக்கிறது. மற்ற பாடங்களைக் காட்டிலும் இதுதான் நடத்துவதற்குக் கஷ்டமானதால், பாடங்களைச் சரிவர நடத்துவதற்கு வேண்டிய விஷயத்தை இங்கு எடுத்துரைத்து நண்பருக்கு உதவிபுரிய முன்வந்தாம். சாதாரணமாய் எங்கும் கிடைக்கக்கூடிய பொருள்களைப்பற்றித் தான் விஷயம் வரையப்படவேண்டும்.

கருப்பூரம்:—இது தாவரப்பொருள்களி லொன்று. இது நீரைவிட இலேசானது. [வகுப்புப் பிள்ளைகளிடமிருந்து ஏனைய பொருள்களை வினவிப்பெறுக.]

இது பெரும்பாலும் மரத்திலிருந்து எடுக்கப்படுகின்றது. அம்மரம் என்றும் பசிய இலைகளை யுடையதாயும் நறுமணம் பொருந்தியதாயு மிருக்கும். அம்மரங்கள் சீனா, ஜப்பான், பார்மோசா, கொச்சி சீனா முதலிய விடங்களில் வளர்கின்றன. ஜாவா, மேல் இந்தியதீவுகள் என்னும் இடங்களில் அவை வளர்க்கப்படுகின்றன.

இந்தக் கருப்பூரத்தினைப்பெற கருப்பூர விருக்ஷங்களின் பெருங்கிளைகளையும் சிறுகிளைகளையும் துண்டுதுண்டாக வெட்டி நீரிற்போட்டுக் கொதிக்கவைக்கின்றனர். அவ்வாறு கொதிக்கவைக்கையில் மரத்துண்டுகள் சுருங்கத்தலைப்படுகின்றன. அவைகள் சுருங்கவாரம்பித்ததும் பலகை பலகையாகக் கருப்பூரம் வெளிவருகின்றது. அதனைப் பின்னர்ச் சுத்தப்படுத்துகின்றனர். இவ்விடத்தில் இறக்குமதியாகும் கருப்பூர மெல்லாம் பார்மோஸாவில் விளையுங் கருப்பூரமே.

[கருப்பூரத்தின் உபயோகத்தினைப் பிள்ளைக ளிடமிருந்து இறுக்க. அது மருந்தாகப் பெரிதும் உபயோகப்படுகின்றது.]

இந்திய ரப்பர் :—இது மேற்குத் தொடர்ச்சிமலை, தென் அமெரிக்கா, மேல் ஆப்ரிகா, இந்தியன் ஆகிபெலகோ அல்லது தீவு கூட்டம் (Indian Archipelago) என்னும் இடங்களில் விளையும் ரப்பர்மரத்திலிருந்து எடுக்கப்படுகின்றது. ரப்பர் மரத்தின் அடிப் பாகத்தில் துளைகள் செய்யப் பால் ஒழுகும். அப்பாலினை மட்கலங்களில் (இவ்விடத்தார் கள்ளினைப்பெறுவதுபோல) நிரப்புவார்கள். அப்பால் பின்னர் உறைந்து கட்டியாகிவிடும். அப்படி உறைந்த கட்டியை மேலே சுத்தஞ்செய்வார்கள்.

ரப்பரை நீண்டு சுருங்கும் பொருளாகவும் நீண்டு சுருங்காது ஒரே தன்மைத்தாயிருக்கும் பொருளாகவும் செய்துகொள்ளக் கூடும். அந்த ரப்பரிடத்திலிருக்கும் விசேஷகுணமாவது நீர் ஊடுருவிச் செல்லத்தக்க துவாரங்களைத் தம்மிடத்துப் பொருந்தப்பெறு திருத்தலே.

[வகுப்பினருக்கு, அந்த ரப்பர் பென்ஸிலால் எழுதப்படுவனவற்றைத் துடைத்தற்குக் கருவியாயிருப்பது தெரியும். துவிசக்கரவண்டிக்கு டைராக உபயோகப்படுதல், ரணவயித்தியர்களுக்கு பான்டேஜாகப் பிரயோஜனப்படுதல், நீரிறங்கா வாடைகளாகப் பலன்படுதல் முதலியவற்றைப் பிள்ளைகளிடமிருந்து வருவிக்க. இந்தியாவிலும் மலேயதீபகற்பம் முதலிய விடங்களிலுமுள்ள எண்ணிறந்த ரப்பர் கம்பனிகளால் ரப்பர் ஏராளமாகச் செலவாவதைப்பற்றி யெடுத்துரைக்கலாம்.]

அட்டை :—[வகுப்புப் பிள்ளைகளிடம் ஒரு சிறு அட்டையைக் கொடுத்து அதைப் பரிசோதிக்கும்படிசெய்து, அதன் பின் சில காகிதங்களைக்கொடுத்து (ஒன்றின்மீது ஒன்றை ஒட்டி) அட்டைசெய்யும்படி ஏவவும். அவர்கள் தமது அட்டை சுத்தமற்று-நாணயமற்று இருக்கக்காண்பார்கள். அப்பொழுது அவர்களுக்கு அட்டை செய்யப்படும் விதத்தினை யெடுத்துரைத்தல் வேண்டும்.]

அட்டை செய்வோன் பலகாகிதங்களை ஒன்றன்மீதொன்றாய் வைத்து ஒட்டிப் பின்னர் அவ்வாறே யொட்டப்பட்ட பல வட்டைகளை ஒரு யந்திரத்தில் வைப்பான். உடனே அந்த யந்திரம் அவைகளை யழுத்தி அவ்வட்டைகளிலிருந்து ஜலத்தையெடுத்துப் பின்னர் ஓரங்களை யறுத்துச் சமன்செய்கின்றது. அதன்பின் அவ்வட்டைகளை உஷ்ணவறையில் நாலவிடுகின்றனர். உஷ்ணத்தால் அட்டைகள் வளையப்பெறுவோ என்றுலோ அவைகள் இரண்டு செப்புத்தகடுகளுக் கிடையில் வைத்துத் தொங்கவிடப்படுகின்றமையால் வளைதற் கிடமில்லை யென்க. அதன்பின் இருப்புருளைகளால் அழுத்தப்பெற்று அவைகள் வழவழப்பினையும் மினுமினுப்பினையும் பெறுகின்றன. சில வேளைகளில் நல்ல கடுதாசிகளை இருபுறத்திலும்வைத்து ஒட்டுவதனல் பளபளப்புள்ள அட்டைகள் கிடைக்கின்றன.

(இன்னும் வரும்.)

LITERARY NOTES

இலக்கிய விஷயம்

சிலநூற்பெயர்கள்

"தேவாரம்' என்ற வார்த்தையை தே + ஆரம் எனப்பிரித்து, தே-கடவுளுக்கு, ஆரம்-மாலை போல்வது எனப்பொருள் கூறவேண்டும். அன்போடு சாத்தப்பட்ட பூமாலைபோல் இனிய பாமாலை யென்பது கருத்து.

'திருவாசகம்' என்ற வார்த்தையை திரு + வாசகம் (சொற்கள்) என்றே பிரிக்கவேண்டும். சிறந்த சொற்களை யுடைமையால் திருவாசக மென்று பெயர் வழங்கியது. 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது பழமொழி.

'சிந்தாமணி'-சிந்திக்கிற அல்லது கருதியபொருளைத் தருவதொரு தேவரத்தினம் என்று பொருள்படும்.

'பாரதம்' என்னுஞ் சொல்லுக்கு பரதனது வம்சத்தவரைப் பற்றிய நூல் என்று பொருள்படும்.

'இராமாயணம்' என்ற வார்த்தையை ராம + அயநம் எனப் பிரிக்க வேண்டும். இராமன் விஷயமான நூல் என்று வடமொழியிற் பொருள்படும்.

'திருக்குறள்' சிறந்த குறள் வெண்பாக்களை யுடைமையால் இதற்குத் திருக்குறள் என்று பெயர்.

'சதகம்' நூறு செய்யுட்கள் கொண்ட பிரபந்தம். சதம்-நூறு.

'நன்னெறி' இதை நல் + நெறி என்று பிரித்து, நன்மையாகிய வழியைத் தெரிவிக்கிற நூல் என்று பொருள் கூறவேண்டும். இது ஒரு நீதிநூல். 'நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனை' என்பது திருவாசகம்.

'அறநெறிச்சாரம்' என்பது தருமவழிகளுள் சாரமாய்ச் சிறந்தவற்றைக்கூறும் நூல் என்று பொருள்படும்.

'நீதிநெறிவிளக்கம்' என்பதுநியாயமான வழிகளை நன்கு விளக்கும் நூல் என்று பொருள்படும்.

'நல்வழி' நீதிவழியைக் குறிக்கும் நூல்.

'மூதுரை'—முதுமை + உரை எனப்பிரிக்கவேண்டும். 'பழமொழி எனப்பொருள்தரும். மூத்தல் - முதிர்தல்.

* * *

'பஞ்சகாப்பியங்களாவன'—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன.

'இதிகாசம்' என்பது பழங்கதை எனப்பொருள்படும். பழையசரித்திரம் ஒன்றைப் பிரதானமாக எடுத்துப் பலகிளைக்கதைகளோடு புணர்த்து விரித்துக்கூறும் நூல் இதிகாசமென்னப்படும். இதிகாசங்கள் - இராமாயணம், பாரதம்.

'புராணம்' இதுவும் பழைய வரலாறுகளை உணர்த்தும். இது உலகத்தின் தோற்றம் முதலிய ஐந்து பிரிவினையுடையதா யிருக்கவேண்டும். புராணங்கள் பதினெட்டு வகைப்படும்.

வேதத்தின் கருத்து இன்னதென்று நியாயப்பிரமாணங்களால் தேற்றி விளக்குவன இந்த இதிகாச புராணங்கள்.

ELEMENTARY TEACHERS AS QUININE VENDORS

எலிமெண்டரி உபாத்திகளே குயினைன் வியாபாரிகளும்

கவர்ன்மெண்ட் ஆர்டர் பிரகாரம் எலிமெண்டரி உபாத்திகள் கிராமங்களில் போஸ்ற் மாஸ்டராக விருந்து வேலைசெய்து வருகையில் அவர்களுடைய வேலையைத் தபால் இலாகாவின் அதிகாரிகள் சிலாக்கித்துப்பேசினர். அதனையுணர்ந்த நமது கவர்ன்மெண்டார் அவர்களுக்குப் பொதுஜன நன்மையை நாடும்படியான மற்றொரு தொழிலையுந் தரவேண்டுமென்று மனங்கொண்டு இப்பொழுது குயினைன் விற்குந் தொழிலை யவர்களுக்குக் கொடுத்திருக்கின்றனர். தம்மை நாடி இவ்வேலையைக் காருண்ணியமுள்ள கவர்ன்மெண்டார் கொடுத்ததை நினைத்து அவர்கள் தருக்குற வேண்டியவர்களே. அப்படி இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் வேலையையும் அவர்கள் செவ்வையாகச்செய்து முடித்துப் புகழ்ச்சியைப் பெறுவார்க ளென்பதற்குத் தடையில்லை. சின்கோனா பிளான்டேஷன் டைரக்டரும் (Director of Cinchona Plantations) அவர்களைச் சிலாக்கித்துக் கூறச்சமயம் நேரிடுமென்று நம்புகிறோம். அவர்களுக்கு இப்பொழுது கிடைத்திருக்குந் தொழிலோ மிகவருமையான தொழிலாகும். அதனை இவர்கள் செவ்வையாகச்செய்து முடிப்பார்களாகில் மலேரியா(Malaria) என்னும் விஷக்காற்று இருந்தவிடம் தெரியாமற் போய்விடும். அப்படிப்பட்ட விஷநோயை யண்டவொட்டாதபடி துரத்துபவர் பொதுஜனங்களுக்கு நன்மை புரிகின்றவர்களேயன்றோ?

ஏப்ரல் 8உ வெளிவந்த கவர்ன்மெண்ட் ஆர்டர் ரெவினியு நெ. 826 மலேரியா பரவப்பெறாத தஞ்சாவூர் கோரைப்பேடு (Koraput) என்னும் இவ்விரண்டு ஜில்லா நீங்கலாக மற்ற ஜில்லாக்களிலுள்ள உபாத்திகளெல்லாம் குயினைன் விற்கலாமென்று அறிக்கை யிடுகின்றது. அவர்கள் அக்குயினைனை டிஸ்டிரிக்ட் போர்ட் பிரஸிடென்டினிடமிருந்தாவது முனிஸிபாலிடி சேர்மனிடமிருந்தாவது பெறலாகும். அவ்வாறு பெறுதற்காக அவ்வுபாத்திகள் அடியிற்குறித்துள்ள பாரத்தினை யொத்ததொரு பாரத்தில் எழுதியனுப்புதல் வேண்டும்.

"ஐயா,

தயைசெய்து, மறுதபாலில் குயினைன் பஸ்பம்......பொட்டலம் அனுப்பும்படி வேண்டுகிறேன்.

.... பெயர்

.... உத்தியோகம்

.... விலாசம்."

பத்து அரிசி யெடையளவு பஸ்பம் வைக்கப்பட்ட சிறு பொட்டலங்கள் நூறு நூறு கொண்டிருக்கும் ஒவ்வொரு பெரும்

பொட்டலமும். அப்படிப்பட்ட ஐந்து பெரும் பொட்டலம் ஒவ்வொரு முறையும் தரப்படும். முதன் முறை மாத்திரம் ஏழு பெரும் பொட்டலம் தபாற்செலவின்றி கையிருப்புக்காகக் கொடுக்கப்படும். அந்த ஏழு பெரும்பொட்டலத்தில் ஐந்து பெரும் பொட்டலம் செலவழிந்ததும் ஏழு பெரும்பொட்டலத்திற்கு மறுபடியும் எழுதியனுப்புதல்வேண்டும். அப்படி யனுப்புகையில் அந்த ஆர்டருடன் பெரும்பொட்டலம் ஒன்றுக்கு 1 ரூ. 9 அ வில் 4 அணா கமிஷன்போக 1-5-0 வீதம் பணமும் அனுப்பவேண்டும். இந்தக் கமிஷன் ஏழு பெரும் பொட்டலத்திற்குக் குறைவாக வாங்க விரும்புபவர்களுக்குக் கொடுக்கப்படமாட்டாது. தொலைவிலிருக்கும் உபாத்திகள் மணியார்டர் கமிஷனைப் பிடித்துக்கொண்டு பணத்தை யனுப்பலாகும். குயினைன் விற்கும் உபாத்திகள் உத்தியோக முறையில் இடம்விட்டு மாறவருங் காலத்துத் தாம் கையிருப்பாக (Permanent advance) வைத்திருக்கும் பண்டத்தைத் தம்முடைய இருப்பிற்கு வருபவர்களிடம் ஒப்புவிக்கக்கடவர். அப்பொட்டலங்களை ஈரமற்ற விடத்தில் வைத்துப் போற்றல் வேண்டும்.

பம்பாய் இராஜதானியிலுள்ள எலிமென்டரி பாடசாலைகளில் இருக்கும் உபாத்திகளிற் சிலரும் பெரிய மாணவர்களிற் சில்லோரும் கிராமத்தாருக்கு வயித்திய முறையில் உதவிபுரிகின்றார்களாம். அப்படியே நன்னெறிப் பயிற்சியிலும் உதவுகிறார்களாம். இப்படி அவர்கள் செய்யும் உதவியால் நன்மையே விளைகின்றதென்று அவ்விடத்திய டைரக்டர் தம்முடைய 1913-14 ரிபோர்டில் அவர்களைக் கொண்டாடியிருக்கின்றனர். இதனை இவ்வமயத்து எடுத்துக்கூறவேண்டியது அவசியமாயிருக்கின்றது.

“CORRELATION.”

தொடர்முறைப்போதனை

இப்போதன முறையைப்பற்றிச் சிலவார்த்தைகளைச் சொல்ல எமக்குச் சமயம் வாய்த்ததற்காக யாம் பெரிதும் மகிழ்வுறுகின்றாம். இதனைச் சிலர் திவ்வியமான முறையென்கின்றனர்; வேறு சிலர் இன்றியமையாத முறையென்று கொண்டாடுகின்றனர்;

பின்னுஞ் சிலர் இம்முறைதான் உற்சாகத்திற்கு முதற்காரணமென்கின்றனர். இப்படிப் பலவாறாகக்கூறுதலால் ஈது ஒருபொது முறையாய் விளங்கவேண்டும். ஆனால் இது அப்படி விளங்கமாட்டாது; சிறப்பு முறையாகவே நிலவுறும். அது அப்படி நிலவுதலை மேலே விளக்குவாம்.

ஆங்கிலேயருக்குள் “ஒருவனுக்கு நிலம் இருந்தாற் கவலையதிகம்” என்னும் பழமொழி வழங்கிவருகின்றது. அப்பழமொழியின் உண்மையை யாராய்கையில் நிலத்தைப் பண்படுத்திப் பாதுகாக்க எவ்வளவோ சிரமம் உண்டென்று ஏற்படுகின்றது. நிலங்காப்போனுக்குக் கருமார்வேலையும் தச்சுவேலையும் வேறு பல வேலைகளும் தெரிந்திருக்கவேண்டிய அவசியம் ஏற்படுவதனோடு விவசாய சாஸ்திரத்தின் நுண்மாண்பொருளினை யறியவேண்டிய அவசரமும் உண்டாகின்றது. நிலம் உயிர்போன்றதாகலின் நிலங்காப்போன் உயிர்காப்போனைப் போன்றே விளங்குகிறான். ஒவ்வொருவனுக்கும் தத்தம் உயிரினைப் பாதுகாத்தலிற் கவலையெவ்வளவு உண்டோ அவ்வளவு நிலங்காத்தலிலும் உண்டு. அப்படிப்பட்ட கவலையைத்தரும் நிலம் ஒருவற்கில்லையானால் அவற்கு அந்நிலத்தைக் காத்தற்குரிய நூல்களைக்கற்றறியுந் தொழிலும் இல்லாமற்போகும்.

அப்படியே சில்லறை வியாபாரியும் தன்தொழிலை அபிவிருத்தி செய்தவுடன் உண்ணாட்டுப் பண்டங்களைப் புறநாடுகளுக்கேற்றவோ புறநாட்டுப் பண்டங்களைத் தன் சுயநாட்டிலிறக்கவோ ஆங்கிலமென்ன, பூகோளசாஸ்திரமென்ன, சமாசாரபத்திரிகைகளென்ன, பிறதேசவர்த்தமானங்களென்ன ஆகிய இவற்றையெல்லாம் கற்றறிய ஆவலுறுகின்றான். அவனுக்கு இவைகளைக் கற்றறிய உண்டாகும் ஆவலினை ஒருபெரிய வெள்ளமென்றே சொல்லல்வேண்டும். வெள்ளமானது தன்னெதிர்ப்படும் மரங்களையுஞ் செடிகளையும் வாரிக்கொண்டு செல்வதுபோல ஆவலென்னும் வெள்ளமானது கற்றறிதலுக்கு இடையூறாக நிற்பனவைகளை யெல்லாம் வாரிக்கொண்டுபோகின்றது.

இவ்வாவலானது ஒன்றைக் கற்றுணர வேண்டிய அவசியம் உண்டான காலத்துத்தானே உற்பத்தியாகும். இது எல்லோருக்குந்தெரிந்த விஷயம்; உபாத்திமார்களும் கைக்கொள்ளத்தகுந்ததொருயுக்தி. ஆனால் அவசியந்தோன்ற போதிப்பது எப்படி?

சிலவேளை பாடங்களை ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்திக் கற்பித்தால், ஒன்றைக் கற்பித்தபிறகு மற்றொன்றைக் கற்பிப்பதற்கு ஒருவித அவசியம் தோன்றுகிறது. உதாரணமாக, 'காக்கையும் நரியும்' என்ற கதையைச் சந்தோஷமாய்ச் சொல்லக் கேட்ட சிறுவர்கள் நரியின் படத்தை வரைய ஆவலுறுவார்கள். நரியைப்பற்றிப் பாட்டுகளை ஆனந்தத்தோடு பாடினாலும் பாடுவார்கள். காக்கை திருடின தோசையை (அல்லது வடையை)க் களிமண்ணினாற் செய்துங்காட்டுவார்கள். தோசையைப் பற்றிச் சில கடைக்கணக்குகளையுங் கொடுத்துக் கணிதத்தில் அப்பியசிக்கலாம். மேடான பூமியிலிருந்து தாழ்வான பூமிக்குத்தண்ணீர்ப் பாய்ந்து செல்வதுபோல ஆவலானது நாற்றிசையும் பாய்ந்து கொண்டே யிருக்கும். பலவாய்க்கால்களை வெட்டி ஆவலென்ற நீரைப் பலதுறைகளுக்குக் கொண்டுபோவது தொடர்முறைப் போதனையின் முக்கியநோக்கமாகும். சிறுவர்களுக்குக் கதைகள் தான் மிக்க சந்தோஷத்தைத் தருவனவாகலின் கிண்டர் கார்ட்டன் பாடங்களில் கதைகளைக் கொண்டே ஒவ்வொரு பாடத் தொடரினையும் ஆரம்பிப்பது பெரும்பான்மையாகவுண்டு.

ஆனால் தொடர்முறைப்போதனை யொன்றினால் தான் ஆவல் உண்டாவதென்று பிடிவாதமாய்ச் சொல்வதற்கு நியாயமில்லை. ஆவலை உண்டாக்க வேறு வழிகளும் உண்டு. மேலும் சிலவேளை தொடர்முறைப் போதனை வெறுப்பை விளைவிப்பது முண்டு. இவை முதலான விஷயங்களை அடுத்தமுறை விரிவாய் எடுத்துக்கூறுவாம். இப்போதனையின் வேறு நோக்கங்களையும் கவனிப்பாம்.

(இன்னும் வரும்.)

ROUGH CHECKS IN ARITHMETIC

உத்தேசக் கணக்குகள்

(254 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இனமாற்றல் கணக்குகளையும் உத்தேசக் கணக்குகளாகப் போட்டு, வரவேண்டிய விடையை ஒருவாறு முன்னர்த் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக—

(1) ரூ 249-14-9 யில் எத்தனை $\frac{1}{4}$ அணுக்கள் உண்டு? தொகையானது ரூ 250 க்குக் குறைந்தது: ஆகையால் விடையானது $250\times16\times4$ அல்லது 16,000 க்குக் குறைவாயிருக்கவேண்டும். சரியான விடை 16,000-5 அல்லது 15,995 ஆகிறது.

(2) 121 ம. 5 வீ. 23 ப. யில் எத்தனைபலங்கள் உண்டு? விடை $122\times8\times40$ அல்லது 39,040 பலங்களுக்குக் குறைவாயிருக்கவேண்டும். சரியானவிடை 38,943 ப. ஆகிறது.

(3) ஒரு நூற் கட்டையில் 400 கெஜநூலிருக்க, 41 கட்டைகளில் எத்தனை மைல் நீளமான நூலிருக்கிறது? 41×400— 16,400 க. இதை 1760 ஆல் வகுத்தால் விடை ஏறக்குறைய 9 மைல் ஆகிறதென்று பார்த்த மாத்திரத்தில் தெரிகிறது. சரியான விடை $9\frac{7}{22}$ மைல் ஆகிறது. [இக்கணக்கை வேறுவிதமாகவும் போடலாம். அதுவருமாறு 400 க. $\frac{1}{4}$ மைலுக்குக் குறைவாயிருக்கிறது. ஆகையால் விடையானது $41\times\frac{1}{4}$ அல்லது $10\frac{1}{4}$ மைலுக்குக் குறைவாயிருக்கவேண்டும்.]

(4) ஒரு கஜானாவில் 23,497 கால் அணுக்கள் உண்டு. இத்தொகையைப் பத்துரூபாய் நோட்டுகளாக மாற்றினால், எத்தனை நோட்டுகள் கிடைக்கும்? 23,497 யை $4\times16\times10$ அல்லது 640 ஆல் வகுக்கவேண்டும். விடை ஏறக்குறைய 39 ஆகிறதென்று தெரிகிறது. சரியான விடை 36 நோட்டுகளாம்.

(இன்னும் வரும்.)

FOREIGN NEWS

பிறதேச வர்த்தமானம்

ஒருவித தணிக்கை
A mode of Inspection

ஒவ்வொரு பள்ளிக்கூடத்தைத் தனித்தனியாய்த் தணிக்கை செய்து இதில் மாணவர்கள் நன்றாகத் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள், இதில் அவர்கள் தேர்ச்சியில் குறைவடைந்திருக்கிறார்களென்று சொல்லி ரிபோர்ட்டு எழுதுவதனால் செவ்வையான தேர்ச்சி இன்னதென்று விளங்காமற் போனாலும் போகுமென்கின்றார்கள் அமெரிக்கா தேசத்திய தணிக்கை ஆபீசர்கள். நல்ல தேர்ச்சி யென்பதற்கு ஒருவித அடையாளம் வேண்டியிருக்கிறதாம். அதை அடியிற்குறித்தவாறு

கண்டுபிடிக்கிருர்கள். ஒரே அப்பியாசத்தைப் பல பள்ளிக்கூடங்களுக்குக் கொடுத்து, தேர்ச்சிக்குத்தகுந்த மாணவர்களை மூன்று வகுப்புகளாகப்பிரித்து ஒவ்வொரு வகுப்பினரும் சராசரியாகப்பெறும் மார்க்கினைக்குறித்து வைக்கிருர்கள். தணிக்கை செய்வதற்கு ஒரு பள்ளிக்கூடத்துக்குப் போனதும் முன் கொடுத்த அப்பியாசங்களைப்போன்ற அப்பியாசங்களைக் கொடுத்து மாணவர்களின் தேர்ச்சியை ஒருவித நிச்சயத்தோடு கண்டுபிடிக்கிருர்கள்.

இப்படித்தான் தணிக்கை செய்யவேண்டுமென்று யாம் சொல்லவந்ததேயில்லை. ஆனால் தணிக்கைக்கு ஒருவித அடையாளமிருப்பது அநாவசியமன்று. ஒவ்வொரு சங்கத்தைச் சேர்ந்த உபாத்தியாயர்களும் தமது பள்ளிகளில் ஒரேவிதமான அப்பியாசங்களைக் கொடுத்து மாணவர்கள் பெறும் மார்க்கை (சராசரி மார்க்கை) க் கண்டுபிடித்து நல்ல தேர்ச்சிக்கு அதை ஒரு அடையாளமாக வைப்பது நல்லதல்லவா?

* * * * * *

மாண்டசாரி சங்கம்
The Montessori Society

மாண்டசாரி அம்மையை இரண்டாம் பிரோபல் என்று கொண்டாடுகிறவர்கள் பலர். அவர் போதித்துள்ளவாறு நடக்கிறவர்கள் சிலர் போலும். லண்டன் மாநகரத்திய மாண்டசாரி சங்கத்தைச்சேர்ந்த மெம்பர்களின் சங்கியை 80 என்றே தெரிகிறது. இருந்தபோதிலும் அவர்கள் மிகுந்த ஊக்கங்கொண்ட மெம்பர்களே. பிரதிமாதமும் இரண்டு மூன்று இடங்களில் தாம் கைக்கொண்ட போதனு முறையைப்பற்றிப் பிரசங்கிக்கிருர்கள். இப்படி ஊக்கங்கொண்டுழைப்பவர்கள் இகழ்ச்சியினை யடைவார்களோ அல்லது புகழ்ச்சியினை யடைவார்களோ?

* * * *

ஸ்காட்லாண்டு தேசத்தின் பிரதம கல்வியின் சிறப்பு
The value of Scotch Elementary Education

1914 - ஆம் வருஷத்தில் ஸ்காட்லாண்டில் நடந்த பாடசாலைகளின் தணிக்கை விஷயமான ரிபோர்ட்டு வெளிவந்தது. அதில் அத்தேசத்திய எலிமெண்டரி கல்வியின் சிறப்பைப்பற்றிச் சில விஷயங்கள் குறிக்கப் பட்டிருக்கின்றன. பொதுவாய் எலிமெண்டரி பள்ளிகளில் வாசித்த பிள்ளைகளின் பொது அறிவு முன்னிருந்ததை விட இப்பொழுது அதிகமா யிருக்கிறதாம். சமயோசித புத்தியும் அதிகம். நன்னடக்கையும் விவேகமும் அதிகரித்து வருகின்றனவாம். மனம்மாத்திரம் நிலையில்லாமல் பல துறைகளை நாடிச் செல்கின்றதாம். கொடுத்தவேலையைச் சின்னஞ்சிறுகருத்துமாய்ச் செய்யும் ஊக்கம் இன்னும் ஜனிக்கவில்லை போலும்.

NALAN AND PUSHKARAN

நளனும் புஷ்கரனும்

கடவுள் வாழ்த்து

விநாயகக்கடவுள்

நேசரிதங் கூர நிலவலயந் தாங்குநளன்
மாசரிதங் கூற வருந்துணையா—ஈசன்
கரியான் அனத்தான் கருதுபுகழ் பூண்ட
கரியா னனத்தான் கழல்.

திருமால்

ஆதித் தனிக்கோல மாஞ னடியவற்காச்
சோதித் திருத்தூணிற் ருேன்றினன்—வேதத்தின்
முன்னின்ருன் வேழ முதலே யெனவழைப்ப
என்னென்ரு னெங்கட் கிறை.

சிவபெருமான்

கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
உலாவு சடைமே லுறைபு—நிலாவை
வழியவார்த் தாலன்ன மார்நீற்ருர் நாகங்
கழிய வார்த் தார்நமக்கோர் காப்பு.

நளனும் புஷ்கரனும்

சுயம்வரம்

நீர்வளம் முதலிய பலவளங்களில் மிகவுஞ் சிறப்புப்பெற்ற நாடு என்று எல்லோருஞ் சிறப்பித்துக்கூறும் சிறப்பினையுடையது நிடதநாடு. அந்நாட்டிற்குத் தலைநகராக மாவிந்தம் என்னும் நகர் ஒன்று இருந்தது. அதற்கு அரசாக நளன் என்னும் புருஷோத்தமன். ஒருவன் இருந்தான். அவன் குடிகளிடத்தில் அதிக அன்புள்ளவன். அவர்களுடைய குறைகளைக் கேட்பதில் அதிக பிரியமுடையவன். அவர்களுக்கு உதவி செய்வதில் அதிக ஊக்கமுடையவன்; இன்சொலுடையவன்; குளிர்முகமுடையவன்; தண்ணளியுடையவன்; தயை சாந்தமுடையவன்.

இப்படிப்பட்ட அருங்குணங்களையுடைய நளமகாராசனது நாட்டில் கோணலானவை யாதேனும் உண்டோ . என்றாராய்ந்தால் வில்லையன்றிக் கோணலானவை வேறொன்றும் கிடைப்பதில்லை. தளர்ச்சியுடையவன ஏதேனுமுண்டோ என்று தேடினால் மாதர்களுடைய கூந்தலை யன்றிப் பிறபொருள்கள் சோருவதில்லை யென்று தெரியவரும். அந்நாட்டில் கதறுவன யாதேனும் உண்டோ என்றாய்ந்தால் மாதர்களுடைய காற்றண்டையை விடக்கதறும் பொருள் இன்றெனவே அறிய வரும். கலங்கிப் போவனவாவது அவ்விடத்தில் உண்டோவெனின் தண்ணீரை விடக் கலங்கும் பொருள் இல்லையென்பர். இவைகள் இல்லாமற் போனாலும் நேரான வழியைவிட்டு விலங்குவனவேனும் உண்டோவெனத் தேடின் காரிகையாருடைய கண்கள் தாம் அப்படி விலங்குவனவென்றும் மற்றவை விலங்குவன வல்லவென்றும் புலப்படும்.

அவ்விடத்தில் எல்லோராலும் அறியப்படுவன நூல்களாம். என்றும் அறியப்படுவன நூல்களென்றால் அறியப்படாதவையுமுண்டோ ? அப்படி அறியப்படாதவை யிருக்குமேல் அவை யாவை என்னுங் கேள்வி பிறக்கின் இன்பவல்லியருடைய இடையே அறியப்படாதவை என்னும் உத்தரம் தோன்றும். அங்கு இல்லாதன யாவை என்று தெரியவரும். அவ்விடத்தார் கல்லாது விட்டது வஞ்சனையாம்.

இப்படிப்பட்ட நற்குணங்களெல்லாம் பொருந்தப்பெற்ற குடிகளைப் பாதுகாத்துவந்த நளமகாராசன் மலர்களைப் பறிக்கப் பூந்தோட்டத்திற்குப் போவது வழக்கம். அவ்வழக்கப்படி ஒரு நாள் அங்குச்சென்ற காலத்துத் தடாகமொன்றில் தாமரைமலர்கள் நிறையப்பூத்திருந்தன. மலரப்பெற்றுள்ள மலர்களொன்றில் அரசவன்னமொன்று அமர்ந்திருந்தது. அந்த அரசவன்னத்தின் அழகையோ வர்ணிக்கமுடியாது. அதனுடைய தேகநிறம் சோலையின் நிறத்தை மாறச்செய்யும். அதன் தாளின்நிறமோ தடாகத்தின் நிறத்தினைச் சிவப்பாக்கும். அப்படிப்பட்ட அழகினையுடைய அன்னப்புள்ளினை நளமகராசன் கண்டனன். கண்டதும் அவனுடைய மனம் அப்பறவையின் அழகில் ஈடுபட்டுவிட்டது.

(இன்னும் வரும்.)

OFFICE OF THE REGISTRAR OF ... 23 AUG 1915 MADRAS.



உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்
மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

“ கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் ”—தமிழ்மறை

| தொகுதி—௨ | 1915௵ ஆகஸ்டுமீ | பகுதி—௨ |

NOTES OF THE MONTH

மாதாந்தரக் குறிப்புகள்

A word of thanks
மனமுவந்த வந்தனம்

நாற்பத்து மூன்று கவர்ன்மெண்ட் பெண்கள் பாடசாலைகளுக்கும் பதினொரு டிரெயினிங் பாடசாலைகளுக்கும் எமது 'சற்குரு' பத்திரிகையை மாதாந்தரம் அனுப்புமாறு கட்டளை தந்ததற்காகக் கவர்ன்மெண்டாருக்கு யாம் மனமுவந்த வந்தனம் அளிக்கின்றோம். இவ்வளவு சொற்பகாலத்திற்குள் எமது தகுதியை யறிந்து நன்மைபுரிந்து கௌரவப் படுத்தினதற்குக் கைம்மாறாக ஒன்றும் புரியக்கூடாதவர்களாயிருந்த போதிலும் பத்திரிகையை எம்மாலியன்றவளவு விருத்தி செய்வதிலேயே மிகுந்த ஊக்கங்கொண்டு உழைத்து அவர்கள் உதவிக்கு யாங்கள் பாத்திரவாளிகளென்று நிலைநிறுத்திக்காட்ட முயற்சிப்போம் என்பதனை மிகுந்த வணக்கத்துடன் அறிவிக்கின்றோம்.

* * * * * *

Elementary Education in Mysore
மைசூரில் எலிமென்டரி படிப்பு

கவர்ன்மென்டாருடைய உபகாரத்தைப்பெற்று விளங்கும் ஊர்ப்பள்ளிகள் மூலமாகக் கல்வியைப் பரவச்செய்யலா மென்று கல்விக்கு இன்ஸ்பெக்டர் ஜெனரலாயுள்ளவர் எடுத்துரைத்த விஷயத்தினை மைசூர் கவர்ன்மென்டார் அங்கீகரித்துள்ளனர். சிற்சில பாகங்களிலுள்ள பள்ளிகளில் கேரிஞ் செலவில் மூன்றிலிரண்டுபங்கு கவர்ன்மென்டார் கொடுத்துதவவேண்டு மென்னும் அவர் வேண்டுகோளுக்கும் இணங்கினார்கள். இவ்வித ஏற்பாடுகளைப்பார்க்கப் பள்ளிகளின் சங்கியை தவறாமல் அதிகரிக்கும் என்றே உறுதியாகச் சொல்லவேண்டியதா யிருக்கின்றது.

*　　*　　*　　*　　*　　*

Free Vernacular Education in Assam
ஆசாம் தேசத்தில் இலவசமாகத் தாய்ப்பாஷையைக் கற்பித்தல்

ஆசாம் தேசத்திலுள்ள பிரைமரி பள்ளிகளிலும் தாய்ப்பாஷையைப் போதிக்கும் மத்தியதர பாடசாலைகளிலும் பிள்ளைகளிடமிருந்து சம்பளம் ஒன்றும் இறுக்கிறதில்லையாம். அவர்களிடமிருந்து சம்பளம் பெறாமலே போதிக்கின்றார்களாம். அப்படிப்போதிக்க ஆரம்பிக்கவும் உடனே 3534 பிரைமரி பள்ளிகள் 3760 பள்ளிகளாகவும் 36 மத்தியதர பாடசாலைகள் (தாய்ப்பாஷையைப் போதிக்கும் பாடசாலைகள்) 47 மத்தியதர பாடசாலைகளாகவும் மாறவேண்டியதாயிற்று.

*　　*　　*　　*　　*　　*

A New Curriculum for Primary Education in Hyderabad
ஐதராபாக்கத்தில் பிரைமரி படிப்பிற்கான புது பாடக்கிரமம்

இப்புதுபாடக் கிரமத்திலுள்ள விஷயங்களில் கவனித்தற் குரியவை வருமாறு :—

1. உர்து பாடம் முக்கியபாடத்து ளொன்றாயிருக்க இடம்பெற்றது ;
2. 'இயற்கைப்பாடம்' என்னும் மறுபெயருடன் ரசாயன சாஸ்திரம் கற்பது ;
3. நீதிநூற் பாடம் படிக்கவேண்டு மென்பது ;
4. இந்தியருடைய சங்கீத சாஸ்திரம் கற்பது ; [பது ;
5. இந்தியருடைய சுயபாஷை தீதுருவண்ணங்காப்
6. ஐஸ்கூலில் படிக்க விருப்பமுறுவோர் ஆங்கிலத்தினைக்கற்கச் சௌகரியமுண்டாக்குவது.

மேலேகூறிப் போந்தவிஷயங்களைப் பார்க்கையில் நம்முடைய எலிமென்டரி பாடசாலையின் பாடவட்டவணைக்கும் இதற்கும் அதிமாக மாறுபாடு இருப்பதாகக் காணப்படவில்லை.

*　　*　　*　　*　　*

Medical Inspection of School Children
பள்ளிச்சிறார்கள் வயித்தியரால் பரீக்ஷிக்கப்படுதல்

இச்சென்னையிலுள்ள கார்பொரேஷன் பள்ளிகளிலிருந்து சிறிது சிறிதாக இப்பரீக்ஷையினை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பரீக்ஷையினை அஸிஸ்டன்ட் சர்ஜன் செய்துவருவார். அவர் I. M. S. உத்தியோகஸ்தருடைய கட்டளையின்படி காரியத்தினை நடாத்திவருவார். தொழில்வகுப்போர் பெரிய உத்தியோகஸ்தராகவும் அனுபவம் முதிர்ந்தவராகவும் இருக்கவேண்டியது அத்தியாவசிகமென்று கவர்ன்மென்டார் கருதுகின்றனர்.

இந்தப்பரீக்ஷிக்குந்தொழில் பொதுஜனங்களுடைய உதவியையும் அவர்களுடைய மனத்திருப்தியையும் பெறுமென்றும் நன்மையினைத் தவறாமல் அளிக்கு மென்றும் நம்புகின்றோம்.

*　　*　　*　　*　　*　　*

Mrs Sarijoni Devi on Female Education
சுரோஜ்ஜனி தேவியாரும் பெண் கல்வியும்

இவ்வம்மையார் குண்டூரில் ஜூலைமீ 7௳ பெண்கல்வியைப்பற்றிப் பேசினார்கள். அதில் தேசத்து ஜனங்களுக்கு ஆத்மார்த்த வுணர்ச்சியைக் கொடுக்கக் கூடியவர்களும் அவ்வுணர்ச்சியைப்புருஷர் இழவாதபடி காக்கக்கூடியவர்களும் பெண்பாலாரே யென்றும் அன்னார்க்குக் கல்வியறிவு இருந்தாற்றான் நன்மாண் பொருளினைப் பகுத்தறியும் அறிவுவாய்க்கு மென்றும் அவ்வறிவு வாய்க்கப்பெற்றவர் தங்கவிளக்கே போலும் மணிவிளக்கேபோலும் விளக்கத்துடன் விளங்குவரென்றும் கூறினார்கள். பிறகு "அவ்விளக்கினைப் பலரும் கண்ணாரக்கண்டு களிக்க ஏற்றுஞ்சக்தி உங்களிடத்தில் தானுண்டு" என்று சபையினரைப் பார்த்துக்கூறினார்கள்.

இவ்வம்மை கல்வியில் அதிக தேர்ச்சிபெற்றவர்கள். அவர்களால் பாடப்பெறும் ஆங்கிலக்கவிகளெல்லாம் சாதாரணமானவைகளன்று. அவைகள் அச்சுவிமானத்திலேறிப் புகழுடன் இங்கிலாந்தில் உலவிவருகின்றன.

*　　*　　*　　*　　*　　*

A night school for Tiruvannamalai
திருவண்ணாமலையில் இராப்பள்ளி

ம-ா-ா-ஸ்ரீ S. விஜயராகவாசாரியாரவர்கள் B. A., திருவண்ணாமலையில் இராப்பள்ளி யொன்று திறந்ததாகக் கேள்வியுற்று மிகவும் சந்தோஷிக்கின்றோம். இத்தகைய பள்ளிகள் காலகதியால் குறைந்தன மறைந்தனவேனும், இவைகள் நன்மைபுரிதற் காதாரமான பள்ளிகளென்பது எமது அபிப்பிராயமாதலின் இப்புதுப்பள்ளியினால் விளையப்போகும் நன்மையினை வெகு ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். அப்படியாம் எதிர்பார்ப்பது தவறன்று. அப்படியாம் எதிர்பார்ப்பதுபோலவே அதிக நன்மைவிளையும். அவ்வாறு நன்மை

[illegible] மதுவிலக்கு விஷயமாகவாசிரியர் வர்களும் [illegible] வேறு சில சிறந்த மேன்மக்களும் அதில் தலையிட்டிருந்தலே.

* * * * * *

Rs 9100 to raise the scale of salaries of Pandits & other language teachers
பண்டிதர்களுடைய சம்பளத்தையும்பிறபாஷா போதகர்களுடைய சம்பளத்தையும் உயர்த்தற்கு ரூபா 9100

லோகல்போர்டாரும் முனிஸிபாலிடியர்களும் தம்மால் பரிபாலிக்கப்பட்டு வரும் காலேஜிகளிலும் செகன்டரி பள்ளிகளிலு முள்ள தமிழ்ப்பண்டிதர்களுடைய சம்பளத்தினையும் பிறபாஷாபோதகருடைய சம்பளத்தினையும் உயர்த்தும் பொருட்டாகக் கவர்ன்மெண்டார் உபகாரார்த்தமாக 9100 ரூ. கொடுத்துதவி யிருக்கின்றனர். இத்தொகையினால் அவர்களுடைய சம்பளம் உயர்ச்சி பெறுகையில் அவர்களுடைய கல்வியறிவும் விருத்தி பெறுமென்றே நம்புகின்றோம். அதிக சம்பளம்பெற அவாவுவோர் எப்பொழுதும் தம்முடைய கல்வியினையும் விருத்திசெய்துகொள்ள அவாவ வேண்டியதவசியமல்லவா?

* * * * * *

The Mahajanopakara Sangam, Madras
சென்னை மகாஜனோபகார சங்கம்

சென்னை ஆரியன் பிரைமரி பள்ளியில் ஜுலைமீ 1உ யன்று இச்சங்கத்தார் பெருங்கூட்டம் கூடினார்கள். அக்கூட்டத்திற்குத் தலைவராக ம-ா-ா-ஸ்ரீ V. E. சுந்தரேச முதலியாரவர்கள் வீற்றிருந்தனர். அப்பொழுது, (1) கள்ளுக்கடைகள் சாராயக்கடைகள்போல 9 மணிக்கே காலையில் திறக்கப்படவேண்டு மென்றும், (2) இரண்டு பர்லாங்குக்கு அதாவது கால்மைலுக்கு உட்பட்ட தூரத்தில் கள்ளுக்கடையேனும் சாராயக்கடையேனும் ஒன்றுக்குமேல் இருக்கப்படாதென்றும் அப்படிப்பட்ட கடைகளுங்கூட பெரிய முக்கியமான வீதிகளில் இருக்க இடம் பெறப்படாதென்றும் நிர்ணயித்தார்கள். இப்படித்தான் மதுபானத்தினை விலக்கற்குரிய தொழில்செய்தலைச் சிறிது சிறிதாகக் கைக்கொள்ளல் வேண்டும்.

* * * * * *

Schoolmaster Post masters
போஸ்ட்மாஸ்டராக விருக்கும் உபாத்திகள்

ஜுலைமீ 7உ மதராஸ் டைம்ஸ் பத்திரிகையில் போஸ்ட்மாஸ்டராகவிருக்கும் உபாத்திகளின்மீது சாட்டப்பட்ட பெருங்குற்றமொன்று வெளியாகியிருக்கின்றது. அப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்து வருவோரொருவர், புத்தகப்பார்ஸலை இந்தப் போஸ்ட்மாஸ்டர்களுக்கு அனுப்பினால் அவர்கள் அப்பார்ஸலைத்திறந்து புத்தகத்தினையெடுத்து வாசித்து, அழுக்குப்படுத்திப் பிறகு பார்ஸலாகக்கட்டி 'வேண்டுவோரற்றது ஈது' என அதனைத் திருப்பி விடுகின்றார்களென்று பத்திராதிபருக்குத் தெரிவித்திருக்கின்றார். அவர் சாட்டுங்குற்றமோ பெருங்குற்றமாகக் காணப்படுகின்றது. ஆதலால் இதனை வாசிக்கும் போஸ்ட்மாஸ்டராக விருக்கும் உபாத்திகள் இக்குற்றத்தில் எவ்வளவு உண்மையிருக்கிலா மென்று அபிப்பிராயப் படுகின்றார்களோ அதனைச் செவ்வையாக எடுத்துரைத்தால் நலமாயிருக்குமென்று கருதுகின்றோம்.

* * * * * *

ROUGH CHECKS IN ARITHMETIC

உத்தேசக் கணக்குகள்

(21 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கணிதத்தில் ஒவ்வொரு எண்ணும் ஒவ்வொருவித அளவைக் குறிக்கிறது. பின்னங்களும் அளவைக்குறிக்கின்றன; ஆனால் அவைகள், அளவினை மற்றொரு அளவோடு ஒப்பிட்டுக்காட்டுகின்றன. உதாரணமாக, $\frac{2}{3}$ என்ற பின்னம் 1 இல் உள்ளப்ங்குள் இரண்டு பங்கென்று காட்டுகின்றது. 1 ஐயும் $\frac{2}{3}$ ஐயும் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். பின்னங்களைத் 'தராசு எண்கள்' என்று சொன்னால் தவறாகுமோ?

மாணவர்கள் ஒரு பின்னத்தைப் பார்த்தமாத்திரத்தில் அது குறிக்கும் அளவு பெரியதோ அல்லது சிறியதோ வென்று அறிய வேண்டும். அப்படி ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வழி பின்னத்தை ஒன்றோடு ஒப்பிட்டுப் பார்த்தலாகும். உதாரணமாக, $\frac{12}{13}$ என்ற பின்னம் பெரிதோ $\frac{4}{9}$ பெரிதோ வென்று யோசித்தால், $\frac{12}{13}$ பெரியதென்று பார்த்தமாத்திரத்தில் தெரியவருகிறது. எவ்வாறெனில் $\frac{12}{13}$ என்பது 1 க்கு ஏறக்குறைய சமமாயிருக்கிறது, $\frac{4}{9}$ என்பது $\frac{1}{2}$ க்குக்குறைவாயிருப்பதாகக் காணப்படுகிறது. இதைப்போலவே $\frac{13}{16}$ என்ற பின்னம் $\frac{11}{16}$ யைக் காட்டிலும் பெரியதென்று தெரிகிறது; எவ்வாறென்றால் $\frac{3}{4}$ ஐவிட $\frac{13}{16}$ அதிகமாயிருக்கிறது, $\frac{11}{16}$ ஐ குறைவாயிருக்கிறது.

எண்களை ஒப்பிட்டுப் பார்ப்பது வெகு நல்லது; எண்களைப் பற்றிய ஞானத்தை அது விருத்திசெய்யும்.

அடியில்வரும் கணக்கைப்பார்ப்போம். "ஒரு சில்லறை வியாபாரி ரூ. 2-11-0 க்குச் சாமான் விற்றால் 7 அணா லாபம் அடைகிறான். இன்னொருவன் ரூ. 8-4-0 க்கு விற்று 10 அணா

லாபம் பெறுகிறான். இவர்களுள், யாருக்கு லாபம் அதிகமாய்க் கிடைக்கிறது?"

ரூ. 2-11-0	யில் அணா	43 ...	லாபம்	7	அணா.
ரூ. 3- 4-0	,, ,,	52 ...	,,	10	,,

43 யில் 7 என்பதை $\frac{7}{43}$ என்ற பின்னத்தாற் குறிக்கலாம். $\frac{7}{43}$ என்பது $\frac{10}{53}$ யைக் காட்டிலும் குறைந்தது; எங்ஙனமெனில், $\frac{7}{43}$ என்பது $\frac{1}{6}$ க்கும், $\frac{10}{53}$ என்பது $\frac{1}{5}$ க்கும் ஏறக்குறைய சமமாயிருக்கின்றன அல்லவா?

இன்னொரு கணக்கு. "ஒரு பள்ளிக்கூடத்தில் 43 பிள்ளைகளிருக்கின்றார்கள், மற்றொருபள்ளியில் 57 பேர் உண்டு. ஒன்றில் 37 பேர் ஆஜராயிருக்கிறார்கள், மற்றொன்றில் 50 பேர் வந்திருக்கிறார்கள். எதில் அட்டெண்ட்ன்ஸ் நன்றாயிருக்கிறது?"

விடை:—பள்ளிக்கூடத்துக்கு வராமலிருந்த பிள்ளைகள் 6 உம் 7 உமே. $\frac{6}{43}$ என்பது $\frac{7}{57}$ யை விடப் பெரியது. ஆகையால் இரண்டாவது பள்ளிக்கூடத்தில் தான் அட்டெண்டன்ஸ் நன்றாயிருக்கிறது என்று சொல்லவேண்டியது.

(இன்னும் வரும்.)

"CORRELATION".

தொடர்முறைப்போதனை

(20 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தொடர்முறைப்போதனை யொன்றினால் தான் ஆவல் உண்டாகுமென்று கூறுவது சரியல்லவென்று முன்னே சொன்னோம். வாசகபாடம் நடத்தும்பொழுது தொடர்முறைப்போதனை அத்தியாவசியகமென்று சிலர் சொல்லுகிறார்கள். மாணவர்கள் எளிய நடையில் எழுதின நல்ல கதை யொன்றை வாசித்து வரும்பொழுது ஆவல் தானே உற்பத்தியாகிறது. கதையின் சுவையை அநுபவிக்கக் கதையின் மீதொழிய வேறொன்றின்மீதும் மனஞ் செல்வதில்லை. புதிய விஷயந்தோன்றினால் அதைச் சித்திரத்தினாலேயோ களிமண் உருவத்தினாலேயோ ரூபித்துக்காட்டலாம்! ஆனால், கதை சொல்லும்போதாவது வாசிக்கும்போதாவது கதை

யின்போக்கு ஒன்றினைத்தவிர உற்சாகத்தைத் தருவது வேறொன்றுங்கிடையாது. கதையைச் சொல்லும்பொழுது இடையிலே அதை நிறுத்தி இரும்பைப்பற்றியோ பருத்தியைப்பற்றியோ பொருட்பாடம் நடத்துவோமாகில் கதையின் சுவை முற்றும் அழிவதோடு ஆவலும் அழிந்துபோம் அல்லவா? "தெள்ளியவாலின்" என்ற நறுந்தொகைப்பாட்டைக் கற்பிக்க வந்த மிகுந்த ஊக்கமுடைய உபாத்தியாயரொருவர் மீன், ஆலப்பழம், ஆலிலை முதலிய உபகரணங்களைக்கொண்டு வந்து பாட்டில் தோன்றும் ஒவ்வொரு விஷயத்தினையும் பிரத்தியட்சமாய்க் காண்பிக்க ஆரம்பித்தனர். முக்கால்மணி கோத்திற்கூட பாடம் நடந்தேறுவதற்கில்லாமற் போயிற்று. செய்யுளில் இனிமைதோன்றாதும் அதன் நடையொன்றும் விளங்காதும்போயின. செய்யுளின் இனிமையையும் அதன் நடையையும் அறிந்து கொள்ளக்காத்திருக்கும் பிள்ளைகளுக்கு அவைகளைத் தெரிவிக்கவேண்டியபடி தெரிவியாமல் பொருட்பாடத்தினை நடத்திய பின்னரறிவிக்கலாமெனக் கருதுவது பசிக்கு வந்தவனுக்குப் பயிரிட்டு அன்னமளிக்க உத்தேசிப்பது போன்றுள்ளது. ஆலமரத்தைக்கூட பாராத பையன் உண்டோ? அதன் விதையையும் அவன் பார்த்திரானோ? ஆலமரத்தடியில் தங்கும்பொழுது உண்டாகும் ஆனந்தத்தினை உண்டு பண்ண வேண்டியவர் தொடர்முறை யென்னும் விஷக்காற்றினால் மோதுண்டு ஆனந்தத்தை யிழந்து வெறுப்பினை யடையவிடுகின்றனர். செய்யுளின் இனிமை பொருட்பாடத்தினால் விளங்காது. இயற்கைக் காட்சிகளின் அருமையை யெடுத்துரைத்தாலன்றிக் கற்பிப்பது பலிக்காது. கயத்துள் நீர் ஞானியருள்ளமே போன்று சலனமற்றிருத்தல், அதில் மீன் உலாவுதல், ஆலமரத்தின் நிழல் முதலிய இயற்கை விநோதப் பொருட்காட்சிகளைப்பற்றி ஆனந்தத்துடனே எடுத்துரைத்துப் பின்னர் அவ்வழகிய காட்சிகளைக் காண்பதால் நமக்குத் தெரியவரும் நீதிகளைக் கற்பிப்பதே முறையல்லவோ? பாட்டின் அருமையைக் கற்பிக்க வேண்டியதே யொழிய மீனின் உருவத்தை யன்றே. செய்யுட்பாடத்துக்குஞ் சித்திரம் வரைதலுக்குஞ் சம்பந்தமுண்டோ? எல்லாவித அறிவும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டதே. ஒரு பாடத்தை நடத்தும்பொழுது பல்வேறு விஷயங்களைத் துணையாய்க்கொண்டு நடத்துவது அவசியமே; ஆயினும் இது தொடர்முறைப்போதனை

யென்னப்படாது. தொடர்முறைப்போதனையானது உற்சாகத்தை விளைவிப்பதற்காகப் பட்டியிலிருக்கும் ஒரு பாடத்தை மற்றொரு பாடத்துடன் சம்பந்தப்படுத்திக் கூறுவதாம். அப்படிச் சம்பந்தப் படுத்திக் கூறுவதற்கு அவசியம் உண்டோ இல்லையோ வென்று ஆராய்ந்தறிந்து தான் பாடத்தைச் சம்பந்தப்படுத்தி நடத்தவேண் டியதோர்யுக்தி பொதுவாய், ஒரு பாடம் நடந்தேறுதற்கு முன் னர் இன்னொரு பாடத்தைக் கலந்து கற்பிப்பது சரியல்ல வென்றே சொல்லவேண்டும். சில இடங்களில் அப்படிக்கலந்து சொல்லலும் அவசியமாகக் காணப்படும்.

இதுவரையிற் சொல்லிய விஷயத்தின் சுருக்கம்:—தொடர் முறைப் போதனையானது |

(i) புதிய பாடத்தை நடத்துவதற்கு வேண்டிய ஆவலை உண்டுபண்ணுவது;

(ii) ஒரு பாடத்தில் தோன்றும் அரிய விஷயங்களை விளங் கச் செய்வதற்காக மற்றொரு பாடத்தோடு சம்பந்தப்படுத்தி நடத்துவது; ஆகிய இவ்விஷயங்களைக் கொண்டுள்ளதே. அது ஆவலையும் மனத்தெளிவையுந் தரக்கூடியதாகும்.

அப்பியாசங்கள்

1. காகிதத்தைப்பற்றி ஒரு வியாபாரக்கணக்கு இரண்டாம் வகுப்பிற்குக் கொடுக்கப்பட்டது. அடுத்த நேரத்தில் காகிதத்தைப்பற்றிப் பொருட்பாடம் நடத்த வேண்டியதோ?

2. பாம்பைப்பற்றிய வாசகபாடத்தில் மலைப்பாம்பு 15 அடி நீளமென்று சொல்லியிருக்கிறது. க்ஷேத்திரகணித பாடம் நடக்கும்போது ஒரு கயிற்றைக் கொண்டுவந்து அதில் 15 அடி அளந்து பையல்களுக்குக் காட்டல் அவசியந் தானே? வாசகபாடம் நடக்கும்போதே அளந்து காட்டலாமோ?

3. நான்காவது வாசகபாடத்தில் 'மாட்டுவண்டி' யென்று வந்திருக் கிறது. வண்டியின் உருவபடம் வரையவேண்டுமோ?

4. I-ஆம் வகுப்பிற் பருத்தியைப் பற்றிப் பாடம் நடந்தேறியது. பூகோ ளத்தில் மேகங்களைப்பற்றிப் புதியபாடம் நடக்கவேண்டும். மேக பாடத்தைப் பருத்திப்பாடத்தோடு சம்பந்தப்படுத்தலாமா?

5. நான்காவது வகுப்பிற் காட்டு இலாகாவைப்பற்றிப் புதிதாய்ப் பாடத் தை நடத்தவேண்டும். அதை முன் நடந்ததொரு பாடத்தோடு சம்பந்தப் படுத்துவது அத்தியாவசியமா?

6. 'மாடு' என்ற வார்த்தை எழுதக்கற்றுக்கொண்ட பாலர் வகுப்புப் பிள்ளைகளுக்கு அடியிற் குறித்த பாடங்களை யெல்லாஞ் சம்பந்தப்படுத்திச் சொல்லவேண்டுமோ?—போதப்பாடங்கள்—வெண்ணெய், பால், குளம்பு; களிமண்வேலை—மாட்டின்தலை; கணிதம்—மாட்டின்காலைப்பற்றிக் கணக்கு கள்.

—ooOoo—

FOREIGN NEWS

பிறதேச வர்த்தமானம்

Education in the Philippine Islands
பிலிப்பின் தீவுகளிற் கல்வி

பிலிப்பைன் மகாசமுத்திரத்திலுள்ள இத்தீவுகள் அமெரிக்கருக்குச் சொந்தமானவை. சொற்பகாலத்திற்குள் அவ்விடத்திற் கல்வியானது கிரமப்படி சீர்திருத்தம் பெற்றிருக்கிறது. அங்குக் கல்வியினை மூன்றுதரமாகப் பிரித்திருக்கிறார் கள். அவற்றுள் முதலாவது பிரைமரி படிப்பு; இரண் டாவது திரவியத்தேடுதற் கமைந்த தொழில்களைக் கற் பித்தல், இதனை மத்திய தரப்படிப்பென்பர்; மூன்றாவது செகண்டரி படிப்பு. யூனிவர்ஸிடி படிப்பே எல்லாவற் றிற்குந் தலைமையான படிப்பாகும். ஒவ்வொரு பையனுக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் டொப்பி செய்தல், குடைமுடைதல், சித்திரத்தையல் தைத் தல் முதலிய கைத்தொழில்களைக் கற்பிக்கின்றனர். ஒவ்வொரு தரப்படிப்பும் ஒவ்வொரு நோக்கத்தைக்கொண்டே விளங்குகின்றது. மத்திய தரப்படிப்பு கிராமத்தலைவராக விளங்கவும், யூனிவர்ஸிடி படிப்பு தேசத்துத் தலைவராக விளங்கவும் பழக்குகின்றன. நீதிநூற் கல்வியும், தேகதத்துவப்படிப்பும், கைத்தொழிற் படிப்பும் அவ்விடத்தில் நன்றாக ஆதரிக்கப்படுகின்றன.

*   *   *   *

Four factors in Education
கல்வி விளைதற்கான நான்கு அம்சங்கள்

குடும்பம், பாடசாலை, இராஜாங்கம், கோயில் என்னும் நான்கு இடங்க ளும் கல்வி விளைதற்கும் விருத்தியடைதற்கும் ஆதாரமா யிருப்பனவென்று ஆங்கில வித்வசிரோமணிகளுளொரு வர் தாமெழுதியுள்ள நூலொன்றிற் கூறியிருக்கின்றனர். அவைகளொவ்வொன்றும் ஒவ்வொரு காரியஞ் செய்யக் கூடியன. பாடசாலையோ பிள்ளை பொதுஜனங்களோடு சந்தித்தற் கேதுவாயுள்ள இடம். அத்தகைய விடத்துள்ள உபாத்திகளே பிள்ளைகளுடைய கல்வியின் அபிவிருத் திக்கு உத்தரவாதிகளென்று எடுத்துரைத்தல் கூடாது. பிள்ளைகளுடைய கல்வியின் அபிவிருத்திக்குக் குடும்பத்தலைவரான தாய்தந்தையருங்கூட உத் தரவாதிகளென்றே அறிதல் வேண்டும்.

ELEMENTARY AND SECONDARY EDUCATION

எலிமென்டரிகல்வியும் செகண்டரி கல்வியும்.

சிலமாதங்களுக்கு முன் வெளிவந்த இங்கிலாந்து கல்விச்சங்கத்தாரின் ரிபோர்ட்டினால் தெரிய வருவதாவது - செகண்டரி பாடசாலைகளில் வாசிக்கும் மாணவர்களுள் ஆண்பாலார் 100 க்கு 16 பேரும் பெண்பாலார் 100 க்கு 24 பேருமே நான்கு வருஷகாலமாய் (அதாவது 12 வயது முதல் 16 வயது வரையில்) செகண்டரி பள்ளிகளில் வாசிக்கிறார்கள் என்பதாம். இவ்வெண்களினால் காலெஜ் படிப்பை விரும்புவோர் மிகச்சிலரென்றே தோன்றுகிறது. இங்கிலாந்தில்கூட பாடசாலை யென்பது எலிமென்டரி பாடசாலையையே. அப்படிப்பட்ட பாடசாலையையும் அப்படிப்பட்ட பாடசாலையுள் போதிக்கப்படுங்கல்வியையும் அதனால் விளையும் பயனையுங்கவனியாது சிலர் எலிமென்டரி படிப்பைக் கேவலமான படிப்பென்று சொல்லுகின்றனர். அப்படிச் சொல்வது சரியோ? பூமகட்குக் கடலாடை வாய்த்திருப்பதுபோல நமக்கு எலிமென்டரி படிப்பாகிய ஆடை வாய்த்திருக்கையில் அதனை உடுத்தாது வெறுளுதலுஞ் சரியாமோ?

ஒவ்வொரு தாலூகாவிலும் செகண்டரி பாடசாலை இருந்தபோதிலும் அங்குபோய்ச்சேருவோர் பலராவாரோ அல்லது ஒரு சிலராவரோ? எலிமென்டரி கலாசாலை பொருந்தப்பெறாது செகண்டரி பாடசாலைமாத்திரம் பொருந்தப் பெற்ற நாட்டின் கல்வி செகண்டரி பாடசாலையினாற் செழித்தோங்குமோ?

நம்மனத்தொடு இத்தகைய கேள்விகேட்டு உசாவுவோமாயின் எலிமென்டரி படிப்பின் சிறப்பு நன்குவிளங்குறும். எல்லாக்கல்விக்கும் இந்த எலிமென்டரிகல்வியேமூலகாரணம். சுவாசிப்பதற்குக்காற்று அவசியமானாற்போல அறிவு விருத்தியடைவதற்குக் கல்வி அவசியமாகின்றது. நூற்றுவருள் ஒருவனிடத்திற் கல்வியிருந்தாற் சாலுமோ? சாலாது; எல்லாரிடத்திலுங் கல்வி இருத்தலே வேண்டும்.

இக்காரணம் பற்றி கனம் V. S. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரவர்கள் போனமுறை சென்னையிற்கூடின சட்டசபையில் (Legislative Council) எலிமென்டரி படிப்புப் பரவவேண்டுமென்று அதிகமாக எடுத்துச் சொன்னார். எயிடட் (Aided) பள்ளிக்கூடமானாலுஞ் சரி, பள்ளிகளின் தொகை மாத்திரம் விருத்தியடைய வேண்டுமென்று மிகவும் வேண்டினார். மைசூரிலும் இந்நோக்கமே இருப்பதாக முன்னர்ச் சொல்லியிருக்கிறோம். நமது காருண்ணிய கவரன்மெண்டார் எலிமென்டரி கல்வியின் அபிவிருத்தியை நாடி அதற்காக ரூ. 50·73 லக்ஷம் 1915 - 16 என்ற வருஷத்திய கிராண்டு முதலிய செலவிற்காகக் கொடுத்திருக்கிறார்கள். நான்கு வருஷங்களுக்கு மூர்த்தி ரூ. 27·50 லக்ஷந்தான் செலவாயிற்று.

எலிமென்டரி கல்வி அவசிய மென்பதனால் செகண்டரி கல்வியும் அவசியமென்றே பெறப்படுகிறது; ஏனெனில், கல்வி யெனப்படுவது ஒன்றேயாகிய காரணத்தினாலென்க.

செகண்டரி படிப்பு எலிமென்டரி படிப்பிலிருந்து உற்பத்தி யாகும் படிப்பு; ஆயினும் அது எலிமென்டரி படிப்பைப்போல எங்கும் பரவக்கூடிய படிப்பன்று. உலகமெங்குஞ் சுற்றியிருப்பது கடல், இங்குமங்குஞ் சில இடங்களில்மாத்திர மிருப்பன ஏரி, ஆறு முதலியன; இன்னுமஃகிப் புண்ணிய க்ஷேத்திரங்களில் மாத்திரம் இருப்பன புண்ணிய தீர்த்தங்கள். எல்லா நீரும் கடலிலிருந்து தானே உற்பத்தியாகின்றது? அதைப்போல எல்லா உயர்தரக்கல்வியும் எலிமென்டரி கல்வியிலிருந்தே உற்பத்தியாகின்றன. நீரெல்லாம் ஒரு தன்மைத்தாய் விளங்காத்தன்மைபோல கல்வி யெல்லாம் ஒரேதன்மைத்தான பயனைத்தாராது செகண்டரிபடிப்பு ஒரு தன்மைத்தாய்ச் சிலருக்குப் பயனளித்தும் காலேஜ் படிப்பு ஒரு சிலருக்கே பலன்தந்தும் விளங்க இவ்வெலிமென்டரி படிப்போ பலருக்கும் பல்வகையில் பிரயோஜனப்பட்டு நிலவாநிற்கும். இப்படிப் படிப்படியாய்க் கல்வியானது அறிவென்னும் மலையின் அடியிலிருந்து சிகரம்வரையில் மாணவர்களுக்கு வழிகாட்டிக்கொண்டேபோகும். இதைக் கல்விமார்க்கம் என்றே சொல்லலாம். 'கல்வி ஏணி' அல்லது "நூலேணி" என்பர் இதனை அமெரிக்கா தேசத்துக் கல்விமான்கள்.

இத்தக் கல்விப்பாதையானது இப்பொழுது கல்லுங்காடுமாய் இருக்கிறது. அதைச் செம்மைப் படுத்தற்குத் தனியாய் ஒரு சங்கங்கூட்டப்போவதாக ஷை சட்டசபையில் கனம் மெம்பரவர்கள் கூறினார்கள். பண்படுத்தியானவுடன் அவ்வெலிமென்டரி படிப்பு அபிவிருத்தியடையுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. இப்பொழுது இருக்கும் ஒரு நிபந்தனையால் எலிமென்டரி பாடசாலையிற்படித்த பையன் எளிதில் செகண்டரி பாடசாலையில் சேருவதற்கில்லாமல் சில இடையூறுகளால் மிகவும் கஷ்டப்படுகின்றான். இவ்விடையூறுகளைக் கவனித்தே பிள்ளைகள் பாலர் வகுப்பு முதல் செகண்டரி பாடசாலையிலே படிக்கிறார்கள்; எலிமென்டரி பாடசாலையை நாடுவதில்லை. கல்வியெல்லாம் ஒன்று தானென்னச் சட்டங்கள் ஏற்படுமாயின் எலிமென்டரி படிப்பு உடனே நன்கு விளக்கம்பெறும். அதைப்பரவச் செய்வதற்கு இத்தச்சட்டங்களே உறுதுணையாயிருக்கும். வாழை மரத்துக்குத் தான் ஈன்ற காய் கூற்றமாவதுபோல எலிமென்டரி கல்விக்கும் செகண்டரி கல்விகூற்றமாகாது எலிமென்டரி படிப்பிலிருந்து உற்பத்தியான செகண்டரிபடிப்புத் தானே செழித்தோங்குவதோடு எலிமென்டரி படிப்பின் அபிவிருத்தியையும் நாடுமாயின் நாட்டிற்கு நன்மையுண்டென்பதிற் கிஞ்சித்துஞ்சந்தேகமில்லை.

A SIMPLE DESIGN FOR A SCHOOL HOUSE

பாடசாலைக் கட்டடப் படம்

கல்வி அவசியமென்று தெளிந்தோர் தம்மூர்ப் பாடசாலைக்காகக் கட்டடம் வேண்டியிருந்தால் தாமே கட்டிக்கொடுப்பரென்று நம்புவதற்கு இடமிருப்பதுபோல் தோன்றுகின்றது.

அவ்வாறு அவர்கள் கட்டிக்கொடுப்பதற்கு முன்னர் பாடசாலைக்கு வேண்டிய கட்டடம் எவ்விதக் கட்டடமா யிருக்கவேண்டுமென்று உபாத்தியாயர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமல்லவா? ஆனபடியினுல் அடியில் கட்டட விஷயமான சில குறிப்புக்களைக் குறிக்கின்றோம்.

பாடசாலைக் கட்டடத்துக்கு வேண்டிய முக்கிய லக்ஷணங்கள்:—

(i) வெளிச்சம். அறை இருட்டாயிருக்கக் கூடாது; வெளிச்சம் மாணவர்களின் இடது புறமாய் வரவேண்டும். எதிர்ப்புறத்தில் வெளிச்சமிருக்கக்கூடாது. இருபுறமும் ஜன்னல் இருக்கக் கூடாது. எப்பொழுதும் வெய்யிலைப் பார்த்துக்கொண்டிருப்பது கண்ணுக்குக் கெடுதி. தென்இந்தியாவில் மந்தாரமாய் இருக்கும் நாட்களில் சூரியன் பெரும்பாலும் தக்ஷணாயனத்திலிருக்கிறபடியால் ஜன்னல்கள் தென்திசையை நோக்கி யிருத்தல் நலம்.

(ii) காற்றோட்டம். இவ்விஷயத்தைப்பற்றிப் படத்தைப் பார்க்க.

(இன்னும் வரும்.)

JUDGING HANDWRITING

கையெழுத்தைத் தணிக்கை செய்தல்

ஈரம் ஒருபாத்தியாயரைப் பார்த்து, "நீர் காப்பிப் புஸ்தகங்களை எப்படிப் பார்வையிடுகிறீர்?" என்று வினவுவோமாகில் அவருக்கு அக்கேள்வி வியப்பினைத்தரும். கையெழுத்தைப் பார்வையிடுதலைவிடச் சுலபமான வேலை வேறொன்றுங் கிடையாதென்று பலர் அபிப்பிராயப்படுகின்றனர். அவர்கள் அபிப்பிராயப்படுவது போல அது அவ்வளவு சுலபமான வேலையன்று.

அமெரிக்கா தேசத்தில் கையெழுத்தை அளவெடுப்பது பூதக்கண்ணாடி போட்டுப்பார்ப்பது முதலிய பலவிதத்தால் அதைத் தணிக்கை செய்கின்றார்கள். இதனால் அத்தேசத்து உபாத்திகளின் முயற்சியினளவும் ஊக்கத்தினளவும் தெரியவருவதோடு கையெழுத்தைச் சரியாகத் தணிக்கை செய்தல் அவ்வளவு சுலபமான காரியமல்லவென்பதும் தெரியவருகின்றது.

நண்பர்கள் தமது கவனத்தை இதன் வழியிற் செலுத்தும் பொருட்டு யாம் ஒரு கேள்வி இதன் அடியிற்குறித்து வைக்கின்றோம். அதனை அவர்கள் கவனமாய் வாசித்து விடை யெழுதி அனுப்புவார்களாக.

கேள்வி:—"கையெழுத்தைத் தணிக்கை செய்யும்பொழுது கவனிக்கவேண்டிய அம்சங்கள் எவை?"

LESSONS IN HYGIENE

சுகாதாரப்பாடம்

சுகாதாரத்தைப்பற்றிப் பிள்ளைகளுக்குச் சில பாடங்களை நடத்த உத்தேசிக்கும் உபாத்திகள் அடியிற் குறித்துள்ள விஷயங்களைப்பற்றிப் போதிக்கலாமென்று கருதுகிறோம்.

1. உணவு
2. தண்ணீர்
3. காற்று
4. விசர்க்கம்
5. தேகாப்பியாசம்
6. இளைப்பாறுதல்
7. நீயொழுக்கம்
8. நோய்மூலம்
9. நோய்தொத்துதற்குக் காரணமாகிய ஈ, எலி, கொசுகு, தெள்ளிப்பூச்சி முதலியன
10. நோய் விலக்குவன (சுத்தகாற்று, சூரியவெளிச்சம், சுசி, சுகம்)
11. காயப்பட்டோருக்கு முதலிற் செய்யவேண்டிய சிகிச்சை.

NOTES FOR LESSONS ON NARUNTHOGAI

நறுந்தொகை கற்பிப்பதற்கான சில குறிப்புகள்

அதிவீரராம பாண்டியர்:—இவர் சந்திரவமிசத்துச் சிற்றரசர்களாகிய அநுலோம பாண்டிய அரசருள் ஒருவர். கொற்கை மாநகரத்தை அரசாண்டவர். பாண்டியர்கள் நெடுங்காலமாகக் கொற்கை நகரத்திலே வசித்தார்களென்று மதுரைப் புராணங் கூறுகின்றது. இந்நகர்க்குக் 'கொல்கி' யென்றும் பெயர் வழங்கி வந்தது. இராமேசுரத்துக்கு அருகிலிருந்ததாகத் தெரியவருகிறது. இமயந்தொடங்கிக் கன்னியாகுமரி வரைக்கும் இவ்வரசன் அரசு புரிந்தனரென்று கூறப்படுகிறது. இவர் இருந்த காலம் கி. பி. 15-ம் நூற்றாண்டெனவும் 11-ம் நூற்றாண்டெனவும் பலவாறாகக் கூறுகின்றார்கள்.

இவர் வடமொழியிலுந் தென்மொழியிலும் மிக்க புலமையுடையவர். சமஸ்கிருத புராணங்களையும் காவியங்களையும் வேறு தனிநூல்களையும் மொழிபெயர்த்துச் செந்தமிழ் நடையிற் சிறந்த செய்யுட்களாற் பாடியுள்ளார். 'நைடதம்' நாளதுவரையிற் பலரால் வாசிக்கப்பட்டு வருகின்றது. இவர் வித்தியாகுரு சுவாமிநாத தேவர் என்று தாம் பாடின குருவணக்கங்களினால் தெரியவருகிறது. தீட்சா குரு அகோர சிவாசாரியர்.

இவர் சிவபெருமானையே பரமபதி யெனக்கொண்டு வழிபடுகின்ற சைவசித்தாந்தியாகும். இவர் இளமையிலே உலக இன்பத்தினை மெய்யின்பமாகக் கருதி யொழுகிப் பின்னர்த் திருக்கருவை க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிராநின்ற சிவபெருமான் மீது திருக்கருவையந்தாதிகளைப் பாடித் துதித்து, இறைவன் திருவடியின்பமே மெய்யின்பமெனக் கண்டு, அதைப்பெறும்பொருட்டுத் தவம்புரிந்தனராம்.

வல்லபதேவர், பிள்ளைப் பாண்டியர், குலசேகரர், குணசேகரர் என்னும் மறுபெயர்களும் இவ்வரசருக்குண்டு.

நறுந்தொகை யெனப்படும் வெற்றிவேற்கை.

'நறுந்தொகை'—இதனை நறுமை + தொகை எனப்பிரிக்க வேண்டும். 'நறுமை' என்பது வாசனை, சுகந்தம். (நீதியாகிய) நறுமணங்கமழும் மலர்களின் தொகுதி என்று பொருள்படும்.

நறுமை ஈண்டு ஆகுபெயர்). நீதியை நல்ல வாசனைக்கு ஒப்பிடுவது ஆங்கிலத்திலும் வழக்கம்.

'வெற்றிவேற்கை' என்பது முதற் குறிப்பால் வந்தபெயர். அது ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்பனபோலாம். கொற்கை நகரில் 'வெற்றிவேற் செழியன்' என்னும் பெயர்கொண்ட மற்றொரு பாண்டியனும் இருந்ததாகவும், அவன் மிக்க திரவியஞ் செலவழித்துத் திருவிழாச்செய்து தன்னாட்டிற் சம்பவித்திருந்த துன்பங்களை யெல்லாம் நீக்கினதாகவும் கூறுப. 'வெற்றிவாகை' என்பது போர் வென்றோர் சூடும்மாலை.

(இன்னும் வரும்.)

NALAN AND PUSHKARAN

நளனும் புஷ்கரனும்

சுயம்வரம்

(24-ம் பக்கத்தொடர்ச்சி)

தன்னுடைய மனம் அப்பறவையின் அழகில் ஈடுபடவும் அதனைப்பிடித்துத் தரும்படி அரசன் தாதியரைக்கேட்டனன். அவர்கள் சென்று அப்படியே பிடித்து வந்து தமது அரசனுக்கெதிரில் விட்டனர். விட்டதும் அவ்வரசவன்னம் தனது சுற்றத்தை நினைத்துக் கலங்கினது. அதைக்கண்ட மன்னவன் "மடவனமே, அஞ்சல். உன்னுடைய அழகு பொருந்திய நடை விசேடித்ததோ அல்லது பெண்களுடைய அலங்காரமான நடை விசேடப்பட்டதோ தெரியவில்லை. இதன் உண்மையைக் கண்டறியவே உன்னைப்பிடித்து வரச்சொன்னேன். உன்னை இம்சியேன். உனக்குள்ள அச்சத்தினையும் பயத்தினையும் முற்றும் ஒழி. என் சந்தேகத்தினை நீக்க நீ நடந்து காட்டு" என்று சொன்னான்.

அதைக்கேட்டு அன்னப்பறவை சற்றுத் தேறுதலடைந்து அரசனை நோக்கி, "வெண்கவிகைத் தேர்வேந்தே, நீர் என்னைக் கொலைசெய்யப் பிடித்துவரச் சொன்னதாக நினைத்துக் கலங்கினேன். உமது இன்சொல்லால் என் கலக்கம் நீங்கினது. என்னைக் கொல்லாதுவிட்ட நன்மைக்காகத் தமக்கு ஒருதவி செய்ய விரும்பு

இறேன். அற்பப்பறவையாகிய யான் விரும்பும் உதவியைத் தமக்குத்தெரிவிக்கிறேன், தயைசெய்து கேட்டருளும். மெல்லிய மூங்கிலையொத்த தோளினையுடைய பெண்ணொருத்தி யிருக்கின்றாள். அவள் உமது தோளுக்கே இசைந்தவள். மிக்க வனப்புடையவள். தெய்வப்பெண்ணைப் போன்று விளங்குபவள். அங்கப்பழுதில்லாதவள். அவளை மனைவியாகப் பெற்றாற்றான் உமது தோள் மேன்மையையடையும். உமது செவிகள் புண்ணியஞ் செய்திருத்தலினாலே அவளுடைய பெயரினைக்கேட்டுக் களிப்படையப்போகின்றன. அப்படிக் களிப்பினைத் தருதற்கு இடமாயிருக்கும் அவளுடைய நற்பெயரோ தமயந்தி என்று சொல்லப்படும்” என்று மொழிந்தது.

அவ்வன்னம் மொழிந்த மாற்றம் செவித்துளையுள் நுழையுமுன்னர் அன்னத்தால் வியந்துரைக்கப்பட்ட கன்னி அவ்வரசன் மனக்கோயிலினுட் சென்று தங்கினாள். அதனால் அரசன் துடிப்பீடன் “நீ சொல்லும் மயில்போன்ற பெண் யாருடைய மகளோ?” என்று அன்னத்தைக் கேட்டான்.

அதற்கு அன்னம், “அருட் செல்வமே, நீர்வளப்பத்தையுடைய விதர்ப்பதேசத்தை அரசாண்டுவரும் வீமராசனுக்குப் புத்திரப்பேறில்லாதிருந்தது. அதனால் அரசன் மனைவியுடன் துறவறம்பூண்டு தவத்திற் சிறந்த தமனமுனிவருக்கு நெடுநாள் தொண்டுபூண்டொழுகி அவர் மனத்தைக் களிக்கச் செய்தனன். பின்பொருநாள் அம்முனிவர் அவ்விருவரையும் நோக்கி, “நீங்கள் யாது கருதி எமக்குத் தொண்டு செய்கின்றீர் ?” என்று வினவினர். அவ்வாறு வினவிய முனிவர் தாளிற் பணிந்தெழுந்து ‘சுவாமி ! நான் விதர்ப்பதேசாதிபதி, என்பேர் வீமன், நெடுநாள் புத்திரப்பேறில்லாமல் மனம் வருந்தி உம்மை வந்தடைந்தேன்; தாங்கள் அனுக்கிரகிக்கவேண்டும்’, என்று இறைஞ்சி நின்றான். தமனமுனிவர் உள்ள மகிழ்ந்து, வீமன் களிப்புறச் சுகுணமுள்ள ஒரு புத்திரனும், அவன் மனைவி களிக்க ஒரு புத்திரியும் பிறக்கும்படி அனுக்கிரகித்தார். முனிவர் கட்டளைப்படியே அவள் வயிறு வாய்த்து முன்னம் ஒரு புத்திரனையும் பின்பு ஒரு புத்திரியையு மீன்றாள். அப்புத்திரனுக்குத் தமநாசன் என்றும் பெண்ணுக்குத் தமயந்தி என்றும் நாமகரணஞ்செய்து நாளொருமேனியும் பொழுதொரு

வண்ணமுமாக வளர்த்து வருகின்றனர். அப்பெண்ணுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை. அப்பெண்மணியைப் பற்றித்தான் - அவ்விதர்ப்பன் பாவையைப்பற்றித்தான் இப்பொழுது புகழ்ந்துரைத்தேன். இன்னும் அவளைப் பற்றிச் சிறிது கூறுகின்றேன் தயைசெய்து கேட்டருளுதி. நாற்படையுடன் அரசர் ஆளுகை செலுத்துவதுபோல அவள் தன்னிடத்துள்ள நாற்குணங்களாகிய படையுடன் ஆட்சி புரிகின்றாள். அரசருக்கு அமைச்சரிருப்பதுபோல இவட்கு ஐம்புலன்களும் நல்லமைச்சாக விளங்குகின்றன. முரசிற்குப்பதிலாக இவளிடம் சிலம்பு ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது. கண்கள் வேற்படையாகவும் வாளாகவும் இருக்கின்றன. செங்கோன் மேன்மைக் கறிகுறியாக அரசருக்குச் சந்திரவட்டக் குடையிருப்பதுபோல யாவரும் பணியும்படியான பெண்மையைச் சிறப்பிக்கும் சந்திரன்போன்ற முகமிருக்கிறது. இவற்றோடு அரசுபுரியும் இவளுடைய அரசே அரசு” என்று சொல்லிப்பின்னுஞ் சொல்லுகின்றது. “அரசே, அவளுடைய இடையோ மிகவும் நுணுக்கமானது; பாதமோ பஞ்சினும் மேன்மையானது. அப்படியே ஒவ்வொரு அவயவமும் சிறப்புடையதாயிருக்கிறது. அவளுடைய அவயவச் சிறப்புக்களைச் சரியாகக் கூற ஏனக்குத்தெரியவில்லை” என்று மொழிந்தது.

அம்மொழியினைக்கேட்ட நளமகாராசன், “அன்னமே, நீ சொல்லி வந்த அன்னத்தின் தன்மையைச் சிந்திக்க என் ஆவி சோருகின்றது, எனக்கு அப்படிச் சோர்வினைத்தரும் அப்பெண்மணியோடு உனக்கு எப்படிச் சம்பந்தமுண்டு ? அன்புடன் சொல்லுதி” என்று கேட்டான்.

கேட்கவும் அன்னம், “கொற்றவரேறே, எங்களுடைய நடையும், * எங்கள் பெயருடைப்பொருளை நீக்கின ஐயர் நடையும் தளர்வெய்தக் கன்னி நடக்கும் நடைகற்றிருக்கின்றாள். அவள் கற்றிருக்கும் நடையை அவளிடமிருந்து கற்கவேண்டி யாங்கள் தாமரைப்பூவாகிய மாளிகையிலே வாசஞ்செய்தலைவிட்டு அவளுடைய பெரிய மாளிகையிலே வாழ்கின்றோம்” என்று இனிமையாகக் கூறினது.

* எங்கள் பெயருடைப் பொருளினை — அன்னத்தை — சாப்பாட்டை; நீக்கின ஐயர்நடை — நீக்கின தவசிகளுடைய ஒழுக்கம்.

நளமகாராசன் அனலிலிட்ட மெழுகேபோல் மன்முருகி அன்னத்தை நோக்கி, "அன்னமே, அப்பெண்ணைமுறைப்பற்றி உன்ன உன்ன என் உள்ளம் உருகுகின்றது; அவளைப்பெற அவாவுகின்றது. என்னிடமிருந்து என் அவாவினைத் தெரிந்துகொள்ளத் தக்க பெரியோர் என் குடும்பத்தில் இல்லை; என் கட்டளைக்குட் பட்டவர்கள் அநேகரிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இவ் விஷயத்தைக் கூறுதலும் தகுதியன்று. நான் அம்மாதையடைய அவள் தகப்பனைக்கேட்டால் என் சொல்லைத்தட்டான். நானோ ஒருவனையும் ஒன்று வேண்டுமென்று இச்சித்துக்கேட்போனல்லன்; அவள் மாளிகையில் தங்கியிருக்கும் அநுகூலம் உனக்கிருத்தலினாலே நீ சமயம் பார்த்து அவளிடம் எனக்காகப் பரிந்து பேசி என்னை அவளோடு கூட்டிவைக்கலாம். அப்படிக் கூட்டிவைப்பாயானால் தாயினுஞ் சிறந்த தயையையுடையை யென்று என்னுயிருள்ளளவும் போற்றுவேன்; நீயும் இப்போதிருக்கும் சுகத்தைவிடப் பதின்மடங்கு அதிக சுகத்திலிருப்பை" என்று சொன்னான்.

அரசன் புகழ்ந்துரைத்ததை முற்றுங் கேட்டு அன்னங் களிப்புற்று, "உம்மிஷ்டப்படியே அவளை உமக்கு மனைவியாக்குகிறேன்" என்று வாக்களித்து அவனிடத்தினின்றும் எழும்பி ஆகாயத்திற் பறந்து விதர்ப்பதேசத்தை (Berar) யடைந்து தமயந்தி வசிக்கும் உப்பரிகையில் வந்திறங்கியது.

அன்னஞ்சென்ற பின்னர் அரசன், "இவ்வளவிற் சென்றிருக்குமோ? இந்நேரத்திற் பார்த்திருக்குமோ? இந்நேரத்தில் நமது விருப்பத்தைச் சொல்லியிருக்குமோ? இவ்வளவில் அன்னம் திரும்புமோ?" என்று சொல்லிவிம்மினான். பிறகு, அவ்விடத்து ஆண்குயில்கள் பெண்குயில்களோடு களிப்புடன் பேசுவதைக்கேட்டுச் செங்காலிளவன்னத்தால் புகழ்ந்துரைக்கப்பட்ட அன்னநடையாளை நினைத்தான். அதன்பின் மயில் ஆலுவதைக் கண்டு கலங்கினான். இது நடந்தபின்னர் கொடிகளைப்பார்த்துக் "கொடிகளே, நீங்கள் தமயந்தியினுடைய இடைக்குப் பேருவமையாகப் பிறந்துள்ளீர்களல்லவா? இங்கே வாருங்கள்" என்றழைத்தான். "அம்மங்கையின் குளிர்ந்த இளஞ்சொற்கரும்பின் சுவையைச் செவிவாயால் என்று கேட்டு மகிழ்வேனோ?" என்றேங்கினான்.

அரசன் இவ்வாறு இங்கிருக்கவும் விதர்ப்ப தேயத்தினை யடைந்து தமயந்திவசிக்கும் உப்பரிகையில் இறங்கிய அன்னம் அவள் அப்பொழுது கன்னிமாடத்தில் இல்லாமல் தன் அழகிய சிங்காரத்தோட்டத்தில் தாதிகள் புடைசூழப் பலவகைப் பூக்களைக்கொய்து விளையாடிக் கொண்டிருப்பதையறிந்து இது நல்ல சமயம் என்றெண்ணித் தன் நடையைப் பழிக்கும் தமயந்தி முன்னாகப் பறந்துசென்று அங்கிருந்த மணற்குன்றின் மேலுட்கார்ந்தது. தமயந்தி அவ்வன்னத்தினழகையும் அது நடக்கும் அற்புதத்தையுங்கண்டு மிக்க ஆவலோடும் அதைப்பிடிக்கப் பாதசாரியாய் வெகுதூரம் நடந்தும் தன்கைக்கு அகப்படாமலிருந்தும் தான் கொண்ட இச்சையின் மிகுதியால் விடாமற்றொடர்ந்து போகையில் ஒரு சிறு புதருக்குள் ஒதுங்கியுட்கார்ந்து தன்னை விரும்பி வந்த தமயந்தியைநோக்கி, "ஓ மாதரசே, நான் இந்நாட்டிலிருக்கும் வெள்ளையன்னத்தின் சாதியேயல்ல; பொன்னுலகத்திலிருக்கும் அன்னத்தின் இனமாவேன். என்மேல் நீ இச்சைகொண்டு பிடித்தேகலாமென்று உன் தாமரைபோன்ற பாதம்வருந்த இவ்வளவுதூரம் நடந்துவந்தனை. இவ்வளவு சிரமப்பட்டுவந்த நினக்கு யான் என்ன உதவிசெய்யப்போகின்றேனோ தெரியவில்லை. ஆயினும் அம்ம, நின்பெயர்யாது?" என்று கேட்கவேண்டியமுறைப்படி விநயத்துடன் கேட்டது.

அன்னம் பேசினதைக்கேட்டு வியப்படைந்து தமயந்தி, "அன்னமே, நான் விதர்ப்பதேசத்தை நீதியோடு அரசாளும் வீமராசன் மகள். என்பேர் தமயந்தி. வசந்தகாலத்தில் இவ்விடத்து மலர்கொய்து விளையாடவந்தேன்; அப்படி வந்தவிடத்தில் உன்னைக்கண்டு பின்றொடர்ந்து வந்தேன்" என்றனள்.

அன்னம் அதைக்கேட்டுக் குறுநகைகொண்டு, "பெண்ணருங்கலமே, உன் வரலாற்றினைக்கேட்டு யான் மகிழ் பூத்தனன். ஆனபடியினால் என்னைப்பற்றி இரண்டொருவார்த்தை சொல்கின்றேன்கேள். பெண்மணியே, விண்ணுலகில் கமலாசனத்தோன் கரத்திலும் இம்மண்ணுலகில் நளச்சக்கரவர்த்தி கையிலுமே யான் வீற்றிருப்பது. மற்றவர்கள் கையில் யான் சிக்குவதில்லை. நீ வருந்தி வந்தமையால் நின்னெதிரில் நின்று பேசலாயினன்" என்று மொழிந்தது.

மொழியவும் அப்பெண்ணருங்கலம், "மகளிர்க்கு நடைகற்பிக்கும் அன்னமே, கமலாசனத்தோனுக் கொப்பாக இம்மண்ணுலகத்தரசை நீ எவ்வாறு கூறலாகும்? இம்மண்ணுலகத்து அரசு புரியும் நளமகாராசன் அவ்விண்ணுலகத்தோரை எங்ஙனம் பொருவுவார்? அப்படி ஒப்புமை கூறத்தக்க புகழ்படைத்தோருடைய சிறப்பினைச்சற்று விரித்துரைத்தி" என்றனள்.

அதுகேட்ட அப்பறவை, "பெண்மணியே,

'செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்,
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை,
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்,
உளனென்பான் வேந்த னுனக்கு.
அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு'" என்றுகூறி அவள் முகக்குறிப்பையுற்றுப்பார்த்து, நளமகாராசனது யோக்கியதையை முற்றுமறிந்ததும் தமயந்திக்கு அவன்மேல் மையல் தழைத்து விட்டது என்றறிந்துகொண்டு, "பெண்ணரசே, நீ நளமகாராசன்மீது கொண்டிருக்குங்காதலை அச்சமின்றி என்னிடத்தில் தெரிவிக்கலாம்" என்று பகர்ந்தது.

அன்னம் பகர்ந்ததைக்கேட்டுக் கொண்டிருந்த பெண்ணமுதமாகிய தமயந்தி, "அன்னமே, நின்னால் புகழ்ந்துரைக்கப்பட்ட நளனது பெருமையை இதற்கு முன்னர் என்பிதாவின் சபையிலுள்ள பெரியோரிற் சிலர் கூறக்கேட்டிருக்கிறேன், அப்படிக் கேட்டிருந்தும்மற்றொருமுறைகேட்க என்மனம் அவாவியது; அதனால் அவ்வரசன்மீது எனக்கு விருப்பம் நீ சொல்லும் முன்னரேயுண்டென்பது யான் சொல்லாமலே விளங்கும்" என்று சொன்னாள்.

சொல்லவும் அன்னம், "கற்புடைக் கனகமே, அழகின் எல்லையைக்கடந்த நளனிடத்தில் - கொடைக்குன்றேறிய கொற்றவனிடத்தில் - வேற்றரசராகிய யானைகளைத்தாக்கும் சிங்கத்தினிடத்தில் யான்போய் 'உன்மேல் ஒரு இராசகன்னிகை இச்சைகொண்டிருக்கிறாள்' என்று சொல்வது தகுதியல்லவே. உன்முகக் குறிப்பு உணர்த்தும் கட்டளையின்படியே சொல்லி அவ்வரசன் கருத்தை உன்பால் திருப்பினபின்பு, தந்தைதாய் சுவாதீனத்தில் இருக்கவேண்டிய முறைப்படியிருக்கும் நின்னையவர்கள் வேறேயாருக்காவது மணஞ்செய்வித்தால் யான்கூறியது பொய்த்துவிடுமே. நீ சற்றுயோசித்து எனக்கு உறுதியாகச் சொல்லுவாயாகில் அதற்குத்தக்க முயற்சி செய்யக்கூடும்" என்று பதிலளித்தது.

"மங்கையரையும் மற்றியாவரையும் மயக்கும் நடையையுடைய அன்னமே, குமுத மலருக்குச் சந்திரனும் தாமரைக்குச் சூரியனுமே யல்லால் வேறு நாயகரில்லை. அதுபோல யான் நிடததேசாதிபதியே நாயகரெனக் கொண்டிருக்கிறேன். உலகத்தில், புத்திரர்கள் தாய்தந்தையர் கருத்தைப்போலும் தாய்தந்தையர் பெண்ணின் கருத்தைப்போலும் நடக்கவேண்டும். யான் விரும்பியிருப்பது நிடதராசனே யென்றறி; அவ்வரசனைத்தவிர வேறு புருடனை இச்சியேன். நான் எண்ணிய வெண்ணம் கைகூடவும் உனக்குச்செய்த உடன்பாடு நிறைவேறவுமே பார்ப்பேன். நீ தனயகூர்ந்து என்கருத்துக் கிடையூறு நேரிடாவண்ணம் நிறைவேற்றிவைப்பது உன்கடனே" என்று சொல்லிப் பின்னும் அதைப்பார்த்து, "நற்றவஞ்செய்து பொன்னுலகத்திற் பிறந்த அன்னமே, அறிவிற்சிறந்த உனக்கு அறிவிலாதவள் சொல்வதொன்றுண்டு: இராச சமுகத்திற்குத் தூதுசெல்வோர் அரசன் ஏகாந்தத்தில் உட்கார்ந்து சந்தோஷமா யிருக்கும்போது சென்று தாம் சொல்லும் வாக்கியம் அவன் மனத்துக்கின்பப்பட்டு நாளுக்கு நாள் அது விருத்தியாகும்படி செய்வது தான் தூதருடைய சாமர்த்தியமென்று பெரியோர் கூறக்கேட்டிருக்கிறேன்" என்று மொழிந்தாள்.

"பெண்கள் நாயகமே, உன்னுடைய திடசித்தம் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. நிற்க; உன்னுடைய நற்குண நற்செய்கைகளையும், ரூபலாவண்ணியத்தையும் முன்னமே நளச்சக்கரவர்த்தி கேள்விப்பட்டு வெய்யிலிடைப்பட்ட வெண்ணெய்போல் வெதுப்புற்று எப்போதும் உன்னையே நினைந்து உன்னுடன் பேசுவதுபோலும், பிணங்குவதுபோலும் நினைவுகொண்டு வாடுகின்றான். 'தமயந்தி நம்மை மணம்புரிவாளோ? நமது மனம்போல் அவள் மனம் நம்மை நாடியிருக்குமோ? அவள் உள்ளக்

கருத்தென்னமோ ?' என்று சோர்ந்திருக்கிறன். ஙளமகாராசன் உன்மேல் கொண்டிருக்கும் விருப்பத்திற்கு அளவேயில்லை ; ஆதலினல் உன்மனவுறுதியை யறிந்துபோகவந்தேன். இப்போதே ஙளனிடஞ்சென்று இங்கு நடந்தவிஷயங்களை யெல்லாம் எடுத்தோதி வருகின்றேன் ; நீ உன் தாதியருடனிரு" என்று கூறி விடைபெற்று விரைந்து சென்று ஆகாயத்தில் எழும்பிமறைந்தது அவ்வன்னம்.

அன்னம் மறைந்த பின்னர் தமயந்தி,

('முத்தி நெறி' என்னும் மெட்டு)

"அன்னமகன் றென்விருப்பை யந்நளனுக் குரைத்திடுமோ ?
சொன்னபடி சொல்லியவன் சுயமனத்தைக் கரைத்திடுமோ ? (க)
மன்னர்பிரா னுவந்தென்மேல் மனவிருப்பங் கொள்ளுவனே ?
மின்*னெழிலில் லாளெனவே வெறுத்தென்னைத் தள்ளுவனே?(உ)
அவனழகை யவன்புகழை அறிந்தமுத லென்னெஞ்சம்
அவன்பாலும் றனவென்மே லதற்கேனே யிவ்வஞ்சம் (ங)
அவன்மீதி லெழுங்காத லாருயிரை வாட்டிடுமோ ?
இவ்வியம்ற விருவரையுந் திருவருள்தான் கூட்டிடுமோ ?" (ச)
என்று சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தாள்.

முன்விளையாட்டிற்பிரிந்த தாதிமார் தங்கள் தலைவியை நெடுநேரங்காணமல் வருந்தித் தேடிவரும்போது அசைவின்றி நின்றிருக்கும் தமயந்தியைக்கண்டு ஐயமுற்று இவளைதையோகண்டு மயங்கிருக்கின்ற ளென்று நினைத்துச் சயித்தியோப சாரத்தாற் றெளிவித்து அவளை அரண்மனைக்கு அழைத்துச்சென்றனர். அவள் நளன்மேல் மனத்தினை நாடவிட்டு உடல் மெலிந்திருந்தனள். அதைக்கண்ட தோழியர் கொற்றவன் றன் தேவியிடம் அறிவித்தனர். அவள் அதனை வேந்தனுக்குக்கூறினள். அவன் உடனே அவளைக்காண அவள் மனைக்குச் சென்றனன். தாதையைக் கண்டதுந் தமயந்தி கொடிபோலிடைநுடங்க அவன் திருவடியிற் பணிந்து எழுந்தனள். பணிந்து எழுந்த தவச்செல்வியின் உருவத்தை மன்னவன் உற்றுநோக்கினன்.

(இன்னும் வரும்.)

---

* எழிலில்லாள் — அழகில்லாதவள்.

THE MONTESSORI METHOD

மாண்டசாரி அம்மையார் முறை

உலகத்திற்கு நன்மைபுரிதலே பெருந்தொழிலாகக் கைக்கொண்டிருக்கும் அன்னி பீஸன்ட் துரைசானி யவர்களுடைய போதரவின் கீழிருக்கும் பஞ்சமர் தருமபாடசாலைகட்குச் சுப்பிரன்டென்டன்டாக விருக்கும் Miss C. Kofel அம்மையார் எம்மீது வைத்துள்ள பேரன்பினுல் எம்மைக் கௌரவப்படுத்தவும் எலிமென்டரி உபாத்திகளுக்கு அறிவு சுடர்கொளுத்தவும் கருணை நிறைந்த உள்ளத்தள் எண்ணி, போதனு முறைகளிற் சிலாக்கியம் பெற்றிருக்கும் மாண்டசாரி அம்மையார் முறையைப் பற்றியெழுதி யனுப்பியிருக்கின்றனர். அதனை யாம் மாதந்தோறுஞ் சிறிது சிறிதாக வெளியிட்டு வருவாம். இப்பத்திரிகையைக் கிரமமாகவாங்கி வாசித்துவரும் நண்பர்கள் இவ்வம்மையார் எழுதும் இவ்வரிய முறையினிடத்துத் தமது கவனத்தினைச்செலுத்தி அதனைச் செவ்வைபாக வாசித்து நற்பயன் பெறுமாறு வேண்டுகின்றும். தவருமல் நற்பயனளிக்கும் இவ்வரிய முறை முற்றும் வெளிவந்த பின்னர் மற்ற முறைகளைப்பற்றி எழுதுவோம். இப்பொழுது Miss C. Kofel அம்மையாருக்கு அன்புடன் வந்தனமளித்து அவர்கள் பெருந்தயையுடன் எழுதி யனுப்பியுள்ளதை அடியிற்குறிக்கின்றும். அதுவருமாறு :—

கல்விமான்களுடைய உள்ளத்தைச் சில வருஷங்களாகக் கவர்ந்து கொண்டிருந்து இப்பொழுது அவர்களுடைய மனம் முழுவதையும் நிறைகொண்டிருக்கும் முறையாதென ஆராய்வோமாயின் அப்படிச் செய்ததும், செய்கின்றதும் மாண்டசாரி அம்மையாருடைய முறையென்றே தெரியவரும். அப்படிப்பட்ட முறையின் தன்மை நமது இந்திய தேயத்திலுள்ள உபாத்தியாயர்களில் ஒரு சிலருக்கே தெரியவரும் ; ஆதலால் அதனைப் பலரும் அறிந்து நற்பயன்பெற இச் 'சற்குரு' பத்திரிகையில் அம்முறையின் தன்மையை ஒருவாறு சுருக்கி வெளியிடுதல் தவருகாது என்றெண்ணி வெளியிடுகின்றும். இச்சுருக்கத்தினை விரித்துரைக்கப் பின்னுல் அமயம் நேரிடின் விரித்துரைப்பாம்.

சற்றேறக்குறைய இருபது வருடங்களுக்கு முன்னர் உரோமாபுரிக் கழகத்துள்ள உதவி வயித்தியராயிருந்த (Assistant doctor at the Psychiatric Clinic of the University of

Rome) டாக்டர் மரியாள் மாண்டசாரியாள் பைத்தியத்தின் தன்மையை நன்குணரப் பித்தர்களுடைய வயித்திய சாலைகட்கு அடிக்கடி போவது வழக்கம். இப்படிப் பலமுறை போய்வந்து கொண்டிருந்தமையால் அங்கிருந்த அறிவிலாச் சிறுர்களிடத்தில் அன்பு பூணவும் அவர்களுக்குக் கல்விபயிற்ற எட்வர்ட் லெகுயின் (Edward Leguin) என்பவர் கண்டுபிடித்துள்ள போதனுமுறையில் ஆர்வங்கொண்டு அதிற்பழகவும் மனம் இடந்தந்தது. மனம் இடந்தரவும் அவர்களிடத்துத் தோன்றிய அன்பும் ஆர்வமும் அதிகரித்தன. அன்பும் ஆர்வமும் அதிகரிக்கப் பழகவும், முடிவில் அவ்வம்மையார் பித்தர்களுக்கு மருந்து துணைசெய்வதைவிடக் கல்விதுணைசெய்வது அதிகமெனக் கண்டறிந்தனர். அதனல் அவ்விடத்திய கல்வியமைச்சர் பேதைச் சிறுவர்கட்குக் கல்வி போதிக்கவேண்டிய விதத்தைப்பற்றி ரோமாபுரத்து உபாத்திகளைத் தெருட்டுமாறு வேண்ட அவ்வம்மையார் பிரசங்காமிர்தமளித்தனர். அதன்பின் அவ்வி ராஜாங்கத்தார் அப்பிள்ளைகட்காக ஒரு பாடசாலை ஸ்தாபித்தனர். அதனை இரண்டு வருஷம்வரையில் அவ்வம்மை நடத்திவந்தார்கள்.

இவ்விரண்டு வருடங்களில் இச்சிறுவர்களுக்குக் கல்விபோதிக்கப் பல உபாத்தியாயர்களை அம்முறையிற் பழக்கினர்கள். அதன்பின் அறிவுகுறைந்த மக்களுக்கு வேண்டிய கல்வியை அனுபவமுறைபாலறிந்து கொள்ளவெண்ணி லண்டன் மாநகர்க்கும் பாரிஸ்புரத்துக்குஞ் சென்று அவ்விடத்திலுஞ் சிறுவர்களுக்குத் தாமே போதித்தும் பிறர் போதிக்குங் காலங்களில் - காலை 8 முதல் மாலை 7 வரை - அங்கு தங்கி யிருந்தும் காலங்கழித்தனர்.

மாண்டசாரியார் அறிவிலாச்சிறுவர் பலருக்குத் தம்போதனையால் படிக்கவும் எழுதவும் கற்பித்து அவர்களைச் சாமான்னிய அறிவுடை மைந்தரோடுகூட்டிப் பரீக்ஷைக்கு அனுப்பினர்கள். அவர்கள் அப்பரீக்ஷையில்தேறி அவ்வம்மையாரின்முறை வெகு நல்லமுறையெனத் திருஷ்டாந்தப் படுத்திப் பலர்க்கு இறும்பூதினை (ஆச்சரியத்தினை) விளைவித்தனர். மாண்டசாரி அம்மையார் இப்பயின் போதனுமுறையினல் விளைந்த தென்று அறிந்ததோடு அறிவிலாக்குழவிகளுக்கு அப்போதனுமுறை சித்தவலிவினைப்பெருக்கியதென்றும், இக்குழவிகள் சாமான்னிய அறிவுடை மைந்தரைவிட மீசுரப் பட்டுள்ளன ரென்றும் அறிந்துகொண்டனர்.

(இன்னும் வரும்.)

8 - SEP 1915 ... MADRAS

உபாத்தியாயர்கட் கேனவே உலவிவரும்
மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை
"[illegible] செல்வர் கற்றோர் [illegible]
புன்[illegible] கல்லா தவர்"—தமிழ்மறை

தொகுதி—௨	1915௵ செப்டம்பர்௴	பகுதி—[illegible]

NOTES OF THE MONTH

மாதாந்தரக் குறிப்புகள்

Good Manners
நன்னடக்கை

சென்ற ஜூலை 10உ பண்ருட்டி பெருந்துறையிற் கூடின உபாத்தியாய சங்கத்தில் [illegible] போர்டு எலிமென்டரி பாடசாலை 8-வது உதவி உபாத்தியாயர், S. N. கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள், நன்னடக்கையைப்பற்றி ஒரு நல்ல உபந்நியாசம் வாசித்தார். அப்போது நன்னடையை அத்தியாவசியமென்றும், சிறுவர்களை நன்னெறியிற் பயில்விப்பது உபாத்தியாயர் கடமையாகுமென்றும் உதாரணமுகத்தால் விளக்கினார். கற்பிக்கவேண்டுவன என்று அவர் எடுத்துக்காட்டியவை வருமாறு:—

1. "பாடசாலைச் சிறுவர்கள் சரியான நேரத்திற் பாடசாலைக்கு [illegible];
2. எல்லாப் [illegible] சரி[illegible];
3. அத்தன்மைக்குத் தகுந்தபடி [illegible] தரித்துக்கொண்டு வருதல்;

4. அந்தந்த மணியில் ஏற்பட்டுள்ள பாடங்களைச் செவ்வையாய்ப் படித்துவருதல்;

5. [illegible]க்குத் தகுந்தபடி நெற்றியில் அடையாளம் இட்டுக்கொண்டிருத்தல்;

6. பெரியோர்க்குக் கீழ்ப்படிந்து நடத்தல்;

7. பெற்றோர்களிடம் அடங்கி மரியாதையாயொழுகல்;

8. பிராணி பக்ஷிகளிடத்தில் அன்பாயிருத்தல் முதலியன."

பிள்ளைகள் ஒழுகவேண்டிய ஒழுக்கத்தினை உபாத்தியாயர் தாமே ஒழுகிக் காட்டுவாராகில் சிறுவருக்கு அவ்வொழுக்கம் உற்சாகத்தினையுண்டு பண்ணுவதனோடு அவர்கள் மனத்திலும் நிலைத்து நின்று அவர் செய்கையைப் பின்பற்றும்படி தூண்டும். பாடசாலை ஒழுங்குகள், சுகாதார விதிகள், அறப்பொருள், பழக்க வழக்கங்கள், வழிபாடு முதலியனவற்றைக் கவனித்தவண்ணமாய்க் கற்பிக்கலாம்.

ஒழுங்குகளும் பழக்க வழக்கங்களும் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதன. அவற்றை நன்றாக விளக்கிக் கற்பித்தல் வேண்டும். உபாத்தியாயரேயாயுள்ளோர் தாம் இவற்றைக் கற்பித்த வித்தினையும் அவர்கள் கற்பனையால் பாடசாலை அடைந்த நற்பயனையும் எமது பத்திரிகைக்கு எழுதித் தெரிவிக்குமாறு வேண்டுகின்றோம்.

* * * * * *

Saluting the Union Jack
யூனியன்ஜாக் சலாம்

கனம் டைரக்டர் துரை அவர்களிடமிருந்து ஜுலை௴ 5௳ வந்த ஆர்டரில் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் காலையிற் பாடங்கள் ஆரம்பஞ்செய்யும் முன்னர்த்தாம் வைத்திருக்கும் ஆங்கில ராஜாங்கத்துக் கொடியை ஏற்றவேண்டுமென்றும், மாணவர்கள் அதைப்பார்த்து வந்தனம் புரிந்து இராஜவாழ்த்துப் பாடவேண்டுமென்றும் கட்டளையிடப்பட்டிருக்கிறது. மாட்சிமை தங்கிய கொடிக்குக்கூறும் மங்கலம் வருமாறு—

"I salute the flag of my country and the Empire for which it stands. Many nations, but all one and indivisible, with liberty and justice for all."

இதைத் தமிழ்ப்பாடல்களாகச் சேலம் ஜில்லா பாப்பாரப்பட்டி போர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் L. S. சுப்பராய ஐயரவர்கள் பாடியிருக்கிறார். அவற்றை அடியிற் குறிக்கின்றோம். மற்றுமுள்ள பாவலரேயர்கள் இதே விஷயமான பாக்களைப்பாடி* முந்துவார்களாக.

'யூனியன்ஜாக்' சலாம்

இங்கிலீஷ்நோட் — 'வாகுதேவனே' என்னும் மெட்டு

1. சலாம் செய்வோமே (யாம்) சலாம் செய்வோமே
"யூனியன்ஜாக்" நாம் (புகழ்) இந்தக் கொடிக்கே

2. எங்கள் தேசமே (இது) இந்து தேசமாம் நலம்
தங்க ஆளுவோர் (திகழ்) ஆங்கிலவரசராம்

3. இவர்கள் ஜயக்கொடி (புகழ்) "யூனியன்ஜாக்" காம்
எவரும் மகிழவே (உலகில்) எங்கும் பறக்குதாம்

4. அரிய கொடியாம் (மகா) பெரிய ராஜ்யமாம் (அதில்)
உரிய நெறியினுல் (சதா) பிரகாசிக்குதாம்

5. ஜாதி ஆயிரம் (எனினும்) பேதமில்லாமல் (அவர்கள்)
நீதி யான வோர் (செங்) கோல் மகிமையால்

6. ஓது வோர் கட்கும் (மற்று) முள்ளமதத்தார்க்கும் (சற்றும்)
தீது நேராமல் (மிகப்) பாதுகாத்திடும் (நமது)

7. ஐந்தாம் ஜார்ஜையும் (தம்) அரசி மைந்தரையும்
இந்த உலகினில் (தேவர்) என்றும் காக்கவே

(சலாம்செய்வோமே)

* * * * * *

Elementary Education in Baroda
பரோடாதேயத்தில் எலிமென்டரி படிப்பு

பரோடா தேயத்தில் எலிமென்டரி படிப்பினைக் கட்டாயப்படிப்பாக ஆக்கினூர்கள் அவ்வூர் இராஜாங்கத்தார்கள். அவ்வூரில் பிள்ளைகள் 14-வயது வரையிலும் பெண்கள் 12-வயது வரையிலும் கல்வி கற்கவேண்டுமென்னும் நியதி ஏற்பட்டிருப்பதனோடு அவர்கள் கேவலம் 5-ம் வகுப்பு வரையிலாவது படித்தே தீரவேண்டுமென்னும் ஆஞ்ஞையும் தோன்றியிருக்கிறது. இந்நியதியும் ஆஞ்ஞையுஞ் சேர்ந்து பள்ளிக்கூடஞ் செல்லும்படி சிறுவர்களையெல்லாந் தூண்டுகின்றன. அதனுல் மூன்றுவருஷத்தையக் கட்டாயப்படிப்பு ஏற்பட்ட பின்னர் 21,680 பிள்ளைகள் அதிகமாய்ப் பாடசாலைக்குச் செல்கின்றனர்.

பள்ளிக்கூடத்துக்குப் போகத்தக்க வயதினையடைந்த ஆண்மக்களுள் எலிமென்டரி கல்வியினை விரும்புபவர் நம்முடைய சென்னை இராஜதானியில் நூற்றுக்கு முப்பதின்மராவர்; பம்பாயிலோ நாற்பதின்மரென்று கணக்கிடப்படுகின்றது; நாம் இப்பொழுது பேசிவரும் பரோடா தேயத்திலோ என்பத்தைந்தஞ் சில்லரையுமென்று தெரியவருகிறது. அந்த பரோடா தேயத்

இதுவரை கிராமங்களோ 3095-ல் அவற்றுள் 2171-ல் ஆரம்ப பாடசாலைகளுண்டாம். எஞ்சி நின்ற 924-கிராமங்களுள் 124-ல் விரைவில் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படுமாம்.

பாடசாலைக்கு வராதவர்களுக்கு அவ்விடத்தில் அபராதம் விதிப்பதுண்டாம். அப்படி விதிக்கப்பெற்று வரும் அபராதத்தொகையுள் கிராமங்களில் பாடசாலைகள் கட்டுதற்கு நூற்றுக்கு அறுபது வீதமும் கூலிப்பிழைப்புப் பிழைத்துவரும் சிறுவர்களைப் பாடசாலைக் கனுப்பும் - வறுமையால் பீடிக்கப்பட்ட - பெற்றோர்க்கு நூற்றுக்கு முப்பத்தைந்து வீதமும் கொடுத்து வருகிறார்களாம்.

* * * * * *

The Purpose of Education
கல்வியின் நோக்கம்

சென்னை, பச்சையப்பர் ஹைஸ்கூலின் கல்விச்சங்கத்து அங்கம் - மிஸ்டர்- B. N. சர்மா அவர்கள் கல்வி கற்பிப்பதின் நோக்கம் அறிவினைப்பரவச் செய்தற்கே யென்று அழகுபடப் பேசினார். இவர் பேசிய நல்லுரை உபாத்தியாயர்கட்குப் பெரிதும் பயன்தரத்தக்கதா யிருக்கின்றது. உபாத்திகள் தாம் கற்பிக்கப்போகும் பாடங்களை முன்னர்த் தம் மனத்துள் அமையக்கொண்டு போதித்தல் வேண்டுமென்றும் அப்படிப் போதிக்கப்படும் பாடத்துள் கவின்றோர்க் கினிமைபிறத்தல், நன்மொழி புணர்த்தல், ஆழம் உடைத்தாதல், விழுமியது பயத்தல் முதலியன தோன்ற வேண்டு மென்றும் கருத்துட்கொண்டு கூறினர் அப்பிரசங்கத்துள்.

* * * * * *

Depressed Classes Mission, Madras
சென்னை, [illegible]ஜனத்தார் சங்கம்

இச்சங்கத்தின் வருடோற்சவம் ஆகஸ்டு மீ 6உ யன்று நடந்தேறியது. அன்றையதினம் கூடிய சபைக்கு நாயகமாக சங்கரநாயர் அவர்கள் அமர்ந்திருந்தார். பொருள் வருவாய் அதிகமாக இராமையினாலே இச்சங்கத்தார் புதிதாகப் பள்ளிகளை ஸ்தாபியாமல் பழைய மூன்று இராப்பள்ளிகளையும் இரண்டு பகற்பள்ளிகளையுமே ஆதரித்து வரும் தொழிலை மாத்திரம் மேற்கொண்டிருக்கின்றனர். இவர்கள் பாடசாலைகட்கு இடம்பெற்ற பெரிய வீடுகள் மிகவும் அவசியமாய் வேண்டியிருக்கின்றன.

இச்சங்கத்தார் செய்து முடித்த காரியங்கள் மிகப் பெரியவையாயிராதபோதிலும், அவர்களால் நடத்தப்பெற்று வருவனவெல்லாம் ஊக்கத்தோடு விடாமுயற்சியோடும் கூடியிருத்தலால் அவைகள் புகழ்பெறத்தக்கவை

யாலே பயன் இழப்பெறக்கூடியவையல்ல என்று சொல்லி போராடியே னுத இச்சங்கத்தாரின் மக்களுக்குக் கல்விகற்பிப்பதும் அவர்களை உயர்த்துவதும் நம்முடைய கடமைகளுள் ஒன்றாயிருக்கிற தென்று கூறினர் அக்கிராசனாதிபதி. அதனோடு நம்முடைய இந்த முயற்சிகளை அவர்களைப் புறக்கணிக்காது நலமுறுதும் கவனிக்கத்தக்கதே என்றும் மொழிந்தார். இவ்வளவேன்னைஞ் சொல்லியான பின்னர் நமக்குப் புதிதாக வாய்த்திருக்கும் இம்பீரியல் கவுன்ஸிலின் கல்விமெம்பராயிருக்கும் வேலை இவர்களுக்கு நன்மைசெய்ய இடந்தருமாயின் அந்தநுணத்தத் தன்னுல் செயற்பாலனவற்றையெல்லாம் பூர்ணமாகச் செய்து முடிப்பதாகவும் கம்பீரமாக வாக்களித்தார்.

* * * * * *

Sir - Sankara Nair
ஸர் - சங்கரநாயரவர்கள்

இந்திய கவர்னரது கவுன்ஸிலின் கல்விக்கான தொரு மெம்பராக ஸர் - சங்கரநாயர் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள தொருவிஷயம் அனைவரும் அறிந்த விஷயமே. அவரைத்தேர்ந்து எடுத்த விஷயத்தினைக்கேட்டு மகிழாத ஜனங்களும் களிக்காத பத்திரிகைகளும் இல்லை. அவருக்குள்ள பெருந்தன்மையும், அகன்ற கல்வியும், பழுதற் பொருளுணர்ச்சியும், 'நிலைதொறு நிறைவுபெறுவது தொன்னூலும்', அதிருக்கும் புத்தியும் இவ்வுத்தியோகத்தினைத் தேடித் தந்தவென வறிந்து மகிழ்ப்புக்கும் இஞ்ஞாலம். உபாத்தியாயத் தொழிலில் பயிற்சியில்லாது வியாபாரத்தொழிலிலும் நியாயாதிபதித்தொழிலினும் நிறைபுண்டு விளங்கிய இவர் கல்விக் கதிகாரம் வகிக்க உரியவரோ என்னுஞ் சங்கை பலர் மனத்துள்தோன்றி யிருக்கலாம். அதனை நீக்க யாம் கூறுஞ் சமாதானம் வருமாறு:— அவர் உபாத்தியாயரா யில்லாது நியாயாதிகாரியா யிருந்தபோதிலும் அவரிடத்து அப்புதிய கௌரவமான உத்தியோகத்தொழில் முறைக்கு இன்றியமையாதனவாய்க் கிடக்க வேண்டிய பெருங்குணங்களாகிய மனிதர்களின் தகுதியறிதல், உலகியலறிதல், தெரிவரிய கல்வியின் உள்வலியுடைத்தாதல், தெரிவரியக்கல்வியின் கனமுடைத்தாதல், காலமறிதல், இடனறிதல், செய்வன தவிர்வன அறிதல், வினைசெய்யுமாறறிதல் முதலியன ஒருங்கே அமைந்திருத்தலினாலே இவர் அவ்வுத்தியோகத்திற்கு மிகவும் அருகரே யென்றுணர்ந்து கூறுவாம். அவருக்கு அப்பதவி கிடைத்ததைப்பார்த்து இந்திய மாதாவின்

" ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்" என்று நாயனார் கூறியாங்கு மகிழ்படைவள் என்பதில் ஐயமில்லை.

* * * * * *

Dictation
சொல்வதெழுதல்

உபாத்தியாயர் தாம் பிள்ளைகட்குக் கொடுக்கப்போகும் 'சொல்வதெழுதல்' பாடத்தை முந்தினதினமே அவர்களுக்குக் குறிப்பிடவேண்டும். அப்பாடம் அவர்கள் தகுதிக்கு ஏற்றதாயிருத்தல் வேண்டும். அத்தகைய பாடத்தினைப் பிள்ளைகள் எழுத உபாத்தியாயர் சொல்லுகையில் நேருந் தவறுகள் சிலவுண்டு. அவற்றுட் சில ஈண்டு எடுத்துக் கூறுவாம்.

1. உபாத்தியாயர் வகுப்பில் உலவினபடியே பாடத்தினை வாசித்தல் கூடாது. அப்படி உலவிக்கொண்டு வாசித்தலால் பிள்ளைகள் உபாத்தியாயரின் கண்ணோக்கினின்றும் விலகநேரிடுகிறது. அதனால் அவர்களறிவு சிதறுகின்றது.

2. உபாத்தியாயர் பாடத்தினை அதிகமாக வலிந்துரைத்தல் கூடாது. உயர்த்திக் கூறவேண்டியவிடத்து உயர்த்தியும் தாழ்த்திக் கூறவேண்டியவிடத்துத் தாழ்த்தியும் கூறினுஞ்சாலும். இயற்கைக்கு விரோதமாகப் பெருந்தொனியுடன் உச்சரித்தல் பெரும் பிசகாம்.

3. மெதுவாகப் பாடத்தினை வாசித்தல் ஒரு தவறாகும். அவ்வாறு வாசித்தலால் பிள்ளைகள் தீவிரமாய் எழுதப் பழகுவதை விட்டு மந்தமாய் எழுதப்பழகுகின்றனர்; பாடத்தின் மேலுள்ள சிரத்தையையும் சோரவிடுகின்றனர். கவனத்தைத் தூண்டவும் தீவிரமாய் எழுதப் பழக்கவுமே உபாத்தியாயர் கூடியவளவு தீவிரத்தோடு, பாடத்தினை நிறுத்தவேண்டிய விடங்களில் நிறுத்தி வாசித்தல் வேண்டும்.

4. பாடத்தினைப் பன்முறை வாசிக்கலாகாது. அப்படி வாசித்துச் சொல்வதனால் யாமே அவர்களுக்குள்ள அசிரத்தையை வளர்ப்பவர்களாகின்றோம். யாம் முதன்முறை மொழிவதைக் கேட்டு அவர்களெழுதும்படி அவர்களை இயன்றவளவு பழக்குதல் வேண்டும். வாக்கியம் பெரிதாயிருத்தல், அவர்கள் அசிரத்தையினாலல்லாது வேறு முக்கிய காரணத்தால் கூறவேண்டிய அவசியம் ஏற்படுதல் முதலியன நிகழுமேல் இரண்டாம்முறை வாக்கியத்தை வாசிக்கலாம்.

* * * * * *

QUESTIONS AND ANSWERS

வினா உத்தரம்

An Important Question
முக்கியமானதொரு கேள்வி

ஜூலை மாதத்திய சற்குரு பத்திரிகையில் 8-ம் பக்கத்தில் வெளிவந்திருக்கும் கேள்விக்கு நமது நண்பராய பரிமணப்புல்லையராயரவர்கள் அடியில் வரும் விடையை எழுதி யனுப்பியுள்ளார். அவரைப்போல மற்றைய நண்பர்களும் தத்தமக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை எழுதியனுப்புவார்களாக.

கவனிக்க வேண்டியதொரு கேள்விக்குவிடை.

தென்னிந்தியாவைவிட மற்ற இடங்களில் ஆரம்பத்திலேயே பிள்ளைகளுக்கு வீட்டிலுள்ள தாய்தந்தையரும் பிறரும் தங்களால் சாத்தியமான வரையில் கல்வி கற்பிப்பர். சாத்தியமாகாதெனத் தோன்றுங்காலத்து எந்த வகுப்புக்கு லாயக்காகும்படி கற்பித்திருக்கின்றனரோ அந்த (மேல்) வகுப்புக்களில் சேர்க்கின்றனர், பிள்ளைகளுஞ் சேருகின்றனர். தென்னிந்தியாவிலோ ஆரம்பத்திலேயே வீட்டுக்கல்வி கற்பிக்காததால் பாலர்வகுப்பில் அதிகமாய்ப் பிள்ளைகள் சேருகிறார்கள்.

* * * * * *

சேலம் ஜில்லா தர்மபுரி தாலூகா பாப்பாரப்பட்டி போர்டு ஸ்கூல் ஹெட் மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ L. S. சுப்பராய ஐயரவர்கள் எம்மை மூன்று கேள்விகள் கேட்கிறார். அவை வருமாறு:—

(1) இப்பத்திரிகைக்கு எவ்விதமான விஷயம் தேவை?

(2) விஷயம் எவ்விதமாக எழுதப்பெறின் நலமாயிருக்கும்?

(3) விஷயத்தினை அடுத்த மாதத்திய சஞ்சிகையில் அச்சிடற்கு எத்தேதிக்குள் எழுதியனுப்ப வேண்டும்?

மேற்போந்த கேள்விகட்கு விடைவருமாறு:—

(1) வித்தியா இலாகா விஷயம், தமது தாலூகாவிலோ ஜில்லாவிலோ நடைபெறும் முக்கிய விஷயங்கள், தாமே தமது சொந்த அறிவினால் தெரிந்து கொண்ட போதனா விஷயங்கள் முதலியன தேவை.

(2) தாம் எழுதுவன சுருக்கமான குறிப்புக்களாக இருப்பின் நலம்.

(3) அனுப்பப்படும் விஷயம் திட்டமாய் அடுத்த மாதத்திய பத்திரிகையிற் பிரசுரிக்கப்படும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. பொதுவாய் விஷயம் 5-ஆம் தேதிக்குள் எமக்குக்கிடைப்பின் அடுத்த மாதத்திய சஞ்சிகையிற் பிரசுரிக்க அனுகூலமாயிருக்கும்.

* * * * * *

சென்ற ஏப்ரல் மாத சஞ்சிகையின் 227-ம் பக்கத்தில் 4-வது பிரசுரம் கணக்குப்போடுவது ... முடியுமென்றுள்ள கூறியதை விளக்கிக்காட்ட வேண்டுமென்று கேட்கின்றார் நமது நண்பரோகிய ம-ா-ா-ஸ்ரீ P. பரிமணப்பல்லவராயர் அவர்கள். விடையளிப்பதைக் கூறுவோம்—

சுமார் 10 அல்லது 15 வருடங்களுக்கு முன்னர்த் தென்னிந்தியாவிற் பதிப்பிக்கப்பட்ட கணித புத்தகங்களில் பெரும்பாலும் 'மாதிரி கணக்குகள்' என்னும் உதாரண கணக்குகள் நிறைந்திருக்கும். இரண்டொரு கணக்கினை உதாரணமாகப் போட்டுக்காட்டி அதே விதமான கணக்குகள் சாம்சரமாய் மாணவன் போடுவதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும். அப்பொழுது மாணவன் ஒவ்வொரு கணக்கையும் ஒரு பிரகாரமே போட வேண்டியதாயிருந்தது. நிருஷ்டாந்தக் கணக்கு இல்லாவிடின் மாணவன் கணக்கினைப் போடமுடியாது. கணக்கோ பல்வேறு வகையின; அவைகளையெல்லாம் சேகரித்து வைப்பது இலேசான காரியமல்ல, அவ்வாறு அவைகளைச் சேகரித்து வைப்பதனால் நற்பயனுமில்லை. கணக்குமாத்திரம் போட்டால் போதாது; கணித சாஸ்திர உணர்ச்சியும் வேண்டும். அவ்வுணர்ச்சி அடைந்தோர் சகல விதமான கணக்குகளையும் மாதிரி கணக்கின் உதவியில்லாமல் போடுவார்கள். இவ்வுணர்ச்சிதான் முக்கியமானதென்று அறிந்த போதகாசிரியர்கள் கணித-சாஸ்திரத்தை இப்போது முதல் வகுப்பிலிருந்தே கற்பிக்கிறார்கள். உதாரணமாக, பழைய முறைப்படி கூட்டல் கணக்குகள் எண்களைக் குருட்டுத்தனமாய் விரல்களாலே கூட்டிக்கொண்டிருப்பதை உணர்த்தி நின்றன. இப்பொழுதோ ஆரம்பத்திலேயே கூட்டலென்றால் என்னவென்று பிரதிவஸ்துப்பொருள்களாலும் சட்டக்காகிதத்திற் குறித்த வரிப்படத்தாலும் காட்டுகிறோம்; அதனால் சிறுவன் கணக்குப்போடும் பொழுது எண்கள் இங்குமங்கும் ஓடி, வீரர்கள் ஒரு பெரிய சேனையாகக் கூடுவதுபோல, தொகையாகக் கூடுவதை ஞானக்கண்ணினாற் காண்கின்றான். கண்ணுடைமைக்கு அழகுதோன்ற கணிதம் கற்கும் மாணவர்களும் தாம் செய்வதைப் பார்த்தவண்ணமாயிருத்தல் வேண்டும். இம்மனத்தெளிவைத் தரக்கூடியன உத்தேசக் கணக்குகள்; அதனால், அக்கணக்குகளின் சிறப்பை எடுத்துக்கூறினோம்.

* * * * * *

ம-ா-ா-ஸ்ரீ; M. சக்ரவர்த்தி நாயனார்:—அபிநயப் பாட்டுகளை அனுப்பியதற்காக இவர்க்கு வந்தனம் அளிக்கின்றோம். இடமின்மையாலும் பாட்டுக்கள் சற்றுக் கடினமாயிருப்பதாலும், அவைகளைப் பிரசுரிக்கவில்லை. வசனநடையைத் தழுவிப்பாடுதல் நலம். பாட்டின் அருத்தம் தெளிவாயிருந்தாலொழிய சிறுவர்கள் ஆவலுடன் பாடமாட்டார்களே.

JUDGING HANDWRITING

கையெழுத்தினைத் தணிக்கைசெய்தல்

௨-ம் வால்யம் 36-ம் பக்கத்திய கேள்விக்குவிடை.—

1. எழுத்து கிழிக்கப்படாமலும் மசிகொட்டப் படாமலுமிருக்கின்றதா?

2. பாரம் வைக்கப்பட்டுள்ள முதல் எழுத்துக்கும் அக் காகிதத்தின் ஓரத்திற்கும் எவ்வளவு இடம் விட்டிருக்கவேண்டுமோ, அவ்வளவு இடம் விட்டு எழுதப்பட்டிருக்கிறதா?

3. பாரம் வைக்கப்பட்டுள்ள எழுத்துக்களுக்கு அடியில் ஒழுங்காக (நேராக) இடந்தவறாமல் எழுதப்பட்டிருக்கிறதா? ஒவ்வொரு எழுத்துக்களுக்கு மிடையில் எவ்வளவு இடம் விட்டு எழுதப்படவேண்டுமோ அவ்வாறு எழுதப்பட்டிருக்கிறதா?

4. ஓரெழுத்தின் ஆரம்பமுதல் முடிவுவரையில், எந்த இடத்தில் ஆரம்பித்திருக்கவேண்டுமோ, எங்கெங்குசெல்லவேண்டுமோ, எங்கு முடியவேண்டுமோ, அவ்வண்ணம் எழுதப்பட்டிருக்கிறதா?

5. பாரம் வைக்கப்பட்டுள்ள எழுத்துகள் செங்குத்தாகவாயினும் வலதுபுறம் சிறிது சாய்வாகவாயினும் எழுதப்பட்டிருப்பின் அவ்விதமே எழுதப்பட்டிருக்கிறதா? என்று இவ்வாறு பார்த்துத் தணிக்கை செய்யவேண்டும்.

எமது அபிப்பிராயம் இவையாகும். மற்றைய நண்பர்களின் அபிப்பிராயத்தையும் எதிர்பார்க்கின்றேன்.

P. பரிமணப்பல்லவராயர்,
ஹெட்மாஸ்டர்,
போர்டுபெண்பாடசாலை,
வாங்கல், கரூர்தாலுகா.

உத்தேசக் கணக்குகள்

(30-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேறொருகணக்கு. ஒருவனுக்கு மாதவருமானம் ரூ. 57-11-6 அதில் அவன் ரூ. 13-8-0 சேர்க்கிறான், என்றால் சேர்க்கும் தொகை அதிகந்தானாவென்று தெரியும் பொருட்டு இரண்டு தொகைகளைப் பின்னமாய்க் குறித்து அறியவேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம். அதாவது, $\frac{13\frac{1}{2}}{57\frac{3}{4}} = \frac{7}{30}$ அல்லது ஏறக்குறைய $\frac{1}{4}$ ஆகும். வருமானத்திற், காற்பங்கு சேர்ப்போன் செய்யுஞ் செலவு அதிகமோ அல்லவோ என்பதை ஒவ்வொருவரும் தத்தமது அனுபோகத்தை யனுசரித்துச் சொல்லலாம்.

சாதாரண கடைக்கணக்குகளைத் திருத்தமாய்ப் போடுவதற்கு உத்தேசக் கணக்குகள் வேண்டும். உதாரணமாக, "ஒரு வீசை நெய் ரூ. 1-11-3 வீதம் 3 மணங்கின் விலையாது?" என்ற கணக்கை—விலை ரூ. $24 \times 1\frac{3}{4}$= ரூ. 42 என்று உத்தேசக் கணக்காய்ப்போட்டு, பின்பு சரியான விடையாகிய ரூ. 41-4-0 வைப் பெறலாம். கடைக்காரனிடமிருந்து நெய்யை ரூ. 40-க்கு வாங்கினால் நமக்கு லாபம் 1/10-க்குச் சற்று அதிகமாகிறது.

ஒரு தொகையை மற்றொரு தொகையினின்றும் வருவிப்பது கணக்காகும். பெறவேண்டிய தொகை (i) இருக்கிற தொகையைக்காட்டிலும் சிறியதாய் அல்லது பெரியதாயிருக்கும்; (ii) எத்தனை மடங்கு பெரியதாய் அல்லது சிறியதாயிருக்கவேண்டுமென்று முன்னர்த் தெரிந்துகொள்ளவேண்டும். இது தெரிந்து கொண்டுதான் கணக்கைப் போட ஆரம்பிக்கவேண்டும்; இல்லாவிடின் பிழை கண்டுபிடிப்பது அரிதாய் விடும்.

(1) 7 வீசை சர்க்கரையின் விலை ரூ. 3-8-0 என்றால், 19 வீசையின் விலை என்ன? விடை—(i) விலை அதிகமாயிருக்கும் (ii) $\frac{19}{7}$ அல்லது சற்றேறக்குறைய 3 மடங்கு அதிகமாயிருக்கும். $\frac{19}{7} \times 3\frac{1}{2}$= ரூ. 9-8-0.

(2) 24 புஸ்தகங்களின் விலை ரூ. 15 ஆனால், 17 புஸ்தகங்களின் விலை என்ன? விடை:—(i) விலை குறைவாயிருக்கும் (ii) $\frac{17}{24}$ அல்லது $\frac{3}{4}$ வாசி குறைவாயிருக்கும், அதாவது விலை ஏறக்குறைய ரூ. 12 ஆகும்; சரியான விடை ரூ. 10-10-0.

(3) 236 மைல் தூரமுள்ள ஊருக்குப்போக ரெயில் செலவு ரூ. 2-6-0 ஆனால், ரூ. 3-5-0 செலவிற்கு எத்தனை மைல் போகலாம்? விடை. (i) இன்னுந் தூரம் போகலாம் (ii) ஏறக்குறைய $1\frac{1}{2}$-மடங்கு தூரம் போகலாம், அதாவது (236 + 119 =) 355 மைல் போகலாம்.

(4) 15 ஆள் வேலை செய்தால் ஒருவேலை 7 நாட்களில் முடிகிறது. 23 ஆள்கூடி வேலைசெய்தால் வேலை எத்தனை நாட்களில் முடியும்? விடை. (i) வேலை சீக்கிரமாய் முடியும் (ii) செலவழிக்க வேண்டியகாலம் $\frac{15}{23}$ அல்லது $\frac{1}{3}$ வாசி குறைவாயிருக்கும்; அதாவது வேலை ஏறக்குறைய 5 நாட்களில் முடியும்.

"CORRELATION"

தொடர்முறைப்போதனை

(33-ஆம் பக்கத்தொடர்ச்சி)

(1) புதிய பாடத்தை ஆவலுடன் கற்றுக்கொள்வதற்கும் (2) ஒரு பாடத்தில் தோன்றும் அரிய விஷயங்களைச் சம்பந்தப்படுத்தக்கூடிய வேறொரு தனிப்பாடத்தில் விளக்கவும் தொடர்முறைப் போதனை வேண்டியிருக்கிறதென்று கூறினோம்.

இப்படிப் பாடங்களைச் சம்பந்தப்படுத்திக் கற்பிப்பதில் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. அதாவது, பாடத்தொடரில் பெரும்பாலும் ஒரு பாடம் முக்கிய பாடமாயும் மற்றொருபாடம் கிளைப்பாடமாயும் தோன்றும். முக்கியபாடமானது மனத்தினைக் கவரத்தக்கதாயிருந்து கிளைப்பாடத்துக்கு ஆவலினைத்தந்து நிற்கின்றது. உதாரணமாக, வாசகபாடத்தில் கோட்டையைப்பற்றி

ஒரு நல்ல கதை வந்ததென்று வைத்துக்கொள்ளுங்கள். கோட்டை யின்னதென்று தெரிந்தவனுக்குத்தான் கதையிற் சொல்லியுள்ளவை யெல்லாம் விளங்கும். மற்றையோரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாயிருத்தலினால் வாசகபாடத்தை ஒருவாறு முடித்து, அடுத்த நேரத்திலேனும் அடுத்த நாளிலேனும் அட்டைகளினாலாவது படத்தினாலாவது கோட்டையின்னதென்று தெரிவித்துக் கோட்டைகளைப்பற்றிப் பொதுவாகச் சில விஷயங்களைச் சொல்லி மாணவர்களின் அறிவினை விசாலப்படுத்தலாம். இக் கோட்டைப் பாடம் நடந்த பின்னர் மாணவர்கள் முன்னிருந்ததை விட அதிக ஊக்கத்துடன் வாசக பாடத்தினைப் படிப்பதோடு உள்ள விஷயம் அனைத்தையும் சுலபமாய்க் கிரகிப்பார்கள். இவ்விடத்துத் தொடர்முறை மனத் தெளிவினைத்தந்தது; இணைப்பாடமும் பலித்தது.

சில சமயங்களில் ஒரே பாடத்தை இரண்டு சந்தர்ப்பங்களில் கற்பிக்கவேண்டியதாய் நேரிடுகிறது. உதாரணமாக, அடிக்கோல் விஷயத்தினைச் சாதாரண கணித பாடத்திலும் க்ஷேத்திரகணித பாடத்திலும் கற்பிக்க வேண்டியதாய்த் தோன்றும். தோன்றினும் இரண்டு பாடங்களைச் சம்பந்தப்படுத்தி, ஒன்றாய்க் கற்பிக்கலாம். அப்படிச் செய்வதனால் காலமுஞ் சேதமுறாது அறிவும் தெளிவுறும். க்ஷேத்திரகணிதம் கற்பிக்கும் முறை பிரத்தியக்ஷமுறையாயிருத்தலினால், க்ஷேத்திரகணிதம் கற்பிக்கும் பொழுதே பாடத்தை நடத்துவது உசிதமாகக் காணப்படுகின்றது. சந்தர்ப்பத்துக்குத் தகுந்த பாடங்களைக் கற்பிக்கத்தொடர்முறை உறுதுணையாயிருக்கின்றது.

இன்னுமொரு விஷயம். அறிவு முதிரக் கல்வியின் அருமையினை மாணவன் தானே தெரிந்துகொள்கின்றான். அவ்வருமை உணர்ந்தவன் எல்லாப் பாடங்களையும் ஆவலுடனே கற்றுக்கொள்வான்; ஆனதுபற்றி, அவனுக்குத் தொடர்முறைப்போதனை அவசியமின்று. இக்காரணத்தால் மேல்வகுப்புக்களிற் பாடங்களைத் தொடர்ந்து போதிப்பது ஆவலினை உண்டுபண்ணுவதற்கன்றென்பதும் காலம் சேதமுறாதபடிக்கே அம்முறை கையாடப்படுகிறதென்பதும் வெளிவரும்.

ஆகவே, பாடங்களைத் தொடர்ந்து போதிப்பது

(i) ஆவலினை உண்டுபண்ணுவதற்கும்,

(ii) ஒரு பாடத்திலுள்ள அரிய விஷயங்களை அவற்றின் சம்பந்தமுடைய தனிப்பாடங்களால் விளக்குவதற்கும்,

(iii) காலத்தை வீண்போக்காதபடி நாம் கற்பிக்கவேண்டியதை ஏற்ற காலத்து ஒரேமுறையில் பாடங்களைச் சம்பந்தப்படுத்திக் கற்பிப்பதற்குமென்க.

இப்போது நோக்கங்களைக் கொண்ட தொடர்முறைப் போதனை பெரும்பாலும் சிறுவர்களுக்கே ஏற்றது.

அப்பியாசங்கள்.

I. பிறை வளர்தலை பூகோள பாடத்தில் கற்பித்தால் பலனோ அல்லது க்ஷேத்திர கணிதபாடத்தில் கற்பித்தால் பலனோ?

II. சித்திரத்தை பாலர்வகுப்பார் ஆவலுடன் வரையப் பாடத்தினை எவ்வாறு ஆரம்பிப்பாய்?

III. எப்பொழுதும் கைத்தொழிற் பாடங்கள் இணைப்பாடங்களாகவே இருத்தல் வேண்டுமோ?

IV. கணிதத்திற் பெருக்கல் பாடம் I ஆம் வகுப்பிலும் IV ஆம் வகுப்பிலுங் கற்பிக்கப்படுகின்றது. அதைக் கற்பிக்கும் முறையில் உள்ள பேதம் என்ன?

V. சரித்திரம் கீழ் வகுப்புக்களிற் கதைரூபமாயும் மேல் வகுப்புக்களிற் காலக்கிரமப்பிரகாரமுங் கற்பிப்பதற்கு என்ன சமாதானங் கூறுவாய்?

VI. I ஆம் வகுப்பார் பிராணிசாஸ்திரத்தையாவது சிவிக்ஸ்பாடத்தையாவது ஆவலுடன்கேட்க விஷயத்தைச் சம்பந்தப்படுத்துவதெப்படி?

VII. இதரபாடங்களினின்று தேர்ந்தெடுக்கப்பட்ட சில வாக்கியங்கள் காப்பிப்புஸ்தகங்களில் தோன்றுவது எதன் பொருட்டு?

முற்றிற்று.

A SIMPLE DESIGN FOR A SCHOOL HOUSE

பாடசாலைக்கட்டடப் படம்

(36-ம் பக்கத்தொடர்ச்சி)

(iii) இடம் :—ஒவ்வொரு மாணவனுக்கும் 12 ச. அடி வீதம் இடம் இருக்க வேண்டும். படங்கள் தொங்கவிடவும் கரும்பலகைபோலச் சுண்ணாம்பினாற் பண்ணவும் ஒரு புறத்தில் நீண்ட சுவர் தேவை. ஜன்னல்கள் அதிகமாகவிருந்தால் வெளிச்சம் நாலாப்பக்கமும்வந்து கண்களை இம்சை செய்வதோடு படங்களைத் தொங்க விடுதற்கும் இடமில்லாமற் போகும்.



1. கூரை. 2. மேல் ஜன்னல். 3. சுவர். 4. அடிஜன்னல். 5. தரை மட்டம்.

டை பிலான்



1. கதவு.

இங்குக்குறித்துள்ளபடம் 'இந்தியர்கல்வி' (Indian Education) என்னும் ஆங்கிலப் பத்திரிகையினின்றும் எடுக்கப்பட்டது. ஜாவா என்னுந் தீவிலே பாடசாலைக் கட்டடங்கள் இப்படத்தின் பிரகாரம் கட்டப்படுகின்றனவென்று பல தேசங்களுக்குப் பிரயாணஞ்செய்த அப்பத்திராதிப சிகாமணி கூறுகின்றனர். நெசவுத்தொழிலாளிகள் தமது வீட்டு ஜன்னல்களைத் தரை மட்டத்தில் வைப்பது வழக்கம்.

INFORMATION FOR OBJECT LESSONS

பொருட்பாடங்களை நடத்துவதற்கான விஷயங்

கார்க் :—இது இருபது அடிமுதல் நாற்பது அடிவரையில் வளரும் கார்க்மரத்தின் மேற்கவசம் அல்லது பட்டையாகும். இம்மரம் தென் யூரோப்பிலும் வட ஆப்பிரிக்காவிலும் உற்பத்தியாகின்றதாம். இதன் அடிப்பாகத்தின் சுற்றளவு எழடிக்கதிகமாக இருக்குமாம். இப்பட்டை அம்மரத்தினின்றும் எடுக்கத்தக்க பருவம் அடைந்தவுடன் நெடுக்கில் இரண்டிடத்தில் துவாரஞ்செய்து பிறகு குறுக்கில் பற்பல துவாரங்களிட்டு, அப்பட்டையைத் துண்டு துண்டாக எடுத்து, நீரில் ஊறவைத்து, தட்டையாக்கி, உலர்த்திக் கொளுத்தி அதின்மேலுள்ள அழுகிய பாகங்களை நீக்குவார்கள். அதனால் அதிலுள்ள பூச்சிகள் நசித்துப்போம்; பூச்சிகள் நசித்து இப்படிப் பதமான பட்டைவியாபாரிகளுக்கு அனுப்பப்படும்.

[பிள்ளைகளிடம் சிறு துண்டு கார்க்குகளைக் கொடுத்து, அவற்றை வர்ணிக்கும்படி சொல்லவேண்டும். அதன்பின்னர் அதன் உபயோகங்களைக் கேள்விகளின் மூலமாகத் தெரிவிக்கலாம்.]

காகிதம் :—[பிள்ளைகளிடம் பழுப்பு நிறமான காகிதத்துண்டுகளைக்கொடுத்து அவைகள் எதனால் ஆக்கப்படுகின்றனவென்று யூகிக்கச்சொல்லலாம். அதன்பின் அவர்களுக்கு அடியில் வருவனவற்றை எடுத்துரைக்கலாம்.]

மரக்கறி பதார்த்தங்களினாலும் மரப்பட்டைகளாலும் மரத்துண்டுகளாலும் நார்மடிகளாலும்பஞ்சிகளாலும் கம்பளித்துண்டுகளாலும் காகிதம் செய்யப்படுகின்றது. மரப்பட்டையையாவது கம்பளித் துண்டையாவது வேகவைத்துக் கழுவி அரைத்துக் கூழாக்கிப் பிறகு சல்லடையிலிட்டுச் சல்லித்து நீரினைப்போக்கிப் பின்னர் நீர் நீங்கப்பெற்ற கூழினை மெல்லிய அடைபோல் ஆக்குகின்றனர். அதன்பின் அவ்வடையை இரண்டு கனப்புத்தகடுகளுக்கிடையிலிட்டு எஞ்சி நிற்கு நீரைப் பிழிந்தெடுத்து உலர்த்தி மெருகிட்டு, அதற்குக் காகிதம் என்று நாமம் தரிக்கின்றனர். இப்படித்தான் காகிதத்தைக் கையினால் செய்வார்கள் நமக்குவரும் காகிதங்களில் பெரும் பாகத்தன இயந்திரங்களால் செய்யப்படு

கின்றன. சில்வகைக் காகிதங்கள் கம்பிகளடர்ந்த (அங்குலமொன்றிற்கு இருபது கம்பிகள்) சட்டங்களால் செய்யப்படுகின்றன. அவ்வாறு செய்யப்படுதலே அக்காகிதங்களின் மீதுள்ள தழும்புகள் விளக்கும். அத்தழும்புகளை வெளிச்சொளியில் காணலாம். மையொற்றும் காகிதம் என்னும் பிளாட்டிங் பேபரும் இம்முறையிலேயே செய்யப்படுகின்றது. ஆனால் அதற்குப் பளபளப்பு கொடுப்பதில்லை.

குறிப்பு:—தக்கை விளையும் ஊரிலிருக்கும் உபாத்தியாய நண்பர் எவராவது தக்கையைப்பற்றிச் சில குறிப்புகளை எழுதி உதவுவாராக.

FOREIGN NOTES

பிறதேச வர்த்தமானம்

Elementary Education in Wales
வேல்ஸ் எலிமெண்டரி படிப்பு

எழுதப் படிக்கத் தெரிந்தும் வேலை அகப்படுவதற்குக் கஷ்டமாயிருப்பதால், ஒருவன் எலிமெண்டரி பாடசாலையிற் படித்ததனால் யாதொரு பயனுமில்லையென்று நினைக்க இடமிருக்கிறது. இக்குறையை நீக்க வேல்ஸ் தேசத்துக் கல்விச் சங்கத்தார் எலிமெண்டரி பாடசாலைகளில் வாசித்த மாணவர்களுக்கு வேலை கற்பிப்பதற்குத் தனியாய்ச் சில டெக்னிகல் பாடசாலைகளை ஏற்படுத்தப்போவதாய்த் தெரியவருகிறது. இப்பாடசாலைகள் படிப்பின் பலனை விளங்கச்செய்யுமென்பதற்கு ஐயமில்லை.

* * * * * *

Education in Cape Colony
கேப் கலோனியின் கல்வி அபிவிருத்தி

சென்ற ஜூன் மாதம் பென்ஷன் வாங்கிக்கொண்ட கேப் கலோனி கல்வி இலாகாவின் தலைவரான டாக்டர் மூயர் (Dr. Muir.) என்பவர் கல்விக்கதிகாரம் பூண்டிருந்த காலத்து அத்தேயத்துப் பாடசாலைகளுக்குப் போகும் மாணவர்களின் சங்கியை இரட்டித்துப் பாடசாலைகள் மும்மடங்காக அதிகரித்தன. போதனாப்பியாசத்தில் தேர்ச்சி பெற்ற உபாத்தியாயர்களோ இப்பொழுது 100-க்கு 60 பேரிருக்கிறார்கள்; முன்பு 100-க்கு 27 பேர் மாத்திரம் அப்படித் தேர்ச்சிபெற்றவர்களாயிருந்தார்கள்.

* * * * *

Should very young children be taught to read?
மிகச் சிறுபிள்ளைகளை வாசிக்கப் பழக்கலாமோ?

அக்ஷரங்களைக் கற்றுக்கொள்ளவும் சிறுவாக்கியங்களை வாசிக்கவும்பிள்ளைகள் கஷ்டப்படுவதைப்பார்த்து, எத்தனையோ போதனுயுக்திகளை அனுசரித்துப் பாடங்களைச் சுலபமாய்க் கற்பிக்க முயலுகின்றோம். பெரு முயற்சியின்றிக் கற்பிக்க முடியாத பாடமாகிய இவ்வாசகபாடம் சிறுவர்களுக்குத் தகுந்தபாடமோ அல்லவோ என்ற சந்தேக மேற்படுகின்றதென்று கூறுகிற்பர் இங்கிலாந்தில் பதிப்பிக்கப்படும் ஜர்னல் ஆப் எட்யுகேஷன் (Journal of Education) என்னும் பத்திரிகையின் பத்திராதிபர். இவர் அபிப்பிராயப்பட்டது சரியோ சரியல்லவோ வென்பதனை நமது சந்தா நேயர்கள் தத்தமக்குத் தெரிந்தவரையில் எழுதிக் காட்டுவார்களாக.

* * * * * *

The Teacher's Register
உபாத்திகளின் அபிதானப்பட்டி

பண்டைக்காலத்தில் கிழவரொருவர் ஐக்கியத்தின் சிறப்பினைத் தம்பிள்ளைகளுக்கறிவிக்க விறகுகட்டு ஒன்றை அவர்களிடம் தந்து முறிக்கச்சொன்னகதை அனைவரும் அறிந்ததே. அதைப்போலவே இங்கிலாந்திலுள்ள உபாத்திகள் ஐக்கியத்தால் மேன்மையையும் செல்வாக்கினையும் விளக்கத்தையும் பெறலாமென்று கண்டறிந்து, தமக்காகப் புத்தகம் ஒன்று ஏற்படுத்தி அதில் உபாத்திமைத்தொழில்வகித்த ஒவ்வொரு உபாத்திகளும் தம் பெயர், உத்தியோகத்தின் தரம் முதலியவற்றைப் பதிவுசெய்யவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்தி இருக்கின்றனர். அவ்விடத்து உபாத்திகளுள் சிலர் இவ்வேற்பாட்டினை அங்கீகரிக்கவில்லை. ஆயினும் அவ்வபிதானப்பட்டியில் தம்பெயர்களைப் பதிவுசெய்தோர் சென்ற மே மாதத்தில் 9,643 உபாத்திகளெனத் தெரியவருகின்றது. இக் கூட்டத்தார் பலவித நற்பயன் பெறலாமென்னும் நம்பிக்கையோடு பெரிதும் உழைக்கின்றனர்.

ஸ

காதலர்சோதனை

அல்லது

மரித்தோர் பிழைத்தல்

"THE TEMPEST."

முதல் வால்யூம் (269 - ம் பக்கத்தொடர்ச்சி.)

"ஆம், என் பலமெல்லாம் திடீரென ஒடுங்கிப்போய்விட்டது. என்னால் ஒன்றும் ஆகாதுபோலிருக்கிறது. நீர் ஆட்டுவிக்கும் கூத்துகளுக்கெல்லாம் நான் உட்பட்டாகவேண்டும். வேறு வழியில்லை." என்று பெர்டிநண்ட் பிரம்புபிடித்திருக்கும் உபாத்தியாயரைக் காணும் ஆறுவயது குழந்தையைப் போல் நடுக்கத்துடன் ஹீனஸ்வரத்தில் பதில் சொன்னான். தான் அவ்வாறு ஆண்மையொடுங்கிய தெருப்பள்ளிக்கூடப் பிள்ளையைப்போல் நிற்பது ப்ராஸ்பரோவின் மாந்திரிக மஹிமையாலென்பது பெர்டிநண்டுக்குப் புலப்படவில்லை. ப்ராஸ்பரோ புறப்பட்டுச் சென்றார்; பெர்டிநண்டும் ஒன்றும் தோன்றாதவனாய் அவர் பின்னரே நடந்தான். வேறுவிஷயத்தில் அவனுடைய கருத்து செல்லாமலிருந்தால, ஒருவேளை அவன் தனது நிலைமையின் காரணத்தைப் பற்றி ஏதாவது யோசித்திருப்பான். ஆனால் பெர்டிநண்ட மனதோ மிராண்டாவினிடமே லயித்திருந்தது. கண்ணுக்கெட்டியவரை அவன் மிராண்டாவைத் திரும்பிப்பார்த்துக்கொண்டே சென்றான். "என்னுடைய தேகவலிவு, மனோ ஊக்கம் எல்லாம் அடியோடு அடங்கிவிட்டது. நான் இப்போது பெட்டிக்குள்ளிருக்கும் பாம்பென இருக்கிறேன். இவ்வளவும் போதாதென்று, இந்தண்டைப்பக்கம் திரும்பினால் யமகிங்கரன் போலிருக்கும் இந்த மனிதன் என் மனம் போனபடிக்கெல்லாம் பயமுறுத்துகிறான். ஆனால் இந்த ரமணீமணியைத் தினத்துக்கு ஒருதரம் என்னுடைய சிறைச்சாலையிலிருந்து தரிசிக்கும் பாக்யம் ஒன்றுமாத்திரம் எனக்குக் கிடைக்குமானால், இவ்வளவும் எனக்கு ஒரு லக்ஷ்யமில்லை; இவற்றைக்கண்டு நான் மனம் தளரமாட்டேன்." என்று சொல்லிக்கொண்டே பெர்டிநண்ட் குகைக்குள் ப்ரவேசித்தான்.

பெர்டிநண்டை அதிகநேரம் சிறையில் வைத்திருக்கவில்லை. குகையின் கதவைத்திறந்து அவனை வெளியேவரும்படி உத்தரவிட்டார். பெர்டிநண்டும் மிராண்டாவைப் பார்க்கலாமென்று மிகுந்த ஆவலுடன் வெளியேவந்தான். வந்தவுடன் ப்ராஸ்பரோ அவனுக்கு மிக்க வருத்தமான வேலையிட்டார். மிராண்டாவும் அங்கிருந்தாள். அவள் அங்கு நிற்பதைக் கவனியாதவரைப்போல் ப்ராஸ்பரோ கோபமுகத்துடன் தனது வித்யாஸ்தலத்துக்குச் செல்வதைப் போல் பாசாங்கு செய்து ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்துகொண்டார்.

பெரிய பெரிய மரத் திம்மைகள் அநேகம் தாறுமாறாக விழுந்துகிடந்தன. அவற்றையெல்லாம் எடுத்து வரிசையாய் அடுக்கும்படிக்குப் பெர்டிநண்டுக்குக்

கட்டளை. அவனோ செல்வத்திலே பிறந்து செல்வத்திலே வளர்ந்தவன்; ராஜகுமாரன். துரும்பெடுத்து துரும்புமேல் போட்டறியான். அப்பேர்ப்பட்டவனைப் பெரிய பெரிய மரத்திம்மைகளைத் தூக்கச்சொன்னால் எப்படியிருக்கும்? ஒரு கட்டையைத் தூக்கிச்செல்வதற்குள் அவன் உடம்பு வியர்த்தது. தேகமெல்லாம் அவன் களைத்துப்போனான். முகம் சிவந்துபோய்விட்டது. நெற்றியைத் தொட்டுத்தொட்டுப் பார்த்துக்கொள்ளலானான். தன் மனதைக் கொள்ளைகொண்ட அந்த ஸௌந்தர்ய புருஷன் இவ்வாறு பெருமூச்சுவிட்டுக் களைத்துப் போவதைக்கண்டு மிராண்டா அதிக பரிதாபமுற்றவளாய், "ஐயோ, இது என்ன கொடுமை? அந்தக் கட்டையை வீசி யெறிந்துவிட்டுச் சற்று உட்கார்ந்து இளைப்பாறலாமே. என்னுடைய தகப்பனார் தன் வித்யாஸ்தலத்தில் புஸ்தகத்தின்மீது தலையைக் கவிந்துகொண்டிருக்கிறார். அவர் அவ்விடத்தை விட்டுப் பெயர மூன்றுமணி சாவகாசம் ஆகும். மெள்ளப் பார்த்துக்கொள்ளலாம். உட்காரும்." என்றாள்.

"என் செல்வமே, உட்கார்ந்தால் அவர் என்னை லேசில்விடமாட்டார். ஒன்றுமில்லாததற்கே இவ்வளவு வேலை வைத்துவிட்டாரே! என் வேலையை முடித்துவிட்டுத்தான் நான் உட்காரவேண்டும்."

"நீங்கள் அதைப்பற்றிப் பயப்படவேண்டியதில்லை. உங்களுக்குப் பதிலாக நான் அந்த வேலையைச் செய்கிறேன். அவர் வருவதற்குள் எல்லாம் அடுக்கியாய்விடும்" என்று மிராண்டா சொன்னதற்கு அவன் சிறிதும் ஸம்மதிக்கவில்லை. இவ்வாறாக மிராண்டா செய்கிறேன் என்பதும் பெர்டிநண்ட் வேண்டாமென்பதும் பெரிய ஸம்பாஷணையாய்விட்டது. கடைசியில் வேலை நடந்தபாடில்லை. மிராண்டா உதவிசெய்வதுபோக அவளுடைய பேச்சால் பெர்டிநண்ட் வேலைத் தடைப்பட்டது. ஸாதாரணமாக இருவர் பொது வ்யவஹாரமாய்ப் பேசத்தலைப்பட்டாலே, அவர்கள் செய்யும் வேலை தடங்கல்படும்; அதுவும் நல்ல ரூபலாவண்ய ஸ்த்ரீபுருஷர்கள் இருவர் பரஸ்பரகாதல் விஷயமாய்த் தர்க்கம் தொடங்கிவிட்டால் கேட்பானேன்?

இவர்களுடைய பரஸ்பர நேசத்தின் தன்மையைப் பரிக்ஷிப்பது உத்தேசமாகவே பெர்டிநண்டுக்கு இந்த வேலையிட்ட ப்ராஸ்பரோ, மிராண்டா எண்ணியிருந்தபடி, வித்யாஸ்தலத்தில் புஸ்தகமும் கையுமாய் இருக்கவில்லை. அவர்களுடைய செயலைப் பார்த்துக்கொண்டே அவர் மிராண்டாவுக்கு அருகாமையில் மறைவாய் நின்றுகொண்டிருந்தார். நடந்த விஷயங்கள் ஸர்வமும் அவர் கவனித்துக்கொண்டிருந்தார். பெர்டிநண்ட் அவளுடைய நாமதேயம் என்னவென்று கேட்டான். அதற்கவள் தன் பெயரை வெளியிடக்கூடாதென்று தன் தகப்பனார் ஆக்ஞையென முதன் முதல் சொன்னாள். ஆயினும் காதலின் மஹிமை, தகப்பனார் கட்டளை சட்டையில்லாமல்போயிற்று; அவள் தன் பெயரைச் சொல்லிவிட்டாள்.

என்றைக்குமில்லாமல் இன்றையதினம் தன் புத்ரி, உண்மைக்காதலின் அபார சக்திக்கு வசப்பட்டு, தன் வார்த்தையை மீறிநடந்ததைக்கண்டு ப்ராஸ்ப

ரோவுக்குக் கோபம் உண்டாகவில்லை. அவர் ஸந்தோஷப்பட்டார். ஏனென்றால் இவ்வளவுக்கும் காரணம் தான் தானே! தான் வேணுமென்று தன் மாந்த்ரிகபலத்தால் செய்த வேலைதானே இது? மிராண்டா தன் பெயரைச் சொன்னவுடன் பெர்டிநண்ட தான் கண்ட ஸ்த்ரிகளுக்குள் அவளே அழகிலும் குணத்திலும் சிறந்தவளென்றும், அவள் ஒருத்தியே தன் மனதுக்கு இசைந்தவளென்றும் பலவாறு புகழ்ந்து பேசி அவளையன்றி வேறெவளையும் தான் மணம் புரிவதில்லையென்று ஒரே பிடியாய்ச் சொன்னதை ப்ராஸ்பரோ உத்ஸாஹமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்.

இவ்வாறு அவளுடைய அழகையும் குணத்தையும் வெகு ச்லாகித்துப் பேசி அவளுக்கு இணை வேறொருத்தியுமில்லையென்று புகழ்ந்ததையெல்லாம் கேட்டு மிராண்டா பணிவாய், "எனக்கு ஒரு ஸ்த்ரீயினுடைய முகமும் ஞாபகமில்லை. புருஷர்களுக்குள்ளும், நான் தங்களையும் எனது தகப்பனாரையும் தவிர வேறெவரையும் பார்த்ததில்லை. உலகத்தில் ஸ்த்ரீ புருஷர்கள் எவ்வாறு இருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மாத்ரம் நிச்சயம். தங்களைத்தவிர வேறெவரையும் நான் என் வாழ்க்கைத் தோழராகக் கொள்ளமாட்டேன். உம்மைவிட என் மனதுக்கு த்ருப்திகரமான புருஷர் வேறொருவர் இருக்கிறாரென்றும் எனக்கு நம்பிக்கையில்லை. என்ன, நான் தங்களுடன் இவ்வளவு அயோக்யமாகப் பேசத்தொடங்கிவிட்டேன்! என் தகப்பனார் விருப்பத்துக்கு நேர்விரோதமாக நடக்கிறேனே!" என்றாள்.

இதைக்கேட்டு ப்ராஸ்பரோ, "எல்லாம் நான் நினைத்தபடியேதான் நடந்து வருகிறது. ஒன்றும் குறைவில்லை. என் மகள் நேபில்ஸ் ராணியாவள்" என்று சொல்கின்ற பாவனையாய்த் தலையை யாட்டிக்கொண்டு புன்னகைசெய்தார்.

பெர்டிநண்ட் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினவனாய்த்தான் நேபில்ஸ் இளவரசனென்றும் அவள் நேபில்ஸ் ராணியாவாளென்றும் மிராண்டாவினிடம் சொன்னான். அவள் அதைக் கவனிக்கவேயில்லை. பெர்டிநண்ட் தன்னை அங்கீகரித்தான் என்ற பூரிப்பே அவளுக்குப் பெரியதாயிருந்தது. அவளையறியாமலே அவள் கண்களினின்று ஆனந்தக் கண்ணீர் ஆறாய்ப் பெருகியது.

"இதென்ன அசட்டுத்தனம்! நான் என் மனதாலும் எட்டக்கூடாத உன்னத பதவியை அடைந்திருக்கும்போது என் கண்களில் நீர் ஏன் வரவேண்டும்? தங்களைப்போல் சாதுர்யமாய்ப் பேச எனக்குத் தெரியாது. என் மனதிலிருப்பதை ஒளிக்காமல் உள்ளவாறு சொல்லிவிடுகிறேன். தாங்கள் அனுக்ரஹித்து அங்கீகரித்தால் அடியேன் தங்களுடைய மனைவியாவதற்கு ஸித்தம்" என்று மிராண்டா விஞ்ஞாபித்ததற்குப் பெர்டிநண்ட் ப்ரதியுத்தரம் அளிக்குமுன் ப்ராஸ்பரோ அங்கு ப்ரஸன்னமானார்.

"குழந்தை, பயப்படவேண்டாம் எல்லாவற்றையும் நான் கேட்டுக்கொண்டிருந்தேன். என் பெற்றமனது இன்றைக்குத்தான் பூர்ண த்ருப்தியடைந்தது. பெர்டிநண்ட், உன்னிடம் நான் நிர்தாக்ஷிண்யமாயிருந்து உன்னை க்ரூரமாய் நடத்தியதற்கு ஸரியானபடி உனக்கு ஈடு செய்கிறேன். என் செல்வக் குழந்தையை நீ ஏற்றுக்கொள். உன்னை இவ்வளவுதூரம் பாடுபடுத்தியது பரீக்ஷார்த்தமாகத்தான்; பரீக்ஷையும் த்ருப்திகரமாகவே முடிந்தது. உன்னுடைய உண்மைக் காதலுக்கு ஸரியான பலனாகவும், நான் மனமுவந்து அளிக்கும் தானமாகவும் எனது கன்னிகாமணியை நீ பெற்றுக்கொள். நான் அவளைப்பற்றிப் பெருமையாய்ச் சொல்கிறேனென்று நீ சிரிக்கவேண்டாம். அவள் ஸர்வமும் தெரிந்தவள். சீலமுடையவள். ஒப்புயர்வற்றவள்" என்று கூறித் தனக்கு வேறு முக்யமான அலுவல்கள் இருப்பதால் தான் தாமதித்திருப்பதற்கில்லையென்றும், தான் வருமட்டும் அவர்களை அவ்விடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்படிக்கும் சொல்லிவிட்டு ப்ராஸ்பரோ சென்றார். இம்முறை மிராண்டாவுக்குத் தன் தகப்பனாருடைய கட்டளையை மீறி நடப்பதென்ற உத்தேசம் கிஞ்சித்தும் உண்டாகவில்லை. அதி விநயப பக்தியுடன் இருவரும் ப்ராஸ்பரோ இட்ட இந்தக் கஷ்டமான வேலையை உடனே திரிகரணசுத்தியுடன் செய்யத் தொடங்கினார்கள்.

இவர்கள் இப்படி ஒரு மூலையில் இருக்கட்டும். நாம் ப்ராஸ்பரோவைப் பின்பற்றிச் செல்வோம். அவர் அவ்விடத்தைவிட்டு அகன்றதும் ஏரியலை அழைத்தார். ப்ராஸ்பரோவின் ஸஹோதரரையும் நேபில்ஸ் அரசரையும் தான் படுத்திய பாட்டை ஸாங்கோபாங்கமாய்த் தெரிவிக்க ஆவல்கொண்டு ப்ராஸ்பரோ தன்னை அழையாததைப்பற்றி மிராண்டாவை வைதுகொண்டிருந்த ஏரியல் உடனே தொப்பென்று அவர்முன் குதித்தது.

"நான் சென்றபோது இருவரும் தலைமேல் கைவைத்துக்கொண்டு எண்ணமிட்ட வண்ணமாயிருந்தனர். இவர்களைச்சற்று வேடிக்கை செய்யவேண்டுமென்று நினைத்து நான் அந்த நிர்மானுஷ்யமான இடத்தில் நானாவித நூதனக் காட்சிகளையெல்லாம் உண்டுசெய்தேன். பல்வேறு விதமாய்க் கூச்சலிட்டேன், ஆடினேன், பாடினேன். எல்லாவற்றையுங்கண்டு அவர்கள் சித்தப்ரமைகொண்டு பைத்யம் பிடித்தவர்கள்போலிருக்கின்றனர். அவர்கள் வெகுதூரம் நடந்து கால்சோர்ந்து களைத்து, மேல் அடிவைக்கக்கூடாமல் பசியுடன் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் அவர்களுக்குப் பஞ்ச பக்ஷ்ய பரமான்னத்துடன் போஜனங்கொண்டு வைத்தேன். நாக்கில் நீர் ஊற அவர்கள் அவற்றைப் புசிக்கத் தொடங்கும் தருணத்தில் ஒரு பெரிய பக்ஷி ரூபங்கொண்டு நான அப்போஜனத்தை அப்படியே தூக்கிப்போய்விட்டேன். அவர்கள் தர்மம் அதர்மம், பாபம் புண்யம் என்று பாராமல் ஈவு இரக்கம் லவலேசமும் இன்றி ப்ராஸ்பரோவையும் அவருடைய குழந்தையையும் ஸமுத்ரத்தில் மரிக்கும்படிவிட்ட குற்றத்திற்காக உண்டான தண்டனைதான் இப்போது அவர்கள் அனுபவிக்

கும் துன்பங்கள் என்று கூறி அவர்களை ஹிம்ஸித்தேன். நான் கூறியதைக் கேட்டு அவர்கள் தாங்கள் ப்ராஸ்பரோவுக்குச் செய்த கொடுமையைப்பற்றி மனப்பூர்வமாய்ப் பச்சாத்தாபப்பட்டார்கள். அந்தோனியோ, நேபில்ஸ் அரசர் இருவருக்கும் ஸரியான புத்திவந்தது என்று நான் உறுதியாய்ச் சொல்வேன். அவர்களைப் பார்த்தால் பரிதாபமாயிருந்தது."

"அப்படியானால் அவர்களை இவ்விடம் அழைத்துவா. கேவலம் பேய் ஜன்மமாகிய நீயே அவர்களைக்கண்டு இரக்கங்கொள்வதென்றால், அவர்களைப் போலவே மனித ஜன்மமுடையவனாகிய நான் அவர்களை மன்னிக்கமாட்டேனா? போ, அவர்களைச் சீக்ரமாய் அழைத்துவா" என்றார் ப்ராஸ்பரோ.

சற்றுநேரத்துக்கெல்லாம் ஏரியலும், அது ஆகாயத்தில் பாடிக்கொண்டு வந்த பாட்டைக்கேட்டு ஆச்சர்யமடைந்து அதைப் பின்தொடர்ந்துவந்த நேபில்ஸ் அரசன், அந்தோனியோ, கன்ஸாலோ ஆகிய மூவரும் ப்ராஸ்பரோ இருப்பிடம் வந்து சேர்ந்தனர். கன்ஸாலோ இன்னாரென்பது ஞாபகமிருக்கலாம். ப்ராஸ்பரோவை அவருடைய ஸஹோதரர் நடு ஸமுத்திரத்தில் ஒரு பழய படகில் விட்டுவரும்போது அப்படகில் சில புஸ்தகங்களையும், கொஞ்சம் ஆஹாரமும், இரண்டொரு ஆடைகளையும் வைத்து உதவிய நண்பர் ஆவர் அவர்.

பயத்தாலும், வ்யஸனத்தாலும் பீடிக்கப்பட்டிருந்தபடியால் அவர்களுக்கு ப்ராஸ்பரோ அடையாளம் தெரியவில்லை. அவர் முதன்முதலில் கன்ஸாலோவுக்குத் தான் இன்னாரென்பதைத் தெரியப்படுத்தினர்; அவரைத் தன்னையும் தன் செல்வக் குழந்தையையும் மரணத்தினின்றும் ரக்ஷித்த ஆப்த மித்ரரெனப் பலவாறு புகழ்ந்து பேசினர். அந்தோனியோவும், நேபில்ஸ் அரசனும் அவர்தான் தாங்கள் கொன்றுவிட்டதாக எண்ணியிருந்த ப்ராஸ்பரோ என்று அறிந்தார்கள்.

கண்களில் நீர் ததும்பத் தன் செய்கை நினைத்து நினைத்துப் பச்சாத்தாபப்பட்டுத் தன் தமயனை நிமிர்ந்து பார்க்க முகம் இல்லாமல் தலையைக் குனிந்துகொண்டு தன்னை மன்னித்துவிடும்படி வேண்டிக்கொண்டார், அந்தோனியோ. நேபில்ஸ் அரசனும் தான் அந்தோனியோவுக்கு உதவிசெய்ததற்காக மிகவும் வருத்தப்பட்டுத் தன்னையும் க்ஷமித்தருளும்படிக் கேட்டுக்கொண்டார். உடனே ப்ராஸ்பரோ அவர்களை மனப்பூர்வமாய் மன்னித்துவிட்டார். அவர்களும் அவருடைய ராஜ்யத்தைத் திருப்பக் கொடுத்துவிடுவதாக ஒத்துக்கொண்டனர். ப்ராஸ்பரோ நேபில்ஸ் அரசனைப்பார்த்து, "நான் தங்களுக்குப் பதில் வெகுமானம் ஒன்று செய்ய உத்தேசித்திருக்கிறேன்" என்று சொல்லி அறையின் கதவைத்திறந்து உள்ளே அவருடைய பிள்ளை பெர்டினண்டு மிராண்டாவுடன் சதுரங்கம் ஆடிக்கொண்டிருப்பதைக் காண்பித்தார்.

இவ்வாறு எதிர்பாராத வண்ணமாய்த் தகப்பனும் மகனும் ஸந்தித்தபோது அவர்களிருவருக்கும் உண்டான ஸந்தோஷத்துக்கோர் அளவில்லை;

ஏனெனில் அவர்கள் ஒருவர் மற்றொருவர் புயலில் மூழ்கி இறந்துவிட்டனர் என்று எண்ணியிருந்தனர் அல்லவா?

மிராண்டா இவர்களைப் பார்த்தவுடன், "என்ன ஆச்சர்யம்! இங்கேயே உருவங்கள் என்ன, மனிதர்களா? இப்பேர்ப்பட்ட அழகிய மனிதர்கள் வஸிக்கும் உலகம் எவ்வளவு விசித்ரமாயிருக்கும்" என்றாள்.

நேபில்ஸ் அரசனும் தன் மகனைப்போலவே யௌவன பருவத்தினளாகிய மிராண்டாவின் ஸௌந்தர்யத்தையும் தேஜஸ்ஸையும் கண்டு அதிக ஆச்சர்யமடைந்து, "இந்தக் கன்னிகை யார்? முதலில் நம்மைப் புயற்காற்றில் வருந்தச்செய்து ஒருவரை விட்டு ஒருவரைப் பிரித்துக் கடைசியில் நம்மெல்லோரையும் ஒன்றுகூட்டிவைத்த வனதேவதைபோலும்." என்றார்.

இவ்வாறு மிராண்டாவை முதல் தடவைப் பார்த்தவுடன் தன் தகப்பனாரும் தான் எண்ணியதுபோலவே அவளை ஒரு தேவதை என்றெண்ணுவதைப் பார்த்துப் புன்சிரிப்பு சிரித்துப் பெர்டினண்ட், "இல்லை அப்பா, இவளும் நம்மைப்போல மனித ஜாதியைச் சேர்ந்தவள்தான். தங்களுடைய அநுமதியின்றி நான் அவளை மணந்துகொண்டேன். ஏனெனில் தாங்கள் உயிருடனிருப்பது எனக்கு அப்போது தெரியாது. நான் அடிக்கடி கேள்விப்பட்டிருந்தும் இப்போதுதான் முதன்முதல் நேரில்கண்ட மிலான் நாட்டு ப்ரக்யாதிபெற்ற அரசராகிய ப்ராஸ்பரோவின் புதல்வியாவள் இவள். இவளுடைய பெயர் மிராண்டா. இவளுடைய தந்தை ப்ராஸ்பரோ இப்போது எனக்கும் ஒரு விதத்தில் தந்தையாகிறார்." என்றார்.

"அப்படியானால் அவளுக்கு நானும் பிதாவின் ஸ்தானத்தில் இருக்கிறேன். நான் இனி என் குழந்தையை மன்னிப்பு கேட்கவேண்டும் போலும்! தகப்பன் பெண்ணினிடமிருந்து மன்னிப்பு கேட்பதென்பது எவ்வளவு விந்தையான காரியம்?"

"போதும், சென்றதைப் பற்றித் திரும்பத்திரும்ப யோசிப்பானேன், இப்போதுதான் எல்லாம் மங்களகரமாய் முடிந்துவிட்டதே. இனி நாம் ஏன் பழய கதையைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கவேண்டும்? மொத்தத்தில் நான் என் நாட்டைவிட்டு வந்தது நல்லதென்றே சொல்லவேண்டும். ஏனெனில் அப்போது நான் என் நாட்டைவிட்டு வந்திராவிட்டால் நீங்கள் இங்கே எப்படி வரப்போகிறீர்கள், பெர்டினண்ட் இந்தத் தீவில் என்னுடைய குமாரியைக்கண்டு அவள்மீது காதல் கொள்வதெப்படி, கடைசியில் என் குழந்தை நேபில்ஸ் அரசியாவதுமெப்படி? இவையெல்லாம் ஸர்வஜ்ஞரான அந்தப் பகவானுடைய திருவுள்ளம்போலும்" எனக்கூறி ப்ராஸ்பரோ தன்னுடைய ஸஹோதரரை ஆலிங்கனம் செய்துகொண்டார்.

இம்மொழிகளைக்கேட்டு அந்தோனியோ அதிக அவமானமும், மனவருத்தமும் அடைந்தவராய்ப் பின்னும் அதிகமாய்க் கண்ணீர் விடலானார். அவ

ரால் பேசமுடியவில்லை. வ்ருத்தாப்யரான கன்ஸாலோவும் இந்த சுபமான முடிவைக்கண்டு ஆநந்த பாஷ்பஞ்சொரிந்து தம்பதிகளிருவரையும் ஆசீர்வதித்தனர்.

"நீங்கள் ஏறிவந்த கப்பலும் அதன் மாலுமிகள் யாவரும் துறையில் ஸுகமாயிருக்கிறார்கள். நாளையதினம் காலை நாங்களும் வருகிறோம்; எல்லோருமாக ஊர்போய்ச் சேரலாம். தாங்கள் இன்னும் ஸாப்பிடவில்லையெனத் தோன்றுகிறது. ஆகையால் நான் சேகரித்து வைத்திருக்கும் ஸ்வல்ப போஜனத்தை ஸாப்பிடுங்கள். நான் இந்தத் தீவிற்குவந்தது முதல்கொண்டு இது வரைக்கும் என் சரித்ரத்தை ஸாயங்காலம் உங்களுக்கு ஸாங்கோபாங்கமாய் எடுத்து உரைக்கிறேன்." என்று கூறி ப்ராஸ்பரோ காலிபனைக் கூப்பிட்டுக் குகையைச் சுத்திசெய்து ஆஹாரம் படைக்கும்படி உத்தரவிட்டார். அந்தோனியோ முதலியவர்கள் காலிபனுடைய கோரவடிவைக்கண்டு வயிறு புடைக்கச் சிரித்தனர்.

தன்னுடைய எஜமானன் இட்ட வேலைகளைப் பயபக்தியுடன் செய்து வந்தாலும், எப்போதும் ஸ்வயேச்சையாய் பக்ஷிகளைப்போல் காடு, மேடு, மரம், செடி, கொடி முதலியவைகளின்மீது உல்லாஸமாய்த் திரிவதிலேயே மனம் வைத்திருந்த ஏரியல் என்னும் விசித்ரப்பேயைப் பார்த்து ப்ராஸ்பரோ, "என் அன்பான ஏரியல், நீ இல்லாமலிருப்பது எனக்கு ஒரு பெரிய குறைவாயிருக்கும். ஆயினும் இனி நீ உன் இஷ்டப்படி ஸ்வயேச்சையாய் மனம்போனவிடமெல்லாம் திரியலாம்." எனக்கூறி அதை விடுதலை செய்தார்.

"தங்களையும் தங்களுடைய புத்ரியையும் ஸுகமாய் ஊர்கொண்டு சேர்த்துவிட்டு அப்புறம் தங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன்." என்றது ஏரியல்.

தன் மாந்த்ரிக சக்தியை இனி உபயோகப்படுத்துவதில்லை யென்று ப்ராஸ்பரோ மாந்தரிக தண்டத்தையும், மாந்தரிக புஸ்தகங்களையும் பூமியில் ஆழப்புதைத்துவிட்டார். இவ்வாறு தன் சத்ருக்களை ஜயித்து அவர்களுடன் ஸமாதானம் செய்துகொண்டுவிட்டபடியால், தன் ஸ்வதேசம் சென்று தன நாட்டைப்பெற்று, நேபில்ஸ் சென்றுத் தன் மகளின் திருமணத்தை முடிப்பது தவிர இனி வேறொரு அலுவலும் ப்ராஸ்பரோவுக்குக் கிடையாது.

ஏரியலின் உதவியால் அவர்கள் யாவரும் க்ஷேமமாய் நேபில்ஸ் வந்து சேர்ந்தனர்.

முற்றிற்று.

ஸ்ரீ

சற்குரு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - OCT 1915
MADRAS.

உபாத்தியாயர்கட் கேனவே உலவிவரும்
மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"—தமிழ்மறை

தொகுதி—உ	1915ளு அக்டோபர்மீ	பகுதி—௫

NOTES OF THE MONTH

மாதாந்தரக் குறிப்புகள்

Regarding Syllabuses
பாட அட்டவணை விஷயம்

அநேக வருஷகாலமாய் பரீக்ஷாதிகாரியாயிருந்து பல ஜில்லாக்களிலுள்ள பாடசாலைகளைத் தணிக்கைசெய்த விவேகமிகுந்த ஒரு கனவானுடன் யாம் சில நாட்களுக்கு முன்னர் பேசிக்கொண்டிருந்தபொழுது, அவர் எலிமெண்டரி பாடசாலைகளில் இருக்கும் பாட அட்டவணைகள் பெரும்பாலும் பொய் அட்டவணைகளென்று சொன்னார். அட்டவணை எவ்வாறு பொய்க்குமென்று யாம் கேட்டோம்; அதற்கு அவர், உபாத்திகள் அவைகளை உபயோகப்படுத்துவதேயில்லை யென்றார். அதுவுமல்லாமல், ஒரு தாலூகாவிலிருக்கும் பாடசாலைகளை யெல்லாம் கவனிப்பின் ஒரே விதமான அட்டவணை வழங்கிவருகிறதாகத் தெரியவரும் என்றுங் கூறினார். நண்பர்கள் தமது பாட அட்டவணை விஷயமாகக் கருதுவனவற்றை எழுதித் தெரிவிப்பார்களாக.

பாட அட்டவணை இருந்தும் அதை ஒருகாலத்தும் எடுத்துப்பாராமல் பாடங்களை நடத்திவரும் உபாத்தியாயர்கள் சிலர் இருக்கிறார்களாம். அவர்கள் அப்படி அவ்வட்டவணையைப் பாராமலிருப்பதற்குக் காரணம் இன்னது என்பதனை அவர்களே நமக்குத் தெரிவிப்பார்களாயின், மனமுவந்து வந்தனம் அளிப்பாம்.

ஒவ்வொரு ஊருக்கு ஒவ்வொருவிதமான அட்டவணை அவசியந்தானோ வென்று சற்று ஆழ்ந்து யோசித்தால், அப்படிப்பட்ட அட்டவணை அவசியந் தானென்று தெரியவருவதனோடு ஒவ்வொரு ஊருக்குமாத்திரமல்ல, ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் அத்தகைய அட்டவணை தேவை என்பதும் தெரியவரும். இது விஷயமாக யாம் முன்னர் எழுதியிருக்கின்றோம்.

*　　*　　*　　*　　*　　*

The Inspection Book
தணிக்கைப் புத்தகம்

தணிக்கை ஆபீசர்கள் எழுதிவைக்கும் ரிமார்க்குகளைச் சில உபாத்தியாயர்கள் படிப்பதே கிடையாதென்றும், ஒவ்வொரு ரிமார்க்கையும் அவர்கள் ஆய்ந்து படிக்கவேண்டுமானால் அடியிற் குறித்தவாறு செய்தால் நலமென்றும் 'பிராரம்ப வித்யா' என்னும் தெலுங்கு பத்திரிகை (ஜூலை மாதத்திய சஞ்சிகையின் 173-ம் பக்கம்) நயம்படக் கூறுகின்றது:—தமது பாடசாலை தணிக்கையாகுந் தேதியை அறிந்ததும் உபாத்தியாயர் உடனே சென்ற வருஷத்திய தணிக்கையைப் பற்றி ஒரு ரிபோர்ட்டெழுதித் தணிக்கை ஆபீசருக்கு அனுப்பவேண்டும். ரிபோர்ட்டானது அடியிற்குறித்த தலைப்புக்களை யுடையதாயிருத்தல் வேண்டும்:—

(1) சென்ற வருஷத்திய ரிமார்க்குகள்;

(2) அவைகளை அனுசரித்துத் தாம் செய்த வேலையின் விவரம்;

(3) ஆபீசர் சொன்ன பிரகாரம் முற்றும் செய்ய முடியாமற்போயிருந்தால், அப்படி வேலை நடந்தேறுவதற்கு உள்ள இடையூறு இன்னதென்று தெரிவித்தல்.

இவ்வாறு செய்வதனால் உபாத்தியாயர் செய்த வேலை இன்னதென்று அனைவருக்குந் தெரியவரும்: உழைப்பாளியாயிருக்கும் பக்ஷத்தில் தாம் பட்ட கஷ்டம் வீண்போகாது, சிரத்தை யற்றவராயிருக்கும் பக்ஷத்தில் சிரத்தை யற்றிருப்பதின் பயன் விளையும். இவையல்லாமல், வருஷாந்தர பரீக்ஷையின் போக்கும் வேறுவிதமாகும்; அறிவு பரவும், ஊக்கந் தலையெடுக்கும்.

*　　*　　*　　*　　*　　*

Municipal Schools
முனிஸிபால்டியார் பாடசாலைகள்

பம்பாய் இராஜதானி முனிஸிபாலடிகள் 100-க்கு 15-வீதம் தாம் பெறும் வசூல் பணத்தில் கல்விக்காகச் செலவழிக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை உண்டு. பம்பாய் கார்ப்போரேஷன் தவிர மற்றெல்லா முனிஸிபாலடிகளிலும் ஏறக்குறைய இவ்வளவு செலவு வருஷா வருஷம் ஆகி வருவதாகத் தெரியவருகிறது. நமது சென்னை இராஜதானியில் மாத்திரம் இவ்வளவு செலவு பிடிக்காது. அப்படியிருந்தும் முனிஸிபாலிடியார் பாடசாலைகளிற் படிக்கும் மாணவர்களின் சங்கியை நமது இராஜதானியில்தான் அதிகமாயிருக்கிறது.

*　　*　　*　　*　　*　　*

Religious Verse
தேவாரங்கள்

எலிமெண்டரி பாடசாலைகளிற்கூட தமிழை நன்றாய்க் கற்றறிந்த சில உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள். அன்னார் தேவாரம் திருவாசகம் முதலிய நூல்களினின்று இனிமையான பாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தமது மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்து வருகின்றார்கள். இத்தகைய நூல்களிலுள்ள பாடல்களே நமது பாடசாலையின் மேல் வகுப்புப் பிள்ளைகள் பாராயணஞ்செய்யத்தக்கவை யென்னும் எமது அபிப்பிராயத்தை முன்னர்த் தெரிவித்திருக்கின்றோம். அதற்கேற்ப ஒரு புத்தகத்தையும் வெளியிடலாமென்று உத்தேசிக்கின்றோம். நண்பர்கள் தத்தம் பாடசாலைகளில் தாம் தாம் கற்பித்து வரும் பாடல்களை நமக்கு அன்புகூர்ந்து அனுப்புவார்களாயின், அவைகளை வகுப்பு வாரியாய்த் திரட்டிக் குறிப்புரைகளுடனும் போதனாவிஷயத்துடனும் அச்சிட்டு வெளியிடுவதற்கு அனுகூலமாயிருக்குமென்று நம்புகின்றோம்.

*　　*　　*　　*　　*　　*

Special Examination for Teachers
உபாத்திமார்களுக்கு ஒரு ஸ்பெஷல் பரீட்சை

மெட்ரிக்குலேஷன் பரீக்ஷையில் தேறாமலிருக்கும் உபாத்திமார்கள் செக்கண்டரி கிரேட் போதனாமுறை பரீக்ஷைக்குப்போகப் பிரியப்பட்டால், அவர்களுக்கு ஸ்பெஷலாக ஒரு பரீக்ஷை ஏற்படுத்தவேண்டுமென்று வித்யாடைரெக்டர் செய்த சிபார்சை சென்னை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.

*　　*　　*　　*　　*　　*

Govt: Grant for Technical Education
தொழிற்படிப்புக்கு கவர்ன்மெண்டு கிராண்டு

தொழிற் படிப்புக்காக 21,000 ரூபாயை இந்தியா கவர்ன்மெண்டார் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். அதில் 5,491 ரூபாயை இதனடியிற்கண்ட தொழிற் பாடசாலைகளுக்குப் பகிர்ந்துகொடுக்கும்படியாகத் தொழில் டைரெக்டர் செய்த சிபார்சை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

		ரூபாய்
1.	கரூர் வெஸ்லியன் மிஷன் தொழிற்சாலைக்கு	3000
2.	சென்னை செங்கல்வராய நாயகர் ஸ்கூலுக்கு	550
3.	புத்தூர் ஆல் ஸெயிண்ட்ஸ் ஆண்பிள்ளைகளின் ஸ்கூலுக்கு	600
4.	வேளச்சேரி A. A. M. தொழிற்சாலைக்கு	790
5.	மேல்ரோஸாபுரம் U. F. C. M. விவசாயஸ்கூலுக்கு	150
6.	செங்கல்பட்டு U. F. C. M. ஜரிகைத்தொழில் ஸ்கூலுக்கு	132
7.	கரூர் வெஸ்லியன் மிஷன் ஜரிகைத் தொழிற்சாலைக்கு	25
8.	பல்லாரி ஸெயிண்ட் ஜோசெப்ஸ் தொழிற்சாலைக்கு	244
	மொத்த ரூபாய்.	5491

* * * * * *

Fifty Thousand Rupees for the Increase of Education

பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த அம்ரிட் ஸார் நகரைச் சேர்ந்த அஜானந்த துகால் என்பவர் ஸனாதனதர்ம ஹிந்துப் பிள்ளைகளின் கல்வி அபிவிர்த்திக்காக 50 ஆயிரம் ரூபாய்க்கு உயில் எழுதி வைத்திருக்கிறார். அத் கல்வியபிவிருத்திக்கு தொகையிலிருந்து வருஷாவருஷம் பலமாணவர்களுக்கு 50. ஆயிரம் ரூபாய். உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுமாம்.

* * * * * *

Panchama's Education in Calicut
கள்ளிக்கோட்டையில் பஞ்சமர்களின் படிப்பு

கள்ளிக்கோட்டையில் முனிஸிபாலிடியார் பஞ்சமர்களுக்கென்று ஒரு ஸ்கூலை ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். அந்த ஸ்கூலுக்கு 2300 ரூபாய் செலவுசெய்து ஒரு புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. அப் புதிய கட்டடத்தை 21-ந் தேதியன்று மலையாளம் அடிஷனல் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டான மிஸ்டர் ஜே. எப். ஹால் திறந்துவைத்தார். அவ்வூர் முனிசிபல் செக்ரெடெரியான மிஸ்டர் ஸக்கேரியா எழுந்து நின்று, "அந்த ஸ்கூல் 1894-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பொழுது அதில் 7-பிள்ளைகள் வாசித்துக்கொண்டிருந்தார்கள். ஒரே ஒரு உபாத்தியாயர் இருந்தார். அந்த ஸ்கூலுக்குச் சொந்தக்கட்டட மில்லை. அது ஒரு வாடகைக் கட்டடத்தில் வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. இப்புதிய கட்டடம் கட்டுவதற்குச் செலவான 2300 ரூபா சென்னை கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட நன்கொடையாகும்" என்று பேசினார்.

அச்சமயத்திற்கென்று இயற்றப்பட்ட சில சுலோகங்கள் சில பஞ்சமச் சிறுவர்களால் சொல்லப்பட்டன.

அவ்வூர் கவர்ன்மெண்ட் போதனமுறைப் பாடசாலையின் ஹெட்மாஸ்டர் அடியில் வருமாறு பேசினார் :—"பஞ்சமச் சிறுவர்களுக்குச் சுத்தமான உடைகளைக்கொடுத்துப் படிப்பைச் சொல்லிவைத்தால் அவர்கள் மற்ற வகுப்பார்களைப்போல அபிவிருத்தி யடைவதுமல்லாமல் அச்சமூகத்திற்கே நிரம்பப் பிரயோஜனகரமான மெம்பர்களாகவும் ஆவார்கள். பஞ்சமர்களை ஸ்கூலுக்குப் போய்க் கல்வி கற்கும்படி செய்வதற்கு அவர்களுக்கு ஒருவித ஆவலை உண்டாக்க வேண்டும். அச் சிறுவர்களுக்கு ஒரு பெரிய நிலத்தை வாங்கிக் கொடுத்து அதை உழுது பயிர்செய்யும்படி செய்யவேண்டும்".

"நிலத்தை உழுது பயிர்செய்துவிட்டு ஸ்நானஞ்செய்து சாப்பிட்டபிறகு ஸ்கூலுக்குவந்து படிப்பைப் படிப்பதென்றால் அவர்களால் சாத்தியப்படாது. ஆகையால் அவர்களுக்கு நிலத்தை வாங்கிக்கொடுத்து அதைப் பயிர்செய்யும்படி கேட்பது சரியான முறையல்ல"வென்று மிஸ்டர் ஹால் சொன்னார்.

கடைசியில் சில பஞ்சமப்பிள்ளைகள் குசேலோபாக்கியான சரித்திரத்தை நாடகமாக நடத்திக் காண்பித்தார்கள்.

N. B. இவை சுதேசமித்திரனிலிருந்து எழுதப்பட்டவையாகும்.

* * * * * *

An Elementary Panchama School
ஒரு எலிமெண்டரி பஞ்சம ஸ்கூல்

கரூர்தாலுகா வாங்கலிலிருந்த எலிமெண்டரி பஞ்சமமிஷன் பாடசாலை இரண்டொரு மாதமாக மூடப்பட்டிருந்ததாகக் கேள்வியுற்று விசனமுறுகின்றோம். கல்வியை விருத்திசெய்துகொண்டுவரும் இக்காலத்தில், மேலும் பஞ்சமர்கள் படிப்பு அதிகரிக்க முயற்சிசெய்துவரும் இக்காலத்தில் இப்பாடசாலை மூடப்பட்டிருந்தது தகுதியன்று. இதில் குறைந்தது 10-பிள்ளைகளாவது வாசிக்கமாட்டார்களா? இதற்காக ஒரு உபாத்தியாயரை நியமித்துப் பஞ்சமர்களுக்குக் கல்வியை விருத்தி செய்யப்படாதா? இப்பாடசாலையைப்பற்றி, இதை நடத்திவந்த மிஷன் மானேஜரவர்களாவது போர்டாரவர்களாவது கவனித்துச் சரிவர நடத்த முன்வருவாரென்று ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

ROUGH CHECKS IN ARITHMETIC

உத்தேசக் கணக்குகள்

(59 - ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னத்திலே அறிவு பொதிந்து கிடக்கிறதென்று போன இரண்டு சஞ்சிகைகளில் ஒருவாறு காட்டி யிருக்கிறோம்.

பின்னமானது ஒரு மதிப்பே. ஒருவன் ரூ. 1570 தானஞ் செய்தானென்று சொல்லாமல், அவன் தன் ஆஸ்தியில் $\frac{1}{12}$ ஆம் பங்கு தானஞ்செய்தானென்று சொல்வது தான் உசிதம். நாளொன்றுக்கு 6 அணு வாங்குகிற கூலியாள் தன் வருமானத்தில் ஒரே ஒரு அணு தானஞ் செய்தால், ஷை பணக்காரனைவிட அதிகமாய்த் தானஞ்' செய்திருக்கிறானென்று பின்ன சகாயத்தால் தெரிந்து கொள்கிறோம்.

திரும்பி இந்த மாதமுஞ் சில கணக்குகளைப் போட்டு, பின்ன சகாயத்தை இன்னுஞ் சற்று விரிவாய் உதாகரிப்போம்.

(1) "15 மாணவர்கள் 7 நாள் பள்ளிக்கூடம் வந்தால், 210 ஷீட்காகிதம் செலவாகிறது. 11 மாணவர்களுக்கு 4 நாட்களுக்குச் செலவாகும் காகிதம் எவ்வளவு?"

காகிதம் செலவாவதற்கு இரண்டு காரணங்களுண்டு — (i) மாணவர்கள் (ii) நாட்கள். இவ்விரண்டில் ஒன்று அதிகரித்தாலும் அல்லது இரண்டும் அதிகரித்தாலும் காகிதம் அதிகமாய்ச் செலவாகும்; குறைந்தால் காகிதத்தின் செலவு குறையும். மேற்குறித்த கணக்கில் இரண்டும் குறைந்தன — (i) மாணவர்கள் ஏறக்குறைய $\frac{3}{4}$ வாசியும் (ii) நாட்கள் ஏறக்குறைய $\frac{1}{2}$ வாசியும் குறைந்தன.

மாணவர்கள் மாத்திரம் குறைந்திருந்தால் $\frac{3}{4} \times 210$ அல்லது * ஏ. 158 ஷீட் காகிதங்கள் தேவையாயிருக்கும்.

நாட்களுங் குறையவே, தேவையாயிருக்குங் காகிதம் இன்னுங் குறைவாயிருக்கவேண்டும். $\frac{1}{2}$ வாசி குறைவாயிருக்கும்; அதாவது, தேவையாயிருக்குங் காகிதம் ஏ. $\frac{1}{2} \times 158$ அல்லது 79 ஷீட் ஆகும்.

* 'ஏ' என்பது 'ஏறக்குறைய' என்பதின் சுருக்கம்.

சரியான விடை. $\frac{11}{15} \times \frac{4}{7} \times 210$ ஷீட் = 88 ஷீட்.

இதே கணக்கில், 11 மாணவர்களுக்கு 20 நாட்களுக்கு வேண்டிய காகிதம் எவ்வளவென்று கண்டுபிடிக்க அவசியம் ஏற்படும் பட்சத்தில், 158 ஐ 3 ஆல் பெருக்கி, ஏ. 474 ஷீட் என்ற விடையை உத்தேசமாய்ப் பெறலாம். சரியான விடை $\frac{11}{15} \times \frac{20}{7} \times 210$ ஷீட் = 440 ஷீட்.

(2) "6 ஆள் 4 நாள் வேலை செய்து 10 கஜம் நீளமும் 7 அடி உயரமுமுள்ள சுவர் ஒன்றைக் கட்டுகிறார்கள். 21 ஆட்கள் 18 நாள் வேலை செய்தால் 5 அடி உயரமான சுவரை எத்தனை கஜத்துக்குக் கட்டலாம்?"

உத்தேசமாய். * $4 \times 5 \times \frac{2}{3} \times 10$ கஜம் = ஏ. 133 கஜம்

சரியான விடை. $\frac{21}{6} \times \frac{18}{4} \times \frac{5}{7} \times 10$ கஜம் = $112\frac{1}{2}$ கஜம்.

(3) "6 அடி 8 அங்குல நீளம், 5 அடி அகலம், 2 அடி 6 அங்குல கனமுள்ள கருங்கல்லின் நிறை 5 டன். 12 அடி 6 அங்குல நீளம், 5 அடி 4 அங் அகலம், 8 அடி 3 அங் கனமுள்ள கல்லின் நிறை என்ன?"

உ. $2 \times 1 \times 3 \times 5$ டன் = ஏ. 30 டன்.

ச. வி. $\frac{12\frac{1}{2}}{6\frac{2}{3}} \times \frac{5\frac{1}{3}}{5} \times \frac{8\frac{1}{4}}{2\frac{1}{2}} \times 5$ டன் = 33 டன்.

(4) "இரும்பின் விலை டன் ஒன்றுக்கு பவு. 10—5—6. ஆயிருக்க $30\frac{1}{2}$ மைல் நீளமுள்ள தண்டவாளத்தின் விலை பவு. 15,580 ஆகிறது. இரும்பின் விலை டன் ஒன்றுக்கு பவு. 12—4—2 ஆயிருக்கும் பொழுது $157\frac{2}{3}$ மைல் நீளமுள்ள தண்டவாளத்தின் விலை என்ன?"

உ. $5 \times 1\frac{1}{5} \times$ பவு. 16,000 = ஏ. பவு. 96,000

ச. வி. $\frac{157\frac{2}{3}}{30\frac{1}{2}} \times \frac{12\frac{5}{24}}{10\frac{11}{40}} \times$ பவு. 15580 = பவு. 98,959-8-5.

(இன்னும் வரும்.)

* 'உத்தேசமாய்' என்பதை உ. என்று சுருக்கி யெழுதலாம்.

INFORMATION FOR OBJECT LESSONS

பொருட் பாடங்களை நடத்துவதற்கான விஷயம்

VEGETABLE OILS

மர எண்ணெய்கள்.

I. பெரும்பாலும் செடிகளில் ஒருவித எண்ணெய் வெளியாகிறது. ஆனால், எல்லா விடங்களிலும் ஒரே விதமாய் உண்டாவதில்லை. பொதுவாய்க் காய்களிலும், விதைகளிலும் உண்டாகும். சிறுவயதில் முளைக்கு வேண்டிய (Germs) ஆகாரம் எண்ணெய் ரூபமாக விதை யிலைகளிலிருக்கும். விதைகளில் எண்ணெய் உண்டென்பதை அறிய ஏதாவது ஒரு விதைக்குள் இருக்கும் பருப்பை எடுத்து அனலினருகே பிடித்தமாத்திரத்தில் தீப்பற்றி அது நன்றாய் எரியும். இதற்குக்காரணம் ஷை பருப்பில் எண்ணெய் சத்திருப்பதனாலேதான் ; (உ—ம்) வாதுமைப்பருப்பில் நூற்றுக்கு 46 பங்கு எண்ணெயின் சத்து இருக்கிறதாகத் தெரிகிறது.

II. விதைகளிலிருந்து எண்ணெய் எடுக்க மூன்று வழிகள்.

(a) அமுக்கி அல்லது நசுக்கி (Pressirg) எடுக்கிறார்கள். இதைக் காய்ச்சுவதில்லை. இதற்குப் பச்சை எண்ணெய் என்று பெயர் (Cold drawn oil.)

(b) காய்ச்சுவது அமுக்கி அல்லது நசுக்கி எடுப்பது (by heating and pressing.)

(c) காய்ச்சி வடிகட்டி எடுக்கிறார்கள் (Distillation).

III. TWO KINDS OF OIL

இரண்டு வகையுள்ள எண்ணெய்

1. எண்ணெய்களில் முக்கியமாய் இரண்டுவகையுண்டு. அவ்வகைகளாவன :—

(a) ஸ்திரமாயிருக்கும் எண்ணெய் (Fixed Oil.)

(b) பறந்துபோகும் எண்ணெய் (Volatile Oil.)

(a) பருத்தி, ஆமணக்கு, கசகசா, என்னும் இவைகளிலிருந்து எடுக்கும் எண்ணெயும், தேங்காய் எண்ணெயும் ஸ்திரமாய் இருக்கும் எண்ணெய்.

(b) எலுமிச்சை, பப்ரமெண்ட், லவண்டர் (Lavender,) பெட்ரோலியம் (Petroleum,) இவைகள் பறந்து போகும் எண்ணெய்கள்.

ஒவ்வொருவித எண்ணெயும் அதனதன் குணத்திற்கேற்ப ஒவ்வொரு தொழிலுக்கு உதவும்.

IV LIN SEED

ஆளி விதை

இது ஒருவித சணல் விதை. இதில் 4-ல் ஒருபங்கு எண்ணெய் கிடைக்கும். இதிலிருந்து எண்ணெயைப் பிழிந்து எடுக்கக் கூடும். இதன் பிண்ணாக்கை ஆடு மாடுகள் தின்னும். இதன் மாவு காயங்களுக்கும் கட்டிகளுக்கும் மாக்கட்டுகட்ட உதவும் (Poultice). இதன் எண்ணெய் சீக்கிரத்தில் உலர்ந்து போவதால் வர்ணத்தோடு கலக்க உதவுகிறது. ஆதலால் இதற்கு உலரும் எண்ணெய் (Drying Oil) என்று பெயர். இதைப்போல் சணல்விதை எண்ணெயும் கசகசா எண்ணெயும் உபயோகப்படுகின்றன.

எண்ணெய்களெல்லாம் எரியக் கூடியவை. இவைகளில் நல்லெண்ணெய் நன்றாய் எரியக்கூடியது. வெகு சுலபத்தில் எள்ளிலிருந்து எடுக்கக்கூடிய தாகையாலும் வெகு நயமான தாகையாலும் விளக்கு எரித்தால் அதிகமாகக் காந்தி தருவதில்லை. பெரிய துறைமுகப் பட்டணங்களில் விளக்குக் கூடுகளில் (Light house) சிறந்த நல்லெண்ணெயை ஷை விளக்கு எரிவதற்கு உபயோகிக்கிறார்கள். இதன் வெளிச்சம் பிரகாசமாயும் சுத்தமாயுமிருக்கிறது ; ஆளிவிதை எண்ணெயைப்போல் வர்ணத்திற்கு உதவாது. ஆளிவிதை எண்ணெயை விளக்குக்கு உபயோகப்படுத்தக் கூடாது. அது விளக்கெரிக்கத் தகுந்த தல்ல.

CASTOR OIL

ஆமணக்கு எண்ணெய்

இதிலிருவிதமுண்டு. அதாவது :—சிற்றாமணக்கு (Castor Minor,) பேராமணக்கு (Castor Major,) இது இந்தியாவிலும், தென் அமெரிக்காவிலும், தென் ஐரோப்பாவிலும் விளைகிறது. அவ்விடங்களில் 20 அடி உயரம் வளருவதாகச் சொல்லுகிறார்கள். அது ஒரு பருப்பளவு இருக்கும். ஒருவித கெட்ட வாசனையும் கெட்ட ருசியுமுடையது. முக்கியமாய் இந்த எண்ணெயை மருந்துக்கு உபயோகப் படுத்துகிறார்கள். நமது இந்தியாவில் ஏராளமாயும் சுலபமாயும் கிடைப்பதால் நாம் விளக்கும் எரிக்க உபயோகப்படுத்துகிறோம்.

(இன்னும் வரும்.)

கே. ஆர். இராமசாமி அய்யர், ஹெட்மாஸ்டர்
போர்ட் எலிமென்டரி ஸ்கூல், ராமபட்டணம்
பொள்ளாச்சிதாலூக்கா, கோயமுத்தூர்ஜில்லா.

NOTES FOR LESSONS ON NARUNTHOGAI

நறுந்தொகை கற்பிப்பதற்கான சில குறிப்புகள்

கடவுள் வாழ்த்து.—எடுத்துக்கொண்ட காரியம் இடையூறின்றி இனிது முடியும் பொருட்டு வழிபடுகடவுளையாவது (ii) ஏற்புடைக் கடவுளையாவது வாழ்த்துதல். வழிபடு கடவுள் வாழ்த்தாவது தாம் குலதெய்வமாகக்கொண்டு வழிபடுகிற கடவுளை வாழ்த்துதல்; இதற்கு உதாரணம் - வைஷ்ணவ சமயத்தார் விஷ்ணுவையும், சைவசமயத்தார் சிவனையும் வாழ்த்துதல்: ஏற்புடைக்கடவுள் வாழ்த்தாவது - தாம் செய்ய எடுத்துக்கொண்ட காரியத்துக்குப்பொருத்தமுடைய கடவுளை வாழ்த்துதல்; இதற்கு உதாரணம் - இராமாயணங்கூறுபவர் இராமனையும், திருக்குறள் செய்யவந்த திருவள்ளுவதேவர் அந்நூலுள் கூறப்போகும் மூன்று பொருளுக்கும் மூன்று மூர்த்திகளை வாழ்த்தவேண்டியது முறையெனக்கொண்டு பொதுப்பட அம்மூவரையும் வாழ்த்தியது; ஏற்பு - பொருத்தம்.

நூல்களில் தெய்வவணக்கச் செய்யுளுக்குக் 'காப்புச்செய்யு' ளென்றுங் கூறுவதுண்டு. இங்குக் 'காப்பு' என்றபதத்துக்கு 'இரட்சிப்பு' என்று பொருள்படும். துதிக்கப்படுங் கடவுளைக் 'காப்புக்கடவுள்' என்றும், அவர்க்கு வாழ்த்துப்பாடுதலுக்குக் 'காப்புச் சொல்லல்' என்றுஞ்சொல்வதுண்டு. 'காப்பு மாலை' என்பது மூன்று, ஐந்து, ஏழு செய்யுளாற் பாடுவது.

அதிவீரராம பாண்டியர் தாம் வழிபடு கடவுளாகிய விநாயகரைத் துதிக்கின்றார்.

காப்பு

பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே.

விநாயகருடைய திருவடிகளாகிய தாமரை மலர்களைத் தலையிற்சூடுவோம். அவரே பிரணவமந்திரத்தின் அருத்தமா யெழுந்தருளி யிருக்கிறார்.

பதப்பொருள். — பிரணவப்பொருளாம் - பிரணவரூபமாய் விளங்கும், பெருந்தகை - பெருந்தன்மையை யுடைய, ஐங்கரன் - ஐந்துகரங்களையுடைய விநாயகரது, சரண அற்புதமலர் - பாதங்க

ளாகிய ஆச்சரிய கரமான தாமரை மலர்களை, அணிவோம் - (அலங்காரமாகச் சிரசில்) தரிப்போம். சரணம் - பாதம், புகலிடம், வீடு முதலிய பல பொருள்படும்.

பிரணவம் அல்லது ஓங்காரம் (ஓம்).— மந்திரங்களுள்ளே பிரணவமே சிறந்தது. உண்மை யுணர்ந்த ஞானிகளுக்கே அதன் பரப்பெல்லாம் புலனாகும். பிரணவம் என்பதன் பொருள் அழியாதது. என்றும் அழியாமல் சிருஷ்டிக்குக் காரணமா யிருக்கும் பரம்பொருளின் தன்மையை விளக்கும் இம்மந்திரம். பிரணவம் சங்கு வடிவினதென்று கூறும் ஆரிய சாஸ்திரங்கள். அது பதினாறு உறுப்புக்களாலாயது. அவைகளில் அ, உ, ம் என்னும் மூன்று உறுப்புக்கள் முறையே பிரமனையும், விஷ்ணுவையும், உருத்திரனையும் உணர்த்தும். அவை ஒவ் வொன்றும் சிவத்தையே உணர்த்தும் என்பார் சைவசமயிகள். ஒரு வீட்டில் மூன்று அறைகளிருப்பின் அவை ஒவ் வொன்றிலும் வசிப்போர் எனது எனது எனச் சொல்லிக் கொள்ளினும், அவ்வீட்டிற் குரியான் பிரத்தியேகமாக ஒருவன் இருக்குமாறு, மூன்றெழுத்துக்கும் அதிஷ்டான (காரணமாகிய) கர்த்தாக்கள் மும்மூர்த்திகள்; அம்மூர்த்திகளை நடாத்துகின்ற நான்காவது பரம்பொருளாகிய சிவபிரானுக்கே அது சொந்தமாம். வைணவர் கொள்கையாவது - அகரம் விஷ்ணுவையும், உகரம் திருமகளையும், மகரம் சீவனையும் குறிக்குமென்பது.

(இன்னும் வரும்.)

NOTES ON DRAWING

சித்திரம் வரைதலைப் பற்றிய சில குறிப்புகள்

இப்பொழுது நமது பாடசாலைகளில் கிண்டர் கார்ட்டன் கைத்தொழில்களென்று சில பாடங்கள் நடந்தேறுகின்றன அல்லவா? இவை 'புது மாதிரிப் படிப்பைச்' சேர்ந்தவை யென்று நாம் சொல்லிக் கொள்கிறோம். பொது ஜனங்களுக்கு இத்தொ

ழில்கள் பிடிக்கா வென்றும், பையல்களைக் கிண்டர் கார்ட்டன் முறையின்படி விளையாட விடுவது பெற்றோர்களுக்குப் பிரியமில்லை யென்றும் நமக்குத்தெரியும். அதனோடு சித்திரிக்கப் பழக்கும் கைப்பழக்கம் வீண் சிரமமாக முடியுமோ என்னும் சந்தேகம் நம்மை அடிக்கடி கஷ்டப் படுத்துகின்றது. படிக்க வந்த பையனுக்குப் புளியம் விதைகளைத்தரையிற் பரப்பிக் கொடுத்து அவனை விளையாட விடலாமோ?

என்றாலும், கைப்பழக்கத்தின் சிறப்பினைக்கேளாத உபாத்தியாயர் எவரும் இல்லை. உற்றுப்பார்க்குந் திறமையை விருத்தி செய்வதற்காகக் கைத்தொழில்கள் பாட அட்டவணையில் சேர்க்கப்பட்டிருக்கின்ற தென்று அறிகிறோம். ஆனால் அத்திறமையை உண்மையாக விருத்தி செய்யும் விதம் எதுவென்று நமக்குப் புரிவதில்லை. இவ்வொரு விஷயத்தை நாம் சற்றுக்கவனிப்பதால் காலம் வீண்போகாதென்று உத்தேசித்து, சித்திரம் வரைதலைப் பற்றிச் சில குறிப்புகளை எழுதத் துணிந்தாம்.

கிராம பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் எழுத்துக்களைக் குறிக்க நாள் முழுவதுமா பழகுகிறார்கள்? அரை நாளாவது விளையாடிக் கொண்டிருக்க மாட்டார்களா? அப்படிப் பிள்ளைகள் தாங்களே ஒரு காரியத்தைச் செய்வதைவிட உபாத்தியாயர் இட்ட வேலையைச் செய்வது நன்றல்லவா? அனுபோகமில்லாதவர்களுக்கு அனுபோக முள்ளவர்கள் வேலையிடுவது தானே உசிதம்? அனுபவ முறையைக் கைப்பற்றின உபாத்தியாயர்கள் மாத்திரமல்ல; ஊராரும் கிராமப்பள்ளிகளில் காலஞ் சேதமாவதைப் பார்த்திருக்கிறார்கள். அது அப்படிச் சேதமுறா வண்ணம் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல வேலையைக் கற்பிப்பின் அப்படிக் கற்பிக்கும் உபாத்தியாரை வையாது எல்லோரும் சிலாக்கித்துப் பேசுவார்கள். ஆகையினால், உபாத்தியாயர் தேடவேண்டியவைகளாவன—(1) நல்ல வேலை (2) பிள்ளைகளுக்கு உற்சாகம் உண்டாக்கும் படியான போதனாமுறை என்னும் இவ்விரண்டே.

(இன்னும் வரும்.)

QUESTIONS AND ANSWERS

வினா உத்தரம்

An Important question
முக்கியமான தொரு கேள்வி

ஏன் பாலர் வகுப்பில் மாத்திரம் பிள்ளைகள் அதிகமாய் வந்து சேருகிறார்கள் என்ற கேள்வி, நமது வித்தியா டைரெக்டராகிய கனம் ஸ்டோன்துரை அவர்கள் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முந்தியே பரீக்ஷாதிகாரிகளைக் கேட்ட கேள்வி யென்று 'ப்ராரம்பவித்யா' என்னுந் தெலுங்கு பத்திரிகையின் பத்திராதிபர் தமது ஜூலை மாதத்திய பத்திரிகையின் 171-ஆம் பக்கத்திற் கூறியிருக்கிறார். அக்கேள்விக்கு விடையும் அளிக்கப் பட்டிருக்கிறது. விடை வருமாறு:

(1) இப்பொழுதிருக்கும் கிராண்ட் விதியின் பிரகாரம் பிள்ளைகள் பாலர் வகுப்பிற் படித்தாலுஞ்சரி IV-ஆம் வகுப்பிற் படித்தாலுஞ்சரி ஒரே ஒரு கிராண்ட்கிடைக்கிறது. அதனால் பிள்ளைகளுக்கு அக்ஷரங்களைச் சீக்கிரமாகக் கற்பித்து மேல் வகுப்புகளுக்கு அவர்களைக்கொண்டு வருவதற்கு உபாத்தியாயருக்குச் சிரத்தையில்லாமற் போகிறது. பரீக்ஷாதிகாரிகள் ரிஜஸ்டர்களை முன்னதாகப் பார்த்துக்கொண்டு பரீக்ஷித்தாலன்றி இந்தத்தீமை நீங்காது.

[எமக்குத் தெரிந்த வரையில் இது முற்றும் அநியாயமான அபிப்பிராயமென்று தோன்றவில்லை. போர்ட்டு பள்ளிக்கூடங்களிற் கூட மூன்று வருஷம் பாலர் வகுப்பிற் படித்தும் அக்ஷரந்தெரிந்துகொள்ளாத பையலைப் பார்த்திருக்கிறோம்.

ஒவ்வொரு பையனும் III-வது வகுப்பு வரையிலாவது படித்திருக்க வேண்டு மென்று கூறுகிறார் நமது பத்திராதிபர். இது மெச்சத்தக்கதே. மாணவர்களை III-ஆம் வகுப்பு வரையிற் படிப்பிக்கவேண்டிய விதமானது கிராண்ட்டை வகுப்பு வாரியாய்க் கொடுத்தலிலேயடங்கும். மேல் வகுப்புப் பையனுக்குக் கிராண்ட் அதிகமாய்க் கிடைக்கிறதென்று கண்டவுடன் உபாத்தியாயர் அவ்வகுப்புகளிற் பிள்ளைகளை அதிகமாய்ச் சேர்க்கத்தகுந்த முயற்சி செய்வார். இத்தகைய ரூல் இருந்தால் நற்பயன் விளையுமென்று எமக்குத் தோன்றுகிறது.]

(2) பாலர் வகுப்பிற் சரியான உபாத்தியாயர் இல்லாததனால் தேர்ச்சி குறைவாயிருக்கிறது. இருக்கவே தமது பிள்ளைகளுக்குப் படிப்பு வேண்டியதே என்ற பெற்றோர்களின் விருப்பம் நாளடைவில் தளர்ச்சியடைகிறது. பள்ளிக்கூடத்துக்குப் போயிருந்தும் தனது பெயர் எழுதத்தெரியாத பையன் அங்கேபோய்ச் செலவழித்த காலத்தை வீணாய்த்தான் செலவழித்திருக்கிறான் என்று கண்டறிகிறார்கள். ஆதலால் பாலர் வகுப்பைக் கவனிப்பது அத்தியாவசியகம்.

[எமக்கும் இவ்வபிப்பிராயஞ் சம்மதமாகும். பாலர் வகுப்பினால் விளையும் பயன் அவ்வளவு குறைவாயிருப்பதால் இவ்வகுப்பு இல்லாமற் போவதால் யாதொரு தீங்கும் நேரிடாதென்று முன்னொருதடவை கூறியிருக்கிறோம். பெற்றோர்களுக்கு முக்கியமாக வேண்டியது படிப்பே. இதைக்கவனிக்காமலிருக்கும் உபாத்தியாயர் மஹா ஜனங்களுக்கு நன்மை புரியாதவராவர்.]

மிஸ்டர் கீர்ஹார்டீ காலஞ்சென்றார்

இந்தியாவின் க்ஷேமத்தில் ஆர்வமும் இந்திய ஜனங்களின் முற்போக்கில் அபிலாஷையுங் கொண்டு தமக்கு வாய்த்த ஒவ்வொரு சமயத்தையும் கைவிடாது பரோபகார சிந்தையையே பூஷணமாகக் கொண்ட மிஸ்டர் ஜேம்ஸ் கீர்ஹார்டீ என்ற கனவான் இங்கிலாண்டில் நேற்று முன்தினம் இறந்து போனாரென்ற செய்தியைக்கேட்க மிக்க விசனிக்கிறோம். மாடமாளிகைகளிலும் தோட்டக்துறவுகளிலும் வசித்து பொன் வெள்ளியினாலான பாத்திரங்களில் உண்பதும் பர்னசாலைகளிற் படுத்தயர்ந்து நித்திரை புரிவதுமாகவிருந்த சுகஜீவனஸ்தர் குடும்பத்தில் இம்மஹான் உதித்தவரல்லர்; உழைப்பதையே பூஷணமாய்க்கொண்டு, அதிலிருந்து கிடைக்கக்கூடிய ஊதியத்தை அகமகிழ்ந்து உண்டு திருப்தியடைந்து காலஞ் செலுத்திவந்த அருமைப் பெற்றோர்க்கு அருந்தவப் புதல்வராக 1856-ம் வருஷத்தில் ஜனித்தார். அவர் தம் ஏழாவது வயது முதல் வெல்ஷ் நிலக்கரிச் சுரங்கங்களில் கூலிவேலைக் கமர்ந்து 24-ம் வயது வரையில் உழைத்து வந்தார். அக்காலத்தில் தம் மதியூகத்தினாலும் ஜீவகாருண்ய சிந்தையினாலும் தம்மோடு சேர்ந்துழைத்த நண்பர்களின் மீதிருந்த அன்பினாலும் அவர் மேம்பாடடைந்து தம்மீது எவரும் பக்ஷம் பாராட்டி மதிக்கும்வண்ணம் நடந்து வந்தார். கல்வியையும் அவர் புறக்கணிக்காமல் தம் வேலையோடுகூட அதையும் ஓர் வேலையாக நினைத்து கண்ணுங் கருத்துமாகப் பார்த்து வந்ததனாலே 1880-ம் வருஷத்தில் சுரங்கத்தவர் சங்கக் காரியதரிசியாக மிஸ்டர் கீர்ஹார்டீ நியமிக்கப்பட்டார். இரண்டு வருஷங்களுக்குப் பிற்பாடு 'கம்னாக் நியூஸ்' என்ற வர்த்தமானப்பத்திரிகையின் ஆசிரியராயமர்ந்து 4-வருஷ காலம் உழைத்துப் பிறகு தொழிலாளர்கக்ஷியென்ற லேபர்பார்டிக்காகப் பார்லிமெண்டில் பிரதிநிதியாயிருந்து உழைக்க வேண்டுமென்று ஆசக்திகொண்டதற் கிணங்க, 1892-ம் வருஷத்தில் பார்லிமெண்டு மெம்பராயும் அமர்ந்தார். தொழிலாளர்க்கும் பிரதிநிதியாகப் பார்லிமெண்டு ஸபையில் அவர் செய்துவந்த வேலைகள் பல. 1905-ம் ஆண்டில் லேபர் கக்ஷியாருக்கு ராஜ்யாதிகாரத்தில் செல்வாக்குண்டாகவும், மிஸ்டர் கீர்ஹார்டீ 1907-ம் ஆண்டில் இந்தியாவுக்குவந்து இங்குள்ளோரது இஷ்டகஷ்ட நிஷ்டூரங்களை நன் குணர்ந்து தம்மாலானவரையில் இந்தியர்க்கு நன்மை செய்யவேண்டுமென்ற மகோன்னத நோக்கத்துடன் பிரிடிஷ் மகா ஜனங்களுக்குமுன் அடிக்கடி பேசியும் உபந்நியசித்தும் வந்தார். அத்தகைய இந்தியநண்பர் இப்புவியினின்றும் போனதைக் குறித்து வருந்தாத இந்தியருமுளரோ?

இந்து நேசன்

BOOK REVIEWS

புத்தக விமரிசனை

பூர்ண சந்திரோதயம்:—Vol. VI. No. 3. இஃது மதுரைமாநகர்கண்ணுள்ள தியோசாபிகல் சோசைடி மெம்பருள் ஒருவராகிய ம-ா-ா-ஸ்ரீ அ. ரங்கசாமி ஐயரவர்களால் பதிப்பிக்கப்பட்டுவரும் மாதாந்தர தமிழ்ப்பத்திரிகை விஷயம் அருமையாயும் நடைதெளிவாயும் இருக்கின்றன. இதைவாங்கி வாசிப்போர் தத்துவ ஞானத்தினைத் தெளிவுறவறிவ ரென்பது திண்ணம். போதனை விஷயங்களும் ஆங்காங்கு குறிக்கப்படுகின்றன. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்வோர் பலகலை கற்றுணர்ந்த கல்விமான்களே. வருடசந்தா ரூபா. 2.

தோட்டப்பயிர்:— இஃது சேலம், மேட்டுத்தெரு, N. S. கிருஷ்ணசுவாமி ஐயரவர்களால் எழுதப் பெற்றுள்ளது. விலை அணா $2\frac{1}{2}$. தோட்டப்பயிர் செய்ய விரும்புவோர் இப்புத்தகத்தைவாங்கி வாசிக்கலாம். இது பாடசாலைக்கேற்ற புத்தகமாகக் காணப்படவில்லை. விஷயமோ கவனிக்கத்தக்கதாய்த் தோன்றுகிறது. அதிற் காணுறும் சொற்பிழைகளை மறுபதிப்பில் திருத்தினால் நலமாயிருக்கும்.

NALAN AND PUSHKARAN

நளனும் புஷ்கரனும்

சுயம்வரம்

(24-ம் பக்கத்தொடர்ச்சி)

உற்றுநோக்கினதும் அவட்குத் திருமணம் முடிக்கவேண்டுமென்னும் எண்ணம் அரசற்குத் தோன்றினது. தோன்றவும் தமது முதல் மந்திரியைத் தருவித்து அழகிய மண்டபம் ஒன்றியற்றுவித்து எல்லா அரசருக்கும் 'மங்கை சுயம்வரநாளேழென்று' ஓலைபோக்கும்படி கட்டளையிட்டான்.

அரசன் கட்டளைப்படி மந்திரி மண்டபம் இயற்ற உத்தரவு கொடுத்துவிட்டு மணவோலையனுப்பினன். மணவோலை வரப் பெற்ற செல்வக்கோவேந்தர் உடனே புறப்பட்டுவந்து குண்டின புரத்தில் 'பாவேய்ந்த செந்தமிழாமென்னப்' பாந்தனர். பூமகளே போலவும் பொன்னேபோலவும் விளங்கும் விதர்ப்பன்றன் கோம களை மனத்துட்கொண்டு பூவேந்தர் புள்ளுறையுஞ் சோலைகளி லும், பூங்கமலவாவிகளிலும் இனிதுறைந்திருந்தனர்.

இவர்கள் இவ்வாறிருக்கவும் தமயந்தியை விட்டுப்பிரிந்த அன்னம் நளனைநோக்கிப்பறந்துசென்று கொண்டிருக்கையில் அன் னஞ்சென்ற 'வழிமேல் விழிவைத்து வாணுதலாள் நாம, மொழி மேற்செவிவைத்து வருந்திக் கொண்டிருந்த நளன் கண்டனன். கண்டதும், செல்வருடைய முகக்குறிப்பைப்பார்த்து அருட் பொலிவு இருக்கக்கண்டு முன்னேசென்று யாசித்துப் பின்னர் அவர்கள் கரத்தை ஆவலுடன் எதிர்பார்க்கும் * மற்றோரைப் போலத் தமயந்தியின் காதலளவினை மிருந்த ஆர்வத்துடன் கேட்டு அன்னத்திற்கு விருந்திட்டனன். அதன்பின் நளனுக்கு அன்னந் தூதுசென்று தமயந்தியைக்கண்டு முடிவுசெய்து வந்த செய்தியானது அவளுடைய ஞாபகத்தினை விருத்தி செய்தது. அதனால் அவன் அவளைப்பற்றிய விஷயங்களை எந்நேரமும் பேசின வண்ணமாயிருந்தான்.

இவன் இப்படி யிருக்குந்தருணத்தில், அச்சமில்லாக் கார ணத்தால் என்றும் மூடாது திறந்தபடியேயிருக்கும் அவன்கோ யில் வாயிலே, தமயந்தியின் சுயம்வர நாளை யறிவிக்குந் தூதுவர், வந்தடைந்தனர். நளமகாராசன் தூதுவரிடமிருந்து மணவோ லையைவாங்கி அதிலடங்கிய விஷயத்தினையறிந்து, களிப்புற்றுத் தன் இரதகஜதுரக பதாதிகளோடு புறப்பட்டுக் குண்டினபுரத் தை நோக்கிச் சென்றான். இவன்வருஞ் செய்தியைக்கேட்டு வீமராசன் அவனுக்குத்தகுந்த விடுதி அமைக்கும்படி உத்தரவு பண்ணினன்.

(இன்னும் வரும்.)

---

* மற்றோரைப்போல = வறியவரைப்போல.

THE MONTESSORI METHOD.

மாண்டசாரி அம்மையார் முறை

(49-ம் பக்கத்தொடர்ச்சி)

(49-ம் பக்கத்தொடர்ச்சி)

பலஹீனப்பட்ட சிறுவர்களோடு இருந்து உழைப்பதை விட்டுத் தன்மனதையும் அறிவையும், அறிவைப்பற்றிய சாஸ்தி ரங்கள் மனதைப்பற்றிய சாஸ்திரங்கள் மனுஷர் பாகுபாட்டைப் பற்றிய சாஸ்திரங்கள் முதலிய பல அரிய சாஸ்திரங்களை ரோமா புரத்துக் கல்விக்கழகத்தில் கற்பதில் செலவிட்டுவந்ததோடு சாதா ரண அறிவுள்ள பிள்ளைகளின் கல்விக்கு உபயோகமாகும் பாட சாலை ஒழுங்குகளைக் கற்பதிலும் அம்மையார் காலத்தைச் செல விட்டு வந்தார்கள்.

இப்படி இவர்கள் செய்ய எவ்வளவு காலத்தையும் அறிவை யும் முயற்சியையும் செலவிட்டிருக்கிறார்க ளென்பது நமக்குத் தெரியவருகின்ற தல்லவா? சாதாரண அறிவுள்ள பிள்ளைகளிட த்துத் தாம்பயின்றதை திருஷ்டாந்தப்படுத்திப் பார்ப்பதற்கு முன் அறிவிழந்த மக்களிடத்து இம்முறைகளைக் கையாடிப் பார்த்தனர். அப்படிச்செய்ய எவ்வளவுகாலமும் நேரமும் பிடித்திருக்கும்? மிகச் சிறிய குழந்தைகளிடத்து இவைகளைக் கைசெய்து பார் க்கவேண்டுமென்று எண்ணுதை இவ்வம்மையாருக்குத் திடீரென்று ஒரு எண்ணந்தோன்றினது; அதனைக் கைசெய்து பார்க்கவேண்டும் என்னும் அபேட்சை அதன் பின்னர் அவர்கள் பிடரினைப்பிடித்து உந்தியது.

ரோமாபுரத்து 'மாளிகைக் கழகத்தார்'க்கு நானூறு விசித் திரமான கட்டடங்கள் இருந்தன. அக்கட்டடங்களை உடைய கழகத்திற்கு 1906 வருடத்தில் டைரக்டராக விளங்கிய (Mr. Talamo) டாலமோ துரை யென்பவர் டாக்டர் மாண்டசாரி அம்மையாரை அழைத்துச்சிறுவர்களுடைய பள்ளிகளைச் சேர்திருத் தும் தொழிலைக் கழகத்தாருடைய கட்டடத்தில் நடாத்தும்படி வேண்டினர். ஒரே வீட்டில் குடியிருக்கும் பல குடும்பங்களில் உள்ள மூன்று வயதுக்குமேற் பட்டு ஏழு வயதுக்கு உட்பட்ட குழவிகளை யெல்லாம் ஒரே இடத்தில் பொருந்தச் செய்யவேண்

டும் என்பதும், ஆடுகையிலும் படிக்கையிலும் ஓர் உபாத்தி கூட இருந்து அவர்களைக் கவனித்து நடத்துவதற்கு அவ்வுபாத்திக்கு வீடு சிறுவர் வீட்டுடன் சேர்ந்திருக்க வேண்டுமென்பதும் டாலமோ துரையின் கருத்து. அதாவது பள்ளிக்கூடமும் வீடும் பேதித்துத் தோன்றாமல் ஒன்றாய் ஓரிடத்திலேயே அமைந்திருக்க வேண்டு மென்பதாம்.

இத்தகைய பள்ளிக்கூடம் ஒன்று 1907 ஜனவரிம் 6-ந் தேதியில் திறக்கப்பட்டது. அதற்கு "சிறுவர் அகம்" (The Children's House,) என்று மாண்டசாரி அம்மை டாலமோ துரை என்னும் இவர்களுக்கு நண்பராக விருந்த மாது சிரோமணியார் ஒருவர் பெயரிட்டனர். இவ்வகம் மாண்டசாரி அம்மையாரின் பார்வையில் இருந்தது. ரோமாபுரத்து மற்றொரு பாகத்து 1907 ஏப்ரல்மீ 7-ந் தேதியில் இரண்டாவது பாடசாலை திறக்கப்பட்டது. 1908 அக்டோபர் 18-ந் தேதியில் Humanitarian Society of Milan ஆர் உழைப்பாளிகள் கூட்டத்தில் இத்தகைய பாடசாலை யொன்று திறந்தார்கள். 1908 வருடம் நவம்பர்மீ 4-ந் தேதி ரோமாபுரத்து மத்தியதர வகுப்பாருக்காக வேறொரு பாடசாலைதிறக்கப்பட்டது. 1909 வருடம் ஜனவரி மாதத்தில் இட்டாலியன் ஸ்விட்ஸர்லாண்டார் திக்கற்ற குழந்தைகளின் வீட்டையும் பிரோபல் முறைப்படி பாடம் நடத்தப்பட்டு வந்த சிறுவர் இல்லங்களையும் மாண்டசாரி அம்மையார் முறையை அனுசரித்த சிறுவர் அகங்களாக மாற்றி அவற்றின் சாமான்களை இவற்றிற்கு உபயோகிக்க லாயினர்.

இந்த அகத்தால் இருவித அனுகூலங்கள் உண்டென்று மாண்டசாரி அம்மையார் உரைக்கின்றனர். அவ்வனுகூலங்களாவன :— பாடசாலை வீட்டிற்குள் இருப்பதால் பிள்ளைகள் ஒருவரோடொருவர் கூடி மகிழ்ச்சியோடிருப்பது ஒன்று, மிகச்சிறிய குழவிகளுக்குப் போதிக்க வேண்டிய முறைப்படி போதனை சாஸ்திரம் இடம் பெற்றது ஒன்று. சாதாரண அறிவுள்ள குழந்தையானது தன் இளமைப் பருவத்திலே அறிவில்லாத குழந்தையைச் சிற்சில காரணங்களால் நிகர்க்கிறது என்று கண்டு பிடித்துள்ளனர் மாண்டசாரியார். அவ்விளமைப்பருவத்திலே சாதாரண குழந்தைக்குச் சில ஞானேந்திரிய கருவிகள் முதிர்ச்சி அடைவதில்லையாம். பல

ஹீனப்பட்ட குழவிகளுக்கோ முதிரும் தன்மையே யுண்டாவதில்லையாம். இவ்விருவகைக் குழந்தைகளும் நிலையற்ற செய்கையாலும் கவனத்தை ஒன்றின்மீது நிறுத்தப்படுங் கஷ்டத்தாலும் விஷயங்களை எடுத்துரைக்கத் தடுமாற்றம் உறுதலாலும் ஐம்புலன்களால் உணரவேண்டிய உணர்ச்சி பூரணம் எய்தாது இருப்பதாலும் தம்முள் ஒருவரை யொருவர் பொருவுகின்றனரென்றுரைக்கலாம். அறிவில்லாக் குழந்தைகளிடத்து உபயோகிக்கத் தாம் கண்டுபிடித்த அரிய முறையானது மேற்கூறிய காரணங்களால் பொது அறிவுள்ள சிறுவரிடத்தும் நற்பயன் தருமென்று கண்டறிந்தனர் அவ்வம்மையார்.

இதுவரை யாம் இம்முறையைப்பற்றிய வரலாற்றை மிகுதியாக எடுத்துரைக்க வேண்டியது என்னோ வென்று இப்பத்திரிகையை வாங்கி வாசிக்கும் நேயர்கள் சந்தேகிக்கலாம்; ஆனால் யாம் அதனை அதிகமாகவே உரைக்க வேண்டும், அவ்வாறு உரைத்தலால் அதன் சிலாக்கியம் வெளியாகும் என்னும் எண்ணத்தோடு எடுத்துரைத்தாம். நிற்க

'ஐரோப்பியர்களுக்குச் சகலமும் சிரமமில்லாமலே வந்து அமைகிறதென்று இவ்வூரில் பல உபாத்திகள் எண்ணுகிறார்கள். அவர்கள் அப்படி எண்ணுவது தவறு. வேலை செய்யாமல் கூலி பெறும் வழக்கமுமுண்டோ? இல்லை. அப்படியே சிரமப்படாமல் ஒன்றும் அமைவதில்லை. இவ்விடத்தில் இவ்வம்மையார் பின்னர்த் தாம் கையாளுதற்காக இடார்ட் (Itard) ஸெகுயின் (Seguin) என்னும் இருவர் நாற்பது வருடம் முயன்று கண்டுபிடித்த முறையைப் படிக்கப் பெரிதும் கஷ்டப்பட்டனர். அப்படிப் படித்தான பின்னருங்கூட 10 வருடம் அம்முறையை யனுசரிப்பதைப்பற்றி யுழைத்தார்கள்; அதன்பிறகு அம்முறையை வெளியரங்கஞ்செய்தார்கள். அம்முறையால் பலரும் நன்மையைப்பெற வேண்டும் என்னும் நோக்கத்தோடு அவர்கள் உழைத்ததற்கு அளவுகிடையாது. அதனை நோக்க நாமெல்லோரும் ஒவ்வொரு காரியத்தையுஞ் சோர்வின்றிச் செய்து முடிக்க வேண்டும் என்னுந்துணிபு உண்டாகின்றது. எவ்வளவு இடையூறு நேரிட்டபோதிலும் எடுத்த கருமத்தை இடையில் விடாது ஊக்கத்துடன் முடித்தலே பெருமையாக மூடியும். பெரியோரும்,

"வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்"

என்று பணித்துளார்கள். நிற்க.

யாம் முன்னே எடுத்துரைத்தபடி 'சிறுவரகம்' என்னும் பெயருடன் விளங்கும் சிறுவர் பள்ளிகளெல்லாம் வீட்டுக்குள் இருப்பனவே. அவற்றில் அவற்றை நடத்தும் விசாரணைத்தலைவி (Directress) என்னும் பெயருடை உபாத்தியாயினிகளும் குடியிருப்பர். அவர்களால் குழந்தைகளின் பெற்றோரும் பெரும்பாலுஞ் சீர்திருத்தம் அடைவர். அவர்கள் தமக்குத் தெரியாதவைகளையும் வேண்டிய ஆலோசனைகளையும் உபாத்திகளிடமிருந்து கேட்டுத் தெளிவடைவர். இவர்கள் அவ்வாறு அடைவதால் அவ்வுபாத்திகளை இளைஞர்க்கேயன்றி முதியோர்க்கும் உபாத்திகள் என்றழைக்க நியாய முண்டு. இவர்களுடைய நெருக்கத்தால் உபாத்திகட்கும் பலவகை நன்மை யுண்டென்னலாம். சிறுவரகத்து நடைபெறும் வேலையைப் பாரப்பதற்குப் போகப் பெற்றோர்க்கு அதிகப்பிரிய முண்டு; அப்படியே அடிக்கடிப் போவது முண்டு.

பிள்ளைகளுக்கு விசிப்பலகையும் சாய்வுமேஜையும் அமைப்பதில் மாண்டசாரி அம்மையாருக்குப் பிரியங்கிடையாது. பிள்ளைகள் புத்திசாலித் தனமாகவும் நாகரிகமாகவும் எழுவதற்கும் உட்காருவதற்கும் அவை இடைஞ்சலா யிருக்கின்றன என்பது அவர்கள் அபிப்பிராயம். அதனால் அவற்றை விலக்கி இலேசான மேஜையையும் நாற்காலியையும், தனித்தனியே, ஒவ்வொரு பிள்ளைக்கும் அமைத்தார்கள். பிள்ளைகள் அசாக்கிரதையாய் எழுந்தால் மேஜைகள் கவிழும். அப்படி அவைகள் கவிழ்வதால் எழவேண்டிய முறையை எளிதில் கற்றுணர்கிறார்கள். (யூரோப்பிய பிள்ளைகட்கு அவர்கள் அமைத்த விதத்தினைப்பற்றி யெடுத்துரைக்க வந்தோம்; சாதாரணமாய்த் தரையில் உட்கார்ந்து வாசிக்கும் இந்திய சிறுவருக்கு இவ்வித இடைஞ்சல்களில்லை)

ஒவ்வொரு 'அகத்' திற்கும் ஒவ்வொரு வைத்தியரும் ஒவ்வொரு செவிலித்தாயும் உண்டு.

இவ்வகங்களில் 2½ வயதுள்ள மகவுகளுமுண்டு. அம்மகவுகட்குப் புத்தகப் படிப்புப் பலன்தரா வென்பதும், அக்குழவிகள் கையில் புத்தகத்தினைக் கொடுத்தலே நீதியல்ல வென்பதும் அனைவரும் அறிந்தவிஷயமே. அப்படியிருக்க இம்மகவுகளுக்கு எவ்வாறு கற்பிப்பது என்றாலோ அவர்களைச் சுயேச்சையாய் விட்டு அவர்கள் இஷ்டப்படி ஒன்றைப் பார்க்கவும் செய்யவும் பழக்கவேண்டும் என்பாம். மாண்டசாரி அம்மையாரும் அச்சிறு குழந்தைகளுடைய அறிவும் ஒழுக்கமும் ஐம்பொறிகளை நடத்த வேண்டிய முறைப்படி நடத்துவதால் செம்மையுறு கின்றன வென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இவர்கள் அபிப்பிராயமும் பெஸ்டலாஸி (Pestalozzi) பிரோபல் (Froebel) என்னும் இன்னோர் அபிப்பிராயமும் ஒத்திருப்பதாகத் தெரியவருகிறது. அம்மகவுகளை நடத்துபவர் மாத்திரம் புத்திகோசரமும், மெய்மையும், உள்ளன்பும் உடையவராயிருத்தல் வேண்டும். குழவிகள் நன்றாக அறிவில் தேர்ச்சி பெறுதற்கு மார்க்கம் அவர்களைச் சுயேச்சையாய் விடுதலே யன்றி வேறொன்றுமில்லை. அவர்கள் சுயேச்சையாய் ஒன்றைச் செய்து வரலால் பழக்கமேறித் திறமை பெறுகின்றனர். சுயேச்சையா யிருப்பதால் குழவிகள் மிகுந்த சுறுசுறுப்பினை எய்துவதோடு தேகசுகத்தையும் எய்துகின்றனர். தாய்மாருக்கு உதவியாகப் பணிவிடை செய்வதில் அவர்களுக்கு நிரம்ப மனத்திருப்தியும் மனமகிழ்ச்சியும் உண்டு.

குழந்தைகளுக்குச் சுயேச்சை இன்பம் பயக்கிறது என்பதனை யறிந்த மாண்டசாரி அம்மையார் பலவடிவும், பன்னிறமும், பல செய்முறையும், பல அடையாளமுங் கொண்ட - தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்களை - விளையாட்டுக் கருவிகளை அவர்கள் முன்னிலையிற்போட்டு அவற்றுடன் அவர்கள் ஆடி அதனால் அவர்களுடைய கருவிகரணங்கள் கோசரம் பெறப்பார்ப்பார்கள். குழவிகள் தம்முன் எறியப்பட்டிருப்பனவற்றை யாது செய்யவேண்டுமோ அதைத் தாமே அறிந்து செய்ய விடுவார்கள். உபாத்திகள் அவர்களுக்கு ஒன்றும் போதிக்க மாட்டார்கள்; ஆனால் சிற்சில சமயங்களில் மாத்திரம் துணைவரைப் போலிருப்பார்கள். உபாத்திகள் சிற்சில சமயங்களில் துணையாக இருந்தபோதிலும் ஒவ்வொரு குழவியினுடைய செய்கையை மாத்திரம் கவனித்த வண்ணமாயிருப்பார்கள். ஒவ்வொரு குழவியினுடைய செய்கை

யும் ஒவ்வொருவிதமா யிருக்கு மாதலால் பொதுத் தன்மையான ஏற்பாட்டுடன் இராது ஒவ்வொருவரையும் இப்படித் தனித்தனி கவனிப்பதே சிலாக்கியம். குழவிகள் ஒவ்வொரு பொருளையும் உற்றுநோக்கும் பொழுது அது எப்படியிருக்கிறது அது எப்படி உண்டாயிற்று என்று யோசிக்கவும், அந்த வஸ்து இப்படியிருக்கிறது என்று கண்டறியவும் இடமுண்டாகின்றது. அப்படிக்கண்டறிய அதன் நிலைமை, உருவம், நிறம், பருமன், அடையாளம் உறுப்புக்கள் அல்லது பகுதிகள் இவைகள் இன்னின்ன என்று பார்ப்பதையும் அப்படிப் பார்த்து யோசிப்பதையும் யாம் வழக்கப்படுத்த வேண்டும். அப்படி வழக்கப்படுத்துவதால் அவர்கள் உற்று நோக்கலின் பயனை யெய்துகிறார்கள். பயனை எய்தியதும் அவர்களுக்கு ஒருவித ஆனந்தம் உடனே உண்டாகின்றது. இவ்விஷயத்தைப்பற்றிய கதை யொன்றுண்டு; அதனை வேறோரமையத்து எடுத்துரைப்பாம்.

இந்த மாண்டசாரி அம்மையார் முறை எமது ஆல்காட் பஞ்சமர் பாடசாலைகளில் போதிக்கப்பட்டுவரும் முறையை யனுசரித்ததாகும்.

"சிறுவரகத்"து விதி வருமாறு :—

குழந்தைகளைக் குளிப்பாட்டிச் சுத்தமான உடையுடுத்தி அதன்மீது முன்றானை தரித்துக் குறித்த நேரத்தில் அனுப்பவும்;

உபாத்தியாயினிக ளிடத்தும் சிறுவரகத்துள்ள மற்றையோரிடத்தும் அன்பாகவும் விசுவாசமாகவும் மரியாதையாகவும் இருக்கவும், அவர்களுக்கு வேண்டிய உதவியைப் புரியவும், அவர்களை வாரத்துக் கொருமுறையேனும் சந்தித்துக் குழவிகள் வீட்டில் நடக்கும் விதத்தினை எடுத்துரைத்து உபாத்திகளிடமிருந்து அக்குழவிகளை நடத்தும் விதத்தினை யறிந்து கொள்ளவும் பெற்றோர் வரக்களிக்க வேண்டும்.

குளிக்காமல் அழுக்கு உடைகளைத் தரித்துக்கொண்டு வருபவர்களையும்;

திருத்தம் எய்தாக் குழவிகளாகக் காணப்படுபவர்களையும்;

சிறுவரகத்தாரை மதியாதவரது மகவுகளையும் வித்தியாசாலையின் போதனைக்கு இடைஞ்சலான செய்கையை நாடுபவரது மக்களையும் பள்ளிக்கூடத்தில் இருக்க விடுவ தில்லை.

இத்தகைய விதிகள் இவ்விடத்தில் இருந்தால், பிள்ளைகளை அதிகமாகப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பெற்றோர் துணிய மாட்டார்க ளென்று கருதுகிறோம். மாண்டசாரி அம்மையார் 2½ வயதுள்ள குழவிகளைக் கண்டவளவில் அவர்கள் நடத்தையில் திருத்த முற்றார்கள் என்று எப்படித்தான் நிச்சயிக்கத் துணிகிறார்களோ அது எமக்குப் புரியவில்லை. இது ஒரு வியப்பாகவே யிருக்கிறது.

(இன்னும் வரும்.)

C. KOFEL,
Honorary Superintendent,
Olcott Panchama Free Schools,
ADYAR

ஆசிரியர்களும் ஆராய்ச்சியும்

நண்பர்களே :—

நாம் பல பத்திரிகைகளையும் புத்தகங்களையும் பார்ப்பது, நமது அறிவின் விருத்திக்கென்பது அனைவரும் தெரிந்தவிஷயமே, பார்ப்பதிலும் பார்த்த விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதும், ஆராய்ச்சியின் கருத்துக்களை அறிந்தோரும் அறியாதோருமாகிய அத்துறையினருடன் சம்பாஷித்தலும் அறிவின் விருத்திக் கொரு விருத்தியாகும். அப்படிச் செய்வதிலும் நமது உபாத்திமைத் தொழிலுக்கு இன்றி யமையாததாகிய இச் "சற்குரு" வில் வெளிவரும் விஷயங்களுக்கு ஆராய்ச்சி செய்யவும் அதில் வினாவும் விடைகளுக்கு விடைகள் எழுதவும் அப்படி எழுதிய விடைகளையும் ஆராய்ந்த ஆராய்ச்சிகளையும் அச் சற்குருவிற்கே அனுப்பவும் நமதறிவை உபயோகப்படுத்துவோமானால் 'ஒத்துக்கு மத்தளம்'

என்பதுபோல் இயற்கை அறிவோடு செயற்கை அறிவும் சேருமன்றோ? அவ்விதம் சேரின், "சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை" என்னும் பழமொழிக் கிணங்க, நமது உபாத்திமைத் தொழிலினிடத்து அறிவின் வலிமை சேருமேயன்றி நமக்கு அதில் குறையும் ஏற்படுமோ? போதனுமுறை பயிலாத ஒருபாத்தியார் நமது சற்குருவை விடாது ஆராய்ச்சிசெய்து அப்பத்திரிகைக்கு (சற்குருவிற்கு) தாம்செய்த ஆராய்ச்சியைவிடாது எழுதிக்கொண்டு வருவாராஞல் போதனுமுறை பயின்ற ஒருபாத்தியாயருக்குச் சமானமாவாரென்பதி லென்ன ஐயம்? இவ்விதமிருக்க, "பத்திரிகையை ஆராய்ச்சி செய்து அபிப்பிராயத்தை எழுதி அனுப்பக் கமிஷன் உண்டோ?" என்றும், "அல்லது நமது விஷயம் பிரசுரிக்கப்பட்டுள்ள பத்திரிகையை இனுமாகவாவது அனுப்புவார்களோ?" என்றும், "எழுதி அனுப்பினுல் நமக்குத்தானே செலவு; ஏன் அப்படி எழுதவேண்டும்?" என்றுஞ் சில நண்பர்கள் வாதாடுகிறுர்கள். இது என்னே?

நமது சற்குரு பிறந்து ஒன்றேகால் வருஷமாகியும் அவர் வெளிக்கொண்டுவரும் விஷயங்களுக்கும் வினுக்களுக்கும் இரண்டொரு நண்பர்களே தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனரெனத் தெரிகின்றது. வெளிவந்துள்ள விஷயங்களில் எத்தனேயோ ஆராய்ச்சி யில்லாதிருக்கின்றன. மேலே சொல்லிய ஆராய்ச்சிக் கருத்துகளைப்பற்றி, நமது நண்பர்கள் இரண்டொரு நிமிஷம் ஆழ்ந்து கவனிப்பார்களேயாஞல் விஷயங்களுக்கு ஆராய்ச்சி எழுதவும் வினுக்களுக்கு விடை அளிக்கவும் முன்வருதற்குத் தடை நிகழாது. ஆகவே ஆராய்ச்சியும் விடையும் எழுத முன்வருதலால் தங்களறிவு தற்போதிருப்பதைவிட விருத்தியாவதோடு தமதபிப்பிராயங்களை வெளியிடலால் பிற நண்பர்களினறிவும் விருத்தியாகின்றது. நேயர்கள் இவற்றைக் கவனிப்பார்களென்று எண்ணுகின்றேன்.

ஆராய்ச்சிப்பிரியமுள்ள,
P. பரிமணப்பல்லவராயர்
ஹெட்மாஸ்டர்
போர்டு கேர்ல்ஸ்ஸ்கூல், வாங்கல், கரூர்தாலூகா.

Madras: Printed at the K. R. Press, and Published by N. Venkatarayalu & Son, 87 Rámaswamy St., Madras, E.

ஸ்ரீ

சற்குரு

உபாத்தியாயர்கட் கேனவே உலவிவரும்

மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"—தமிழ்மறை

தோகுதி—உ	1915ஞு நவம்பர்மீ	பகுதி—ரு.

ROUGH CHECKS IN ARITHMETIC

உத்தேசக் கணக்குகள்

(79-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண பின்ன கணக்குகளையும் உத்தேசக் கணக்குகளாகப் போடலாம். உதாரணமாக:

(1) $(1\frac{2}{7} + 3\frac{1}{2} - 2\frac{2}{3}) \times 5\frac{1}{4}$ யைச் சுருக்குக.

உ. $(5 - 3) \times 5 = 10$.

ச. வி. $11\frac{1}{8}$.

(2) $\dfrac{2\frac{1}{3} + 7\frac{1}{4}}{5_{8} + 3\frac{1}{2}} \times \dfrac{4\frac{1}{8}}{2\frac{7}{8}}$ யைச் சுருக்குக.

உ. $\frac{9}{10} \times \frac{4}{3} = 1\frac{1}{5}$.

ச. வி. $1\frac{1}{2}$.

(3) $1\frac{13}{20} \times \frac{7}{11} - 2\frac{11}{15} + 1\frac{13}{19} \div \frac{30}{171}$ யைச் சுருக்குக.

உ. $2 \times \frac{1}{2} - 3 + 2 \div \frac{1}{2}$.

$= 1 - 3 + 4$

$= 2$. ச. வி. $1\frac{11}{12}$.

(4) $4\frac{1}{8} \times \frac{1}{11} \times$ ரூ 1. 5. 4 $+ \frac{16}{21} \times$ Rs. 2-10-0 $+ \frac{6}{11} \times$ ரூ. 1-13-4 யைச் சுருக்குக.

உ. $4 \times \frac{1}{3} \times$ ரூ. $1 + 1 \times$ ரூ. $3 + \frac{1}{2} \times$ ரூ. 2

= ரூ. $1\frac{1}{3} \times$ ரூ. 3 + ரூ. 1

= ஏ. ரூ. 5

ச. வி. ரூ. 5.

முற்றிற்று.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 DEC 1915
MADRAS

QUESTIONS AND ANSWERS

வினா உத்தரம்

Should very young children be taught to read?
மிகச் சிறு பிள்ளைகளை வாசிக்கப் பழக்கலாமோ?

செப்டம்பர் மாதத்திய சஞ்சிகையின் 6-ஆம் பக்கத்தில் கேட்டிருக்கும் இந்தக் கேள்விக்கு இரண்டு நண்பர்கள் விடைகூறியிருக்கிறார்கள். (1) ம-ா-ா-ஸ்ரீ பி. ஜானகிராமப் பிள்ளை அவர்களின் அபிப்பிராயமாவது:—1-ம் வகுப்புவரையில் வார்த்தைகளை மாத்திரம் வாசிக்கப் பாலர்களைப் பழக்கவேண்டும். அவ்வாறு பழக்குவதால் அவர்கள் நாளடைவில் வாக்கியங்களை வாசிக்கத் திறமையுடையவர்களாவார்கள் என்பது. (2) ம-ா-ா-ஸ்ரீ பி. பரிமணப் பல்லவராயரவர்களின் அபிப்பிராயம் வருமாறு—பாலர்களுக்குச்சரியான முறைப்படி கற்பித்தால் எளிதில் அக்ஷரங்களைத் தெரிந்துகொண்டு வாசிக்க ஆரம்பிப்பார்கள் என்பது.

கேள்வியின் நோக்கம் வருமாறு.

(1) மிகச் சிறு பிள்ளைகளுக்கு எழுத்துகளைக் கற்பித்தல் கஷ்டமான காரியமா அல்லது சுலபமான காரியமா?

௨) கஷ்டமானகாரியமாயிருந்தால் சிறு வயதிலே எழுத்துக்களைக் கற்பியாமல் வேறொரு பாடத்தைக் கற்பிக்கக் கூடாதா?

இக் கேள்விகளுக்கு இணங்க நேயர்கள் தமது அநுபவத்தை நாடி விடைகூறுவார்களாக. பாலசிக்ஷையை முடிக்க இத்தனை மாதம் செல்கிறதென்று கூறினாலும் போதும்.

* * * * * *

Correlation
தொடர் முறைப் போதனை

தணிக்கை ஆபீசர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ள சில பாட அட்டவணைகளில் வாசக பாடத்தினை இதர பாடங்களுடன் சம்பந்தப்படுத்தலாமென்று கூறியிருத்தலைத் தெரிவித்திருக்கிறார் நமது நண்பராகிய பரிமணப் பல்லவராயரவர்கள். இஃது எமது அபிப்பிராயத்துக்கு விரோதமானதோவென்று கேட்பின், விரோதமானதன்றென்றுகூறுவாம். தொடர்முறைப் போதனை ஒரு சிறந்த போதனைதான்; ஆனால் அதை யோசியாமல் பின்பற்றுதல் கூடாது. பாடங்களைச் சம்பந்தப்படுத்தவேண்டிய சமயம் உபாத்தியாயருக்குத் தெரிந்திருக்குமேல், 'வாசகபாடத்தினை இதர பாடங்களுடன் சம்பந்தப்படுத்தவேண்டு' மென்று அட்டவணையிற் குறித்துவைக்கலாம். அப்படி அவர் குறித்துவைப்பதால் யாதொரு தோஷமுமில்லை.

JUDGING HANDWRITING

கையெழுத்தினைத் தணிக்கைசெய்தல்

2-ம் வால்யம் 36-ம் பக்கத்திய கேள்விக்குவிடை.—

1. மசிகொட்டாமல், பாரம் வைக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் பருமனுக்குத் தக்கவாறு பெரியதாகவோ, சிறியதாகவோ எழுதப்பட்டிருக்கிறதா?

2. எழுத்துகளுக்கிடையில் எவ்வளவு இடம் விடவேண்டுமோ அவ்வளவு இடம் விட்டெழுதப்பட்டிருக்கிறதா?

3. பாரம் வைக்கப்பட்டுள்ள எழுத்தைப்போல் - ஒவ்வோரெழுத்தையும் ஆரம்பிக்கவேண்டிய இடத்தில் ஆரம்பித்தும், போகவேண்டிய இடங்களில் போயும், முடியவேண்டிய இடத்தில் முடித்தும், அளவுக்குத்தக்கபடி எழுதப்பட்டிருக்கிறதா?

4. பாரம் வைக்கப்பட்டுள்ள எழுத்துக்களுக்கு அடியில் ஒவ்வோர் எழுத்தும், ஒழுங்காகவும் நேர்நேராகவும் எழுதப்பட்டிருக்கிறதா?

5. பாரம் வைக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் ரூபத்திற்குத் தக்கவாறு வலதுபக்கம் சிறிது சாய்வாகவோ, செங்குத்தாகவோ எழுதப்பட்டிருக்கிறதா? என்று பார்த்துத் தணிக்கைசெய்யவேண்டும் என்னும் எனது அபிப்பிராயத்திற்கு ஒத்தே நண்பர் பரிமணப்பல்லவராயரவர்களும் அபிப்பிராயப்படுவதாகத் தெரிய வருகிறது.

P. Janakiram Pillai.

THE VALUE OF READING

வாசிப்பின் சிறப்பு

வாசிப்பு என்றால் "நாவல்கள்" "கதைகள்" முதலியவைகளைப் படிப்பது மாத்திரமல்ல. சிலர் தம்குழந்தைகளை "படி, படி" என்று கஷ்டமான புத்தகங்களைக்கொடுத்து அடியோடு கெடுத்துவிடுகிறார்கள். மக்களுக்கு ஒருவிதரசமான உணர்ச்சி தானேயுண்டாகிப் படித்தாலொழிய அவர்கள் முன்னுக்கு வரமாட்டார்கள். தம்முடைய சந்ததிகள் அறியாதவர்களாயிருந்தால் சிறிதுசிறிதாக அறிவினை ஊட்டவேண்டும். மேலும் அவர்களுக்கு வெறுப்புண்டாகும்படியானவைகளைக் கற்பிக்கக்கூடாது. நீதிகளைப் போதிக்கும்படியான சிறுகதைகள், சரித்திரங்கள் முதலியவைகளைப் படிக்கும்படி தூண்டுதல் வேண்டும். போதிக்கும்போது அதிகமாகக் கண்டிக்காமல் அன்புடனே போதித்து வந்தால் கூடியசீக்கிரத்தில் தேறுவார்கள்.

புத்தகங்கள் இருவகைகளில் சிறந்தவைகளாகலாம். அவற்றில் விளங்கும் திறமை, நயம் பயக்கும் தன்மை ஆகிய இவ்விருவிசேடங்களைப்பற்றி அவைகட்குச் சிறப்பமையக்கூடும். சிறந்த புத்தகங்கள் நம்முடைய குறைகளைநீக்கி குணத்தைப் பெருக்குதற்குச் சாலவும் அமைந்த கருவிகள். நம் இந்துசாஸ்திரகிரந்தங்களாகிய வேதாந்தம், உபநிஷத் முதலியன நம் சந்தேகங்களைநீக்கி, அஞ்ஞானம் நிறைந்த இவ்வுலகினின்று மோக்ஷமடையும் மார்க்கத்தைத் தெரிவிக்கின்றன. புத்தகங்கள் இக்காலத்தில் மிகுந்திருப்பினும் நலம் பயப்பனவைகளாக அகப்படுவது அரிது. நலம் பயப்பவை திறமையாய் எழுதப்படாமலும் திறமையாய் எழுதப்படுபவை நலம் பயப்பனவாயிராமலும் இருக்கின்றன. இவ்விருகுண விசேடங்களும் பொருந்தியவை உத்தமமானவை என்பது சொல்லாமலே அமையும். இரண்டில் ஒன்றுமட்டும் உள்ளவையானால் முன்சொன்ன தன்மைகொண்டவை மத்திம மானவையென்று மதிக்கப்படும்; பின் சொன்ன குணமுள்ளவை விஷத்தால் நிரம்பிய பொற்கிண்ணம் போல அஞ்சி அகற்றத்தக்கவையாகும். இவ்வாறு அகற்றத்தக்கவை இந்நாளில் கொண்டாடப்பெற்று, எழுதுவோர்க்கு ஊதியத்தை உண்டாக்கும்படி இருப்பது தமிழ் அபிமானிகட்கும் தேசாபிமானி

ம் துயரத்தை விளைவிக்கின்றது. தீயபுத்தகங்கள் சத்துருக்களாய் இருத்தல்போல, நல்லபுத்தகங்கள் மித்திரர்களாய் உதவுகின்றன.

நம்நாட்டு கிரந்தங்களாகிய ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீ மகாபாரதம், ஸ்ரீமத் பாகவதம், திருவிளையாடற்புராணம், ஸ்ரீமத் பகவத்கீதை முதலிய சிலகிரந்தங்கள் இருக்கின்றன. இவை பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு மிருக்கின்றன.

அநேக நூற்றாண்டுகளுக்கு முன் திருவள்ளுவ நாயனாரால் இயற்றப்பட்டதாகிய "திருக்குறள்" என்னும் சிறந்த கிரந்தத்தில், எவனும் அதாவது அரசர்முதல் எளிய ஏழைவரை; ஆழ்ந்து அதன் கருத்துகளை அறிந்தாற்போதும். வீடுநிறைய அநேக பீரோக்களில் புஸ்தகங்களை, வைத்துக்கொண்டு "எவ்வளவு புஸ்தகங்கள் இருக்கின்றன" என்று சொல்லிக் கொள்ளும் பேதைக்கு அடுத்தபடியில் வைத்து மதிக்கத்தக்கவனே "நான் எத்தனை புத்தகங்கள் படித்திருக்கிறேன்?" என்று எண்ணிக்கையால் மட்டும் இறுமாந்து திரிபவன். புத்தகப்புழு என்னும் பெயர் அவனுக்கே பொருந்தியது. உணர்வில் ஊன்றி உள்ளுறப்பற்றி நல்வழிப்படுத்துமாறு நூல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றால் உள்ளும் புறமும் உருவாகி ஒழுகுபவனே கற்றவன், அல்லது கற்றதனாலாயபயன் பெற்றவன். "திருக்குறள்" போன்ற நம்பழைய பெரியநூல்களில் ஒருபாட்டின் சாராம்சத்தை அறிந்த மாத்திரத்தில் அறிவும் மனமும் எவ்வளவு விரிவை அடைகின்றன. ஒருமனுஷ்யனுடைய நடத்தையை அறிவதற்கு அவன் படிக்கும் புத்தகங்களின் தன்மையும், அவற்றில் அவனுக்குள்ள உருசியும் குறிகள் ஆகுமென்பது மெய்யே. நல்லநூல்களில் ஈடுபட்டுப் பயன்பெறும் இயல்புள்ளவன், கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு என உணர்ந்து, தன்னடக்கம் மேலிட்டு தன்னறிவைப் போதியவாறு பெருக்குதற்குத்தன் ஆயுளும் சந்தர்ப்பங்களும் சற்றும் போதாமைக்கு வருந்துவான். ஆனதனாலன்றோ!

"அடக்க முடையார் அறிவில ரென்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம்,'
எனப்பெரியோர்கள் எச்சரித்திருக்கிறார்கள்."

புத்தகப்பிரியன்.

INFORMATION FOR OBJECT LESSONS

பொருட் பாடங்களை நடத்துவதற்கான விஷயம்.

(பகுதி 4 - பக்கம் 8 - தொடர்ச்சி)

V PALM OIL

பனை எண்ணெய்

இந்த எண்ணெய் மற்ற எண்ணெய்களைப்போல் நீர்போவிராது; கெட்டியாயிருக்கும். இது உண்டாகு மிடங்களிலும் நீர்போலில்லை; குளிர்ந்த தேசங்களில் இறுகிப்போகும். இதை வெண்ணெய்க்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம். இந்த எண்ணெய் உஷ்ணதேசங்களில் - வெண்ணெய் உருகுவதுபோல் - உருகிப்போகும். இந்த எண்ணெய்க்குக் கொழுப்பு (Fats) என்றுபெயர். இவ்விதக் கொழுப்பைக் கொடுப்பதனால் (Oil Palm) என்றுபெயர். இந்தப்பனை ஆப்பிரிக்கா கண்டத்தில் 30 அடி உயரம் வரையில் வளரும். எண்ணெய் பனங்கொட்டைகளிலிருந்து கிடைக்கும்.

பனங்கொட்டைகள் கொத்தாக அகலத்தில் சுமார் 2 அல்லது 3 அடி இருக்கும்படியாகத் தொங்கும் - ஒவ்வொரு பனங்கொட்டையும் கோழிமுட்டை வடிவமாக இருக்கும். முதிரும் பொழுது வழவழப்பாயிருக்கும். இவை சிறிய கெட்டியானகொட்டைப்பாக்கைப்போல் காணப்படுகின்றன; ஆனால் கொழுப்புப் போன்ற மாமிசபதார்த்தத்தினை உள்ளே உடைத்தாயிருக்கின்றன. முதிர்ந்தகொட்டைகளைக்காய்ச்சி அரைத்தால் எண்ணெய் கிடைக்கும். இந்த எண்ணெய்களினால் சிலகலப்பான மெழுகுவர்த்திகளையும் சோப்புகளையும் செய்கிறார்கள். ரெயில்வண்டிச் சக்கரங்கள் தாராளமாய் உருள இந்த எண்ணெயை உபயோகிக்கிறார்கள். ஆப்பிரிக்கா தேசத்தவர்கள் இதை, நாம் வெண்ணெயை உபயோகிக்கிறதுபோல உபயோகிக்கிறார்கள்.

VI COCOANUT OIL

தேங்காய் எண்ணெய்

தென்னைமரத்தை அநேக உஷ்ணப்பிரதேசங்களில் பயிராக்குகிறார்கள். முக்கியமாய் அமெரிக்கா கண்டத்திலுள்ள கிழக்கு

மேற்கு இந்தியத்தீவுகளிலும் (East and West Indies) இந்தியாவிலும், இலங்கைத்தீவுகளிலும் ஏராளமாய்ப் பயிராகின்றன. சாதாரண உஷ்ணகாலங்களில் தேங்கா யெண்ணெய் வெண்மையாகவும் கெட்டியாகவு மிருக்கும். இந்த எண்ணெயை அரைத்துக்காய்ச்சி யெடுப்பார்கள். இதுவும் சோப்பு, மெழுகுவர்த்தி முதலியன செய்ய உதவும்.

VII OLIVE OIL

ஒலிவ் எண்ணெய்

இது மத்திய தரைக் கடலோரங்களில் உண்டாகும் மரங்களினின்று கிடைக்கும். இந்தமரம் 9 அல்லது 10 அடி உயரமாகவும் எந்தக்காலத்திலும் பசுமையாகவு மிருக்கும். இலைகள் நீண்ட பட்டாகத்தியைப்போல இருக்கும். புஷ்பங்கள் சிறியதாகவும் வெண்மையாகவும் வாசனையாகவு மிருக்கும். இதன் காய் நெல்லிக்காயளவாக விருக்கும். இது முற்றும்போது ஒருவித மங்கலான சிவப்புநிறம் வெளியாகும். இதன்சதைதான் எண்ணெயாகிறது. இதைச் சாப்பிட்டால் சற்றுக்கசக்கும். அரைத்து எண்ணெயெடுக்கலாம்; முதிர்ந்தபிறகு எண்ணெ யெடுக்கவேண்டும். மெதுவாய் அரைப்பதனுல் ஆரம்பத்தில் கிடைக்கக்கூடிய எண்ணெய் வெகு நயமானது. இதற்கு ஆங்கிலத்தில் (Virgin Oil) என்று பெயர். உயர்ந்த அதாவது நயமான ஒலிவ் எண்ணெய் சமையலுக்கு உதவும். ஐரோப்பா கண்டத்துத் தெற்கு பாகத்திலுள்ளவர்கள் இந்த எண்ணெயை வெண்ணெய்க்குப்பதிலாக ஏராளமாய்ச் சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்துகிருர்கள். சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய ஒலிவ் எண்ணெயாவது முதிர்ந்த காய்களை வேகவைத்துக் கெட்டியாய் அரைத்து எடுப்பதுதான். இது ஒருவித மஞ்சள் நிறமாய் வாசனையில்லாமல் இருக்கும். இதனுல் விளக்கு நன்ருய் எரியும். ஆனுல் சாதாரண எண்ணெயைச் சோப் செய்யவும் கம்பளங்கள் நெய்யவும் உபயோகிக்கிருர்கள்.

கே. ஆர். இராமசாமி அய்யர், ஹெட்மாஸ்டர்

போர்ட் எலிமென்டரி ஸ்கூல், ராமபட்டணம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 DEC 1915
MADRAS

PRICKLY PEAR

நாகதாளி

வாழைக்கனி மாங்கனி பலவின்கனி போலக் கனிவருக்கத்தில் இடம் பெற்றுத் தானும் பயனுளகனி யென்று பெயர் மாத்திரையால் மயக்கினையுண்டு பண்ணும் நாகதாளிக் கனியைப் பற்றியும் அதன் செடியைப்பற்றியும் சற்று ஆராய்ச்சி செய்வாம்.

இந்திரகோபப் பூச்சிகள் செழித்தோங்கும் பொருட்டாகப் போர்ச்சுகல் தேசத்தாரால் நடு அமெரிக்கா கண்டத்தினின்றும் மெக்ஸிகோவிலிருந்தும் இச்செடி கொண்டுவரப் பெற்று நமது இந்திய தேசத்தில் அவர்களால் பயிராக்கப்பட்டது. இந்தியாவிலும் மைசூர் தான் ஆரம்பத்தில் பயிராக்கப்பட்ட இடமென்று தெரியவருகிறது. இவைகள் கொஞ்சம் பயிராக்கப்பட்டதும் அச்செடிகளின்மீது அப்பூச்சிகளை மழைகாலத்துக்குப் பிறகு விட்டு வளர்த்தார்கள். ஆறுகாலமாதத்துக்குள் அப்பூச்சிகள் நன்ருக விருத்தியாயின. விருத்தியாகவும் Dr: Dempster என்பவர் அப்பூச்சிகளைப் பிடித்து அவைகளினின்றும் ஒரு விதசாயத்தினை யெடுத்துக் கம்பளிகளை அச்சாயத்தில் தோய்த்துச் சாயக்கம்பளிகளாக்கி வியாபாரஞ் செய்து வந்தனர். இத்தொழில் பலருக்குச் சிலகாலம் வரையில் நன்மையைக் கொடுத்துக் கொண்டு வந்தது. அதன்பிறகு இவ்வியாபாரம் தலையெடுக்காமற் போய்விட்டது. அதற்குக் காரணம் முதல் முதல் இச்செடிகளின்மீது விடப்பட்ட பூச்சிகள் உயர்தரப் பூச்சிகளாயில்லாமற் போயினமையே.

இச்செடியைப் போர்ச்சுகேயர் கொண்டு வந்து பாழான இடங்களில் நட்டுப்பயிராக்கினர்கள். இச்செடி வரண்டநிலத்தில் நன்ருய்ச் செழித்தோங்கும். இச்செடிக்கு முள்ளிருந்தபோதிலும் அது வேலியாக உதவாது. இதைவேலியாக உபயோகிப்பது மில்லை. உபயோகித்தால் வெகுசீக்கிரத்தில் காப்பாகவுள்ள நிலத்திற்கே அழிவு நேரிட்டுவிடும். மனிதர்களுக்குத் தொத்து நோயிருப்பதுபோல நிலத்திற் கென்றேற்பட்டுள்ள தொத்து நோயாக இச்செடியை உழவர் மதிக்கின்றனர். இச்செடி பாம்பு முதலிய

விஷப்பூச்சிகளுக்கு அரண்மனையென்று சொல்லலாம். இச்செடியைவிருத்தியாகாதபடி யொழிக்க மருந்து கிடையாது. கொளுத்தினாலும் வெந்து சாம்பலாகாது. பெரிய பள்ளந்தோண்டி அதில் இதனை நறுக்கிப்போட்டு மண்ணிட்டு மூடினால் அழியும்; அல்லது ஜலத்தில் அழுகவைத்தால் நசியும். இப்படி மக்கிய பின்னர் அதைச் செடிகளுக்கு எருவாக உபயோகிக்கின்றனர். இவ்வெருதென்னைக்கு அதிக பலனை உண்டுபண்ணும். பச்சையாகவிருக்கும் இச்செடியைத் துண்டு துண்டாக நறுக்கி முட்களை நீக்கி, ஆடுமாடுகளுக்குக் கொடுக்கின்றனர். நல்லவெய்யிற் காலத்தில் ஆடுகள் சிலசமயங்களில் இதைத் தாமேதின்னுகின்றன. யாமேவிரும்பிக் கொடுக்கும் வேளைகளில் அவ்வுணவை இலக்ஷியஞ் செய்வதில்லை. பருத்தி விதையுடன் கலந்து கொடுப்பின் ஆடுமாடுகள் விருப்புடன் தின்னும். நாகதாளிப்படையினால் முற்றும் போஷிக்கப்பட்ட ஆடுமாடுகள் மிகவும் பலயீன மாகவே யிருக்கின்றன. ஓங்கோலில் 1908ம் வருஷம் நடந்த மிருகக் காக்ஷிக்கு, நாகதாளியே ஆகாரமாகக் கொண்டிருந்த இரண்டு நாற்காலிகள் கொண்டு வரப்பட்டன. அவைகள் நிற்பதற்கும் சக்தியற்றன வாயிருந்தன. அவ்விரு பிராணிகளைப் பார்த்த ஜனங்கள் அது முதல் தமது ஆடுமாடுகளுக்கு இச்செடியை உணவாகக் கொடுக்கும் வழக்கத்தை அறவே விட்டு விட்டார்கள். நிற்க.

பழத்தினால் யாது பயன் என்று விசாரிக்கையில் கிராமங்களிலுள்ள ஏழை ஜனங்கள் கருப்புக் காலத்தில் முட்களை நீக்கித் தின்பதாகத் தெரியவருகிறது. அதுவுமன்றி அப்பழத்தினால் ஒருவகை ஜலரூபமான மருந்து, செய்யப்படுவதாகவும் அதனால் சில வகை இருமல் குணப்படுவதாகவும் தெரிகின்றது. தலைமயிர் வளர்வதற்குச் செய்யுந் தயிலங்களிலும் இப்பழம் சேருகின்றது. மற்றகனிகளைப்போல அவ்வளவு பயன்படக்கூடியதல்ல இக்கனி.

NALAN AND PUSHKARAN

நளனும் புஷ்கரனும்

சுயம்வரம்

(24-ம் பக்கத்தொடர்ச்சி)

தமயந்தி நளனையே விரும்பியிருப்பதையும் அவளுக்கு விவாகம் நடக்கப் போகும் நாளையும் நாரதர் காவற்கடவுளராகிய இந்திரன் அக்கினி வாயு யமன் என்னும் இவர்களிடம் அறிவித்தனர். பிறகு அவளுடைய அழகைப் புகழ்ந்து பேசினர். அவள்

அழகு சுமந்திளைத்த வாகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை - மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீப மற்றவளே
காமன் திருவுக்கோர் காப்பு - என்றனர்.

அதைக்கேட்டதும் அவர்கள் மனத்தில் தமயந்தியை மணக்க வேண்டும் என்னும் எண்ணம் உதித்தது. உதிக்கவும் அவர்கள் விதர்ப்பராஜனுடைய பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டு வந்தனர். அப்படிப் புறப்பட்டுவரும் வழியில், தமயந்தியினிடத்தில் தான் போக்கடித்த தனது சிந்தையைத் தேடியெடுக்க விரைந்து செல்பவன் போலத் தேர்மீதேறிசெல்லும் நளனைக் கண்டனர். அவனும் அவர்களைக் கண்டான். கண்டதும் எழுந்து அஞ்சலி செய்தான். நால்வரும் அவன் பணிவினைக் கண்டு மகிழ்ந்து பல ஆசிகள் கூறினர். அதன் பின் "நளமகாராஜனே, எமக்கு உம்மால் ஆகவேண்டிய காரியம் ஒன்றுளது; அதை எம்பொருட்டு முடித்துத்தர விரும்புவையோ?" என்று கீழ்த்திசைக்காவலனாகிய இந்திரன் கேட்டனன்.

அதற்கு நளன், "தேவர்கோவே, தாம்பணிப்பது என்னால் செய்து முடிக்கக் கூடிய காரியமாயிருப்பின் எவ்வாற்றானும் செய்யத்துணிவேன்" என்று வாக்களித்தனன்.

நளன் வாக்களித்த பின்னர் தேவர்கோன், "வீமன் மகளாகிய தமயந்தி என்னும் பெண்ணுயகத்தின் பேரழகினைக் கேட்டு அவளை மணக்க ஆசை கொண்டு எங்களுலகை விட்டு இவண் வந்தோம். வந்த இடத்தில் உம்மைச் சந்தித்தோம். நீர் எம்பொ

ருட்டு அவள்பாலேகி எங்கள் கருத்தினையறிவித்து எங்களில் யாரையாவது மாலை சூட்டும்படி வேண்டவேண்டும்" என்றனன்.

அதைக்கேட்டு மனந்திடுக்கிட்டு "என் கருத்தையறிந்த இத்திசைக்காவலர் அறியாதவர்போல என்னைத் தூதனுப்ப இசைந்தமையால் அதைச் செய்தே தீரவேண்டும்; மேலும் யாமும் அவர்கருத்தினை விசாரியாது வாக்கு மளித்துள்ளோம்" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டு, நாற்பாவினிடத்துப்போய்ப் போய்த்திரும்பும் மூங்கிற் குழல் போலத்தேவர் பணியினிடத்துச் சென்று இளங்கன்னி பால் மீளும் மனத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு, "வானவரேறே, அத்திருநகரின் காவலைக் கடந்து அவள் கன்னிமாடத்துள் எங்ஙனம் நுழைவது? அன்புடன் தெருட்டுதி" என்றுகேட்டான்.

அப்பொழுது விண்ணவர்கோன், ஒரு மறைப்பு மையைக் கொடுத்து "இம்மையை உன் அழகிய நெற்றியில் திலகமாகத்தரித்துக்கொண்டு அவள் மாளிகைக்குள் செல்; உன் உருவம் பிறர் கண்ணிற்படாது" என்று சொன்னான்.

சுரருலகாதிபதி கொடுத்தமையை வாங்கித் தரித்துக்கொண்டு அவர்களிடம் விடைபெற்று, இசைமுகந்து கொண்டு விளங்கும் வாயில்களையும், இயல் தெரிந்த நடுவிடங்களையும், திசைமுகந்தாலன்ன தெருக்களையுங்கடந்து தமயந்தி வசிக்கும் மாடத்துட் சென்றனன்.

அவன் சென்ற சமயத்தில், தமயந்தியினிடத்தில் தாதியர் நளனைப்போல எழுதப்பட்டிருக்கும் படம் ஒன்றினைக்கொண்டு வந்து காட்டி அவனழகைச் சிலாக்கித்துப் பேசிக்கொண்டிருந்தனர். நளமகாராசன் அவர்களெதிரில் நின்று கொண்டு தன்னெற்றியிலிருந்த மறைப்புமையைக் கலைத்தனன். கலைக்கவும் அவனுருவம் தமயந்திக்கும் தாதியருக்கும் தெரிந்தது. இவ்வாறு நளன் தன்னருகிலிருப்பதைக் கண்டும் தமயந்திக்குச் சந்தேகத்திற்கிடமுண்டாய், இத்தனை நேரம் படத்தில் நளனைக் கண்டமையால் அத்தோற்றமே நமக்கிப்படித் தெரிகிறது என்று நிதானித்து, பூங்குவளை தாமரையில் பூத்தாலொப்பப்பார்த்தாள்; தேங்குவளை தன்னிலே செந்தாமரை மலர்ந்தாலொப்ப அவனும் நோக்கினான். பிறகு அவள் நளன் உண்மையிற்றானே நின்றிருப்பதை யறிந்து

நாணங்கொண்டு தாதியரைநோக்கி, "இவர்யார்?" என்று வினவுங்குறிப்போடு பார்த்தாள். அதற்குள் அவள் சிந்தையில் கற்பினால் தாழிடப்பெற்றிருந்த நிறையென்னுங் கதவானது சற்றுத்திறந்தது. திறக்கவும் அவள் மனம் அவனழகிற் சென்று திளைக்கக் கண்ணிற்குப் பணித்தது. பணிக்கவும் நீண்ட கண்கள் நீண்ட அவனழகின் எல்லையைக்காணப்போயின. அழகின் எல்லையைக் காணச் சென்றகண்கள் அழகின் எல்லையைக்காணமாட்டாதனவாய் அதிலேயே பதிந்து கிடக்கவும் அவள் "நமது கண்கள் எல்லையையறிந்து கரையேறுமோ அல்லது அதிலேயே வீழ்ந்திருக்குமோ?" என்று சந்தேகித்துக்கொண்டிருந்தாள்.

இவள் இப்படி அவனழகில் ஈடுபட்டிருக்கையில் தாதியர் நளமகாராசனைப்பார்த்து, "காவல் கடந்து கன்னி மாடத்துள் எங்ஙனம் நுழைந்தீர்? இப்படி நுழையுமாற்றலையுடைய நீவிர் யாவர்? நுமது பேர்யாது? இவண்வரநேர்ந்த காரியம் யாது?" என்று கேட்டனர்.

"தாதியரே, நளன் நிடததேசாதிபதி. திசைக்காவலராகிய இந்திரன், வாயு, அக்கினி, எமன் என்னும் நால்வரும் உங்கள் யசமானியாரிடம் ஒரு வேலையாக அனுப்பினர்; அதனால் யான் இங்குவரநேர்ந்தது" என்று கூறினன் நளன்.

அது கேட்டுத் தாதியர் "எங்கள் தலைவியிடம் அறிவிக்க வேண்டிய விஷயம்யாது?" என்று கேட்டனர்.

கேட்கவும் நளன் திசைக்காவலருள் அந்நால்வரின் சிறப்பைப் பெரிதும் எடுத்துரைத்து அவர்கள் தமயந்தியை மணக்க விரும்புஞ் செய்தியையுங் கூறி, அந்நால்வருள் எவரை மணக்க மனங்கொண்டாலுங் கொளலாமென்றும் மொழிந்தான்.

தமயந்தி நளன் முகத்தை யுற்றுநோக்கிச் சற்று நேரந் தன்னை மறந்து அசைவறநின்று, தெளிந்து நாணங் கொண்டு, அருகிருக்குஞ் சேடியரை நோக்கிச் சிறைப்புறமாகச் சொல்வாள் போல இவ்வாறு சொல்வாளாயினாள். "அரசரேறே, கற்புடை மங்கையொருத்தி தான் விரும்பினவனையே யல்லது கனவிலும் மற்றவரை இச்சிப்பளோ? அவன் தேவனேயாயினும் விரும்பாள். ஒருகால் தான் இச்சித்த புருடன் இசையானாயின் உடனே அக்கினிப் பிரவேசமாவாளே யல்லது வேறுவகை செய்யாள். சகல

கலையும் கற்றறிந்த உமக்குப் பேதையேன் என்சொல்லவல்லே னே!" என்று கூறினாள்.

அதற்கு நளமகாராசன் புன்முறுவல் செய்து, "நீ கூறிய வாக்கியம் நன்று நன்று! நெருப்பில் விழுந்தால் தீக்கடவுளின் இருப்பிடஞ் சேர்ந்தது போலாம். நீரில் விழுந்தால் வருணனோடு இருந்தது போலாம். ஆதலால் நீ முன் கூறிய மொழி பிழுதாகும்" என்று வேடிக்கையாகப்பேசினான்.

அதைக்கேட்ட தமயந்தி அதற்குத் தக்க பிரதியுத்தரஞ் சொல்லத் தெரியாமல் வருத்தமுற்றவள் போற்பிணங்கி, "இவ்வரசன் உண்மையில் நம்பாற் காதல் கொண்டிருப்பவனானால் இவ்வகை வார்த்தையைக் கூறுவனோ? கூறான்" எனத்தன்மனத் தெண்ணிக் கலக்கங் கொண்டு சற்றுச்சும்மாவிருந்தனள். பிறகு தனது வேட்கைமிகவால்

"மாதுற்றமேனி வரையுற்றவில்லி தில்லை நகர்சூழ்
போதுற்றபூம்பொழில்காள்கழிகாளெழிற்புள்ளினங்காள்
ஏதுற்றழிதியென்னீர்மன்னுமீர்ந்துறைவர்க்கிவளோ
தீதுற்றதென்னுக்கென்னீரிதுவோ நன்மைசெப்புமினே."

என்று கேளாதனவற்றையெல்லாம் கேட்பனவாக விளித்துப் புலந்து கூறினாள்.

அப்படிப் புலந்து கூறிநிற்குந் தருணத்தில், முன்னந்தூது சென்ற அன்னம் அச்சமயத்தில் அங்கு வந்தணுகி, "தூது செல்பவர் தங்கள் விதிக்கு மாறுபடாமல் நடப்பதே நன்னெறியாமாதலால் நளமகாராசன் தாக்ஷணிய மின்றிப் பேசியதைப் பற்றி நீ ஐயப்படவேண்டாம்" என்று தமயந்திக்குத் தேறுதல் சொன்னது. அதன் பின்னர் நளமகாராசனைப் பார்த்து, "அரசே, சகலகலையுணர்ந்த நாவலரும் உமது கேள்விக்கு உத்தரங் கூறாரென்றால் இப்பேதை உதகரிப்பளோ? இங்கு நிகழ்ந்த நிச்சயத்தை உம்மைத் தூதனுப்பினோர்க்குச் சொல்லிவிடுவதே நலம்" என்று கூறினது.

(இன்னும் வரும்.)

Madras: Printed at the K. R. Press, and Published by
N. Venkatarayalu & Son, 87 Ramaswamy St., Madras, E.

ஸ்ரீ

சற்குரு

THE REGISTRAR ... JAN 1916 ... MADRAS

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்
மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"—தமிழ்மறை

தொகுதி—உ | 1915ஆ டிசம்பர்மீ | பகுதி— அ

NOTES OF THE MONTH

மதாந்தரக் குறிப்புகள்

நேத்திரோற்சவ பாடம் / Visual Instruction

பம்பாய் கவர்ன்மெண்டார் தமது செகண்டரி பள்ளிகளுக்கும் டிரெயினிங் பாடசாலைகளுக்கும் வேண்டிய விநோத விளக்கிற்காகவும், (Magic lanterns) சித்திரவிக்கிரக திருஷ்டிக்கருவிக்காகவும் * (Stereoscope) 1913 - 14 ஆம்

* Stereoscope என்பதற்குச் சித்திரவிக்கிரக திருஷ்டிக்கருவியென்னும் அரிய மொழிபெயர்ப்பு, கல்வி விளக்கம் (Herbert Spencer's Education) என்னும்மொழிபெயர்ப்பு நூலிலிருந்து எடுக்கப்பட்டது (32-ஆம் பக்கம்). சித்திரவிக்கிரக திருஷ்டிக்கருவி யென்பது ஒளிச்சித்திரத்தால் (Photograph) படம் பிடிக்கப்பட்ட இரண்டு பொருள்களின உருவங்கள் ஒருருப்போலத் தோன்றுவதேயன்றி இயற்கையிலுள்ளபடி கட்டிவிக்கிரகமாகவும் தோன்றச்செய்து காட்டுங்கருவி யென்று விளக்குவர் ஸ்ரீமான் - வி. பி. சுப்பிரமணிய முதலியாரவர்கள்.

வருஷத்தில் சற்றேறக்குறைய இலக்ஷரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். இவ்விநோத விளக்கின் உதவியைக்கொண்டு கனம் டைரக்டரவர்கள் தேசசஞ்சாரஞ்செய்து வருகையில் அறுபதுமுறை உபந்யாசஞ்செய்தனர். உதவி டைரக்டராயிருப்பவர் எலிமெண்டரி உபாத்திகளுக்காக மகாராட்டிரத்தில் (மராத்தியில்) அநேக உபந்யாசங்கள் செய்தனர்.

*   *   *   *   *   *

தத்துவ சாஸ்திரம்
Physical Education

சரீர வியாபாரதத்துவத்தை யறிந்திருத்தல் பூரணவாழ்க்கைக் குரிய சாதனங்களுள் ஒன்றென்பதைச் சந்தேகிப்பவரும் உண்டோ? இருபாலாருள் எத்தனைபேர் முதுமைவரை அரோகதிட காத்திர முடையராக இருக்கின்றார்கள் என்று விசாரிப்பின் முதுவயதுவரை குறையாத திடசுகமுடையார் ஏகதேசமாகவே யிருப்பதாகத் தெரியவருகிறது. தீவிர வியாதிஸ்தர்களையும் தீர்க்கரோகிகளையும், சாமானியபலம் இல்லாரையும், (பிஞ்சிபழுத்தாற்போன்ற) அகாலவயோதிகரையும் கடிகைதோறும் காண்கின்றோம். சுகப்பிரமாணங்களைப்பற்றிய சொற்ப அறிவு இல்லாததனால் தம் வாழ்நாள் வட்டத்தில் பலர் தாமே வியாதியை வருவித்துக்கொண்டு அல்லலுறுகின்றனர். இப்படி விளைத்துக்கொண்ட உபாதியினைப்பு வியாகுலம் காலநஷ்டம் பொருட்சேதம் என்னும் இவைகளை விசேஷமாகப் பாராட்டாது, சுகவீனம், எவ்வளவு அதிகமாக, எல்லாக்கடமைகளையும் நிறைவேற்றுதலில் தடைசெய்கின்றது என்பதை மட்டுஞ் சிந்திப்போமாக. அது, காரியங்களைச் சாதித்தலைப் பலமுறைகூடாமையாகச்செய்து எப்போதும் கஷ்டசாத்தியமாக்குகின்றது. அதை யுணர்ந்து நமது காருண்ணியமுள்ள கவர்ன்மென்டார் சுகாதாரப்பாடம் போதித்து வருகின்றனர். அதுவும் போதாதென்று பம்பாயிலுள்ள பார்ஸிடாக்டர்களில் 35 பேர் (8 - பெண்பாலாருட்பட) 1,503 சிறுவர்களின் தேகசுகத்தைப் பரிசோதனை செய்தனர். அச்சிறுவர்களில் 1,265 பேருக்கு ஒவ்வொருவித மான சிகிச்சை அவசியமா யிருப்பதாகத் தெரியவந்தது. இவர்கள் பொருளுதவியை எதிர்நோக்காத கௌரவத்தன்மையை வகித்தவர்கள் எனத்தெரியவருகிறது. பம்பாய் கவர்ன்மெண்டார் செகண்டரி பள்ளிகளில் வயித்தியர் பரிசோதனை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். பம்பாய் இராஜதானியில் இப்பரிசோதனையைப்பற்றிய ஊக்கம் அதிகமாயிருப்பதைப்பார்க்க மிகவும் சந்தோஷமாக விருக்கிறது.

*   *   *   *   *   *

பம்பாயில் இராப் பள்ளிகள்
Night Schools in Bombay

பம்பாய் கல்வியிலாகா அதிகாரிகள் பெருமுயற்சி செய்தும் அவ்விடத்தில் இராப்பள்ளிகள் விருத்தியாவது வெகு கஷ்டமாக வேகாணப்படுகின்றது. இப்பள்ளிகள் நன்றாகச் செழிக்கும் பொருட்டுப் பிரதிதினம் பாடசாலை இருக்கவேண்டும் என்னும் நியதியை விலக்கி வாரத்திற்கு மூன்றுநாள் பாடசாலை இருந்தாற்போதுமென்றும் தீர்மானித்தார்கள். அப்படித் தீர்மானித்தும் பெரும்பலன் விளைவ

தாகக் காணப்படவில்லை. கிரமமாக அவ்விடத்தில் பாடம் கற்பிக்கக்கூடவில்லை. அப்பள்ளிகளால் அவ்விடத்தில் பயன்பெறுபவர் மகம்மதிய போலீஸ் சேவகர்களே.

*   *   *   *   *   *

காஸ்மீரத்தில் கல்வியாபிவிருத்தி
Education in Kashmir

காச்மீரதேசத்துக் கல்வியிலாகா மந்திரியார் தமது தேசத்தில் சென்ற எட்டு வருஷங்களுக்குள் கல்வி அதிகவிருத்தியடைந்த தென்றும் உபாத்திகளின் சம்பளம் உயர்த்தப்பட்டதென்றும் வேண்டிய இடங்களில் பாடசாலைகட்குக் கட்டடங்கள் அமைத்துக்கொடுக்கப்பட்டதென்றுஞ் சொல்லிப் பெண்கள் கல்வியும் அதிக உச்சத்தினைப்பெற்றதென்றும் மொழிந்தார்.

அல்வூர் மகாராஜா அவர்கள் தமது மந்திரிக்கெழுதிய திருமுகத்தில் தமது தேயத்துச் சிறுவர்களெல்லாம் பிரைமரி கல்வியின் நற்பயனாக நல்வாணிபஞ்செய்தல், விவசாயஞ்செய்தல், சித்திரம் சித்திரித்தல், நல்லொழுக்கமமைந்த குடிகளாகப்பழகல், நற்பணியாளரா யிருக்கமுயலல் என்னும் இவைபோன்ற பிறகாரியங்களைச்செய்து மேன்மையடைதலைப் பார்க்கத் தமக்குப் பெருவிருப்பமு் என்று எழுதினாராம். அம்மன்னவனுடைய திருவுள்ளம் தம்குடிகளுடைய நன்மையை இவ்வாறு நாடுமாயின் அதற்குமாறாக நடக்கவும் இறைவன் விதிப்பனோ?

காச்மீரதேசத்தில் செப்டம்பர் மீ 8உ 9உ கூடிய கல்விக்கழகத்தில் பல நல்ல தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டன. கிராமப்பள்ளிகளுக்குப் பாடபத்ததி தயாரிக்க ஒரு சப்கமிடி நியமிக்கப்பட்டது. பெரிய பட்டணங்களிலுள்ள பள்ளிப்பிள்ளைகளின் தேகாரோக்கியத்தைப் பரிசோதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வெய்யிற்காலத்தில் பள்ளிக்கூடத்து நேரம் குறைந்திருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பெண்களுக்கு வேண்டிய பாடபத்ததியைத் தயாரிக்க வேறொரு சப்கமிட்டி நியமிக்கப்பட்டது. பாலர் வகுப்பில் 30 பிள்ளைகட்கு ஒருபாத்தியும் மற்றவகுப்புக்களில் 40 பிள்ளைகட்கு ஒருபாத்தியும் இருக்கலாமென்னும் தீர்மானமும் ஆதரிக்கப்மட்டது.

*   *   *   *   *   *

கரந்தை தமிழ்ச்சங்கம்
The Karandai Tamil Sangam

கரந்தை தமிழ்ச்சங்கத்தின் நான்காம் வருடோற்சவம் செப்டம்பரில் நடந்தேறியது. அப்பொழுது திவான்பஹதூர் S. R. M. இராமசாமிச் செட்டியாரவர்கள் அக்கிராசனம் வகித்தனர். அச்சமயத்தில் சங்கத்தார் வாசித்தரிபோர்டினால் அவர்கள் தமிழினை வளர்க்க நூற்களை ஆராய்ச்சி செய்ததாகவும், நூல்களை அச்சிடுவதாகவும், மாதாந்தரப்பத்திரிகைகளை நடத்துவதாகவும் தெரியவருகிறது.

அக்கிராசனம் வகித்த செட்டியாரவர்கள் யூனிவர்ஸிடியார் மேற்கொள்ளாது விட்டபாகங்களை யெல்லாம் சங்கத்தார் செய்ய முன்வரவேண்டுமென்றும், சங்கங்கள் ஊர்கள் தோறும் நாடுகள்தோறும் நிலவவேண்டுமென்றும் சொல்லி, ஒருகாலத்தில் தமிழ் உச்சநிலையில் இருந்ததென்றும் அது இப்பொழுது பரிபாலிக்கப்படாது கீழ்நிலையிலிருக்கிறதென்றுங் கூறினார். அதன்பிறகு தமிழானது சென்ற நூற்றாண்டுகளில் இருந்த விதத்தினையும் அவ்வக்காலங்களில் இருந்த நூலாசிரியர்களின் தகுதியையும் அவர்கள் இயற்றிய நூலின் திறத்தையும் அக்காலத்தவர் விவசாயம், இராஜரீகம் முதலியவைகளில் நாகரீகம் பெற்றிருந்த பான்மையையும் எடுத்துக் கூறிச் சொற்பகாலத்திற்கு முன்னர் மடாதிபதிகளால் தமிழ் ஆதரிக்கப்பட்டதையும் அவர்கள் இப்பொழுது இத்தெய்வத்தமிழை அநாதரவாய்விட்டுத் தமது காலத்தினைவேறு வழிகளில் செலவழிக்க நேர்ந்துள்ள காலபேதத்தையுங் குறித்துப்பேசினார். அதன்பின்னர் தமிழுலகங் களிக்க தாமோதரம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை முதலியோர் செய்த அரியபெரிய காரியங்களைக்குறித்தும் புகழ்ந்துபேசினார். அதற்குப்பின்னர் பரோடா மகாராஜா அவர்கள் தொல்காப்பியத்தினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தளிக்கும்படி திருவாங்கூர் பொன்னம்பலம்பிள்ளை யவர்களைத் தேர்ந்தெடுத்தமைக்காக மகாராஜா அவர்களுக்கு வந்தனஞ் செலுத்தவேண்டுமென்று தீர்மானமுஞ் செய்யப்பட்டது.

கனம் செட்டியாரவர்கள் தமிழ் எங்கும் பரவவேண்டு மென்று உள்ளன்புடன் கூறிய ஒவ்வொரு வார்த்தைக்கும் அவர்க்கு வந்தனம் அளிக்கின்றோம்.

*   *   *   *   *   *

An important G. O.
கவனிக்கத்தக்க கவர்மென்ட் ஆர்டர்

குடிகள் ஒற்றுமையோடு வாழும் ஊர்களிலும், கல்வி கேள்வி நிறைந்த கல்விமான்கள் விளங்கப்பெற்ற ஊர்களிலும் கூடிய சீக்கிரத்தில் பஞ்சாயத்து கூடுமென்று கவர்ன்மென்ட் ஆர்டர் ஒன்றினால் தெரியவருகிறது. பஞ்சாயத்து மெம்பர்களின் சங்கியை ஐந்து முதல் பதினாறு வரையில் ஊரின் நிலைமைக்குத்தகுந்தபடி இருக்குமாம். கிராமத்தின் நன்மையை நாடும் பல அலுவல்களை பஞ்சாயத்து மேற்கொள்ளும். அவைகளுள் பாடசாலைக்கட்டட சம்பந்தமான சில விஷயங்கள் ஒருபகுதியாய்த் தோன்றுமாம். இதைக் கேள்வியுற்று யாம் மிகவும்மகிழ்ச்சி அடைகின்றோம்.

*   *   *   *   *   *

FOREIGN NOTES

பிறதேச வர்த்தமானம்

Primary Schools in Scotland
ஸ்காத்லாந்து தேசத்திலுள்ள பிரைமரி பள்ளிக்கூடம்

ஸ்காத்லாந்தில் 1,058,809 பிள்ளைகளுக்கு இடம் அமைக்கும் பிரைமரிபள்ளிகள் 3171 இருக்கின்றனவாம். 1913—14 இல் 843,309 பிள்ளைகள்தாம் பாடசாலைகளுக்குப் போய்க்கொண்டிருந்தனராம். மேலே சொன்ன பள்ளிகளையுடைய கட்டடங்களிற் சில தற்காலத்திய ஏற்பாட்டை அனுசரித்ததாய் இராமையால், வேறு புதுவிதமான கட்டடங்கள் அப்பள்ளிகளுக்காக அமைக்கப்படுகின்றனவாம்.

*   *   *   *   *   *

Nature Study
இயற்கைப்பாடம்

இங்கிலாந்திலுள்ள கல்விக்கழகத்தார் (Board of Education in England) தாம் பிரசுரித்த பிரசுரங்கள் ஒன்றில், இயற்கைப்பாடமானது பாடசாலையைச்சுற்றி அமைந்துள்ள இயற்கைப்பொருள்களைப் பற்றியதாய்ச் சிரமமில்லாமல் இயல்பாய் எழவேண்டு மென்றும், அப்படிப்பட்ட பாடத்தினைப் போதிப்பவர் அவ்வகைக்கல்வியில் தேர்ச்சிபெற்ற நுண்ணறிவுடைய ஆசிரியராய் இருக்கவேண்டு மென்றும் கூறியிருக்கின்றனர். இதனைப் பின்பற்றிப்பாடத்தை நடாத்தின் வெகு சிலாக்கியமாய் இருக்கு மென்று கருதுகிறோம்.

*   *   *   *   *   *

Secondary and Elementary Schools in South Africa
தென் ஆப்ரிகாவிலுள்ள செகன்டரி எலிமென்டரி பாடசாலைகள்

இந்த இருவகைப்பாடசாலைகளையும் ஒரேகட்டடத்தில் நடத்தி வருவதாகத் தெரிகிறது. இதனால் விளையும் பயனாவது இருவகைக் கல்விக்கும் பேதமில்லை யென்று விளங்கச் செய்வதாம். எலிமென்டரி பள்ளியிற் படித்து முடித்தவன் சமீபத்திலுள்ள செகன்டரி பள்ளியிற் படிக்கலாம். லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் அபிப்பிராயம் இருவகைப்பாடசாலைக்கும் பேதமே இடையாதென்பதாம். இவ்விரண்டு கொள்கைகளும் நமது கொள்கைக்குப் பொருத்தமாயிருக்கின்றன.

*   *   *   *   *   *

The Value of Science
சாஸ்திர உணர்ச்சியின் மேன்மை

இங்கிலாந்திலுள்ள கல்விக்கழகத்து மந்திரியார் சாஸ்திர உணர்ச்சியின் மேன்மையைப்பற்றிச் சில நாட்களுக்கு முந்தி தமது ரிபோர்ட்டில் எழுதினார். தேச நன்மைக்காக ஒவ்வொரு பள்ளியிலும் இயற்கை சாஸ்திரத்தைப் போதித்தல் நலமென்றும், சாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்றவர்களுக்குத் தனியாகச் சில பாடங்கள் ஏற்படுத்தி அவர்களைக்கொண்டு அப்பாடங்களைக் கற்பித்தல் நலமென்றுங் கூறினார். அவர் கூறியதின் நோக்கமானது தற்காலத்திய நாகரீகத்துக் கிணங்க நடக்கவேண்டியவர்கள் சாஸ்திரத்தில்தேர்ச்சி பெற்றவர்களா யிருத்தல் வேண்டு மென்பதாம். சாஸ்திர உணர்ச்சியினால் நாடு செழித்தோங்கு மென்பதற்கு ஐயமுமுண்டோ?

*   *   *   *   *   *

SIMPLE MULTIPLICATION

Multiplying Two Numbers less than 100 in the same Range of 10.

சாதாரண பெருக்கல்

நூறு என்னும் எண்ணிற்குக்குறைந்த எண்களிலிரண்டைப் பத்தாம் வரிசையிலுள்ள எண்களைப்போலப் பெருக்கல்

இப்பொழுது 68 என்னும் எண்ணை 65 ஆல் பெருக்கவேண்டுமானால் எப்படிச் சுலபமாகவும் விரைவாகவும் பெருக்கக்கூடும் என்பதனைச் சற்றுக்கவனிப்பாம்:—முதலில் 68 என்னும் எண்ணை 70 என்னும் உயர்ந்த எண்ணாகவாவது மாற்றிக்கொள்ள வேண்டும்; அல்லது 65 ஐ 60 என்றாவது குறைத்துக்கொள்ளவேண்டும்.

(1) (*a*) 68 × 65 என்பதை 70 × 63 ஆகமாற்றி, அதன்பின் 70 இலிருந்து 68 ஐயும் 65 ஐயும் தனித்தனியே கழித்து, அப்படிக் கழித்துவந்த மிச்சமாகிய 2 ஐயும் 5 ஐயும் பெருக்கி, (2 × 5 =) 10 என்னும் பெருக்குத் தொகையை 70 × 63 = 4410 என்னும் பெருக்குத் தொகையோடு (4410 + 10=) கூட்ட 68 × 65 ஐப்பெருக்கினால் வரவேண்டிய 4420 என்னும் பெருக்குத் தொகைவரும்.

(*b*) 68 × 65 என்பதை 70 × 63 ஆக முதலில் மாற்றும்படி சொன்னோமல்லவா? 68 ஐ 70 ஆகவும், 65 ஐ 63 ஆகவும் மாற்றியதற்குப்பதிலாக; 65 ஐ 60 ஆகக் குறைத்துக்கொள்: அதன்பின் (65 இலிருந்து) குறைத்த 5 ஐ 68 ஓடுகூட்டி 73 ஆக மாற்றிக்கொள். அதற்குப் பின்னால் 60 × 73 பெருக்க 4380 வரும். அதனோடு, 60 ஐ விட 68 இல் அதிகமாகத்தோன்றும் 8 ஐ, 60 ஐ விட 65 இல் அதிகமாகக் காணப்படும் 5 ஆல் (8 × 5) என்று பெருக்கி வந்த 40 என்னும் எண்ணைக் கூட்ட (4380 + 40=) 4420 என்னும் பெருக்குத்தொகையே வரும்.

வேறொரு உதாரணம் காட்டுவாம்:— 73 × 78. இதை (1) 70 × 81 ஆல் பெருக்கி வந்த பெருக்குத் தொகையுடன் 24 ஐக் கூட்டலாம். இந்த 24 ஆனது 3 × 8 என்று பெருக்கியதால் வந்த பெருக்குத்தொகையல்லவா? இந்த 3-உம் 8-உம் ஏது என்று கேட்பின் 70 ஐ விட 73 இல் மிச்சமாயிருந்த 3-உம், 70 ஐ விட 78 இல் மிச்சமாயிருந்த 8-உமே என்று கூறுவோம்.

(2) 71 × 80 என்று பெருக்க, வந்த பெருக்குத் தொகையுடன் 14 ஐக்கூட்ட வேண்டும். இந்த 14 என்னும் எண்ணை 80 இலிருந்து 73 ஐயும் 78 ஐயும் தனித்தனியாகக் கழிக்க அதனாற்கிடைத்த 7 ஐயும் 2 ஐயும் பெருக்க, வந்த பெருக்குத்தொகையென்க.

இவ்விருமுறையாலும் நமக்குப் பெருக்குத் தொகையாகிய 5,694 கிடைக்கிறது.

பத்து என்னும் வருக்கத்திற் சேர்ந்த குறைந்த எண்ணைப் பெருக்குவதே சுலபமான மார்க்கம் என்னலாம். எப்படியெனில் 82 × 86 எனப் பெருக்கவேண்டிய அவசரம் ஏற்பட்டபொழுது குறைந்த பத்தாகிய 80 ஐக்கொண்டு 88 ஐப்பெருக்கி. அதன்பின் இறுதி எண்களாகிய 2 ஐ 6 இனாற்பெருக்கி (2×6=) வந்த பெருக்குத் தொகையாகிய 12 ஐயுங் கூட்ட (80 × 88 + 12 = 7040 + 12=) 7052 வரும்.

பெருக்கெண்களீ ஓரினத்தைச் சேராதனவாய்ப் பேதப்பட்டபோதிலும் யாம் இம்முறையைப் பெருக்குத் தொகை கண்டுபிடித்தலில் உபயோகிக்கலாம். அப்படி உபயோகிக்குமுன்னர் குறைந்த எண்ணைவிடப் பெருக்கெண்கள் எவ்வளவு அதிகப்பட்டிருக்கின்றன என்பதனைக் கண்டுபிடித்துக்கொண்டு, அவ்விருபேதங்களையும் பெருக்கிக் கூட்டவேண்டிய அவசியமுண்டு என்பதனை மறவாமல் மனத்தில் பதியவைத்துக்கொள்ளவேண்டும். ஓரினத்தைச் சேராது ஐந்தாம் பத்தில் சேர்ந்த 57 ஐ ஏழாம் பத்தில் சேர்ந்த 74 ஆல் பெருக்கவேண்டுமானால் (57 × 74), 57 ஐச் சிற்றெண்ணான 50 ஆக மாற்றி, குறைத்த 7 ஐ 74 உடன் (74 + 7) கூட்டி 81 ஆக்கி; அதன்பின் 81 ஐ 50 ஆல் (81 × 50) பெருக்க வந்த பெருக்குத்தொகையாகிய 4050 உடன்; 50 ஐ விட 57 இலும் 74 இலும் அதிகமாயுள்ள எண்களாகிய 7 ஐயும் 24 ஐயும் (7×24) பெருக்கி, அதனாற் கிடைத்த 168 ஐ (மேலே பெருக்கி வந்த பெருக்குத்தொகையாகிய 4050 உடன்) கூட்டுவோம். அப்படிக்கூட்டினால் 57 × 74 என்று பெருக்கினால் வரவேண்டிய பெருக்குத்தொகை இப்படிச் சுலபமாகவே வரும். நெருங்கிய இனத்தைச்சேர்ந்த இரண்டு எண்களைப் பெருக்குவது மிகவும் சௌகரியம்.

இம்முறை இரண்டு வகையில் பேருதவியாக இருக்கின்றது:-

1. ஒன்றும் ஸ்தானத்து எண்களிரண்டையுங் கூட்டினால் மொத்தம் 10 வரக்கூடிய பெருக்கெண்களாயிருப்பின் இம்முறை உதவியாயிருக்கின்றது.

இப்பொழுது 63 ஐ 67 ஆல் பெருக்கவேண்டிய அவசரம் ஏற்பட்டால் நம்முறைப்படி 63 ஐ 60 ஆகக் குறைக்கையில் 67 ஆனது 70 ஆக உயருகிறது; நாம் 60 × 70 என்று பெருக்குகிறோம். அதன்பின் அப்படிப் பெருக்கிவந்த பெருக்குத்தொகையுடன், கூட்டினால் 10 வரக்கூடிய ஒன்றும் ஸ்தானத்திலிருக்கும் 3 இனால் 7 ஐப் பெருக்கிவந்த 21 ஐ மேலே காட்டின பெருக்குத்தொகையுடன் (60 × 70 = 4200 + 21 என்று) கூட்டுகிறோம். அப்படிக்கூட்டலால் 4221 வருகிறது. இப்படிச் செய்தற்குப் பதிலாகப் பத்தாம் ஸ்தானத்தில் ஒன்றை உயர்த்தி 6 × 7 என்று போட்டுப் பெருக்கிவந்த பெருக்குத்தொகையாகிய 42 இன் பக்கத்தில்; ஒன்றும் ஸ்தானத்திலிருக்கும் 3 ஐயும் 7 ஐயும் 3 × 7 என்று பெருக்கி வந்த பெருக்குத் தொகையாகிய 21 ஐச்சேர்க்க 4221 என்னும் சரியான விடைவரும்.

இப்படியே 52 × 58 ஐயும் பெருக்கி 3016 என்னும் விடையைப் பெறலாம். முதலில் 5 × 6 என்றும் அதன்பின் 2 × 8 என்றும் எடுத்துத் தனித்தனியே பெருக்கி வந்த பெருக்குத்தொகையை ஒன்றன் பக்கலில் வைக்க விடை சரியாகவேவரும். 5 × 6 = 30 அல்லவா? 2 × 8 = 16 அல்லவா? முப்பதின் பக்கத்தில் பதினாறை வைக்க 3016 ஆகும்.

பெருக்கெண்களில் பத்தாம் ஸ்தானம் பேதப்பட்டபோதிலும் இம்முறை உதவியாகவேயிருக்கும்.

54 × 66 ஐப் பெருக்கிப் பார்ப்போம். முதலில் 5 × 7 என்று பெருக்கி வந்த 35 என்னும் பெருக்குத்தொகையின் பக்கத்தில்; 50 ஐ விட 54 இல் அதிகமாகக் காணப்படும் 4 ஐ, 50 ஐவிட 66 இல் அதிகமாகக் காணப்படும் 16 இனால் பெருக்க (4 × 16 என்று பெருக்க) வந்த 64 ஐ எடுத்தெழுத 3564 வரும். ஒன்றும் ஸ்தானத்திற்காகப் பெருக்கவேண்டிய எண்களைக்கூட்ட மொத்தம் 20 ஆவது கவனிக்கத்தக்கதே. இப்படியே 67 × 73 என்னும்

கணக்கைப் போடுகையிலும் முதலில் 6 × 8; பிறகு 7 × 13 என்றே பெருக்கி 48 இன் பக்கத்தில் 91 எழுத 4891 ஆவதறிக.

இதைச் சாதாரணமாகக் கூட்டலின் தொகையோடு கழித்தலின் தொகையைப்பெருக்க வேண்டுமென்று சுருக்கிக்கூறலாம். அதாவது (70—3) × (70 + 3) அல்லது 4900—9 என்று மேலே சொன்ன கணக்கை (67 × 73 ஐ) போட்டு 4891 என்னும் விடையைப் பெறலாம்.

II. இரண்டு பெருக்கெண்களில் ஒன்றும் ஸ்தானத்து எண்களைக் கூட்ட 5 கிடைத்து, பத்தாம் ஸ்தானம் இரட்டைப் பட்டதாக இருந்தாலும் இம்முறை உபயோகப்படும். உதாரணமாக 62 × 63 என்னுங் கணக்கினை எடுத்துக்கொண்டு (60 × 65) + 6 என்று பெருக்கிக்கூட்டின் 3906 வரும். அப்படியே 41 × 44க்கு உடனே 1804 கிடைக்கும். ஒற்றைப்பட்ட எண்களையும் இப்படியே போடலாம்.

74 × 71 = (70 × 75) + 4 = 5254

72 × 73 = (70 × 75) + 6 = 5256

அப்பியாஸம்

அடியில் வருபவைகட்கு உடனே விடையை யெழுதுக:—

A. (1) 69 × 61
(2) 73 × 77
(3) 84 × 86
(4) 96 × 94
(5) 48 × 42
(6) 45 × 45
(7) 109 × 101
(8) 124 × 126
(9) 127 × 123
(10) 118 × 102

B. (1) 62 × 63
(2) 51 × 54
(3) 42 × 43
(4) 44 × 41
(5) 82 × 83
(6) 84 × 81
(7) 92 × 93
(8) 91 × 94
(9) 104 × 101
(10) 113 × 112

THE MONTESSORI METHOD

மாண்டசாரி அம்மையார் முறை

(95-ம் பக்கத்தொடர்ச்சி)

குளிர்காலத்துப்பாட அட்டவணை

பாடசாலை வேலை காலை 9-மணி முதல் மாலை 4-மணி வரையில் நடைபெறும்.

காலை 9-10-வரவிடுதல்; வர வேற்றல்; சுசியாயிருக்கின்றனரா வென்று கவனித்தல்; பிழைக்கும் வழிகளில் அப்பியசித்தல். முன்றுங்கி தரித்துக் கொள்வதில் ஒருவருக்கொருவர் உதவி புரியப்பார்த்தல். பாடசாலையின் ஒவ்வொரு அறையிலுமுள்ள சாமான்கள் தூசடிக்கப்பட்டுச் சுத்தமாயும் ஒழுங்காயும் இருக்கின்றனவா என்று பார்த்தல். பாஷா ஞானம் பெறும் பொருட்டு சம்பாஷணை; முந்தின நாளில் நடந்தேறிய விஷயங்களைக் குழவிகள் எடுத்துரைத்தல். மத சம்பந்தமான அப்பியாசம்.

10-11. அறிவை அகலப்படுத்தும் அப்பியாசங்கள். பொருட்பாடங்களும் அவற்றிற்கிடையில் இளைப்பாறும் நேரமும்-நாமாவலி (Nomenclature) இந்திரியாபி விருத்தியைக்குறித்த அப்பியாசங்கள்.

11-11-30. சுலபமான தேகாப்பியாசப்பாடம் - பொறுமையுடன் உலாவுதல்; சரீரத்தினைக்கிரமப்படி (அசைவு கொடுக்காமல்) நிறுத்துதல்; ஒழுங்காகவும் நேராகவும் நடந்து செல்லுதல்; சலாமிடல்; அசைவில்லாதிருத்தற்கு முன்னதாகக் கையாட வேண்டிய ஒழுங்குகள்; பொருள்களைப் பொறுமையுடன் சத்தமின்றிக் கீழே வைத்தல்.

11-30-12. பகற் போசனம்; தெய்வ வுபாசனை.

12-1. மனேபீஷ்டப்படி ஆடும் ஆட்டம்.

1—2. வெளிகளில், ஆடும்படி உபாத்திகள் ஏவும் ஆட்டங்களை யாடுதல். வயதேறிய குழவிகள் முறைப்படி சென்று அறைகளையும் அவற்றிலுள்ள சாமான்களையுஞ் சுத்தஞ் செய்து அவைகளை ஒழுங்கு பட எடுத்து வைத்தல்; சம்பாஷணை.

மாலை 2—3. கைத்தொழில்—களிமண்ணினுல் பல் வேறு உருவங்கள் செய்தல்; சித்திரம் வரைவதற்காக இலக்கித்தல்.

,, 3—4. வெளிப்புறங்களி லிருந்து சரீரப்பயிற்சிக்கான வேலைகளைச் செய்தல்; பாட்டுப்பாடுதல். முன்னறிவை விருத்தி செய்யும் அப்பியாசங்களிற் பழகல். செடிகளையும் பூண்டுகளையும் பறவைகளையும் மிருகங்களையும் பார்க்கவும் அவைகளை வளர்க்கவுஞ் செல்லுதல்.

(இன்னும் வரும்.)

NOTES FOR LESSONS ON NARUNTHOGAI

நறுந்தொகை கற்பிப்பதற்கான சில குறிப்புக்கள்

(83-ம் பக்கத்தொடர்ச்சி)

ரூற்பயன்.

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசே கரன்புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னுல்
குற்றங் களைவோர் குறைவிலா தவரே.

['குறைவிலர் தாமே' என்பதும் பாடம்]

அரும்பதங்கள் - சேகரன் - தலைவன் அல்லது கிரீடம் போன்றவன். [இவ்வார்த்தை 'சேகரித்தல்' என்ற தொழிலடியாய்ப் பிறந்தது. சேகரம்—கூட்டம், சேகரித்தல், தலையில் முடிக்கப்படுவன, தலை, முடி என்று பொருள் படும்] களைவோர் - நீக்குவோர் [களைதல்-நீக்குதல், விலக்குதல் : களைத்தல்-இளைப்புறல். இப்பதங்களை வாக்கியங்களில் அமைத்து மாணவர்களுக்குப் பேதத்தினைத் தெரிவிக்கலாம்.] புகல் - சொன்ன [புகல்தல் - சொல்லல்.]

பாட்டின் அருத்தம் பிள்ளைகட்கு விளங்கும் பொருட்டு அவர்களைக் கேட்க வேண்டிய கேள்விகள்:—

1. அதிவீர ராம பாண்டியர் எப்படிப்பட்டவர்?

விடை (1) ஜயத்தைத்தரும் வேலைக்கையிலேந்தியவர், (2)கொற்கை நகரத்தை ஆண்டவர், (3) தமது பாண்டிய குலத்துக்குக் கிரீடம் போன்றும் விளங்கினவர்.

2. நீதி நூலை நாம் ஏன் பாராயணஞ் செய்ய வேண்டும்? [விடை - நமது அஞ்ஞானத்தைப் போக்குவதற்குப் பாராயணஞ் செய்ய வேண்டும்.] (பாராயணம் - கிரமமாக ஓதுதல்)

அதிவீரராம பாண்டியர் அநேகந்தமிழ் நூல்களைக் கற்றுணர்ந்து, அவற்றின்கண் காணுறும் நீதிகளைத் திரட்டி நறுந்தொகையென்னும் நூலை இயற்றினர். சன்மார்க்க முறைப்படி உலக வாழ்க்கையினை நடத்துவதற்கு வேண்டிய போதனையெல்லாம் இந்நூலில் இருத்தலால், அதைக் கற்றுணர்ந்தோர் ஒரு குறையுமில்லாதவராவர்.

நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை-நல்ல தமிழில் எழுதப்பட்ட நூல்களை வாசித்து, அவற்றிற் கண்ட நல்ல நீதிகளைத் தேர்ந்தெடுத்து, திரட்டி நறுந்தொகை யென்று பெயர் சூட்டப்பெற்ற நூல் என்று பொருள் படும்.

(உ-ம்) படுத்து நித்திரை பண்ணினுன்' என்று மிகை படக் கூறுது, 'படுத்தான்' என்று கூறுவது போல, இங்கு 'தெரிந்த' என்று சுருக்கமாய்க் கூறப்பட்டிருக்கிறது.

(இன்னும் வரும்.)

FEMALE EDUCATION
பெண் கல்வி

இங்கிலாந்தில் சர் உவில்லியம் வெட்டர்பர்ன் (Sir William Wedderburn) என்பவர் இந்தியாவில் பெண்களுக்கான படிப்பைப்பற்றிப் பெரிதும் வாதாடினார். அவரால் நியமிக்கப்பட்ட கமிட்டியார் இந்தியா முழுவதிலும் சப் கமிட்டிகள்' நியமித்து; தேசத்தவர்களின் அபிப்பிராயத்தை விசாரித்தல்; அவர்களுக்குத் தமது தங்கை தமக்கைகளும் பெண்களும் படிக்கவேண்டு மென்னும் அபிப்பிராயம் உண்டோ வென்று கண்டறிதல் முதலிய காரியங்களைச் செய்ய வேண்டு மெனத்தாம் கருதுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். சர் உவில்லியம் வெட்டர்பர்ன் துரையவர்களின் நோக்கம் ஏதாவது ஒரு வித முடிவினைப் பெறுமுன்னர் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தினை அறிய வேண்டுவது மிகவும் அவசியமான காரியமே.

*　　*　　*　　*　　*　　*

பிரம்மஸ்ரீ குண்ணிய சாஸ்திரியாரவர்கள் இந்து பத்திரிகையில் மிகவும் சிலாக்கியமானதும் அநுபவத்திற் கேற்றதுமான சில விஷயங்களை எழுதியுள்ளனர். அவற்றுள் முக்கியமானவை வருமாறு:—

"1. பெண்களுக்கென்று பிரத்தியேகமாய்ப் பரீக்ஷை ஏற்படுத்த வேண்டும்;

2. ஜில்லாக்களிலுள்ள கவர்ன்மென்ட் பெண்கள் பாடசாலைகளை யெல்லாம் உயர்தர கல்வி போதிக்கும் தமிழ்ப்பாடசாலைகள் (Vernacular Continuation High Schools) ஆக மாற்றி அவற்றில் ஆங்கிலத்தினை இஷ்ட பாடம் (Optional Subject) ஆகப் போதிக்க வேண்டும்;

3. இந்த உயர்தரக் கலாசாலைகளை, முடிவு பெறா இரண்டாந்தரப்பாடசாலைகள் (Incomplete Secondary Schools) ஆகப் பாவித்து, மேல் வகுப்புக்களில் வாசிக்க ஐந்து பிள்ளைகள் இருந்தாலும் அவர்கட்கு வகுப்புக்களை ஏற்படுத்த வேண்டும்;

4. சம்பளங் கொடுக்கச் சக்தியுள்ள பெற்றோர்களையுடைய பெண்களிடமிருந்தே பள்ளிக்கூடத்துச் சம்பளத்தினை வசூல் செய்ய வேண்டும்;

5. இப்பாடசாலைகளில் நியமனம் பெறும் உபாத்திகட்குச் சம்பளம் Rs. 25-க்குக் குறைவில்லாதிருத்தல் வேண்டும்;

6. இப்பாடசாலைகட்கு உபாத்திகளாக வருபவர் சித்திரம் வரைதல், தையல் தைத்தல், உடை தைத்தல் முதலியவைகளில் தேர்ச்சி பெற்றவராகவே யிருத்தல் வேண்டும்."

*　　*　　*　　*　　*　　*

சென்ற செப்டம்பர்மீ 4உ யன்று பம்பாயிலுள்ள பெண்மணிகளிற் சிலர் கனந்தங்கிய Mr. தாதாபாய் நவுராஜியவர்களின் 91-வது வருஷோற்சவத்தில் தமக்குள்ள மகிழ்ச்சியை யறிவிக்க அவர் வீட்டண்டை போயிருந்தனர். அப்படிப் போயிருந்த பெண்மணிகளோ இந்திய மகம்மதிய பாரசீக வமிசத்தவர்கட்குப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர்கள். அவர்களுள் Mrs. சரோசின நாயடு அவர்கள் உபசார பத்திரிகை வாசித்தார்கள். அம்முதியவர் பெண் கல்வி விஷயமாக எடுத்துக் கொண்டுள்ள சிரத்தைக்காக அவருக்குப் பெண்களெல்லோரும் வந்தனோபசாரம் புரிந்தனர். அப்பொழுது அவர், "இந்தியாவிலுள்ள மகளிர்க்கும் பெண்களுக்கும் கல்வி போதிக்கும் விஷயத்தைப்பற்றி அரசருடைய இந்திய தேசத்து மந்திரியாகிய (Secretary of State For India) சாம்பர்லெயின் துரையவர்களுக்கு எமது நண்பராகிய சர். உவில்லியம் வெட்டர்பர்ன் துரையவர்களும் வேறு சிலரும் பெருவிண்ணப்ப மொன்று (Memorial) எழுதி யனுப்புகின்றனர். இதனை நம் இந்தியர் தம்முழு மனதோடும் அங்கீகரித்து இதற்குத் துணையாயிருந்து செய்ய வேண்டியதைச் செய்வார்களாகில், பெண் கல்வியை உச்ச நிலைக்கு விரைவுடன் கொண்டு வரத்தக்க நன்மை வெளிவரு மென்று நம்புகிறேன். அப்படி வெளி வருவது எத்தன்மையதாயிருந்த போதிலும் அதனைக்கவனியாது, இந்தியர்களாகிய யாம் இவ்வரிய விஷயத்திற்காக ஒன்று பட்ட மனத்துடன் நம்மாலியன்றவளவு செய்யவேண்டிய முயற்சியை வஞ்சனையின்றி செய்யவே வேண்டும்" என்று கூறினர்.

*　　*　　*　　*　　*　　*

குறிப்பு:—பெண் கல்வி விஷயமாக எழுதப்படும் விஷயங்கள் எம்மால் உவப்புடனும் வந்தனத்துடனும் ஏற்றுக் கொள்ளப்படும். எமது நண்பர்கள் அன்பு கூர்ந்து இது சம்பந்தமாக, மிகுதியாக, விஷயங்களை யெழுதியனுப்புவார்களாயின் இப்பத்திரிகையில் மகளிர்க்கென ஒரு பகுதி பிரத்தியேகமாக விடத்தடையிராது.

INFORMATION FOR OBJECT LESSONS

பொருட் பாடங்களை நடத்துவதற்கான சில குறிப்புக்கள்

PITH

தக்கை

சென்ற செப்டம்பர் மாதத்திய சஞ்சிகையின் 64-ம் பக்கத்தில் தக்கையைப்பற்றிச் சில குறிப்புக்கள் கேட்டிருந்தும் அக்டோபர் நவம்பர் மாத சஞ்சிகைகளில் விடை பிரசுரிக்கப்படாததினால் நண்பர்களெவரும் சிரமமெடுத்து ஆராய்ச்சிசெய்து ஒன்றும் அறிவித்தலர்போலும் எனக்கருதி விவசாய டிபார்ட்மெண்டார் பிரசுரித்திருக்கும் துண்டுப்பத்திரிகைகளினின்றும் கிருஷிகன் என்னும் விவசாய சஞ்சிகையினின்றும் ஒருவாறு சில குறிப்புக்களை எடுத்து எழுதி அனுப்பலானேன்.

தக்கை:—எந்த நிலத்திற்கு உரம் செய்யப்பட வேண்டுமோ அந்த நிலத்திலேயே சாகுபடியுஞ் செய்யப்பட்டு மறு சாகுபடிக்கு உரமாகும்படி மடித்து உழப்படும் பயிர்.

பயிரிடும் வகை :—நெல் அறுவடையான பிறகு வயலை உழுது விதையைக் கைவிதைப்பாய் விதைத்து விதை மூடப்படுவதற்கு இலேசாய் மறு உழவு செய்தால் இது வெகு சிலாக்கியமாய் வளரும். (சொற்ப களருள்ள நிலத்திலும் பயிராகும்.)

2. சாகுபடி செய்திருக்கும் மகசூல் அறுவடை யாவதற்கு சுமார் 7-8-நாட்களுக்கு முன் தண்ணீர் பாய விட்டுப் பயறு சம்பா விளைச்சலில் விதைப்பது போலவும் விதைக்கலாம்.

விதைத்த பிறகு முளைப்பதற்குத்தகுந்த உரம், நெல் அறுவடையான பிறகு பூமியிலிருந்தாலும் அல்லது விதைக்கப்பட்ட பிறகு ஜலம்பாய்ச்சப்பட்டாலும் தகுந்த மழை பெய்தாலும் ஆடு மாடுகள் மேய்ந்து விடாதிருக்கும்படி பாதுகாக்க வேண்டிய வேலையைத்தவிர வேறு யாதொரு விதமான வேலையும் செய்ய வேண்டியதில்லை. முளைத்து ஒன்று அல்லது இரண்டு அடிக்கு

ஒரு செடி கலக்கக்காணப்பட்ட போதிலும் அவைகளே போதுமானவை. ஏனெனில் அவ்வகைப்பட்ட செடிகள் சீக்கிரமாக வளர்ந்து பூமியை மூடி பாவிக்கொள்ளும். முளையாமல் போன விதைகள் அடுத்த மழையில் முளைத்து விடும். அதை மூன்று மாதத்தில் மடித்து உழுது விடலாம், அல்லது 5-6-மாதம் வரையில் வளரவும் விடலாம். வளர்ந்த பிறகு ஆடு மாடுகள் தின்னாது; காரணம், முள்ளுள்ளதாயிருப்பதால்.

தன்மை :—இது கிளைக்கக் கூடியதோடு, புஷ்பித்துக் காய் காய்க்குந் தன்மையுடனுங்கூடியது. சொற்பமுள்ளுள்ளது. அதிகமாகப் பசுந்தழையைக்கொடுக்கும். தண்டு சொற்பநாரும் கழியுமுள்ளதாயிருக்கிறது.

உரத்தின் குணம் :—இந்தப்பசுந்தாள் உரமானது. பூமியில் மடிக்கப்பட்டு அழுகும்போது கொதிப்புண்டாகி, ஏற்கனவே கரைந்து போகக்கூடாத பயிருணவை, கரைந்து போகுந்தன்மையுடையதாக மாற்றி உடனே பயிருக்கு உதவும்படி செய்கிறது. சாகுபடி செய்யப்பட்ட பயிரின் கடுமையான காய்ச்சலையும் நீர்ப்பிடிப்பையும் தாங்கும்.

அனுபவப்பலன் :—காணி 1-க்கு (1 ஏகர்-33 செண்டு), சுமார் 2. பாரம் பிண்ணாக்கு அல்லது நல்ல எருவாய் 15 வண்டி போட்டுப் பயிரிடக்கூடிய நிலத்துக்கு, உரத்திற்கான இத்தக்கைப் பூண்டு உழவு கூலி உட்பட சுமார் ரூ. 4.க்கு மேல் இல்லை. பிண்ணாக்கு வாங்கிப் போட்டால் அதன் கிரயம் சுமார் ரூ. 36 ஆகிறதினால், சுமார் ரூ. 32 லாபமாகிறதோடு, பிண்ணாக்கு வைப்பதைவிட இப்பசுந்தாள் உரத்தினால் மகசூலும் அதிகமாகிறதாகவும் தெரிகிறது.

P. பரிமணப்பல்லவராயர்,
ஹெட்மாஸ்டர்,
போர்டு பெண்பாடசாலை,
வாங்கல், திரிசிராப்பள்ளிஜில்லா,

Kindergarten Teaching
கிண்டர் கார்டன் போதனை

S. N. கிருஷ்ணசாமி ஐயர் என்னும் போர்ட்ஸ்கூல் தலைமை உபாத்தியாயரொருவர் கிண்டர் கார்டன் போதனையைப்பற்றி வியாசம் ஒன்றெழுதி யனுப்பியுளார். அதனை இச்சஞ்சிகையில் வெளியிடுகின்றோம்., அதனைவாசிக்கும் நண்பர்கள் அவ்வியாசத்தைப்பற்றித்தாம் கருதும் அபிப்பிராயத்தினை எழுதித் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம்.

கிண்டர் கார்டன் முறையைப்பற்றி எழுதுகையில்,

"குழந்தைகள் உபாத்தியாயரின் உதவியை எதிர் பாராமல் தமக்குத்தாமே எல்லாவற்றையும் சொல்வதும் செய்வதுமே கிண்டர் கார்டனின் நோக்கமாகும்" என்றெழுதுகின்றனர் எமது நண்பராகிய பரிமணப்பல்லவராயரவர்கள்.

* * * * * *

An Essay on What is Kindergarten and How to Teach Kindergarten Method In Elementary Schools.

கிண்டர் கார்டன் போதனை

கிண்டர்கார்ட்டன் என்பது பிள்ளைகளின் குணங்களை செவ்வையாக அறிந்து அதற்கிணங்க போதிக்கும் முறையே அல்லாமல் வேறல்ல. அதாவது கூடுமான வரையில் குழந்தைகள் தாம் பின்னால் ஒழுங்காய் கற்றுக்கொள்ளப்போகிற எதையும் இப்பொழுது அவர்களுக்கு விளையாட்டாக கற்பிக்க வேண்டுமென்பது முக்கிய கருத்து. குழந்தைகளுக்குக் கற்பிக்கும் காலம் 5-வயது முதல் 7-வயதுக்குள், அதாவது அவர்கள்தங்கள் சுற்றுப்பக்கங்களிலுள்ள பொருள்களைக் கண்ணுற்று அவைகளைத் தெரிந்து கொள்ள ஆசை வைக்கும் காலமே.

(உதாரணமாக ஒரு 4-வயது குழந்தையை பெரிய பட்டணங்களின் கடை வீதிக்கு எடுத்துக் கொண்டு போய் விட்டால் கடைகளில் தொங்க விட்டிருக்கும் சல்லடை, தாம்புக்கயிறு, பல வர்ணமுள்ள சேலை, வேஷ்டிகள் பல தினுசு பழங்கள் முதலியவைகளை அறிய தம் தம் பெற்றோரை அப்பா அது என்ன ? அது என்ன ? என்று இம்மாதிரி கேள்விகள் கேட்க ஆரம்பிக்கின்றனர். இது இயற்கை அறிவு. இந்த இயற்கை அறிவையே அதிகமாக விர்த்தி செய்து அவர்களுக்குப் போதிக்கும்படி கனம்புரோபல் என்னும் ஒரு மகான் இந்த கிண்டர்கார்டன் முறையைப்பற்றி அதிகப் பிரயாசைப்பட்டதாகவும் அதை பிரதேசங்களில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர அநேக புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறாரென்றும் தெரிகிறது.

அவருடைய அபிப்பிராய மென்ன வெனில் குழந்தைகளுக்கு இஷ்டமான பாட்டு ஆட்டம் முதலானவைகளையே ஆதாரமாகக் கொண்டு கல்வி கற்பிக்கப் பட வேண்டுமென்பதே தவிர நன்மை யென்ற தெல்லாம் விளையாட்டிலேயே

இருக்க வேண்டு மென்னும் அபிப்பிராய முடையவராக இருப்பதாகத் தெரிகிறது. தவிர அவர் மேற் சொல்லியிருக்கிறபடி விளையாட்டையே ஆதாரமாகக் கொண்டிருப்பதற்குச் சில காரணங்கள் இருக்கிற தென்று என் புன்மையான அறிவுக்குப்புலப்படுகிறது.

அவையாவன :— சாதாரணமாக இயற்கையாகவே நம் வீட்டுக்குழந்தைகள் களிமண்ணால் அடுப்புப்போட்டும், செம்பு, குடம் முதலியவை செய்தும், மழை பெய்தவுடன் தெருவில் ஓடி மண்ணில் வீடு கட்டி அதற்கு விட்டம் மேல் கூரைமுதலியவைக்கு 2 குச்சியையும் அதையே 2 அறைகளாகவும் ஏற்படுத்தி செத்தை காகிதம் முதலியவற்றால் மேய்ந்தும் விடுகிறார்கள்.

(2) தவிர குழந்தைகள் பொம்மைகளிடத்தில் ஆசையுள்ளவர்களாயும் அதை உடைத்து அதனுள் இருக்கிற வஸ்துவை அறியலா மென்றும் பிறகு ருசியை அறிவதற்காக வாயில் வைத்தும் பிறகு முன் மாதிரி உருவமாக்க பின்னமானவற்றை சேர்த்தும் வைப்பதை நாம் அனுபோகத்தில் கண்டறிந்திருக்கிறோம். மெய், வாய், கண், மூக்கு, செவி - இந்த (ஐந்து) பஞ்சேந்திரியங்களிலும் கண்ணையும் கையையும் சிறுவர்கள் அதிகமாக உபயோகிக்கிறார்கள்.

(3) பொருள்களின் வர்ணங்களைப்பார்ப்பதில் அதிக ஆசையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அதுபற்றியே (Ball Frame) பால் பிரேமில் சிவப்பு மஞ்சள் ஊதா கறுப்பு வர்ணங்களையுடைய மணி கோர்க்கப்பட்டிருக்கின்றன. இதுவு மன்றி அந்த உருவத்தைப்போலத் தாங்கள் எழுதவும் சிறிது பிரயாசைப்படுகின்றனர்.

(4) பாட்டுப்பாடுவதில் சிறுவர்களுக்கு விருப்பம் அதிகமெனக்கருதி புரொபல் என்பவர் சிசு போதனா முறைக்கிணங்க விளையாட்டுக்களையும் கற்பிக்கச் சொல்லுகிறார்.

(5) சிறுவர்களுக்குக் கொஞ்சம் மனரம்மியமாயுள்ள வீட்டையாவது, ஒரு பொருளையாவது அல்லது ஓர் பூஞ்செடி முதலியவற்றையாவது பார்க்க அடிக்கடி பிரியப்படுவோர்களென நினைத்தே வித்யா அதிகாரிகள் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒவ்வொரு பாடசாலைத்தோட்டம் இன்றியமையாத தெனக் கூறியிருக்கின்றனர். புரொபல் மகானின் கொள்கையும் இதுவே. அந்தத் தோட்டம் பாடசாலைக்குச் சமீபமாகவே இருக்க வேண்டும். தவிர பிள்ளைகள் தாவர வளர்ச்சியைப்பற்றிக் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் உபாத்தியாயர் அன்போடு விடையளிக்க வேண்டும். சுருங்கச் சொல்லுமிடத்து உபாத்தியாயரும் பிள்ளைகளில் ஒருவராயிருந்து அவர்களுடன் சம்பாஷணை செய்துகொண்டே தோட்ட வேலை செய்வது உத்தமம். இது போலவே இன்னும் சொல்லியிருக்கிற ஒவ்வொரு கிண்டர்கார்டன் தொழிலிலும் உபாத்தியாயர் பிள்ளைகளுடன் இருந்தே கைத்தொழில் செய்ய வேண்டும்.

கிண்டர்கார்ட்டன் முறையின் சில அம்சங்களாவன:—

(a) பாடங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்துச் சொல்லல்.

(b) பாடம் நடத்தும் பொழுது கூடுமானவற்றை வகுப்பிற்கு நேரில் கொண்டு வந்து காட்டிப் போதித்தல்.

(c) ஒவ்வொரு பொருளின் இயல்பையும் கவனித்தல்.

(d) இயற்கைப்பாடங்களுக்கு ஏராளமான சித்திர ரூபமான படங்கள் மாதிரிகள் முதலியவை ஸ்கூல் ம்யூஸியத்தில் சேகரித்து வைத்தல்.

(e) களிமண் வேலை, ஓலை வேலை, பாசி கோர்த்தல், நூல் வேலை முதலிய கைத்தொழில் செய்தல்.

(f) சாயந்திர நேரம் பிள்ளைகளை மணலில் விளையாடச் செய்தல்.

(g) ஒரு வாரத்துக்குக் குறைந்தது பாடசாலை நேரத்தில் 3 மணி நேரமாவது சித்திரம் எழுத உத்தரவு கொடுக்க வேண்டும். தவிர விடுமுறை நாட்களிலும் எழுதி வரும்படி சொல்வதும் நல்லதே. தவிர கதை சொல்லுதல் பாட்டுப்பாடுதல் தேக அப்பியாசம் செய்தல் என்னும் பாடங்களையும் கவனித்து வர வேண்டும்.

(குறிப்பு) கூடுமானால் பாடசாலையில் சில உயிருள்ள பிராணிகளைப்பழக்கலாம். அப்படிப்பழக்குவதனால் பிள்ளைகள் அந்த பிராணி உட்கொள்ளும் உணவு அதன் சுபாவம் முதலியவற்றை சுலபமாக அறிந்துகொள்ள இடமுண்டு.

குழந்தைகளை அடிக்கடி வஸ்துக்களின் சுபாவத்தைப் பார்க்க வெளியே அழைத்துப்போய் அவர்களுக்கு அவைகளை நேரில் காட்டி, பின்பு அவர்கள் பார்த்து விட்டு வந்த சங்கதியை சித்திர ரூபமாக வரையச் சொன்னாலும் சரி எழுதச் சொன்னாலும் சரியே; அப்போது தான் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு சங்கதியும் ஞாபகத்தில் இருக்கும். குழந்தைகள் தாங்கள் நேரில் பார்த்த சங்கதியை, பார்த்து அறிந்து கொள்வதைவிட புஸ்தகத்தைப்பார்த்து அதன் விஷயங்களை அறிந்து கொள்வது எளிதானதன்று. அவ்விஷயம் முந்திச் சொல்லியிருப்பதற்கு இணையாகவுமாட்டாது.

பாடசாலைகளில் கால அட்டவணை வகுப்பிற்குத் தகுந்தபடியும் பிள்ளைகளின் வயதுக்குத்தக்கபடியும் ஊருக்குத்தக்கபடியும் அமைத்துக்கொள்வது நலம்.

(உதாரணமாக) காலை வேளையில் பிள்ளைகளின் மனம் சுறுசுறுப்புள்ளதாகவும் பரிசுத்தமுள்ளதாகவுமிருக்கும். கணித பாடத்தை இவ்வேளையில் நடத்துவது மிக்க நலம்.

6; 7-வயதுக்குட்பட்ட குழந்தை வகுப்பிற்கு ஒவ்வொரு பாடமும் 25-நிமிஷத்திற்குட்படாமலும் 5-வயது குழந்தைகளுக்கு 15 முதல் 20-நிமிஷத்திற்கதிகப்படாமலும் நடத்த வேண்டும். இடை இடையே தேக அப்பியாசம் 2, 2-நிமிஷம் செய்யச் சொல்ல வேண்டும்.

ஒவ்வொரு பாட ஆரம்பத்திலும் அந்தந்தப் பாடத்துக்குத் தக்கபடி 5-நிமிஷ நேரம் பிள்ளைகளுக்கும் உபாத்தியாயருக்கும் முந்தின நாளில் நடந்திருக்கும் விஷயங்களை சம்பாஷிக்க வேண்டும்.

சம்பாஷணைப்பாடங்கள் ஏதாவது நடந்திருந்தால் அந்த பாடத்துக்குத் தகுந்த சித்திரம் வரையப்பழக்க வேண்டும்.

நல்ல கிண்டர்கார்டன் முறைப்படி நடத்தும் பாடசாலையில் உள்ள உபாத்தியாயர்கள் தங்கள் தங்கள் பாடசாலைகளில் அடியில் சொல்லியிருக்கிற Gift தொழில்களை எளிதில் செய்யப்பழக்கலாம். அவைகளில் திடமானவற்றை ஸ்கூல் மியூஸியத்திலும் வைக்கலாம். அவையாவன:—

சதுர மரக்கட்டைகள்,	கயிறு வைத்தல்,
நீண்ட சதுர மரக்கட்டைகள்,	மணி கோர்த்தல்,
6 வர்ண பந்துகள்,	குச்சி வைத்தல்,
காகிதம் மடித்தல்,	வளையம் வைத்தல்,
விதைவைத்தல்,	பாய் பின்னல்,
மணல் வேலை, நூல் பிரித்து வேலை செய்தல்	முதலியன.

சாதாரணமாக நமீ ஜில்லாவிலும் இன்னும் சில ஜில்லாக்களிலும் அநேகம் பெண் பாடசாலைகளில் சரியான கிண்டர்கார்டன் முறைப்படி பாட்டு, தையல்வேலை, சித்திரம் வரைதல், கோலாட்டம், தேக அப்பியாசம் அதாவது பல வித இங்கிலீஷ் செடிகள் அடங்கிய பாடசாலைத்தோட்டம் பரிபாலித்தல் முதலிய விஷயங்கள் நன்றாகக் கற்றுக்கொடுக்கப்படுகிறதென்று தெரிகிறது. கிண்டர்கார்டன் முறைக்கிணங்க எலிமெண்டரி பாடசாலைகளில் உபாத்தியாயர்கள் செய்யக்கூடியனவும் சேகரித்து வைக்கக்கூடியனவும் பிரயாசைப்பட்டுப் போதிக்க வேண்டியனவும் இவையென்று சென்ற டிசம்பர்மாசத்தில் ஈரோட்டில் நடை பெற்ற Educational Exhibition இல் காட்டிய அநேகம் Exhibits களையும் டிரில்செய்ய வேண்டிய முறையையும் Caution சமயத்துக்குத்தக்கபடி உயர்த்தியும் தாழ்த்தியும் சொன்ன விதத்தையும் எமது நண்பர்கள் அறிவார்கள்.

* * * * * *

S. N. KRISHNASAMI AIYER,
Headmaster, Board Elementary School,
Anumampalli.

FOREIGN NOTES

பிறதேச வர்த்தமானம்

Teachers & Clerical work
உபாத்திகளும் அவர்கட்குள்ள லிகிதர்வேலையும்

இங்கிலாந்து தேசத்திலுங்கூட உபாத்திகள் உபாத்திமைத்தொழிலோடு தமக்குக் கொடுத்திருக்கும் லிகிதர்வேலையைச் செய்ய அவகாசமில்லையென்று முறையிடுதலைக்கேட்க நமது தேயத்து உபாத்திகட்குப் பிரியமிருக்கலாம். இம்முறையீடு நீங்க வழியொன்றும் ஏற்பட்டதாகத் தெரியவாவில்லை. அவர்கள் குறையை நீக்கற்குமாறாக அவர்களால் எழுதியனுப்பப்பட்டு வரும் ரிடர்ன்களில் உண்மையாக உபயோகமாகத் தகுந்த விஷயம் சொடுக்கப்பட்டிருக்கிறதா வென்று அவ்விடத்தில் கவனிக்கிறார்களாம். அவர்கள் அப்படிக்கவனித்து இவ்வுபாத்திகளிடமிருந்து பெறுதற்குக்காரணம் என்னெனின் அவற்றில் காணுறும் சங்கதிகளைப் பெறுதற்கு வேறு எவ்வழியும் சரியாகக் கிடைக்காமையே யென்க.

*   *   *   *   *   *

Primary & Secondary Education
பிரைமரிபடிப்பும் செகண்டரி படிப்பும்

லண்டன் டைம்ஸின் கல்வியனுபந்தத்துள் உக்கிரத்தோடுங்கூடிய ஒரு விஷயத்தின்கீழ் "பிரைமரி படிப்பென்றே ஒரு பெயர் நிலவப்படாது" என்று எழுதப்பட்டுள்ளது. அதைப் பார்ப்பவர் கண்ணுக்கு எழுதினவரின் அபிப்பிராயம் (1) பிரைமரிபடிப்பினை முடித்து செகண்டரி படிப்பினைப் பெற விரும்புபவர் அப்படிப்பினைச் சுலபமாகவும் தம் இஷ்டப்படியும் பெறக்கூடிய தன்மைத்தாக இருக்க வேண்டுமென்று விரும்புவதாகவும்; (2) பிரைமரி பள்ளிகளில் பீ - ஏ முதலிய உயர்ந்த பரீக்ஷையில் தேறின உபாத்திகள் நிறைந்திருக்க வேண்டுமென்று எண்ணுவதாகவும் தோற்றும். அவருடைய தீர்மானச்சீட்டில் "ஹையர் எலிமெண்டரி பள்ளிகளே தலைகாட்டாது ஓடுகின்றன. முடிந்தநிலையில் இப்பிரைமரிபடிப்பு செகண்டரி பள்

ளிகட்குப் போவார்க்கும், [கைத்தொழில் கலாசாலையைச் சார்வார்க்கும், யூனிவர்ஸிடிபடிப்பை அவாவுவார்க்கும் ஆரம்பப்படிப்பினைத் தருவதாயிருக்கிறது. தற்காலத்தில் அப்படிப்பினால் விளையும்பலன் ஒன்றுமில்லை யென்று சொல்லுகிறார்கள். நாகரிகத்திலும் செல்வத்திலும் மிகுந்த இங்கிலாந்து தேசத்திலும் இப்படிப்பினாற் பலன் ஒன்றும் விளையாதபோதிலும் அவர்கள் இப்படிப்பைப்பற்றிக்கொள்ளும் நோக்கங்களைமாத்திரம் சிலாக்கிய முள்ளவைகளாகவே பாராட்டுகிறோம். அவர்களுடைய நோக்கங்கள் 'சற்குரு' வின் 34 - ம் 35 ஆம் பக்கங்களில் காணுறும் விஷயத்தின் நோக்கத்திற்கு ஒத்தே காணப்படுகின்றது என்று யாம்கூறின் மிகையாகாது [என்று நம்புகிறோம்.

*   *   *   *   *   *

Technical Education
கைத்தொழிற் கல்வி

இக்கைத்தொழிற் கல்வியானது இங்கிலாந்தில் வெகு விமரிசையான வகையிற் கற்பிக்கப் படுகின்றது. அங்குள்ளவர்கள் தமது சிறுவர்களைப் பெரிய வியாபாரஸ்தலங்களில் விட்டு வியாபாரத்தொழின் முறையைக் கற்கும்படி செய்கிறார்கள். அவ்வியாபார ஸ்தலங்களிலுள்ளவர்கள் தொழின்முறையைக் கற்கவருபவர்களுக்குத் தொழின் முறையைக் கற்பிப்பதோடு கொஞ்சம் கல்வியையும் கற்பிப்பதாகத் தெரியவருகிறது. இப்படியே விவசாய ஸ்தலங்களிலும் சிறுவர்களுக்கு விவசாயத்தொழில் கல்வியுடன் கற்பிக்கப்படுகின்றது. இச்செய்கை பூனாவில் பம்பாய் விவசாய இலாகாவதிகாரிகள் இளைஞர்களுக்குத் தம்விவசாயத் தன்மையை வகுத்துரைக்கும் விதத்தினை ஞாபகப்படுத்துகின்றது. பூனாவில் விவசாயத்தொழிலில் தேர்ச்சிபெற செல்வர்வீட்டுப் பிள்ளைகள் சென்று விவசாய இலாகாவில் பயிற்சி பெறுகின்றனர். அவர்கள் விவசாயத்தொழிலில் தேர்ச்சிபெறுவது தமது உழுநிலங்களைச் செவ்வையாகப் பண்படுத்தி பயிர்செய்வதற்கும் தாம் விருத்தியடைவதற்குமே. பூனாவிலுள்ள பம்பாய் விவசாய இலாகாதிகாரிகளின் நோக்கங்களும் அவர்கள் விவசாயக் கல்வியைக் கற்பிக்கும் விதங்களும் தேசத்திற்கு நன்மை பயக்கத்தக்க வகையில் தோன்றினதாகக் காணப்படுகின்றன.

QUESTIONS AND ANSWERS

வினு உத்தரம்

Dictation சொல்வதெழுதல்

பிழைகளைக் கரும் பலகையில் எழுதிப் பிள்ளைகளைக் கொண்டு திருத்துவது உசிதமென்று சொல்லுகிறார் ம-௱-௱ஸ்ரீ P. பரிமணப்பல்லவராயர் அவர்கள். இது தான் சரியான முறை யென்று எமக்குத் தோன்றுகிறது. அதற்குக்காரணம் கூறுவாம் :—

(1) தமிழ்ப் 'பதங்களைக் கூட்டுவது', ஆங்கிலேய பாஷையில் கூட்டுவது போல, கண்காட்சி வித்தையன்று. ஆங்கிலத்தில் Reign என்ற வார்த்தையைப் பார்த்தவண்ணமாய்க் கூட்டவேண்டும்; ஒவ்வொரு எழுத்துக் கேற்ற உச்சரிப்பினை உச்சரித்துப் பதத்தினைக் கூட்டி உச்சரிக்க இயலாது. தமிழிலோ எழுத்துகளின் வடிவத்தினையும், உச்சரிப்பினையும், நோக்கத்தினையும் அறிந்ததிலிருந்து ஏழெழுத்துப் பதங்களையும் பாலர் வகுப்புப் பையல் கூட்டுவான். கூட்டும் விதம் மாத்திரம் தெரிந்திருக்க வேண்டும். இது 'ஆக்ஸ்பர்ட்' தமிழ்ப் பாலசிக்ஷையில் நன்றாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

(2) கூட்டும் விதம் எழுத்தின் உருவம், உச்சரிப்பின் பேதம் முதலிய அம்சங்களைக் கரும்பலகையில் தான் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடும். ஒரு பதத்தைச் சரியாக உச்சரிக்க அதன் பாகங்களை அறிந்திருக்க வேண்டும். பதங்களைப் பாகம் பாகமாய்ப் பிரிக்காததனால் தான் பெரும் பாலும் பிழைகள் உண்டாகின்றன. 'பதபாகம்' என்பதனை நன்றாய் கரும்பலகையிற் காட்டலாம். உதாரணமாக - 'ஒட்டியாணம்' என்ற பதத்தின் பாகங்கள் வருமாறு- ஒட் - டி - யா - ணம். பதங்களைப் பிரித்த வண்ணமாய் எழுதுவோன் பிழையற எழுதுவான். சிலபிழைகளைக் கவனித்துப் பார்ப்போம். 'எண்ணை' என்ற பிழைஉச்சரிப்பினுல் வந்தது. ஆகையால் சரியான உச்சரிப்பினைக் கற்பித்துப் பதத்தினை 'எண் - ணெய்' என்று பிரித்துக் கூட்டக் கற்பிக்கவேண்டும். 'இதற்க்கு' என்று பலர் எழுதுகிறார்கள். இதை 'இதற் + கு' என்று பிரித்தால், பிழைதெரியவரும். கடைசிபாகம் 'க்கு' அன்றென்று காட்டலாம். கரும்பலகையிலே சந்தி விதிகளையும் ஆங்காங்கு விளக்கிக் காட்டலாம்.

(3) பாலர்கள் பிழைகளைக் கரும்பலகையிற் காண்பதால் யாதொருதோஷமுமில்லை; ஏனெனில், தமிழில் ஆங்கிலத்திற் போலத் தோற்றத்தின் உதவியாற் பதங்களைக் கூட்டுவது இடையாது. பிழைகளை கரும்பலகையிலிருக்கப் பார்த்து எழுதுபவன் சரியாய் எழுதுவான். பிழைகளைப் பார்ப்பதால் அவன் மனம் சலனமடையாது. ஆங்கிலம் படிக்கும் பையனுக்குப் பிழைகளைக் காட்டவேகூடாது ; அவன் பதத்தின் சரியான உருவத்தினையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அதன் உருவந்தான் மனத்திற் பதிய வேண்டும். இது ஆங்கிலக்கல்விமான்களின் கொள்கை; இக்கொள்கையும் ஆங்கிலத்திற்கே ஏற்றது, தமிழுக்கு ஏற்றதன்று. தமது மாணவர்களின் புத்தகங்களிற் காணும்

பிழைகளை நேயர்கள் எமக்கு அனுப்பி உதவி புரிவார்களாக. பிழைகள் வகுப்பு வாரியாய்த்தனிக் காகிதங்களில் எழுதப் பெறின் நலம்.

* * * * * *

Black Board கரும் பலகை

சுவரையும் பலகையின் மேற்பரப்பையும் எவ்வாறு எழுதத்தகுந்த தன்மையாகச் செய்வதென்று நமது நண்பராகிய பரிமணப்பல்லவ ராயரவர்கள் வினவுகின்றனர். அதற்கு உத்தரம் வருமாறு:—

சுண்ணும்பு கொண்டு எழுதுதற்குப் பலகையை யேனும் சுவரை யேனும், எழுதுதற்குதகந்த கோணியை யேனும் உபயோகிக்கலாம். உபயோகிக்குமுன் இவைகளுக்குக் கறுப்புப் பூச்சுப் பூசவேண்டுமென்பது சொல்லாமலே தெரியும். எப்படிக் கறுப்புப் பூச்சுப் பூசுவது என்பது தான் கேள்வி.

1. கருஞ் சுவராக்குவது:- பூமிமட்டத்திலிருந்து $2\frac{1}{2}$ அடி உயரம்வரை சுவரிலுள்ள சாந்தினைச் சுரண்டி யெடுத்து விட்டுக் கல்தெரியும்படிச் செய்ய வேண்டும். அதன்பின் நாலுநாள் வரையில் விட்டு விட்டுச் சுவரை நனைத்துக் கொண்டே யிருக்கவேண்டும். ஐந்தாம்நாள் ஒருபங்கு சிமிட்டி ஒருபங்கு எரித்த கொட்டாங்கைச்சி இரு பங்கு மணல் என்னும் இவைகளைக் கூட்டவேண்டும். கொட்டாங் கைச்சியைத் தூளாகும் படி எரிக்கப்படாது, கரியை அம்மியில் வைத்து அரைக்கத் தக்க விதமாக எரிக்கவேண்டும். அப்படி எரித்துக் கரியானதை அம்மியில் வைத்து அரைத்துக் கூட்டவேண்டும். இப்படிக் கலக்கப் பட்ட சாந்தினை நனைக்கப் பட்டசுவரில் $\frac{1}{2}$ அங்குல கனத்துக்குப் பூசவேண்டும், அதன் பின் மணலை நீக்கி ஒரு பங்கு சிமிட்டியும் மற்றொரு பங்கு கொட்டங்கைச்சிக் கரியும் கூட்டி இரண்டாவது பூச்சுப்பூச வேண்டும். அதற்குப் பிறகு மெருகுகல்கொண்டு தேய்த்துப் பளபளப்புண்டு பண்ணவேண்டும். இவ்வாறெல்லாம் வேலைசெய்து முடித்தபின்னர் 10 தினம்வரை அதற்கு ஈரமுண்டாக்கிக் கொண்டிருக்க வேண்டும். இந்தப் பத்துத்தினம் கழியும்வரை அதிலொன்றும் எழுதலாகாது.

2. கரும் பலகை:- பிள்ளைகளின் உபயோகத்திற்காகக் கரும்பலகை பண்ணவேண்டுமானுல் அதிகப்பணம்பிடிக்கும்- நல்ல பலகைகளை வாங்கிவந்து அவைகளை நன்றாக இழைப்புளி கொண்டு இழைத்து அதன் பின் நல்ல கறுப்புப்பூச்சு வாங்கிவந்து பூசவேண்டும். பலகைகட்குப் பூசும் கறுப்புப் பூச்சு மெஸ்ஸர்ஸ்லாங்மன்ஸ் கிரீன் கம்பனியாரிடத்தில் நல்லதாகக் கிடைக்கிறது- அவர்கள் டப்பியொன்று ஒரு ரூபாய் வீதம் விற்கிறார்கள். இவர்களுடைய பூச்சினை வாங்கிப் பூசினுல் பலகை நல்ல கரும் பலகை என்னும் பெயரினை ஏற்கும் தன்மையை யடையும்.

கரும்பலகை செய்தற்கு வேறொரு சுலபமான மார்க்கமுமுண்டு- அதாவது நன்றாக இழைக்கப் பட்ட பலகையின் மீது, சென்னை சங்குராமன் செட்டித்தெருவிலிருக்கும் பிளாக்கி அண்டு சன்ஸ் கம்பனியார் விற்கும் இங்கி பவுடரால் இங்கிசெய்து பூசி அதனைக் கரும்பலகையாக்கி எழுத உபயோகிக்கலாம்.

READY FOR SALE

I Volume of "Sarguru" Price Rs. 1.

Apply to :—

N. வேங்கடராயலு அண்டு ஸன்,

புத்தக வியாபாரிகள்,

87, ராமசாமித்தெரு, முத்தியாலுப்பேட்டை, சென்னை.

BOOKS SUITABLE FOR SCHOOL AND HOME READING

			ரூ. அ. ப.
ஸரஸ்வதி ...	...	...	0—2—0
ஸுலோசனை	...	...	0—2—0
இட்டார்க்கு இட்டபயன்		...	0—1—0
ஊக்கமே உயிர்த்துணை		...	0—1—0
கனகாங்கி ...	...	...	0—4—0
பம்பண்ணன்	...	...	0—1—0
மீனாக்ஷி ...	...	...	0—1—0
கண்களின் பயன்	...	...	0—1—0
எறும்பின் அனுபவங்கள்		...	0—2—0
நற்கீரன் ...	...	...	0—1—0
பீஷ்மன் ...	...	...	0—1—6
பரதன் ...	...	...	0—1—0
கௌசல்யாதேவி	...	...	0—2—0
நிலைமைக்குத்தக்கபடி நில்		...	0—1—6
விசித்திர வைத்தியன்...		...	0—2—0
பொன்மான் ...	...	...	0—1—0
கோமளாங்கி ...	...	...	0—1—6
பெரிய மனிதனுடைய பிள்ளை...			0—0—6
இரண்டு நாய்களின் கதை } சிறிய கைதிகள் }		...	0—1—6
அதிசயங்கள்	...	...	0—0—9
உலோகங்களின் உபயோகம் ...			0—1—0

இரண்டு சகோதரர்கள்

அமெரிக்கா யாத்திரை

தென் அமெரிக்காவில் பொன்னும் வெள்ளியும் அதிகமாக உண்டு. அவைகளைக் கண்டெடுத்துப் பாடுபட்டுச் சேர்த்து உபயோகப்படுத்தக் கூடியவர்கள் அந் நாட்டில் அதிகமாக இல்லை. ஆதலால், மற்றத்தேசத்தவர்கள் அங்கேபோய் வேலைசெய்து திரவியம் சம்பாதித்து வந்துகொண்டிருந்தார்கள். அந்தக் கருத்துக்கொண்டு ஐரோப்பா கண்டத்திலுள்ள ஸ்பெயின் தேசத்தாரும் தென்அமெரிக்காவுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அப்படிப் போனவர்களுள் பிசாரோ என்பவன் ஒருவன். அங்கே போய்ச் செல்வவான் ஆகவேண்டும் என்னும் விருப்பம் அவனுக்கு மிகுதியாக இருந்தது.

அவனுக்கு ஒரு தமையன் இருந்தான். அந்தத் தமையன்மீது அவனுக்கு அன்பு அதிகம். அவனிடத்திற்போய்த் தன்கருத்தை வெளியிட்டுத் தன்னுடன் வரும்படி அவனை வேண்டினான்; தனக்குக் கிடைக்கும் திரவியத்தில் பாதி கொடுப்பதாகத் தமையனுக்குச் சொன்னான்.

அந்தத் தமையனுக்கு அலான்சோ என்று பெயர். அவன் எதையும் நிதானமாக ஆலோசிக்கும் வழக்கமுள்ளவன், இருப்பதைக்கொண்டு திருப்தியடைகிறவன்; அவனுக்கு அதிக ஆசை கிடையாது. ஆதலால், தம்பி சொல்லிய வார்த்தையை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஊரைவிட்டுப் பிரயாணப்பட்டு நெடுந்தூரம் கடல்மார்க்கமாகப் போவதில் எத்தனையோ ஆபத்துக்கள் நேரக்கூடும் என்றும், அத்தனை ஆபத்துக்களுக்கும் தப்பிப்போய்ச் சேர்ந்தாலும், தென்அமெரிக்காவில் திரவியம் மிகுதியாக அவனுக்குக் கிடைப்பது நிச்சயமில்லை யென்றும் தம்பிக்குத் தமையன் எடுத்துச் சொன்னான்.

அவ்வளவு சொல்லியும் பிசாரோ கேட்கவில்லை. முடிவில், அவனுடன் தென்அமெரிக்காவுக்குப்போக அலான்சோ இசைக்

தான். ஆனால், அங்கே கிடைக்கும் திரவியத்தில் தனக்குப் பங்கு வேண்டாம் என்றும், தன்னுடைய மூட்டைகளையும் வேலைக்காரர்களையும் கப்பலில் ஏற்றிக்கொண்டுபோகிற சகாயமே தனக்குப் போதும் என்றும் அலான்சோ சொன்னான்.

பிசாரோ என்பவன் தன் சொத்துக்களை விற்று ஒருகப்பல் வாங்கினான். பணக்காரராகவேண்டுமென்று தன்னைப்போல ஆசைகொண்டவர்கள் அனேகரையும் அழைத்துக்கொண்டு பிரயாணப்பட்டான்.

அவனுடன் புறப்பட்ட அலான்சோவோ, சில கலப்பைகள், நிரவு பலகைகள், வேறுசில கருவிகள், கொஞ்சம் தானியம், உருளைக்கிழங்கு மூட்டைகள், வேறு சில கந்தமூலங்களின் விதைகள் ஆகிய இவைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு போனான். கப்பற் பிரயாணம் போவதற்கு இந்தச் சாமான்கள் என்னபயன்படும் என்று பிசாரோ எண்ணினான். ஆயினும், தமையனோடு அதைப்பற்றித் தர்க்கிக்க மனமில்லாமல் வாளா இருந்தான்.

காற்று அனுகூலமாக வீசியது. அவர்கள் எல்லாரும் சௌக்கியமாக யாத்திரை செய்து, கரையேற வேண்டிய துறைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கிருந்து உள்நாட்டுக்குச் சென்று பொன்தேட வேண்டும்.

அவ்விடத்தில் பிசாரோ என்பவன் பிக்காசுகளையும் (இருதலைக் குந்தாலிகள்), சுளுக்குப்பாரைகளையும், பொன்னை வெட்டித் தோண்டியெடுத்து உருக்கிச் சுத்திசெய்வதற்கு வேண்டிய பல வகைக் கருவிகளையும் ஏராளமாக வாங்கிக்கொண்டான். பொற்களத்தில் வேலை செய்வதற்கு அனேகம் வேலைக்காரர்களையும் கூட்டிக்கொண்டான்.

அலான்சோவோ, சில ஆடுகள், நான்கு பருத்த எருதுகள், அவைகளுக்கு வேண்டிய தளவாடங்கள், நிலத்திற்குப் போய்ச் சேருகிறவரையில் அவைகளுக்கு வேண்டிய தீனி ஆகிய இவைகளை மாத்திரம் வாங்கிக்கொண்டான்.

அங்கிருந்து மறுபடி சிறிதுதூரம் கப்பலிலே சென்று, அவர்கள் உத்தேசித்திருந்த இடத்திற்குப்போக வேண்டியிருந்தது. அப்பொழுதும் காற்று அவர்களுக்கு அனுகூலமாக இருந்தது. எல்லாரும் க்ஷேமமாக அமெரிக்காவில் கரையேறினார்கள்.

அப்பொழுது, அலான்சோ என்பவன் தம்பியைப்பார்த்து, "உனக்குச் சகாயமாக ஏதாவது வேலைசெய்யும் பொருட்டே நான் உன்னுடன் வந்திருக்கிறேன். ஆதலால், கடற்கரையிலேயே என்னுடைய வேலைக்காரர்களையும் ஆடுமாடுகளையும் வைத்துக்கொண்டு இருக்கிறேன். நீ போய்ப் பொன்தேடிவா. உனக்கு வேண்டியமட்டும் எடுத்துக்கொண்டு நீ வரும்பொழுது, நானும் உன்னுடன் ஸ்பெயினுக்குத் திரும்பிப்போகச் சித்தமாக இருக்கிறேன்" என்றான்.

தமையன் சொல்லியபடியே பிசாரோ புறப்பட்டுப்போனான். ஆனால், தமையனுடைய கொள்கைகளையும் நடவடிக்கையையும் நினைத்துத் தன்மனத்தில் வெறுப்புக்கொண்டான். தமையனுக்குப் புத்தி இல்லையென்பது அவனுடைய அபிப்பிராயம். தன் அபிப்பிராயத்தை அவன் தன்னுடன் இருந்த தோழர்களிடத்தில் வெளியிட்டான்.

"என் தமையன் நல்ல புத்திசாலியென்றே எண்ணியிருந்தேன். ஸ்பெயினில் இருக்கும்பொழுது அவனுக்கு அந்தப் பெயர் இருந்தது. அவன் புத்திசாலியென்று ஜனங்கள் நினைத்துக்கொண்டிருந்தது தவறு என்பது இப்பொழுது எனக்கு விளங்குகின்றது.

"இதோபாருங்கள்! இங்கே இவன் ஆடுமாடுகளை வைத்துக்கொண்டு பொழுது போக்கப் போகிறான். சொந்த நிலத்தில் தன்னுடைய கிராமத்தில் அமைதியாக இருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கிறானோ என்ன? வெள்ளரிக்காயும் சுரைக்காயும் பயிர் செய்வதைவிட அவனுக்கு வேறு வேலை இல்லையா?

"அவன் எப்படியாவது போகட்டும். நம்முடைய காலத்தை வீண்போக்காமல், நல்லகாரியத்தில் உபயோகிப்போம். வாருங்கள், தோழர்களே! நமக்கு அதிருஷ்டம் இருக்குமானால், ஏராளமான திரவியம் சம்பாதித்து நாம் வாழ்நாளெல்லாம் சுகமடையலாம்" என்று பிசாரோ தன் தோழர்களுக்குச் சொன்னான்.

அங்கிருந்தவர்களெல்லாரும் பிசாரோவின் வார்த்தைகளைக் கொண்டாடி, அவன் எங்கே போனாலும் அவனுடன் தாமும் போகச் சித்தமாயிருப்பதாகக் கூறினார்கள். ஆனால், அப்படி அவனுடன் போனவர்களுள் ஒரு கிழவன் மாத்திரம் தலையை யசைத்

துக் கொண்டு, "உன்தமையன் நீ நினைக்கிறபடி அவ்வளவு முட்டாளாக இருப்பானென்று எனக்குத் தோற்ற வில்லை" என்றான்.

பிறகு, அவர்களெல்லாரும் உள்நாட்டுக்குள் அனேகநாள் பிரயாணம் செய்தார்கள். போகும்வழியில், சிலசமயங்களில் ஆறுகளைக் கடக்கவேண்டியிருந்தது, வேறுசமயங்களில் காடுகளையும் மலைகளையுங் கடக்க வேண்டியிருந்தது. வேறு நல்ல பாதைகள் இல்லை. சில வேளை அவர்கள் வெயிலின் தீக்ஷ்ணத்தினால் தகிக்கப் பட்டார்கள், சிலசமயங்களில் கடுமையான மழையில் நனைந்தார்கள்.

ஆயினும், இந்தக் கஷ்டங்களினால் மனந்தளர்ந்து அவர்கள் பொன் தேடாமல் இருக்க வில்லை. பல இடங்களில் பிரயத்தனஞ் செய்து பார்த்தார்கள். முடிவில், அவர்களுக்கு, நல்லவேளையாக ஓர் இடத்தில் ஏராளமாகப் பொன் கிடைத்தது. அதைக் கண்டவுடன் அவர்களுக்கு உற்சாகம் மேலிட்டது. அந்த இடத்திலேயே அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய கையிலிருந்த உணவுப் பொருளெல்லாம் செலவாகி விட்டது. ஏராளமாகப் பொற்சன்னங்களை வெட்டியெடுத்தார்கள் எனினும், பசியினால் மிகவும் வருந்தினார்கள், ஆயினும், அவர்கள் பிரயத்தனத்தைக் கைவிடாமல், அங்கே கிடைக்கக்கூடிய காய்களையுங் கிழங்குகளையுந் தின்று கொண்டு, வேலை செய்து வந்தார்கள்.

முடிவில், அந்தக் காய்களும், கிழங்குகளும் அருமையாயின. அவர்களுள் அனேகர் வறுமையினாலும் கஷ்டத்தினாலும் மாண்டார்கள். உயிரோடு மிகுந்திருந்தவர்கள், அவ்வளவு கஷ்டமும் நஷ்டமும் பட்டுச் சம்பாதித்த பொன்னைத் தூக்கிக் கொண்டு, நடக்க மாட்டாமல் ஊர்ந்து, அலான்சோ இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் இவ்விதமாக ஓர் இடத்தில் உழைத்துக் கொண்டிருக்கையில், இனி நேரக்கூடியது இன்னதென்று முன்னராக ஊகித்தறிந்த அலான்சோ வேறுகருத்துக்கொண்டு ஊக்கத்துடன் உழைத்து வந்தான். வேளாண்மையில் அவனுக்கு இருந்த தேர்ச்சியினால் அவன் செழிப்பு மிகுந்த விஸ்தாரமான நிலம் ஒன்றைத் தேடிப்பிடித்தான். அவன் கொண்டுவந்திருந்த எருதுகளையும் வேலைக்காரர்களையுங் கொண்டு, அந்த நிலத்தை நன்றாக உழுதான்.

தன் ஊரிலிருந்து கொண்டு வந்திருந்த பலவகை விதைகளை விதைத்து, உருளைக்கிழங்குகளையும் நட்டான். அவைகளெல்லாம், அவன் எண்ணியிருந்ததைவிட அதிகமாகவே, நன்றாகப் பயிராகிச் செழித்துப் பயன்கொடுத்தன. கடலுக்கு அருகிலிருந்த நல்ல புல்வெளியில் அவன் தன் ஆடுகளை மேயவிட்டிருந்தான். ஒவ்வொரு மழியும் இரண்டு குட்டிகள் போட்டிருந்தது.

அதுவன்றி, அவனும் வேலைக்காரர்களும், ஒழிந்தவேளையில், மீன்பிடித்தார்கள். அவர்கள் பிடித்தமீன்களையெல்லாம் உலர்த்தி, கடற்கரையில் அகப்பட்ட உப்பை எடுத்து, அவைகளுக்கு உப்பிட்டு வைத்தார்கள். ஆகையால், பிசாரோ திரும்பிவந்தபோது, அலான்சோ உணவுப் பொருள் ஏராளமாகச் சேர்த்து வைத்திருந்தான்.

பிசாரோவின் வரவை அன்புடன் ஏற்று, அவனுக்கு என்ன லாபம் கிடைத்ததென்று அலான்சோ வினவினான். தனக்குப் பொன் ஏராளமாகக் கிடைத்ததென்றும், ஆனால், தோழர்களில் பலர் மாண்டார்களென்றும், மற்றவர்கள் உணவின்றி வாடிவருந்துகிறார்களென்றும் பிசாரோ பதில் சொன்னான்.

பிறகு, அவன் அலான்சோவைப் பார்த்து, "அண்ணா! இரண்டு நாளாக நான் அன்னமே காணவில்லை. கிழங்குகளையும், மரப்பட்டைகளையும் தின்று உயிர்பிழைத்திருக்கிறேன். உடனே எனக்கு உணவு கொடு" என்று கேட்டான்.

"நாம் வீட்டைவிட்டுப் புறப்பட்ட பொழுது, ஒருவர் மற்றொருவருடைய காரியத்தில் தலையிடக்கூடாது என்று ஏற்பாடு செய்து கொண்டோமல்லவா? அதை ஞாபகப் படுத்திக்கொள். உனக்குக் கிடைக்கும் திரவியத்தில் எனக்குப் பங்கு வேண்டுமென்று நான் ஒருபொழுதும் ஆசைப்படவில்லை. ஆதலால், நான் எவ்வளவோ கஷ்டப்பட்டு ஜாக்கிரதையாகச் சேர்த்து வைத்திருக்கிற உணவுப்பொருள்களில் பங்குவேண்டுமென்று நீ கேட்பது நியாயமோ?

"ஆயினும், உணவுப்பொருள்களுக்குப் பதிலாகக் கொஞ்சம் பொன்கொடுப்பதானால், நான் உனக்கு ஆகாரம் அளிக்கிறேன்" என்று அலான்சோ மிகவும் அமைதியாகப் பதில்சொன்னான்.

இது சகோதரத்தன்மை யன்றென்றும், தன்விஷயத்தில் தமையன் சிறிதும் அன்பில்லாமல் இருக்கின்றா னென்றும் பிசாரோ நினைத்தான். ஆயினும், அவனும் தோழர்களும் பட்டினியினால் வருந்திக்கொண்டிருந் தமையின், அலான்சோ. கேட்பது மிகவும் அநியாயமான விலையாயினும், அதைக் கொடுக்க வேண்டியதாயிற்று. சிறிது நேரத்திற்கெல்லாம், அவர்கள் தம்மிடத்திருந்த பொன்னை யெல்லாம் அலான்சோவுக்குக் கொடுத்து, உணவுப் பொருள்களை வாங்கிக்கொண்டார்கள்.

பிறகு, அலான்சோ தன் தம்பியைப் பார்த்து, "இப்பொழுது காற்று அனுகூலமாக வீசுகின்றது. நாம் வந்த கப்பலில் ஏறி ஸ்பெயினுக்குத் திரும்பிப்போவோம்" என்றான். அந்த வார்த்தையைக் கேட்டவுடனே, பிசாரோவுக்குக் கோபம் மிகுந்து மூண்டது.

"நான் சம்பாதித்த பொருளை யெல்லாம் பறித்தெடுத்துக் கொண்டாய். என்விஷயத்தில் மிகவும் அநாதரவாக இருக்கிறாய். ஆதலால், உன்னுடன் போவதற்கு எனக்கு மனம் இல்லை. இவ்வளவு கன்மனம் வாய்ந்த தமையனுடன் பிரயாணஞ் செய்வதைவிட, மனிதரில்லாத இந்த மணற்காட்டில் மரிப்பதே நன்று" என்று பிசாரோ மனஸ்தாபமாகப் பேசினான்.

இப்படி அவன் இட்டிப்பேசியதற்குக் கோபப்படாமல், அலான்சோ அவனை மிகுந்த அன்புடன் கட்டித்தழுவி,

"பிரியமுள்ள பிசாரோ! நீ இவ்வளவு கஷ்டப்பட்டு, எத்தனையோ ஆபத்துக்களுக்கு ஈடுகொடுத்துச் சம்பாதித்த திரவியத்தை அபகரிக்க வேண்டு மென்று நான் விரும்புவேனா? நான் அப்படித் துராசைப்படுவே னென்று நீ நம்புகிறாயா? உலகத்திலுள்ள பொன்னெல்லாம் பாழாகப்போனாலும் போக விடுவேனே யல்லாமல், என் அருண்மைத்தம்பிக்கு அன்பற்றுத் துரோகம் நினைப்பேனா?

"ஆனால், உனக்குப் பணப்பேய் பிடித்திருக்கிற தென்றுகண்டேன். பொருளாசையினால் நீ முன்பின் யோசியாமல் மூர்க்கமாக வியவகரிப்பதனால் உன்னைத் திருத்தவும், உனக்கு நன்மை செய்யவும் கருத்துக்கொண்டேன். என்னுடைய முன்யோசனை

யையும், உழைப்பையும் நீ இகழ்ந்தாய். எப்படியாவது பொருள் சம்பாதித்து விட்டால், உனக்கு ஒருவிஷயத்திலும் ஒன்றுங்குறைவிருக்காது என்று எண்ணினாய்.

"இப்பொழுது, நீ இவ்வளவு திரவியம் சம்பாதித்துக் கொண்டு வந்திருந்தும், முன்யோசனையும் உழைப்பும் இல்லாவிட்டால், நீ வீணாக அழிந்துபோக வேண்டியதே என்றும், இவ்வளவு செல்வமும் உன்னைக் காப்பாற்றாது என்றும் தெரிந்துகொண்டாயா? இப்பொழுது உனக்கு நல்லபுத்தி வந்திருக்கிறதென்று நினைக்கிறேன். ஆகையால், உன்திரவியத்தை யெல்லாம் திரும்ப எடுத்துக்கொள். அதைச் சரியான வழியில் உபயோகிப்பதற்கு உனக்குப் புத்திவந்திருக்கிற தென்று நம்புகிறேன்" என்று அலான்சோ தன் தம்பியை நோக்கிச் சொன்னான்.

தமையனுடைய பெருந் தன்மையையும், தயாளத்தையுங் கண்டு, பிசாரோவுக்கு ஆச்சரியம் பொங்கிற்று, நன்றிமேலிட்டது. பொன்னைவிட உழைப்பே சிறந்தது என்று அவன் ஸ்வாநுபவத்தினால் தெரிந்து ஒப்புக்கொண்டான்.

பிறகு, அவர்களெல்லாரும் கப்பலேறி ஸ்பெயினுக்குப் பிரயாணப்பட்டார்கள். வழியில், பிசாரோவானவன் தன் தமையனைப் பார்த்து, "இந்தத் திரவியத்தில் பாதி ஏற்றுக்கொள். நீயும் இதை அநுபவிப்பதற்கு உரியவனே" என்று வேண்டினான். அவன் அப்படிச் சொல்லும்பொழுதெல்லாம், அலான்சோ, "உழைத்து வயிறுவளர்க்கச் சக்தியுள்ளவனுக்குப் பொன் வேண்டாம். அவன் பொருள் தேடிவைத்துக்கொள்ள வேண்டிய ஆவசியகம் இல்லை" என்றே பதில் உரைத்து, அந்தத் திரவியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

கப்பற்சிதைவு

அலான்சோ என்பவன் சிறந்த புத்திசாலி; அவன் இல்லாவிட்டால், பிசாரோவும் அவனுடைய தோழர்களும் பட்டினியினால் வருந்தி இறந்திருக்க வேண்டும். ஆனால், ஜனங்கள் குடியில்லாத காட்டுப்பிரதேசத்தில் இருந்ததனால், அவர்களுக்கு இந்தத் துன்பம் நேரிட்டது; இங்கிலாந்து முதலான இடங்களில் இருந்தால், அவர்களுக்கு இந்தக் கதி நேர்ந்திருக்காது; ஏனெனில், அப்படிப்பட்டதேசங்களில் பணம் உண்டானால் ஆகாரம் வேண்டியமட்டும் கிடைக்கும் என்று நீ நினைக்கக் கூடுமெல்லவா?

ஆனல், ஒருமனிதன் இங்கிலாந்திலேயேயாவது, உணவுப் பொருள்களை விலைக்கு வாங்கக்கூடிய வேறு ஊரிலேயேயாவது எப்பொழுதும் இருக்கிருன் என்பது நிச்சயமோ? அப்படியே இருக்கலாமென்று தோன்றக்கூடும். ஆயினும், ஜனங்களே இல்லாத இடங்களும், தானியங்கள் பயிரிடாத இடங்களும் இல்லையா?

இந்தச் சகோதரர்கள் போயிருந்த இடம் அப்படிப்பட்ட தேசங்களில் ஒன்று ஆகும். அப்படிப்பட்டவை உலகத்தில் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. மனித சஞ்சாரமில்லாத இடங்களுக்குப் போகாமல், தன் ஊரிலேயே இருக்கலாமே எனின், கப்பலேறிக் கடலிற் பிரயாணம் செய்யாதிருக்க வேண்டும்.

கப்பலில் யாத்திரைசெய்தால், அது குடிகள் இல்லாத இடத்திற்போய் மோதி உடையக்கூடும். அப்பொழுது, கடலில் விழுந்து சாகாமல் தப்பித்துக்கொண்டாலும், கரைமீது போய்ச் சாப்பாட்டுக்கு என்ன செய்யக்கூடும்? இப்படிப்பட்ட ஆபத்துக்கள் அனேகம் நேர்ந்திருக்கின்றன.

செல்கர்க்கு என்பவன் ஒருவன் கடலிற் பிரயாணம் செய்கையில், கப்பல் சிதைவுண்டு, அனேக வருஷகாலம் ஜனங்களில்லாத தீவு ஒன்றில் வசிக்க வேண்டியதாயிற்று. அங்கே சிலவேளை காய்களையும் கனிகளையும் பறித்துத் தின்பான்; சிலவேளை கிழங்குகளைப் பிடுங்கித் தின்பான். அப்படி ஜீவனம் செய்து வழக்கப்பட்டவுடன், அவனுக்குத் தைரியமும், கைகால்களில் பலமும், சுறுசுறுப்பும் மேலிட்டன. காட்டு ஆடுகளைப் பின்றொடர்ந்து பிடிக்கத் தலைப்பட்டான்.

அந்த நிலைமையில் அவன் சாகாமல் உயிர்பிழைத்திருப்பதே கஷ்டமென்று நாம் நினைக்கக்கூடும். ஆனல், அவன் அங்கே மிகவும் சௌக்கியமாக இருந்தான். அவ்வளவு ஆரோக்கியமாக அவன் வேறு எப்பொழுதும் இருந்ததில்லையாம். காட்டுமிருகங்களையெல்லாம் துரத்திக்கொண்டு ஓடி, அவைகளைப் பிடிக்கக்கூடிய சக்திவாய்ந்திருந்தான்.

வட கடல் வாசம்

இதைவிட அதிசயமான சங்கதி மற்றென்று உண்டு. கடல் யாத்திரை செய்துகொண்டுபோன குடியர்கள் சிலர் ஸ்பிட்ஸ்பர்-

ஸ்ரீ

உபாத்தியாயர்கட் கேனவே உலவிவரும்

மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

" கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் "—தமிழ்மறை

தொகுதி—உ	1916ஹ ஜனவரிமீ	பகுதி— எ.

NOTES OF THE MONTH
மாதாந்தரக் குறிப்புகள்

School Buildings
பாடசாலைக் கட்டடங்கள்

பரோடாதேசத்தில் இன்னும் 2700 எலிமென்டரி பாடசாலைகளுக்குச் சொந்தமான கட்டடம் இல்லையென்று தெரிய வருகிறது. பொக்கிஷசாலையில் வேண்டியவளவு பணம் நிறைந்தவுடன் இப்பள்ளிகட்கெல்லாம் கட்டடங்கள் அமைக்க அவ்விடத்திய கவர்ன்மென்டாருக்குக் கருத்திருப்பதாகத் தெரிகிறது. தமது அபிப்பிராயப்படி அப்பள்ளிகட்கெல்லாம் கட்டடங்கள் கட்டி முடிப்பதானல் வித்தியாலாகாவில் தற்போது செலவிடப்படுந்தொகை இரண்டுபங்கு அதிகப்படுமென்று அவ்வூர் கவர்மென்டார் ஒருவாறு கணக்கிடுகிருர்கள்.

* * * * * *

மேலே சுட்டின ஊரைச்சேர்ந்த கிராமப்பள்ளிகளில் 10 ரூபாய் சம்பளம் பெறும் உபாத்தியாயரும், 12 ரூபாய் சம்பளம் பெறும் உபாத்தியாரும் ஆக இரண்டுவகை உபாத்தியாயர்கள் இருக்கும் பாடசாலைகள் ஒரே ஒரு உபாத்தியாயரைக்கொண்ட பாடசாலைகளைவிட வேலையிற் சிறந்து விளங்குவதாகத் தெரியவருகிறது.

* * *

Our Contributors
சந்தா நேயர்களுக்கு விஞ்ஞாபனம்

எமது 'சற்குரு' பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்யும் நண்பரின் உதவிக்குக் கைம்மாறாக அவர்கள் விஷயத்தினைக்கொண்ட பத்திரிகை யொன்று இனாமாகத் தபாலில் அனுப்பத் தீர்மானித்துள்ளேம். விஷயதானஞ் செய்வோரும் தமக்குள்ள ஐயப்பாட்டினை நீக்கிக்கொள்ளக் கேள்விகள் கேட்போரும் ஆகிய இருதிறத்தாரும் சற்குரு பத்திரிகை இலவசமாக வருதலை எதிர்பார்க்கலாம் - இவ்வாறு சொல்வதால் எல்லோருடைய விஷயங்களையும் வெளியிடுவதாகக் கடமைப்பட்டுள்ளேமென்று கருதற்க. பிரசுரிக்கத்தக்கவை யென்று எமது சிற்றறிவினால் நிச்சயிக்கப்படுவன தான் வெளிவரும்; மற்றவை வெளியேறமாட்டா. விஷயம் எழுதியனுப்புவோர் தாம் அனுப்பும் விஷயத்துடன் ஸ்டாம்ப் அனுப்புவாராகில் பிரசுரிக்காது நிறுத்தும் விஷயத்தினைத்திரும்ப அன்னார்க்கே அனுப்ப இடம் ஏற்படும்.

* * * * * *

Juvenile Smoking
இளைஞர் சுருட்டுப் பிடிக்கும் பழக்கத்தில் தலையிடுதல்

இளைஞர் சுருட்டுப்பிடிக்குந் தீப்பழக்கத்திற் றலையிடுதலைச் சட்டநிர்மாண சபையார் மூலமாகவாவது பிறமுகவாவது தடுக்க, சேலத்து கனம் பிரம்மஸ்ரீ நரசிம்ம ஐயரவர்கள் சென்ற சட்டநிர்மாண சபையில் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டு மென்று பேசினதைக் கேள்வியுற்று பெருமகிழ்ச்சி யடைகின்றாம்.

* * * * * *

Catalogues
வியாபாரச் சரக்குப் பட்டிகள்

எமக்கு விஷயதானஞ்செய்யும் நேயருட் சிலர் வியாபாரச் சரக்குப்பட்டிகளை நமது பள்ளிகளில் ஒருவிதமாக உபயோகிக்கலாமென்று தெரிவிக்கின்றார். பொருள்களை வாங்குதலிலும் கொடுத்தலிலும் கூட்டலோ கழித்தலோ, பெருக்கலோ அல்லது வகுத்தலோ வரின் அதனைப்போட்டுத் தொகையைக் கண்டுபிடிக்கச் சிறுவர் மிகுந்த சிரத்தையுடையவர்களா யிருக்கிறார்களென்பது நம்மெல்லோருக்குந் தெரிந்ததே. ஆனபடியினால் சரக்குப்பட்டிகளில் காணப்படும் விலைகளின் உதவியைக் கொண்டு பலவிதக் கணக்குகளை உண்டுபண்ணி அவைகளைப் போட்டுப்பார்க்கும்படி அவர்களைத் தூண்டலாம். அப்பட்டிகளில் சரக்குகளைக்குறிக்க அவற்றின்படமும், அப்படங்களின் கீழ் விலையும் இருப்பதால் பிள்ளைகளுக்கு இவற்றின் மூலமாகக் கணக்குகள்போட உற்சாகம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. நமது சந்தாநேயர்களில் இவ்வழியை யனுசரித்துக் கணக்கினைக் கற்பித்தவர்கள் இருப்பாராகில் அவர் தம்மனுபவத்தின் பயனை எமக்கறிவிப்பாராக.

இப்பட்டிகளால் கணக்கினைக் கற்பிப்பதேயன்றி சொற்றொடர் நிலையாக்கப் பாடத்திற்கு (Composition lesson) வேண்டிய அப்பியாசங்களையும் கொடுத்துச் சிறுவர்களைக் கடிதம் எழுதும் முறையிலும் பழக்கலாமென்று கருதுகிறோம்.

* * * * * *

Nungambakkum Corporation School
நுங்கம் பாக்கத்து கார்பொரேஷன் பாடசாலை

சென்ற மாதத்தில் கார்பொரேஷன் பாடசாலையாருடைய புதுகட்டடம் திறக்கப்பட்டது. அச்சமயத்து அவ்வூர் முனிஸிபல் கமிஷனராக விளங்கும் ராவ்சாயப் - ஸி. இராமாநுஜம் செட்டியாரவர்கள் அக்கிராசனம் வகித்தனர். அப்பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயராகிய மகாதேவ ஐயரை உள்ளிட்ட ஐந்து உபாத்திகளும் கைத்தொழில் உபாத்தியாயரும் அப்பள்ளியில் வாசிக்கும் 183 பிள்ளைகளும் 38 பெண்களும் அவர்களுடைய பெற்றோர்களிற் சிலரும் வேறு சிலரும் அங்குநிறைந்திருந்தனர். தோத்திரத்துடன் நடந்தேறவேண்டிய சடங்குகள் நடந்தேறியதும் தயாளசிந்தையுள்ள செட்டியாரவர்கள் சிறுவர்களுக்கெல்லாம் வஸ்திரமும் தின்பண்டமுங்கொடுத்துக் களிப்பித்தனர்.

சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராகிய இராம ஐயங்காரவர்கள் ஒவ்வொரு டிவிஷனிலும் சென்னைக் கார்பொரேஷன்காரர் பாடசாலைக்கென ஒவ்வொரு கட்டடம் கட்டிவருகிறார்க ளென்றும் இதுவரை 14 கட்டடங்கள் கட்டிமுடிந்தன வென்றுஞ் சொன்னதோடு பாடசாலை வெகுமுக்கியமாக இருக்கவேண்டிய இடமாகிய நுங்கம்பாக்கத்தில் கட்டடத்தை அமைத்துக்கொடுத்த நன்றி மிகவும் பாராட்டத்தக்கது என்றும் எடுத்துரைத்தார். அதன் பின்னர் இக்கட்டடத்தில் இராப்பள்ளிவைத்து நடத்த கார்பொரேஷன் பிரஸிடெண்ட் உத்தரவு கொடுத்திருப்பதாயுந் தெரிவித்தார்.

ராவ் பகதூர் A. C. பிரணதார்த்திஹர ஐயரவர்கள் கார்பொரேஷன்காரரைப் புகழ்ந்து பேசியதோடு தான் ஐந்து வருடங்களுக்கு முன்னர் 20 டிவிஷன்களிலும் 40 கார்பொரேஷன் பாடசாலைகள் வைத்து நடத்த வேண்டுமென்று செய்துகொண்ட மனுவைப்பற்றியும் எடுத்துரைத்தார். அதன் பின்னர் செட்டியாரவர்களுடைய செல்வம் நல்ல வழியில் விநியோகிக்கப்பட்டுள்ளது என்று மொழிந்தார்.

நுங்கம்பாக்கத்து டிவிஷன் முனிஸிபல் கமிஷனராகிய ராவ்சாயப் இராமாநுஜம் செட்டியாரவர்கள் தமது டிவிஷனிலுள்ள பிள்ளைகளின் கல்வியாபி விருத்தியைக் கவனித்தல்போல ஏனைய டிவிஷன்களிலிருக்கும் முனிஸிபல் கமிஷனர்களும் அவரைப் பின்பற்றிக் கவனிப்பார்களேயானால் சென்னையிலுள்ள பள்ளிக்கூடங்களும் பள்ளிப்பிள்ளைகளும் நல்ல நிலைமையை அடையத் தடையிராதென்று நம்புகிறோம்.

The Poor Schools Society Nungambakum
நுங்கம்பாக்கத்து ஏழைப்பள்ளிகள் சங்கம்

இச்சங்கத்தார் ராவ்சாயப் C. இராமாநுஜம் செட்டியாரவர்களைக்கொண்டு நுங்கம்பாக்கத்துக் கார்பொரேஷன் பாடசாலைக் கட்டடத்தில் இராப்பள்ளி யொன்று திறந்தார்கள். அப்பொழுது N. துரைசாமிராவ் அவர்கள் இராப்பள்ளியின் சரித்திரத்தை யெடுத்துரைத்து அப்பாடசாலையின் பாட அட்டவணையைப் பலருக்கும் வாசித்துக்காட்டி, அவ்வட்டவணையைப்பற்றிய சீர்திருத்தங்களை வந்தவர்களிடமிருந்து தான் எதிர்நோக்குவதாகவும் கூறினார். T. E. வரதாசாரியா ரவர்கள், செட்டியாரவர்களுடைய உதார குணத்தைக்குறித்துப் புகழ்ந்துபேசினார். முடிவில் நுங்கம்பாக்கத்தில் ஆயுர்வேத தருமவயித்தியசாலை யொன்று ஸ்தாபிக்க வழிதேடினால் ஏழைகளுக்கு அநுகூலமா யிருக்குமென்று மொழிந்தார்.

இராப்பள்ளியை வைத்து நடத்த இடந்தந்த பெருந்தன்மைக்காக, அச்சங்கத்தாரும் ஏனையோரும் வந்தனம் அளித்தது சாலாதென்று யாமும் கார்பொரேஷன் பிரஸிடெண்ட் அவர்களுக்கு மனமுவந்த வந்தனம் அளிக்கின்றோம்.

* * * * * *

The Rajah of Pudukotah
புதுக்கோட்டை மகாராஜா அவர்கள்

பிரஜைகள் வந்தனோபசார பத்திரிகை வாசித்தகாலையில் மகாராஜா அவர்கள் பெண்கள் கல்விக்காகத் தாம் வருடந்தோறும் 5000 ரூபாய் கொடுத்துவருவதாகக் கூறினார்.

* * * * * *

Juvenile Offenders
குற்றவாளியாகும் பையல்களின் கோர்ட்

இந்தியா கவர்ன்மெண்டின் கல்வி இலாகாவைச் சேர்ந்தவரும், குற்றவாளிகளாகும் பையல்களுக்கென்று ஒருகோர்ட் ஏற்படும் விஷயமாய், சென்னை கவர்ன்மெண்டில் இதுவரையிற் வேலைபார்த்தவருமான மிஸ்டர் J. H. மெல்வில் என்பவர், குற்றவாளியாகும் பையல்களுக்கென்று கோர்ட் ஏற்படும் விஷயமாய் வங்காளகவர்ன்மெண்டில் வேலைபார்க்கும்படி ஏற்பாடாயிருக்கிறதாகத் தெரியவருவதனால், சென்னை கவர்ன்மெண்டில் ஷை கோர்ட் ஏற்படும் விஷயமாய் என்னதீர்மானமானதோ அறிகிலோம். அவ்விதமே ஏற்பட்டு நடைபெறுமானால் அக்கோர்ட்டுக்குத் தலைவராய்வருகிற உத்தியோகஸ்தர் (உபாத்தியாயர்களைப்போல்) பிள்ளைகளுடன் அதிகமாய்ப் பழகி இயற்கை அறிவைக் கிரகித்து விசாரிக்குந்தன்மை யுடையவரா யிருத்தல் இயல்பு. பையல்களின் கோர்ட்டாகையால் புதுமுறைப்படி போதிக்கும் ஓர் கிண்டர் கார்ட்டன் உபாத்தியாயரைப்போல் இருந்தால் சாலவுஞ் சிறந்து விளங்குமென்று கருதுகின்றோம்.

Female Education
பெண்கல்வி

1915 நவம்பர் 3உ மாலை கோயமுத்தூரில் நடந்த இந்து ஆசார திருத்த சங்கத்தில் உபந்நியாசம் செய்த ஆனரபில். மிஸ்டர் V. S. ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் அவர்கள் பெண்கல்வி விஷயத்தில் பம்பாய் சென்னையைவிட ஏற்ற மடைந்திருக்கிறது எனப்பேசினதாகத் தெரிகிறது. இதற்குக்காரணம் (சென்னையில்) பெற்றோர்கள் தம் சிறுமிகளைக் கல்விச் சாலைக்கு அனுப்பாதிருப்பதெனவே ஒருவாறு சொல்லலாம். பெண்கல்வி அவசியம் என்பதைப்பற்றி மிகத்தெளிவாகப் பிரசுரிக்கப்பட்டுப் பிரகடனமாகிவரும் பத்திரிகைகளைக் கண்ணுறுவார்களேயானால் தமது பெண்குழந்தைகளைக் கல்விச்சாலைக்கனுப்பத் தடையிராதென எண்ணுகின்றோம்.

Postage stamps
தபாற்றலைகள்

சென்ற அக்டோபர் மாதம் 25உ காலை 10 மணிக்கு, சென்னை ஸெண்ட்ரல்தந்தி ஆபீஸில் ஒருதந்தி சமாசாரத்தை அனுப்புவதற்காக, ஜார்ஜ்டவுன் தென்னிந்திய தொழிற்சாலை கம்பெனியில் வேலையிலிருக்கும் மகம்மது இப்றஹீம் என்ற ஒரு மகம்மதியன், முன்னொருமுறை உபயோகிக்கப்பட்ட பழைய தபால் ஸ்டாம்புகளை தந்திசமாசாரப் பாரத்தில் ஒட்டிக்கொடுத்த குற்றத்திற்காக, தந்தி ஆபீஸ் சூபரின்டெண்டெண்ட் அவனைப்பிடித்துப் போலீஸாருக்கு ஒப்புவிக்க, 3-11-15 ல் விசாரணையாகி 6 - மாதக் கடுங்காவற் றண்டனை யடைந்தான். நமது மாணவர்களுக்கு (தபால் தலைகளைப்பற்றிப் பாடம் நடத்தும்போது) இதை எடுத்துரைத்தல் மிகவும் அவசியம்.

அடியில் வருபவை மாதர் மனோரஞ்சினிப் பத்திரிகையிலிருந்து ம-ா-ா-ஸ்ரீ பரிமணப்பல்லவராயரால் எடுத்து அனுப்பப்பட்டவை :—

What the King Emperor has done for Education
நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியும் கல்வி அபிவிருத்தியும்

நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியார் இந்தியாவிற்குவந்து டெல்லியில் தர்பார் கூட்டிவைத்த சமயத்தில்,இந்தியர்களுக்குக் கல்விவிஷயமாக ஆறுகோடி ரூ. செலவழிப்பதாக வாக்களித்ததின் பலனாக, 1913 - 14 ல் 228 பாடசாலைகள் ஆண்பிள்ளைகளுக்காக அதிகமாயிருக்கின்றன ; 69960 ஆண்பிள்ளைகளும் அதிகம் ; இவர்களில் 53528 பேர்கள் இங்கிலீஷ்கற்று வருகிறார்கள். பிரதம கல்விவிஷயத்திலோ விருத்தி அதிக திருப்திகரமா யிருக்கிறது. சென்ற இரண்டு வருஷங்களாகப் பிரைமெரி பாடசாலைகளில் 5,31,375 மாணாக்கர்கள் அதிகமாய்ப் படித்து வந்தார்கள். ஸ்பெஷல் ஸ்கூல்களும் காலேஜ்களும் முன் 6951 இருந்தன, இப்பொழுது 7155 ஆக இருக்கின்றன. 1913-14 ல் லா வக்கீலுக்கு 3877 பேருக்குமேல் படித்து வந்தார்கள். இப்பொழுதோ 4083 பேரிருக்கின்றார்கள். சென்ற இரண்டு வருஷகாலமாக சுதேச பாஷாபிவிருத்தியின் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்ட காலேஜ்கள் 1669. முன் 217 தான் இருந்தன,

கல்கத்தாவில் சென்ற பிப்ரவரிமாதம் 1914ஆ ஒருவைத்திய பாடசாலைக்காக அஸ்திவாரக் கல்போடப்பட்டது. அது முடிந்துவிட்டால் நமது தேசத்துப் பிள்ளைகளுக்கு வைத்தியவிஷயத்தில் இன்னும் அதிக லாபமுண்டு. கைத்தொழில் பாடசாலைகள் 2000 இருக்கின்றன. பெண்கல்வியை விருத்தி செய்வதற்காக அநேக (புதிய) பெண்கள் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. முன் பாடசாலைகளில் - 9,30,645 பேர்படித்துவந்தார்கள். இப்பொழுது, 11,41,318 பெண்மணிகள் படித்துவருகிறார்கள். இதில் அதிக பெண்கள் இருப்பதாகத் தெரிந்தபோதிலும் பள்ளிக்கூடத்துக்குப் போகக்கூடிய பெண்கள் ஜனத்தொகையில் 100 க்கு 6 வீதம்தான் படித்து வருவதாகத் தெரிகிறது. மேற்கூறிய விருத்தி நமது வைஸ்ராய் (லார்டு ஹார்டிஞ்) அவர்களின் ஆளுகையில் உண்டானதே.

* * * * * *

Newspapers in America
பத்திரிகைகளின் அபிவிருத்தி

அமெரிக்காவில் சமாசாரப் பத்திரிகைகளைப் படிப்பவர்கள் மிகவும் அதிகமாம். அங்கு தினசரிப்பத்திரிகை 2471, வாராந்தரப்பத்திரிகை 16169, மாதாந்தரப்பத்திரிகைகளும்மற்றவைகளும் சேர்ந்து மொத்தமாக 21,806 பத்திரிகைகள் இருக்கின்றனவாம். இவைகளையெல்லாம் 5,90,00,000 பேர் பணம் கொடுத்துவாங்கிப் படித்து வருகிறார்களாம். சராசரி அமெரிக்காவில் 4,100 மனிதருக்கு ஒரு பத்திரிகையும், கிரேட்பிரிட்டனில் 4700 பேருக்கு ஒன்றும், பிரான்ஸில் 5900 பேருக்கு ஒன்றும், ஜர்மனியில் 7800 பேருக்கு ஒன்றுமாக இருக்கின்றதாம். (பிறதேசங்களின் சங்கியையை விவரித்து நமது இந்து தேசத்தின் சங்கியையை விவரிக்காது விட்டது விசனிக்கத்தக்கதே.)

* * * * * *

The Young and Morality
நீதிபோதனையும் சிறுவர்களின் குற்றங்களும்

பிள்ளைகளுக்குப் பாடசாலைகளில் இரக்கம் என்ற விஷயத்தை முதலில போதிக்கவேண்டும். பின்பு மரியாதை என்ற விஷயத்தைப் போதிக்கவேண்டும். இவ்விதம் செய்துவருவதில் பேச்சிலும் செய்கையிலும் எண்ணத்திலும் பார்வையிலும் உண்மைபொருந்தியிருக்கவேண்டும். உண்மை, ஊக்கம், அவா என்னும் இவைகள் திரவியத்திற்குச்சமமானவை. இவைகள் தான் கல்விக்கு முக்கிய சாதனம்.

பிள்ளைகள் பாடசாலைகளில் கணக்குப்போடுகையிலும், ட்ரில் செய்யும்பொழுதும், அபிநயப்பாடல்களைச் சொல்லும்பொழுதும், அவர்கள் செய்யும் பிழைகளை உபாத்தியர்களில் அநேகர் கவனித்துத்திருத்த முயலுவதே கிடையாது. இவ்விதம் செய்யாமலிருப்பதால் சிறுபிள்ளைகள் அவ்விதப் பிழைகளைப் பிழைகளென்று தெரிந்து கொள்ளாமல் அவைகளைக் கையாடி வருவார்கள். ஆகையால் அவர்கள் சிறு பிராயத்தில் செய்துவரும் பிழைகளைக் கவனித்து அப்பப்போது திருத்திவந்தால் அவர்கள் அறிவு விருத்தியடையும்.

THE MONTESSORI METHOD

மாண்டசாரி அம்மையார் முறை

(122-ம் பக்கத்தொடர்ச்சி)

இனி யாம் சிறுவரகத்தில் செய்யப்படும் வேலைகளின் தன்மையைச் செவ்வையாக வுணர விசாரிப்பாம். குழந்தைகள் பள்ளிகட்கு வந்ததும் அவர்கள் கைநகம், கழுத்து, காது, முகம், பல், தலைமயிர் முதலிய சுத்தமாக விருக்கின்றனவா என்று பரீக்ஷிக்கப்படுகின்றன. அதன்பின் அவர்களுடைய உடைகிழிந்தேனும் அழுக்காகவேனும் இருப்பின் அந்த இருப்பைக் கவனிக்கும்படியும் அவ்விடத்தார் செய்கிறார்கள். பெற்றோர் குழந்தைகளுடன் வரும்பொழுதுங்கூட இவ்வித காரியங்கள் நடந்தேறுகின்றன. ஆனால் அப்பெற்றோர்களிடத்தில் மாத்திரம் ஒன்றுஞ் சொல்வதில்லை.

சிறுவரகத்தில் சிறார்களை முறைப்படி முழுக்காட்டுதல் செய்தலுமுண்டு. ஒவ்வொரு குழந்தையையும் பிரதிதினம் அவ்விடத்தில் முழுக்காட்டுவது இயலாத காரியம் என்பது தெரிந்ததே. ஆயினும் முகம், கைமுதலியன சுத்தஞ் செய்யும் விதம் நாள்தோறும் வகுப்பில் கற்பிக்கப்படுகின்றது. நம்மவர்கள் செம்பும், அண்டாவும் (அகண்டவாயும்) வைத்திருத்தல்போல அவ்விடத்தார் ஜலம் நிரப்பி வைத்துக்கொள்ள வர்ணம்பூசப்பெற்ற அகன்ற இருப்புச் சட்டியும் (Basin) கூஜாவும் வைத்திருக்கிறார்கள். அப்பாத்திரங்களில் நிரப்பும் ஜலத்தினை முகங்கழுவற்கு உபயோகிக்கு முன்னர் அது சுத்தமுடையதாக விருக்கின்றதா வென்று கவனிக்கிறார்கள். அவ்வாறு சுத்தமாக விருக்குமேல் கண்ணைக் கழுவ அதனை உபயோகிக்கும்படி கூறுகிறார்கள். கண்ணைக்கழுவ உபயோகிக்கும் ஜலம் சுத்தமுள்ளதாக விருக்கவேண்டும் என்பதனை யுணரும்படி சிறுவர்களைச் செய்கிறார்கள். முகம் கழுவுகையில் சோப்பும் ஜலமுங்கொண்டு கழுவவேண்டு மென்பதனையும் விரல்களிலுள்ள நகங்களை மயிர்க்குஞ்சத்தால் சுத்திசெய்ய வேண்டுமென்பதனையும் சிறார்கள் உணரும்படி செய்கிறார்கள். பெரிய மகவுகள் சிறிய மகவுகட்கு இவ்வகைகளில் உதவி புரிகின்றன. எல்லாச் சிறுவர்களும் இவ்விதமாகச் சுத்தஞ்செய்துகொண்ட பின்னர்த் தமது முன்றுங்கியையும் முன் - தொங்கலைத் தரித்துக் கொள்வார்கள்.

அதன் பின்னர் விசாரணைத்தலைவி சிறுவருடன் ஒவ்வொரு அறைகட்குஞ் சென்று மூலைகளிலும் முடுக்குகளிலு முள்ள குப்பைகளையும் தூசுகளையும் போக்கி அறைகளையும் அவற்றிலுள்ள சாமான்களையும் சுத்தப்படுத்துவார்கள். சிறிய அலகுகளையும் தூசடிக்குந் துவாலைகளையும் பற்றும் விதத்தினையும் அதனை உபயோகிக்கும் வகையினையும் சிறுவர்களுக்குப் போதிக்கிறார்கள். அறை

களும் அவற்றிலுள்ள சாமான்களும் சுத்தஞ் செய்யப்பட்டானவுடனே சிறுவர்கள் தத்தம் இடத்திற்போய் அமருவார்கள். அப்பொழுதுதான், தமது பாதமிரண்டும் நிலத்திற்படியவும் கைகள் தம் மெதிரிலுள்ள மேசையின்மீது பொருந்தவும் தலை நிமிர்ந்திருக்கவும் அமைதியுடன் அவர்கள் தத்தம் இடத்தில் இருக்கவேண்டுமென்பது கற்பிக்கப்படுகின்றது. அவர்களை இவ்வாறு இருக்கச் செய்யும் பழக்கத்தால் அச்சிறுவர்கள் நாளடைவில், தமது சரீரம் துலாக்கோல்போலச் சமநிறையுடன் விளங்கவேண்டுமென்பதனையும் ஒருதோளை நிமிர்த்தியும் மற்றொருதோளைத் தாழ்த்தியும், சமனற்ற விதமாகச் சரீரத்தினை நிறுத்தப்படாது என்பதனையும் அறிகிறார்கள். அமைதியாக விருக்குஞ் சிறுவர்களை அத்தலைவி பாட்டுப்பாடும்படி ஏவுகிறாள். உடனே அவர்கள் பாடுதற்கு எழுந்திருக்கிறார்கள். எழுந்ததும் அவர்களைநோக்கி, “நீங்கள் இவ்வித ஆரவாரத்துடன் எழலாகாது. நீங்கள் எழுந்திருக்கையில் ஒருவித சப்தமும் உண்டாகப்படாது. உட்காருகையிலும் சந்தடி செய்யாமலே உட்கார வேண்டும்” என்று போதிக்கிறாள். இதற்குப்பிறகு சிறுவர்களுக்குப் பலவித அப்பியாசங்கள் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் அடிக்கடி சந்தடி செய்யாமலெழுந்து இங்குமங்குஞ் சென்று எடுத்து வரவேண்டிய பொருள்களை மெல்லென எடுத்துவந்து அவைகளை உபயோகிக்க வேண்டிய இடங்களில் வைத்தும் உபயோகிப்பவர்களிடம் கொடுத்தும் சாந்தமாக வைக்கவும் வாங்கவும் கொடுக்கவும் பழகுகிறார்கள். அதன்பின் விசாரணைத்தலைவி சிற்சில குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய்ச் சுத்தமாக விருக்கும் அறைகளையும் சந்தடியில்லாமல் இருக்கும் வகுப்புக்களையும் சுசியுடனிருக்கும் மகவுகளையுங்காட்டி அவைகளைக் கவனிக்கும்படி செய்வாள்.

இவ்வாறு செய்யப்பட்டானதும் சம்பாஷணைப் பாடம் ஆரம்பம் பெறுகின்றது. இச்சமயத்தில் உபாத்தியயினி குழந்தைகளை அருகிலழைத்து அவர்களுடன் கலந்து பேசுகிறாள். அவர்கள் அந்தத்தினத்திலும் அதற்கு முந்திய தினத்திலும் செய்த காரியங்களைப்பற்றியும், ஆடின விளையாட்டுகளைக்குறித்தும் கேள்வி கேட்கிறாள். ஆனால் அவர்கள் குடும்ப விஷயங்களைப்பற்றி யொன்றுங் கேட்பதில்லை. கேள்விகள்கேட்டு அவர்களிடமிருந்து பதில் பெறுவதின் நோக்கம் யாதெனின் நன்றாகப் பேசும்படி அவர்களைப் பழக்கவேண்டும் என்பதே.

(இன்னும்வரும்)

(Miss) C. KOFEL
Superintendent, Alcott Panchama Free Schools, Adyar.

கப்பற்சேதவு

க்கன் என்னும் ஊரை யடுத்த கரையில் தங்கி, அங்கே அனேக வருஷங்கள் இருக்கவேண்டியதாயிற்று. ஸ்பிட்ஸ்பர்க்கன் என்பது வடக்கே நெடுந்தூரத்திற்கு அப்பால் உள்ளது. அங்கே குளிர் மிகுதியால், ஊரெல்லாம் எப்பொழுதும் உறைமழையினாலும் பனிகட்டியினாலும் மூடப்பெற்றிருக்கும்.

அந்தத் தேசத்தில் பயிர்பச்சைகள் விளைவதில்லை; மிருகங்களே கிடையா. இதுவு மல்லாமல், வருஷத்தில் பெரும்பாகம் இருள் மூடியிருக்கும், கப்பல்கள் போய்ச்சேருவதற்கு அனுகூலமில்லை. இதைவிடக் கோரமான தேசம் உண்டோ? ஜீவனஞ் செய்வதற்கு இதைவிடக் கஷ்டமான இடம் உண்டோ?

அப்படியிருந்தும், அந்தக் கஷ்டங்களை யெல்லாம் பொறுத்துக்கொண்டு போராடி, அவ்விடத்தில் நான்குபேர் அனேக ஆண்டுகள் ஜீவித்தார்கள். அவர்களுள் மூவர் பிறகு ஸ்வதேசத்திற்கு க்ஷேமமாகத் திரும்பிவந்தார்கள். அவர்களுடைய விருத்தாந்தம் மிகவும் ஆதிசயமாக இருப்பதனால், அதைச் சுருக்கமாக இங்கே குறிப்போம்.

வடகடலில் பனிமிகுதியால் எப்பொழுதும் பனிக்கட்டிகள் படிந்திருக்கும். அங்கே கப்பல்களுக்கு ஆபத்து அதிகம். கன்மலைபோன்ற பனிக்கட்டிகளின் இடையிற் சிக்கிக் கப்பல்கள் நசுங்கிப்போகக்கூடும்; அல்லது, நாற்புறமும் பனிக்கட்டிகளினாற் சூழப்பெற்று நகர்ந்து செல்லமாட்டாமல் தவிக்கக்கூடும்.

அந்த ருஷியர்களின் கப்பல் போய்க் கொண்டிருக்கையில், திடீரென்று பனிக்கட்டிகள் அதைச் சூழ்ந்துகொண்டன. அது எந்தப் பக்கத்திலும் நகர முடியவில்லை. அது மிகவும் சங்கடமான நிலைமையில் இருந்தது. அப்பொழுது கப்பலில் இருந்தவர்க ளெல்லாருங்கூடி ஆலோசித்தார்கள். கப்பற்காரர்களுள் ஒருவன் அவர்களைப் பார்த்து, “சிறிது காலத்திற்கு முன்னால் மீசன் என்னும் தேசத்தவர்கள் சிலர் மாரிகாலத்தில் இந்தத் தீவில் வசிக்க வெண்ணி மரக்கட்டைகளைக்கொண்டு வந்தார்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன். கரையிலிருந்து சிறிது தூரத்தில் அவர்கள் அந்த மரங்களைக்கொண்டு குடிசையொன்று கட்டினார்கள் என்றும் கேட்டிருக்கிறேன்” என்றான்.

அந்தச் செய்தியைக் கேட்டவுடனே, அந்தக் குடிசை இன்னும் அங்கே இருக்குமாயின், அங்கே போய் மாரிகாலத்தைக் கழிப்பதே தகுதியென்று அவர்களெல்லாரும் தீர்மானித்தார்கள். ஏனெனில், கப்பலிலேயே இருந்தால் அவர்களுக்குச் சம்பவிக்கக் கூடிய ஆபத்து அதிகமென்றும், அதனால் அவர்கள் மாள்வது திண்ணமென்றும் அவர்கள் தெளிவாகக் கண்டார்கள். அப்படித் தீர்மானித்துக்கொண்டு, தங்களுள் நால்வரைப் பொறுக்கி, அந்தக் குடிசையைத் தேடிவரும்பொருட்டும், மற்றேதேனும் ஆதரவு கிடைக்குமோவெனக் கண்டுவரும்பொருட்டும் அவர்கள் அனுப்பினார்கள். குடிசையைத்தேடிப் போனவர்கள் அலெக்சிஸ் இன்காப், ஐவான் இன்காப், ஸ்டீபன் ஸ்காரஸாப், பீடர் பெரியின் என்னும் நால்வராவர்.

அவர்கள் போய்ச் சேரவெண்ணிய கரையில் குடிகளே இல்லாததனால், அவர்கள் அந்த யாத்திரையில் தங்களுக்குவேண்டிய உணவுப் பொருள்களைத் தேடி வைத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. ஏறக்குறைய இரண்டுமைல் தூரம் அவர்கள் உறைநீர்க் கட்டிகளினாலாகிய வரம்புகளின்மீது பிரயாணஞ் செய்யவேண்டியிருந்தது. அந்தக் கட்டிகள் அலைகளினால் உயரக் கிளம்பிக் காற்றினால் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தமையின், அந்த வழி அபாயகரமாயும் கஷ்டமாயும் இருந்தது.

ஆகையால், அவர்கள் தங்கள்தோணியில் அதிகமான சாமான்களை யேற்றித் தோணியின் கனத்தை மிகுத்தால் உறைநீர்க்கட்டிகளின் இடையிற் சிக்கி அமிழ்ந்து அழிவோமெனப் பயந்து வேண்டிய சாமான்களைச் சொற்பமாகவே எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் போகும் பிரயாணத்தின் தன்மையை நன்றாய்ப் பரியாலோசித்து யூகித்தனராதலின், ஒரு துப்பாக்கியும் மருந்துக்குடுக்கையும், குண்டுகளும், கோடரியும், சிறுகப்பரையும், ஒரு மூட்டைமாவும், கத்தியும், சக்கிமுக்கிக்கல்லும், அதற்கு வேண்டிய பஞ்சும், புகையிலைப்பையும், சுக்கானும் எடுத்துக்கொண்டார்கள்.

தமக்கு வேண்டிய வஸ்துக்களை இவ்வாறு சித்தப்படுத்திக்கொண்டு மாலுமிகள் நால்வரும் அந்தத் தீவுக்குப்போய்ச் சேர்ந்தார்கள். அங்கே சம்பவிக்கக்கூடிய ஆபத்துகள் எத்தன்மையன என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்களெல்லாரும் அந்த

நாட்டைச் சுற்றிப்பார்க்கத் தலைப்பட்டார்கள்; சிறிதுநேரத்தில் அவர்கள் உத்தேசித்துப்போன குடிசையைக் கண்டுபிடித்தார்கள்; அது கடற்கரையினின்று ஏறக்குறைய ஒன்றரைமைல் தூரத்தில் இருந்தது. அதன் நீளம் முப்பத்தாறு அடி, உயரம் பதினெட்டு அடி, அகலமும் பதினெட்டு அடியே.

குடிசையென்ற அந்த வீட்டின் உட்புறத்தில் பன்னிரண்டு அடி அகலமுள்ள அறையொன்று இருந்தது. அவ் வறைக்கு இரண்டு கதவுகள் உண்டு; அவைகளி லொன்று வெளிப்புறத்து வாயிலை அடைப்பது, மற்றொன்று உட்புறத்து அறைக்குப் போகும்வழி. அந்தச் சிறிய அறை ஒன்றிருந்ததனால், பெரிய அறையில் தீ மூட்டி வெப்பமுண்டாக்கையில் அந்த வெப்பம் தணியாமல் நீடித்திருப்பதற்கு அனுகூலமாயிருந்தது.

பெரிய அறையில் மண்ணடுப்பு ஒன்று இருந்தது. அது ருஷியாதேசத்துப் பாங்காய்க் கட்டப்பட்டது. அதற்குப் புகைபோக்கி இல்லை. சமைப்பதற்கு உபயோகமாவதன்றி அந்த அறையை வெப்பமாய் வைப்பதற்கும் அந்த அடுப்பு உதவும். அதுவன்றி, குளிர்காலத்தில், ருஷியக்குடிகள் வழக்கமாய்ச் சொல்வது போல, அதன்மீது படுத்து உறங்குவதற்குமாகும்.

அந்த வீட்டைக் கண்டு பிடித்துவிட்டோமென்று நமது ஸாஹஸிகள் நால்வரும் மிகச் சந்தோஷப்பட்டார்கள். அந்த வீடோ வெகுநாளைக்குமுன் கட்டப்பட்டதாதலின், காலக்கொடுமையினால் மிகவும் சிதிலப்பட்டிருந்தது. ஆயினும், அன்றிரவு அவர்கள் அந்த வீட்டிலே கழித்தார்கள்.

மறுநாட்காலையில், தம் காரியம் கைகூடிற்றென்னும் சந்தோஷச்செய்தியைத் தம் நண்பருக்குத் தெரிவிக்கக் கருதி அவர்கள் கடற்கரைக்கு விரைந்து சென்றார்கள். மற்றும், மாரிகாலமெல்லாம் அந்தத் தீவில் கழிப்பதற்கேற்றவாறு உணவுப் பொருள்களையும், துப்பாக்கி மருந்து குண்டு முதலியவைகளையும், அவசியமாயுள்ள வேறு சாமான்களையும் எடுத்துக்கொண்டு வரவேண்டுமென்பது அவர்களுடைய எண்ணம்.

அவர்கள் கரையேறிய துறைக்கு வந்தவுடனே கருங்கடல் விரிந்துகிடப்பதையும், முந்திய தினத்தில் முற்றும் நிறைந்திருந்த உறைநீர்க்கட்டிகள் மாயமாய் ஒழிந்துபோயிருந்ததையும் கண்டு

அவர்களுக்கு எவ்வளவு ஆச்சரியமும் மனோவேதனையும் உண்டாயிருக்குமென்பதை இதனை வாசிப்பவர்களே ஊகித்துக்கொள்ளலாம்.

இரவிற் கிளம்பி யடித்த கடும்புயலினாலே இந்தப் பேராபத்து நேர்ந்திருக்கவேண்டுமென்பது திண்ணம். ஆனால், அவர்களுடைய தோணியை நாற்புறமும் நெருக்கிக்கொண்டிருந்த உறைநீர்க்கட்டிகள் அலைகளின் வேகத்தினாற் சலனமுற்று அந்தத் தோணியின் மீது மோதி அதனைத் தகர்த்தனவோ, அல்லது, அந்தத் தோணியை நடுக்கடலில் அடித்துக்கொண்டுபோய் விட்டனவோ அவர்கள் சொல்ல முடியவில்லை.

அந்தக் கடலில் கப்பல்கள் இவ்விதமாக அடிபட்டுப்போவது வழக்கமே. என்ன ஆபத்து நேர்ந்ததோ என்னவோ, அவர்களுடைய தோணி அங்கே அகப்படவில்லை. பிறகு அதைப்பற்றிய சமாசாரமொன்றும் செவிக்கெட்டாததனால், அது முழுகிப் போயிற்றென்றும், அதனில் இருந்தவர்களெல்லாரும் ஆழ்ந்து அழிந்தார்களென்றுமே நினைக்கவேண்டியதாகும்.

இந்தத் துக்கசம்பவத்தினால் அவர்கள் அந்தத் தீவைவிட்டு அப்புறப்படுவதற்குப் புறப்படும் ஆசையையே விட்டொழித்து, திகிலும் ஏக்கமும் மேற்கொண்டு இரவில் தங்கியிருந்த கட்டடத்திற்கே திரும்பிப்போனார்கள்.

அவர்களுடைய நிலைமை மிகவும் பயங்கரமாயும் பரிதாபத்துக்கிடமானதாயும் இருந்ததல்லவா? அவர்களுக்கு நேர்ந்த ஆபத்து எப்படிப்பட்டதென்று எண்ணிப்பாருங்கள். குளிர் மிகுந்த தேசத்தில், எங்கே பார்த்தாலும் பனிக்கட்டியும் உறைநீர்க்கட்டியும் படிந்து பரவிக்கிடப்பதும், ஏதாவது அற்ப சகாயஞ் செய்வதற்கேனும் எவருமில்லாமல் அவர்கள் திக்கற்றுத் தனிமையாய் நிற்பதும், அன்னபானாதிகள் அளிப்பதற்கு ஆளில்லாமல் அவர்கள் வருந்தித் தவிப்பதும் எவ்வளவு கஷ்டமாயிருக்கும்? அவர்களெல்லாரும் அந்தக் கஷ்டங்களினாலே மாண்டுபோயிருப்பார்களென்று நீங்கள் நினைக்கக்கூடும்.

ஆனால், அதற்குள் அவசரப்படாதீர்கள். அவர்கள் என்ன ஆயினார்கள் என்பது இந்த விருத்தாந்தத்தை முற்றுங் கேட்ட பிறகு நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

அது நிற்க: அந்தத் தீவுக்குப்போனவர்கள் நால்வரும் மானுமிகள் அல்லவா? அவர்கள் எத்தனையோ ஆபத்துக்களில் அடிபட்டு வழக்கப்பட்டவர்கள்; கஷ்டத்திற்குப் பின்வாங்காமல் ஊக்கத்துடன் போராடத் தக்கவர்கள்; வேலைசெய்து வயிறுவளர்க்க வழக்கப்பட்டவர்கள்.

அவர்கள் அப்படி இருந்ததைவிடப் பெரியமனிதர்களாய் வளர்ந்து வழக்கப்பட்டிருப்பது நன்றென்று உங்களுக்குத் தோன்றுகின்றதா? அதாவது, அவர்கள் சொந்தக் கைகால்களினால் ஒரு வேலையும் செய்யாமல், ஒவ்வொரு காரியத்தையும் தங்களுக்குப் பதிலாக வேலைக்காரரைக்கொண்டு செய்வித்து வழக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு நன்மையாயிருக்குமா?

உற்றுநோக்கின், அவர்கள் உழைக்க வழக்கப்பட்டிருந்ததே நன்மையென்பது உங்களுக்குத் தோன்றாமற்போகாது. ஏனெனில், அந்த வழக்கத்தினால் அவர்கள் ஏதாவது யுக்திசெய்து தமக்கு வேண்டிய காரியங்களைத் தாமே செய்வதற்கு அனுகூலம் ஏற்பட்டது. அவர்கள் பெருமுயற்சிகள் செய்யாவிட்டால் அங்கே வெகு சீக்கிரத்தில் மாண்டுபோயிருப்பார்களென்பது திண்ணம்.

முதன் முதலில் அவர்கள் அந்த நிலைமையில் கவனிக்கவேண்டிய காரியம் என்னவென்று உங்களுக்குத் தோன்றுகின்றது? நிற்க நிழலும் உயிர்த்திருக்க உணவுமே முதன்மையான நோக்கமாகும். ஆதலால், அவர்கள் வயிறுவளர்ப்பதற்கும் கட்டடத்தைச் செப்பனிடுவதற்கும் வகைதேடினார்கள். அந்தத் தீவில் கலைமான்கள் அநேகம் உண்டு. அது அவர்களுடைய நல்லதிர்ஷ்டமே. அவர்கள் கொண்டுவந்திருந்த துப்பாக்கி மருந்தும் குண்டும் அவர்களுக்கு உதவின. உண்பதற்கு வேண்டிய மானிறைச்சி ஏராளமாய்க் கிடைத்தது.

அவர்களுக்குத் தெய்வகதியாய் அகப்பட்ட கட்டடம் சிதிலப்பட்டிருந்ததென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோமல்லவா? அநேக இடங்களில் மச்சுப்பலகைகள் இடைவெளிவிட்டு அகன்றிருந்தன. அதனால், காற்று தாராளமாய்க் கூட்டடத்திற்குள் அடிப்பதற்காயிற்று. ஆனால், அந்த அனனுகூலத்தை அவர்கள் எளிதில் திருத்திக்கொண்டார்கள். அவர்களுடைய கையில் கோடரி இருந்தது. கட்டடத்துத் தூலங்களெல்லாம் கெட்டி

யாகவே யிருந்தன. குளிர்மிகுந்த அந்தச் சீமைகளிலுள்ள மரங்கள் கெட்டுப்போகாமல், பூச்சிகளினாலும் புழுக்களினாலும் காலக்கிரமத்தினாலும் உளுத்துப் பாழாகாமல் அநேக ஆண்டுகள் வன்மை குன்றாமலிருக்கும். ஆகையால், அவர்கள் அந்தப் பலகைகளை எளிதில் நெருக்கிப் பொருத்தித் தங்களுக்குக் காற்றின் உபத்திரவம் இல்லாமற் செய்துகொண்டார்கள்.

மரத்தினால் கட்டிய வீடுகளில் சந்துகள் அடிக்கடி அநேக இடங்களில் உண்டாவது வழக்கமே. ஆனால், அந்தத்தீவில் எங்கே பார்த்தாலும் பாசி ஏராளமாய்ப் படர்ந்து வளர்ந்திருந்ததனால் அதை வெட்டி எடுத்துக்கொண்டுபோய் அவர்கள் கட்டடத்துப் பலகைகளின்மீது பரப்பிச் சந்துகளில்லாமல் பத்திரப்படுத்திக்கொண்டார்கள். அந்தத் தௌர்ப்பாக்கியர்கள் ருஷியர்களானதனால் இந்த மாதிரி பழுதுபார்க்கும் காரியங்கள் அவர்களுக்குக் கஷ்டமாய்த் தோற்றவில்லை. ஏனெனில், ருஷியக்குடிகள் எல்லாரும் தச்சுவேலையில் தேர்ந்தவர்களென்பது பிரசித்தம். அவர்கள் தங்களுடைய வீடுகளைத் தாங்களே கட்டிக்கொள்வார்கள்; கோடரி எடுத்து வேலை செய்வதில் கைதேர்ந்தவர்கள்.

சீதள மிகுதியினால் அந்த வடகோடிச் சீமைகளில் மிருகஜாதிகள் அதிகமாய் இல்லையென்றும், இரண்டொருவகை விலங்குகளே அவ்விடங்களில் வாழ்கின்றன வென்றும் தெரிந்திருக்கிறதல்லவா? அந்தக் காரணத்தினாலே அங்கே கந்தமூலாதிகளும் அருமையாயின. ஸ்பிட்ஸ்பர்க்கன் தீவுகளுள் எதனிலும் ஒருவகை மரமாவது செடியாவது வளராது. அப்படிப் புல்பூண்டற்றிருந்தது நம்முடைய மாலுமிகளுக்குப் பெருங்கஷ்டத்திற்கும் துன்பத்திற்கும் இடமாயிருந்தது.

கணப்பின் உதவியில்லாமல் அந் நாட்டுக் கடுங்குளிரைத்தாங்குவது அசாத்தியமாகும். கட்டையில்லாவிட்டால் கணப்புமூட்டுவது எப்படி? ஆயினும், அவர்கள் கடற்கரை யோரமாய் அலைந்துதிரிகையில் அலைகளில் அடியுண்டு கரையில்வந்து மோதிக்கிடந்த கட்டைகளை ஏராளமாய்ப் பொறுக்கி யெடுத்துக்கொண்டார்கள். அந்தக் கட்டைகளுள் கப்பல்கள் உடைந்து சிதறுண்ட பாகங்கள் சில இருந்தன; வேரோடு பெயர்த் தெடுக்கப்பட்ட முழுமரங்கள் சில இருந்தன. அந்த மரங்கள் அவ்வளவு கடுமையான குளிரில்லாத தேசங்களில் வளர்ந்தென வென்பது நிச்சயம். ஆனால், அவை எந்தத் தேசத்து மரங்களென்பது அவர்களுக்குத் தெரியவில்லை. ஆற்றுவெள்ளத்தினாலோ மற்றெந்தக்காரணத்தினாலோ அவை அடியோடுபெயர்ந்து புரண்டோடிப் பெருங்கடல்வழிப்பட்டன போலும்.

துரதிர்ஷ்டம் வாய்ந்த அந்த நால்வர் மாலுமிகளுக்குக் கிடைத்த வஸ்துக்களுள் சில பலகைகள் அகப்பட்டன. அந்தப் பலகைகள் உபயோகப்பட்டதுபோல வேறு எவையும் அவர்களுக்கு அந்நாட்டில் பயன்படவில்லை. அந்தப் பலகைகளில் நீண்ட இருப்புக்கொக்கி யொன்று மாட்டியிருந்தது; ஐந்தாறு அங்குல நீளமும், அதற்கேற்ற பருமனும் உள்ள ஆணிகள் சில அடிக்கப்பட்டிருந்தன; வேறு சில இருப்புத்துண்டுகளும் அறைந்திருந்தன. இவைகளெல்லாம் வெகுதொலைவில் உடைந்துபோன மரக்கலங்களினின்று சிதறியொதுங்கினவைகளாகும். அங்கே போயிருந்த நமது மாலுமிகளின் கையிலிருந்த துப்பாக்கி மருந்து முதலியன செலவாய்விட்டன; ஆகாரம் தேடிக்கொள்வதற்கு வேறு வகையில்லாமல் அவர்கள் தவித்துக்கொண்டிருந்தார்கள்; இனிப் பசியின் கொடுமையினால் பிராணனை விடவேண்டியதேயென அவர்கள் வருந்திக்கொண்டிருக்குந் தருணத்தில் கடற்கரையில் அலைகளினால் ஒதுங்கிக்கிடந்த அந்தக் கட்டைமுட்டைகளை அவர்கள் கண்டார்கள்.

அந்த அநுகூலத்தைத்தவிர மற்றோர் அநுகூலமும் அவர்களுக்கு வாய்த்தது. அந்தக் கடற்கரையில் தேவதாருமரத்தின்வேர் ஒன்றுகிடந்தது; அந்த வேர் ஏறக்குறைய வில்லின் வடிவமாய் அமைந்திருந்தது. தருணத்திலன்றே தோன்றும் அருணம்? இக்கட்டும் ஆவசியகமும் நேர்ந்த காலத்தேயன்றோ யுக்தியும் யோசனையும் தோன்றும்? தங்கள் கையிலிருந்த கத்தியைக்கொண்டு அவர்கள் அந்த வேரைச் செதுக்கிச் செப்பனிட்டு அதனை நல்ல வில்லாகச் செய்துகொண்டார்கள். இனி வில்லுக்குநாணும் அம்புகளும் வேண்டுமே. அவைகளை எங்கிருந்து எப்படிச் சம்பாதிப்பதென்று தோன்றவில்லை. அந்தத் தீவில் வெண்கரடிகள் ஏராளமாய் நடமாடிக்கொண்டிருந்தன; அவை மிகுந்த குரூரமானவை; அவை தம்மைத் தாக்கிக்கொல்லுமே யென்னும் அச்

சம் அவர்களுக்கு அதிகமாய் இருந்தது. வில்லுக்கேற்றஞாணும் அம்புகளும் கிடையாவாயின. ஆதலால், இரண்டு ஈட்டிகளாவது செய்துவைத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்துக்கொண்டார்கள்.

சம்மட்டியின் சகாயமின்றி அம்புகள் செய்யமுடியாதெனின், ஈட்டிகள் மாத்திரம் செய்யமுடியுமோ? ஆதலால், மேற்சொல்லிய பெரிய இரும்புக் கொக்கியை அடித்து நீட்டிக்கொள்ளலாமென்றும், அதன் மத்தியில் இருந்ததொரு தொளையில் பெரிய ஆணிகளில் ஒன்றைக் கடாவி அதனை அகலமாக்கிக் கொள்ளலாமென்றும் யுக்திசெய்தார்கள். அந்தத் தொளைக்குள் கைப்பிடியை வைத்து இறுக்கினார்கள்; கொக்கியின் ஒரு முனையிலிருந்த வட்டக்குமிழே சம்மட்டியின் முகப்பாக வைத்துக்கொண்டார்கள். அங்கே கிடந்த பெரிய கருங்கூழாங்கல் ஒன்றைப் பட்டடையாக வைத்துக்கொண்டார்கள்; கலைமான்கொம்புகளில் இரண்டை எடுத்துக் குறடாக்கிக்கொண்டார்கள்.

அந்த உபகரணங்களைக்கொண்டு அவர்கள் இரண்டு ஈட்டிப்பிடங்குகள் செய்தார்கள். அவைகளைக் கற்களின்மீது தீட்டிக்கூராக்கித் தேய்த்து மழமழப்பாக்கினார்கள். கடலினின்று வந்து ஒதுங்கிக்கிடந்த மரக்கிளைகளுள் கைப்பருமனுள்ளவைகளாய் இரண்டையெடுத்து அந்த ஈட்டிமுனைகளை அவைகளில் வைத்து மான்தோல்களைக் கீறி வார்களாக்கிக்கொண்டு கெட்டியாய்க் கட்டினார்கள்.

இவ்வாறு ஆயுதபாணிகளாய் அவர்கள் வெண்கரடியொன்றை வெருட்டித் தாக்கத் தீர்மானித்தார்கள். அதனுடன் கடும்போர்செய்தார்கள்; அந்தப் போரில் அவர்களுடைய ஆயுள்முடியுமெனவே அஞ்சுவதற் கிடமுண்டாயிருந்தது. முடிவில், பயங்கரமான பலபராக்கிரமங்களுள்ள அந்த மிருகத்தைக்கொன்றார்கள். இனி அவர்களுக்குச் சிலநாளைக்கு வேண்டிய உணவு கிடைத்துவிட்டது.

அந்த மிருகத்தின் இறைச்சி அவர்களுக்கு இனிமையாய் இருந்தது; அது உருசியிலும் வாசனையிலும் ஆட்டிறைச்சியைப்போல் இருந்ததென்று அவர்கள் எண்ணினார்கள். அதன் தசை

நார்களைக் கஷ்டமின்றி நுண்ணிய சிலும்புகளாகக் கிழிக்கக்கூடியதாய் இருப்பதைக்கண்டு அவர்கள் களித்தார்கள். அதிர்ஷ்டவசத்தால் அவர்கள் கண்டுபிடித்த அருமையான புதுமைகளுள் இதுவே முக்கியமானதென்று சொல்லலாம். ஏனெனில், இனி விவரிக்கப்போகிற அனுகூலங்களுள், மேற்சொல்லிய தசைநார்களினால் அவர்கள் தங்கள் வில்லுக்கு ஞாண் அமைத்துக்கொள்வதற்காயிற்று.

ஈட்டிகள் செய்து சாதித்ததனாலும், அவை நல்லுபயோகப்பட்டன வென்று கண்டதனாலும் அந்த மாலுமிகளுக்குத் தைரியமுண்டாயிற்று; மேலும்மேலும் அவர்கள் முயற்சி செய்யத் தலைப்பட்டார்கள். சில இரும்புத்துண்டுகளை எடுத்து அடித்து நீட்டித் தீட்டிக் கூராக்கி அம்புகளாகச் செய்துகொண்டார்கள். ஆனால், அவை சரவையாயும் மேற்சொல்லிய ஈட்டிப்பிடங்குகளைவிடச் சிறியனவாயும் இருந்தன. ஈட்டிகளைத் தேய்த்துச்செப்பனிட்டுக் கொண்டதுபோல அம்புகளையும் செப்பனிட்டுச் சித்தமாக்கிக்கொண்டு, வெண்கரடியின் நரம்புகளினால் அவைகளைத் தேவதாருக்குச்சிகளிற் பொருத்திக்கட்டினார்கள்; நுண்ணிய நரம்புகளைக்கொண்டு கடற்புள்ளின் சிறகுகளை அவைகளுக்குக் கட்டினார்கள்; இவ்வாறு, வில்லும் அம்புகளும் முறைப்படி முஸ்திப்பாயின. இந்த விஷயத்தில் அவர்களுடைய சாமர்த்தியம் அவர்கள் எண்ணியதைவிட அதிகமாகவே பலித்தது. எப்படியெனில், அவர்கள் அந்தத் தீவில் தங்கியிருந்த காலத்திற்குள் அந்த அம்புகளினால் இருநூற்றைம்பது கலைமான்களையும் அநேகம் குள்ளநரிகளையும் கொன்றார்கள். அங்கே குள்ள நரிகளுள் நீலநிறம் வாய்ந்தனவும் வெண்ணிறம் வாய்ந்தனவும் உண்டு.

மேற்சொல்லிய மிருகங்களின் இறைச்சி அவர்களுக்கு உணவாயிற்று; அவைகளின் தோல் ஆடையானதல்லாமல், அந்தக் குளிர்ப்பிரதேசத்தில் வசிப்பதற்கு இன்றியமையாத பலவகைச் சாதனங்களுக்கும் உபயோகப்பட்டது. அவையன்றி, அவர்கள் பத்து வெண்கரடிகளையும் கொன்றார்கள். வெண்கரடி வேட்டையில் அவர்களுக்கு ஆபத்துக்கள் அதிகமாய் இருந்தன. ஏனெனில், அந்த மிருகங்கள் அதிசயமான பலமுள்ளவை யாதலால் மிகுந்த வீரியத்தோடும் உக்கிரத்தோடும் அவை தம்மைக் காப்பாற்றிக் கொள்ள எதிர்த்துப் போராடின.

முதன் முதலிற்கொன்ற கரடியை அவர்கள் வேண்டுமென்று தேடிப்பிடித்து வேட்டையாடினார்கள். மற்றை ஒன்பதையும், அவையே அவர்களை எதிர்த்துவந்ததனால், தங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டு அவர்கள் கடிந்துகொன்றார்கள். அந்தக் கரடிகளுள் சில அவர்களை இரையாக விழுங்கும்பொருட்டு அவர்களுடைய வீட்டு முன்னறைக்குள்ளும் துணிந்து புகுந்துவந்தன. எல்லாக் கரடிகளுக்கும் அப்படிப்பட்ட துணிவு இருந்ததென்று சொல்லக்கூடாது. சில கரடிகள் மாத்திரமே அவ்வளவு துணிவு காட்டின. மற்றவைகளுக்கு அவ்வளவு பசியின்கொடுமை இல்லாதிருந்ததோ, அவை நரமாம்ஸத்தில் அவ்வளவு ஆசையுள்ளனவல்லவோ என்னவோ. அவர்களுடைய வீட்டிற் புகுந்துவந்த கரடிகளுள் சில அவர்கள் வெருட்டினவுடனே வீட்டை விட்டு விரைந்தோடிப்போயின. கரடிகள் இப்படி அடிக்கடி வீட்டுக்குள் புகுந்து வந்ததனால் அவர்களுக்குத் திகிலும் கவலையும் அதிகரித்தன; எந்தவேளையில் தம்மைக் கரடி விழுங்கிவிடுமோ என்னும் திகில் அவர்களுக்கு இடைவிடாதிருந்தது.

அப்படிப்பட்ட வாழ்க்கை மிகவும் துன்பகரமானதேயன்றோ? அது பயங்கரமான வாழ்க்கை யென்றும் சொல்லலாம். காட்டுமிருகங்கள் எப்பொழுது விழுங்கிவிடுமோ என்னும் திகில் அவர்களுடைய மனத்தில் இடைவிடாமல் குடிகொண்டிருந்ததனால் அவர்களுக்கு எப்பொழுதும் துன்பமேயல்லாமல் ஒரு பொழுதும் இன்பத்திற்கு இடம் இல்லையென்று நமக்குத் தோன்றக்கூடும்.

ஆயினும், அவர்கள் அந்தக் காட்டுமிருகங்களினால் விழுங்கப் படவில்லை யல்லவா? காட்டுமிருகங்கள் ஏன் அவர்களை விழுங்கவில்லை? ஆயுதங்கள் செய்துகொண்டு அவர்கள் தங்களைக் காத்துக்கொண்டதனால் மிருகங்கள் அவர்களை விழுங்கமுடியவில்லை என்பது நமக்குத் தெரியும். இதனால் நமக்கு என்ன விளங்குகின்றது? ஆபத்துக்கு இடமாயிருக்கின்றதென்பதனால் மாத்திரமே ஒருவனுக்குத் துன்பம் விளையாது; ஏனெனில், அவன் அந்த ஆபத்தினின்று தப்பித்துக்கொள்ளக்கூடும். ஆகையால், ஆபத்தினால் துன்பம் இல்லை; ஆபத்தினின்று தப்பித்துக்கொள்ளும் வகை தெரியாததனாலேயே துன்பம் விளையுமென்று விளங்குகின்றது.

இதற்கு ஓர் உதாரணம் கூறுவோம். ஒரு பையனுடைய காலில் பாம்பு சுற்றிக்கொண்டது. அது கடித்துவிடுமென்று அஞ்சி அவன் நடுங்கினான். அந்தச் சமயத்தில் அவனுடன் இருந்த மற்றொரு பையன் சிறிதும் அஞ்சவேயில்லை; பாம்பு கடித்துவிடுமென்னும் பயம் அவனுக்குக் கிடையாது. அவன் துணிந்துபோய் அந்தப் பாம்பைப் பிடித்துக்கொண்டான். காலில் பாம்பு சுற்றிக்கொண்ட பையனைவிட, அதனைப் பிடித்துக்கொண்ட பையனுக்கு ஆபத்து அதிகமன்றோ? அப்படியிருந்தும் அந்த இரண்டாம் பையன் அஞ்சிக் கலங்கவில்லை, துன்பப்படவுமில்லை. ஏனென்றால், பாம்பைப்பிடித்து இழுத்து விசிறி எறிந்துவிட்டால் அது கடிக்க முடியாது என்னும் உண்மை அவனுக்குத் தெரியும். முதலாம் பையனுக்கும் அந்த உபாயம் தெரிந்திருந்தால் அவனும் துன்பப்பட்டிருக்க மாட்டான், அறியாமையால் நடுங்கியதுபோல் அவன் நடுங்கவும் மாட்டான். பின்பு ஒருமுறை அப்படிப்பட்ட ஆபத்து நேர்ந்தால் அவன் பயந்து துயரம் மேற்கொள்ளுவனோ? தன்னைக் காத்துக்கொள்ளும் உபாயம் தெரிந்தபிறகு பயப்பட மாட்டானென்பது திண்ணம்.

தைரியசாலிகளை விடக் கோழைமனமுடையவர்களுக்கே துன்ப மதிகம். ஆபத்தைக்கண்டால் தைரியமில்லாதவர்கள் தவித்துத் துன்பப்படுவார்கள்; தைரியமுள்ளவர்கள் அதனைப் பொருட்படுத்தாமல் அமைதியாய் இருப்பார்கள். எவ்வகை ஆபத்தானாலும் அவ்விருவருக்கு முள்ள வித்தியாசம் இதுவே. இதற்குத் திருஷ்டாந்தமும் வேண்டுமோ?

ஒரு சிறுகால்வாயின்மீது போடப்பட்டிருக்கும் வாராவதியில் ஸ்திரீபுருஷர்கள் இருவர் நடந்துசெல்லுகையில், ஸ்திரீயானவள் உள்ளங்கூசி உடல்நடுங்கி அஞ்சுவதையும், புருஷன் அஞ்சாமல் நகைப்புடன் நடந்து செல்வதையும் கண்டிருக்கிறோமல்லவா? புருஷனைப்போல ஸ்திரீக்கும் தைரியமிருந்தால் அவளும் நகைத்திருப்பாள். வாராவதியைக் கடந்தபிறகு, ஆபத்தென்று தவறாய் நினைத்து அஞ்சிக் கோழைமனம் காட்டினோமே யென்று அந்த ஸ்திரீ தன்னைத்தானே பார்த்து நகைக்கின்றாளல்லவா?

நமது மாலுமிகள் அந்தத் தீவிலுள்ள கரடிகள்வந்து தம்மை விழுங்காவண்ணம் காத்துக்கொள்வதற்குத் திறமைவாய்ந்திருந்த

தனால், அந்த ஆபத்தைப்பற்றி அவர்களுக்கு அச்சம் நீங்கிப்போயிருக்கவேண்டும்; அச்சம்நீங்கினால் அவர்களுக்குத் துன்பமேது? அவர்கள் அமைதியாகவும் ஆனந்தமாகவும் காலங்கழித்திருப்பார்களென்று நாம் எண்ணத்தகும்.

அந்த அகோரமான தீவில் அவர்கள் தங்கியிருந்த காலத்தில் அவர்களுக்கு உணவாகக்கிடைத்தது மேற்சொல்லிய மூன்று ஜாதி மிருகங்களின் இறைச்சியே. அந்த மிருகங்கள் கலைமானும் குள்ளநரிகளும் (வெண்மையானவைகளும் நீலமானவைகளும்), வெண்கரடிகளுமேயாகும். உள்ள ஆதாரங்களும் அனுகூலங்களும் ஒரேதடவையில் நமக்குத் தோன்றுவதில்லை. ஆவசியகமும் அவசரமும் நமது மேதையை மிகக்கூராக்குகின்றன; அதனால் நமது கண்களும் கூரியனவாகின்றன; வேறு சாமானிய காலத்தில் நமக்குத் தோன்றாத எண்ணங்களும் உபாயங்களும் சாதனங்களும் தோற்றலாகின்றன. இவ் வுண்மையை நமது மாலுமிகள் நால் வரும் அநேக சந்தர்ப்பங்களில் அனுபவத்தில் அறிந்தார்கள்.

சிறிதுகாலம் அவர்கள் உப்புமில்லாமல், உறைப்புமில்லாமல், ரொட்டியுமில்லாமல், அந்த இறைச்சிகளைப் பச்சையாகவே தின்னவேண்டியதா யிற்று, அவர்களிடத்தில் ரொட்டியுமில்லை, உப்புமில்லை. குளிர் மிகுதியினாலும் தக்கசாதனங்கள் இல்லாததனாலும், அவர்கள் அந்த இறைச்சியைத் தக்கவாறு சமைத்துப் பக்குவப்படுத்தித் தின்ன அனுகூலப்படாமற்போயிற்று. அவர்கள் தங்கியிருந்த வீட்டில் ஒரே அடுப்பு இருந்த தென்றும், அது ருஷியாதேசத்து மாதிரியாகக் கட்டப்பட்டிருந்த தென்றும், சூட்டடுப்பைப்போல் இருந்த தென்றும் சொல்லியிருக்கிறோமல்லவா? ஆகையால், அந்த அடுப்பில் எதையும் வேகவைப்பதற்கு அனுகூலப்படவில்லை.

கட்டையோ அவர்களுக்கு அருமையாய் இருந்தது; இரண்டடுப்பு மூட்டிக்கொண்டால் விறகு அதிகமாய்ச் செலவாகும். அவ்வளவு செலவுசெய்வது அவர்களுக்குக்கட்டாது. சமைப்பதற்காக மூட்டிக்கொள்ளு மடுப்பு குளிர்தாங்குவதற்கு ஏற்ற வெப்பம் தாத்தக்க தாகாது. வீட்டைவிட்டு வெளிநிலத்தில் அவர்கள் அடுப்புமூட்டிச் சமைக்கமுடியாது. ஏனெனில், வெண்கரடிகள் எந்தவேளையில் பாய்ந்தடிக்குமோ என்னும் பயம் அவர்களுக்கு அதிகமாய் இருந்தது. அவர்கள் வெளியில் அடுப்புவைத்துச் சமைக்கப் பிரயத்தனப் பட்டிருந்தபோதிலும், வெகு காலம் அவர்கள் அங்கே சமைக்கமுடியாது; ஒருவருஷத்திற் சில மாதங்களே அப்படிச்செய்வதற்காகும். அந்தப் பிரதேசத்தில் சூரியன் நெடுங்காலம் தோன்றாதிருப்பதனால் குளிர் குறைவதில்லை; நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டேவரும். அந்த மாதங்களிலெல்லாம் சூரியன் அதற் கெதிரிடையான தென்னுலகத்தில் சஞ்சரித்துப் பிரகாசித்துக்கொண்டிருப்பான். அப்படிப்பட்ட மாரிகாலத்துப் பெரும்பாகம் பனிமிகுதியாய்ப் பெய்துகொண்டிருக்கும்; சிற்சில பருவங்களில் இடைவிடாது மழையும் பெய்யும். இவைகளெல்லாம் மேற்சொல்லியபடி வெளிநிலத்தில் அடுப்பு வைத்துக்கொள்வதற்கு இடையூறுகளாம்.

ஆகையால், இறைச்சியைப் பச்சையாய்த் தின்னும் கஷ்டத்தை ஒருவாறு நிவர்த்திசெய்துகொள்ளும் பொருட்டு அவர்கள் தங்களுடைய உணவுப்பொருள்களைக் கோடைகாலத்தில் வெயிலில் உலர்த்தி எடுத்துத் தங்கள் வீட்டுமேற் றளத்தில் கட்டித் தொங்கவைத்துக் கொள்ளலாம் என்று எண்ணினார்கள். அந்த மேற்றளம் முழுதும் புகைநிறைந்திருக்கு மென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். அந்தப் புகையின் வெப்பத்தினால் உணவுப் பொருள்கள் நன்றாய் உலர்வதற்காகும்.

அப்படி உலர்த்தியெடுத்துக் கொள்ளப்பட்ட இறைச்சியை அவர்கள் ரொட்டிக்குப் பதிலாக வைத்துக்கொண்டார்கள்; ஆதலால், பாதி சமைந்ததும் சமையாததுமாயிருந்த வேறு இறைச்சியைத் தின்பதற்கு அவர்களுக்கு ருசி உண்டாயிற்று. இந்த உபாயம் தங்களுடைய விருப்பத்தைச் சாதிப்பதற்கு எல்லா விஷயங்களிலும் ஏற்று இருந்ததனால், அவர்கள் அந்தத் தீவில் அடைபட்டிருந்தகாலம் முழுதும் அப்படியே செய்துவந்தார்கள். அப்படிச்செய்து அவர்கள் போதுமான அளவு உணவுப்பொருள்களைத்தேடி எக்காலத்தும் சித்தமாய் வைத்துக்கொண்டார்கள்.

கோடைகாலத்தில் குன்றுகளின் மீதிருந்து விழுந்தோடும் அருவிகளினின்று அவர்கள் தங்களுக்கு வேண்டிய தண்ணீர் எடுத்துக்கொண்டார்கள்; மாரிகாலத்திலோ பனிக்கட்டிகளையும் உறைநீர்க்கட்டிகளையும் உருக்கித் தண்ணீர் ஆக்கிக்கொண்டார்கள். இதைத்தவிர வேறு பானம் அவர்களுக்குக் கிடையாது.

குடிநீர் எடுத்துவைத்துக் கொள்வதற்கும், மற்றக்காரியங்களுக்கு உபயோகித்துக் கொள்வதற்கும் அவர்களிடத்தில் இருந்த சிறிய கொப்பரையைத்தவிர வேறுபாத்திரம் ஒன்றுமில்லை.

அந்த மாலுமிகள் அந்தத் தீவுக்குப் போகையில் ஒருமூட்டை கோதுமை மா கொண்டுபோய் இருந்தார்களென்று சொல்லி யிருக்கிறோம். அவர்கள் அந்த மாவிற் பாதியளவுமட்டும் தினந்தோறும் தின்னும் இறைச்சியுடன் புசித்துவிட்டார்கள்; மீதியிருந்தமாவை அதுபோலவே வேறுவகையில் உபயோகித்துக் கொண்டார்கள். அந்த நாட்டில் குளிர்மிகுதியாருந்ததனால் ஆறாத் தீ வளர்த்துக் காப்பாற்றி வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமென்றும், துரதிர்ஷ்ட வசத்தால் அந்தத் தீ எப்பொழுதேனும் அணைந்துபோகுமாயின் அதனைத் திரும்பவும் மூட்டிக்கொள்ள வகையில்லையென்றும் அவர்கள் கண்டார்கள். ஏனெனில், எஃகுவும் சக்கிமுக்கிக்கல்லும் அவர்களிடத்தில் இருந்த போதிலும் பற்றுக் குச்சியும் பஞ்சும் அவர்களிடத்தில்லை.

அந்தத் தீவில் அவர்கள் அலைந்து திரிகையில் அதன் நடுப் பாகத்தில் ஓரிடத்தில் பிசுக்குள்ள ஒருவிதமான களிமண்ணைக் கண்டிருந்தார்கள். அந்தக் களிமண்ணைக்கொண்டு அவர்கள் ஒரு வகையான பாண்டம் செய்து, அந்தப் பாண்டத்தை விளக்காக உபயோகித்துக்கொண்டார்கள். தாங்கள் தினந்தோறும் கொல்லும் பிராணிகளின் கொழுப்பைவார்த்து அந்த விளக்கை அணையாமல் வளர்த்து வைத்துக்கொள்ளக் கருதினார்கள். அவர்கள் செய்யக்கூடிய யுக்தி அதுவே; அதைத்தவிர வேறு எதுவும் அவ்வளவு சரியாய் இராது. ஏனெனில், மாரிகாலத்தில் அநேகமாதங்கள் வரையில் இருள் மூடிக்கொண்டிருக்கும் பிரதேசத்தில் வெளிச்சமில்லாதிருப்பதனால் அவர்களுக்கு மற்றப்படி உண்டாகும் அனனுகூலங்களும் ஆபத்துக்களும் மிகவும் அதிகப்படும்.

ஒரு வருஷத்தில் அநேகமாதங்கள் வெளிச்சமில்லாமல் இருள் மூடிக்கொண்டிருக்கிற தேசங்களும் உலகத்தில் இருக்கின்றன என்பது நமது மாலுமிகளின் அனுபவத்தினால் தெரிகிறோம். அவர்கள் ஒரு மாதிரியான விளக்குச் செய்துகொண்டு, அதில் கலைமான் கொழுப்பை வார்த்து சணல் நூலைத் திரியாய்த்திரித்து அதனிற் போட்டு ஏற்றிவைத்துக்கொண்டார்கள். ஆனால், அந்தக்

கொழுப்பு சூடுபட்டு உருகினவுடனே அது விளக்காகச்செய்யப்பட்டிருக்கிற களிமண்ணில் சுவர்ந்துபோயிற்று; விளக்கினின்று நான்கு பக்கங்களிலும் வழிந்து கீழே ஒழுகலாயிற்று. அதைக்கண்டு துக்கித்து அவர்கள் அந்த அனனுகூலத்தை நீக்குவதற்கு வகைதேடவேண்டியதாயிற்று. களிமண்ணாற்செய்த விளக்கு காய்ந்து கெட்டிப்பட்டால் அதனில் உண்டாகும் வெடிப்புகளைப் போக்கவேண்டியதும், உருகின கொழுப்பை அந்தக் களிமண் உறிஞ்சிக்கொள்ளாதிருக்கச் செய்வதும் அவசியமாயின.

புதிதாய் ஒரு விளக்கைச் செய்து, அதை நிழலில் உலர்த்திக் கெட்டியாக்கி, சிவக்கக் காய்ச்சி, தங்களுடைய கொப்பரையில் மாவைத் தண்ணீரிற் கரைத்து மெல்லிய பசையாய்க் காய்ச்சி வைத்துக்கொண்டு அதனில் தோய்த்து எடுத்தார்கள். இவ்வாறு நன்றாய்க் காய்ந்தபிறகு அதில் கொழுப்பைவார்த்து விளக்கேற்றினால், கொழுப்பு உருகி ஒழுகாததைக்கண்டு அவர்கள் சந்தோஷப்பட்டார்கள். ஆயினும் இன்னும் அதிகமாய்ப் பத்திரப் படுத்திக் கொள்ளும் பொருட்டுச் சணற்றுணித் துண்டுகளைத் தாங்கள் காய்ச்சிவைத்திருந்த மாப்பசையில் தோய்த்து அந்த விளக்கின் வெளிப்புறத்தில் அப்பிவைத்தார்கள்.

மேற்சொல்லியபடி செய்த விளக்கு அனுகூலமாயிருந்ததனால் அவர்கள் அதைப்போலவே மற்றொரு விளக்கும் செய்து வைத்துக்கொண்டார்கள். ஒரு விளக்கு உடைந்தாலும் மற்றெவ்வகையாகக் கெட்டுப்போனாலும் தங்களுக்கு வெளிச்சமில்லாமற் போகாதிருக்கும் பொருட்டு அவர்கள் அந்த இரண்டாம் விளக்கைச் செய்துவைத்தார்கள். அதுவல்லாமல் தங்களிடத்திலிருந்த மாவில் கொஞ்சம் எடுத்து இந்தக்காரியத்திற்குப் பசைசெய்வதற்காகத் தனியே எடுத்துவைத்துக்கொள்வது நல்லதென்று எண்ணினார்கள்.

விறகு சேகரித்து வைத்துக்கொள்ளும்பொருட்டு அவர்கள் கடற்கரையில் வந்து ஒதுங்கும் கட்டைமுட்டைகளையெல்லாம் ஜாக்கிரதையாய் எடுத்துச் சேர்த்து வைத்துக்கொண்டார்கள். அப்படிக் கடலில் வந்து ஒதுங்கிய கப்பற்சாமான்களுள் கொஞ்சம் கயிறும் சணலும் கிடைத்தன. இவைகளை அவர்கள் விளக்குகளுக்குத் திரியாக உபயோகித்துக் கொண்டார்கள்.

இப்படிச் சேகரித்துவைத்த திரிகள் செலவாய்ப்போனால் அவர்கள் தங்களுடைய உட்சொக்காய்களையும் காற்சட்டைகளையும் கிழித்துத் திரிகள் செய்துகொண்டார்கள். ருஷியக்குடிகளெல்லாரும் பெரும்பாலும் சொக்காயும் காற்சட்டையும் அணிந்துகொள்வது வழக்கமாகையால் அவை அவர்களிடத்து இருந்தன. இவ்விதமாக அவர்கள் முதன் முதலில் விளக்குச் செய்த நாள் முதல் இடையறாமல் விளக்கு எரிந்துகொண்டிருக்கும்படி செய்தார்கள். அதாவது, அவர்கள் அந்தத்தீவுக்குப் போனதுமுதல் அங்கிருந்து தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் புறப்படுகிறவரையில் விளக்கு எரித்துக்கொண்டிருந்தார்கள்.

தங்களுடைய ஆடையில் முக்கியமான வஸ்திரங்களாகியஉட்சொக்காய்களையும் காற்சட்டைகளையும் மேற்சொல்லியபடி விளக்குத் திரி திரிப்பதற்கு உபயோகிக்கவேண்டி வந்ததனால் அவர்களுக்குக் குளிரின் கொடுமை அதிகமாய்ப் பிடிப்பதற்காயிற்று; மற்றப்படி பாதரக்ஷைகளும் மற்றுமுள்ள ஆடைகளும் அவர்களுக்குக் குறைவுபட்டன. மாரிகாலம் சமீபித்ததனால் அவர்கள் அந்த அவசரத்துக்குத் தக்கபடி யுக்திசெய்துகொண்டு பிழைக்க வேண்டியதாயிற்று. கட்டாயம் முட்டுப்படுத்தினால் உபாயம் தோன்றுமென்று முன்னமே சொல்லியிருக்கிறோம்; அப்படிப்பட்ட ஆபத்தான தருணங்களில் தோன்றும் உபாயம் தவறுவதில்லை. அவர்களிடத்தில் கலைமான்தோல்களும் குள்ளநரித் தோல்களும் ஏராளமாய் இருந்தன. இதுவரையில் அவைகளை அவர்கள் படுக்கையாக விரித்துக்கொள்வதற்கு உபயோகித்து வந்தார்கள். இப்பொழுது அதைவிட அவசியமான காரியத்திற்கு அந்தத் தோல்களை உபயோகிக்க எண்ணினார்கள். ஆனால், அந்தத் தோல்களைப் பதனிடுவதெப்படி? அதைப்பற்றி ஆலோசித்துப் பார்த்து அவர்கள் ஒருவகையாகப் பதனிடத் தீர்மானித்தார்கள்.

அந்தத் தோல்களை அநேகநாள்வரையில் நல்ல தண்ணீரில் ஊறப்போட்டுவைத்தார்கள்; அப்படி ஊறினபிறகு அவைகளின் மீதுள்ள மயிரை எளிதில் பிடுங்கிக் களைவதற்காயிற்று. பிறகு அந்தத்தோலின் ஈரம் காயுமட்டும் கைகளினால் நன்றாய்த் தேய்த்தார்கள். பிறகு, கலைமான் கொழுப்பை உருக்கி அவைகளின்மீது தடவி மறுபடி நன்றாய்த் தேய்த்தார்கள். இப்படிச் செய்ததனால்

தோல்கள் மெதுவாயின. பதமாய் நெளிந்து வளையுந்தன்மை வாய்ந்தன; அவர்களுக்கு வேண்டிய வேலைகளுக்கெல்லாம் உபயோகிப்பதற்கு உரியனவாயின.

மெலிலிய ரோமத்தோடு கூடிய பதமான தோல்கள் செய்வதற்கு அவர்கள் பச்சைத்தோல்களை ஒரே நாள் ஊறவைத்துப் பிறகு தேய்த்து முன்போலப் பதனாக்குவார்கள்; இவைகளிலுள்ள மயிர்களைப் பிடுங்கிக் களையாததொன்றே பதனிட்ட மற்றத் தோல்களுக்கும் இவைகளுக்குமுள்ள வித்தியாசம். இவ்விதமாக அவர்கள் தங்களுடைய ஆடைக்குவேண்டிய வஸ்துக்களையெல்லாம் வெகு சீக்கிரத்தில் சித்தமாக்கிக் கொண்டார்கள்.

ஆனால், மற்றொரு கஷ்டம் எதிர்ப்பட்டது. பாதரக்ஷைகள் தைப்பதற்கு செருப்பூசிகளும், ஆடைகள் தைப்பதற்குச் சாதாரண ஊசிகளும் அவர்களிடத்தில் இல்லை. ஆயினும், அவர்கள் அப்போதைக்கப்போது சேகரித்து வைத்துக்கொண்டிருந்த இரும்புத்துண்டுகளைக்கொண்டு அந்தக்குறையை நீக்கிக்கொண்டார்கள். அந்த இரும்புத்துண்டுகளைக் கொண்டு மேற்சொல்லிய இருவகை ஊசிகளும் செய்தார்கள்; மேலும் மேலும் பாடுபட்டு அந்த ஊசிகளை ஏறக்குறைய திருத்தமாகவே அமைத்துக்கொண்டார்கள்.

ஊசிகளுக்குக் காதுகுத்துவது வெகு கஷ்டமாய்ப்போயிற்று; தங்களிடத்திலிருந்த கத்தியைக்கொண்டு அந்தக் காரியத்தையும் சாதித்து விட்டார்கள். இரும்புத்துண்டை நன்றாய்த் தேய்த்துக் கூர்முனையாக்கிக்கொண்டு; இரும்புக்கம்பி யொன்றைப் பழுக்கக் காய்ச்சி ஒரு கோடியில் தொளையிட்டு, மற்றொரு முனையைக் கற்களின்மீது தீட்டி மழமழப்பாக்கிக் கூர்செய்து கொண்டார்கள். இவ்விதமாக ஊசிகள் நல்லவடிவமாகவே அமைந்தது. தோலைக் கத்தரிப்பதற்குக் கத்தரிக்கோல் தேவைப்பட்டது. அது இல்லாததனால், அதனாற் செய்ய வேண்டிய வேலையைக் கத்தியைக் கொண்டு செய்தார்கள்.

அந்தமாலுமிகள் நால்வருள் ஒருவனாவது சக்கிலித் தொழில் தெரிந்தவனுமில்லை, தையல்வேலையிற் பழகினவனுமில்லை. ஆனாபோதிலும் அவர்கள் தங்களுடைய காரியத்திற்குப் போதுமான அளவு நன்றாகவே பதனிட்ட தோல்களையும் மயிர்த்தோல்களையும்

கறுக்கிக்கொண்டார்கள். காடிகளின் தசைநார்களையும் கலைமான்களின்தசைநார்களையும்அவர்கள் கிழிப்பதற்கு வகைகண்டுபிடித்தார்களென்றுமுன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா ? அப்படிக்கிழித்த தசைநார்களை நூலுக்கு பதிலாக உபயோகித்துக் கொண்டார்கள். இப்படி, வேண்டிய உபகரணங்களை யெல்லாம் சித்தப்படுத்திக்கொண்டு அவர்கள் தங்களுடைய ஆடைகளைச் செய்து கொள்ளத்தலைப் பட்டார்கள்.

மேற்சொல்லிய விருத்தாந்தத்தினால், மனிதர்களுக்கு நேரக் கூடியபலவிதமான ஆபத்துகளும், மிகவும் பயமுற்று நடுங்கத்தக்கசமயங்களில் தோன்றும் அதிசயமான உபாயங்களும் வெளியாகின்றன. அகோரமான கடற்கரையில் அந்தமாலுமிகள் நால்வரும் 6 வருஷகாலங் கழித்தார்கள். பிறகு தற்செயலாய் அவ்விடத்திற்கு ஒரு கப்பல் வந்து சேர்ந்தது. நால்வருள் மூன்றுபேர் அந்தக்கப்பலில் ஏறி, க்ஷேமமாய்த் தங்கள் தேசத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். நான்காவானுக்குச் சொறிபற்றியது. அது அபாயகரமானநோய்; அதனைக் குஷ்டமென்றுஞ் சொல்லுவார்கள். அவன் சோம்பேரி. அவன் தன் பிராணனைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவசியமாயுள்ள முயற்சிகள் செய்து கை கால்களை வழங்காமல் அந்தத் தீவில் அலைந்துதிரிந்து அங்கே மாண்டுபோனான். மற்றவர்கள் மூன்று பேரும் அவனைப்பனிக்கட்டிகளுக்குள் போட்டுப்புதைத்து அடக்கஞ்செய்துவிட்டார்கள்.

Printed at K. R. Press, Madras—1915

உபாத்தியாயர்கட் கேனவே உலவிவரும்

மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"—தமிழ்மறை

தொகுதி—உ	1916ஆல் மார்ச்சுமீ	பகுதி—க

NOTES OF THE MONTH

மாதாந்தரக் குறிப்புகள்

School Garden பாடசாலைத் தோட்டம்

1909ஆல் நவம்பர்மீ 30உ சென்னை வித்தியா இலாகா பெரிய அதிகாரி, டைரக்டர் ஆப்பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் துரையவர்கள் தோட்ட விஷயமாகச் சொல்லியிருக்கும் சங்கதிகளையும் அவர்களால் சென்னை விவசாய இலாகா டைரக்டர் துரையவர்களைக்கொண்டு எழுதுவித்த கடிதமும் இங்கு கவனிக்கத்தக்கவை.

வயது சென்றவர்களைப் புதுமாதிரியாகப் பயிர்செய்யச் சொல்வது மிகவும் கஷ்டம். பாடசாலைத்தோட்டத்தில் எருவைப்பற்றிய சங்கதிகளையும் சாகுபடியில் சுலபமான பலசோதனைகளையும் அவற்றுள் சிலாக்கியமான வழியின்ன தென்பதையும் சோதனைகள் மூலமாகத் தீர்மானிக்கலாம். இக்

னாதன வழிகளைக் கிராமாந்தரப் பயிரிடுவோரின் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்தால் அவர்கள் அடைவதும் அவ்வழியினை அப்பாவேறிற் சந்தேகமில்லை. விவசாயிகளும் உபாத்தியாயரும் பயிர்த்தொழில் வேலைகளைப் பற்றிக் கலந்து பாடசாலைத்தோட்டத்தில் வேலைசெய்வாராயின் இருவருக்கும் சரியானபயன் கிடைக்கும். முக்கியமாக எந்தெந்தப்பயிர்கள் ஒரு ஊரில் விளைகிறதோ அதேபயிர்களைப் பாடசாலைத்தோட்டத்தில் பயிரிடுவதற்கு நான் சிபாரிசுசெய்கிறேன். பாடசாலைத்தோட்டத்தில் நடுதல், சாகுபடிசெய்தல், எருப்போடுதல் முதலியவைகளைப்பற்றிப் பாடம் நடத்தவேண்டும். விவசாய இலாகா அதிகாரிகள் வேண்டிய ஒத்தாசை செய்யத்தயாராய் இருக்கிறார்கள். உபாத்தியாயர்கள் அட்டவணை தயார்செய்து அனுப்பினால் அதற்கு வேண்டிய யோசனையும் திருத்தமும் செய்துகொடுக்க அவர்கள் தயாராய் இருக்கிறார்கள்.

மெஸ்ஸர்ஸ். வி. குமாரஸ்வாமிநாயுடு அண்டு ஸன்ஸார் பிரசுரித்த ஒரு அணாவிற்கு விற்றுவரும் பாடசாலைத்தோட்டம் என்னும் புத்தகம் இக்குறிப்பினை யெழுதுதற்கு உதவியாயிருந்தது.

Pupils' Association
மாணவர்சங்கம்

திரிசிராப்பள்ளிஜில்லா வாங்கல் பெண்பாடசாலையின், மாணவர்சங்கத்தின் 2-3-4 வது மீட்டிங்குகள் முறையே 18-12-15, 8-1-16, 5-2-16, தேதிகளில் நடந்தன. அவ்வப்போது முறையே கடவுள் பக்தியும் விடா முயற்சியும், பொய் பேசுவதாலுண்டாகும் தீங்குகள், கற்பு என்ற விஷயங்களைப்பற்றிய பிரசங்கங்கள் நடந்தேறின.

2-வது மீட்டிங் வைகுண்ட ஏகாதசிக்கு பிறகு நடந்ததால் ஏகாதசியின் சரித்திரத்தை சபைத்தலைவர் சொல்லி "கடவுள் பக்தியும் விடாமுயற்சியும்" என்ற விஷயத்தை விளக்கியதோடு, விடாமுயற்சிக்காக நீர் வேட்கையாலலைந்து பிறகு தாகம் தீர்த்துக்கொண்ட காகத்தின் கதையையும் சொல்லி இக்கதையையே பிள்ளைகளைக்கொண்டு நடிக்கவுஞ் செய்தனர்.

"பொய் பேசுவதாலுண்டாகும் தீங்குகள்" என்ற விஷயத்திற்கு இடைப்பையனும் புலியும் என்ற கதையை ஒரு சிறுமியும், சபாபதியும் தனபாலனும் என்ற கதையை இரு சிறுமிகளுமாகச் சொன்னவுடன் சபைத்தலைவர் வண்ணானும் முதலையும், குழந்தைக்காக வாதாடின இரு பெண்கள் அதாவது விவேகமுள்ள அரசன், பாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் யுதிட்டிர (தருமர்) ரை அசுவத்தாமன் இறந்துபோனான் என்று சொல்லச்சொன்ன கதை, இம் மூன்று சரிதைகளையும் சொல்லி திருஷ்டாந்தப்படுத்தினர்.

"கற்பு" என்ற விஷயத்தைப்பற்றிச் சபைத்தலைவர், கற்பு என்றால் கணவன் சொல்லைக் கடவாமல் நடந்து தன்னையும் தனது மானத்தையுங்காத்துக்கொள்ளுதலாம் என உரைத்து, உதாரணமாக சாவித்திரி, நளாயினி, அருந்ததி முதலிய பதிவிரதைகளின் சரித்திரங்களைச் சொல்லி நன்கு விளக்கினார்.

மாணவர் சங்கம் நடத்தும் முறைகளையும் இச்சங்கத்திற்கேற்ற விஷயங்களையும் நமது பத்திராதிபரவர்களாவது ஏனைய நண்பர்களாவது சற்குரு மூலமாய்த் தெரிவிப்பார்களென என்னுகின்றேன்.

Reading Periodicals
பத்திரிகை படித்தல்

இக்காலத்தில் பாடசாலைகளுக்கு அறிவை விருத்திசெய்யும்படியான மாதாந்தரப் பத்திரிகைகள் சர்க்காரால் சப்ளையாகின்றன. அப்பத்திரிகைகளிலுள்ள விஷயங்களைப் பிள்ளைகளுக்கு வாசித்துக்காட்டுதல் நன்றே. வாரத்திற்கொரு நாளில் ஒருமணிநேரம் பத்திரிகை படித்தலுக்கென ஏற்படுத்திக் கொள்ளலாம். இவ்விதம் சப்ளையாகும் பத்திரிகைகள் விவேகபோதினி, பிழைக்கும் வழி, கல்லாவியன், சற்குரு, விவேகசிந்தாமணி முதலியன. இத்தகைய பத்திரிகைகளைப் படித்துக் காட்டுவதனால் நன்மையுண்டாகுமென என்னுகின்றேன்.

Scholarship
உபகாரச் சம்பளம்

எலிமெண்டரி பாடசாலைகளில் படிக்கும் மாப்பிளா பெண்பிள்ளைகளுக்கு மொத்தத்தில் 966 ரூபாய் பெறுமானமுள்ள 50 உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று வித்தியா இலாகா டைரெக்டர் சிபார்சை கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருக்கின்றனர் என முஸ்லிம் நாதன் பத்திரிகை கூறுகின்றது.

A fresh allotment
பண உதவி

புதிதாக 44 பெண்பாடசாலைகளை ஏற்படுத்துவதற்கென்று ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களுக்கு விநியோகஞ் செய்ய 20 ஆயிர ரூபாய் கொடுக்கவேண்டுமென்று வித்தியா இலாகா டைரெக்டர் சொல்லியிருந்த யோசனைகளைக் கவர்ன்மெண்டார் பொதுவாக அங்கீகரித்திருக்கின்றனர். ஆயினும் இவ்வருஷத்தில்அப்பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் மூன்று மாதத்திற்கு 100 ரூபாயே தேவையாகும். இத்தொகையைக் கொடுக்கும்படி உத்தரவாகலாம் என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

THE LATE RAO BAHADUR C. NAGOJI RAO

காலஞ்சென்ற ராவ்பஹதூர் C. நாகோஜிராவ்.

இம்மாகாணக் கல்வி இலாகாவில் உயர்பதவி உத்தியோகங்களை வகித்துக்கொண்டிருந்துவிட்டு பென்ஷன்பெற்று கோயம்புத்தூரில் சுகஜீவியாயிருந்துவந்த ராவ் பகதூர் சி. நாகோஜிராவ் இந்த மாதம் 13-தேதி திங்கள்கிழமை காலமே 8-30 மணிக்கு இறந்ததற்காக மிகவும் விசனிக்கிறோம். அவர் நீர் உபத்திரவம் காரணமாக காலில் காங்கிரீன் (Gangrene) என்ற நோய் கண்டு சில தினங்கள் அவஸ்த்தைபட்டு இறந்தாரென்று தெரிகிறது. அவரை கல்வி இலாக்காவில் வேலைபார்த்த இந்தியசற்குருக்களில் ஒருவரென்று சொல்வது மிகுதிச்சொல் ஆகாது ஏனெனில் அவர் பிற்காலத்தில் ஸ்கூல் இன்ஸ்பெக்டராகவிருந்து பேர்படைத்தவரானாலும் டிபார்டுமெண்டில் புகுந்து ஒரு சுமார் பதினாறு வருஷங்கள் கழியும்வரை காலேஜ் போதகராகவே இருந்து கீர்த்திபெற்றவர்.

மிஸ்டர் நாகோஜிராவ் 1832 வருஷத்தில் பிறந்தவர். அவர் கோயம்புத்தூரிலேயே பிறந்துவளர்ந்து அவ்வூர் காலேஜில் F. A. பரிக்ஷை தேறும்வரை வாசித்தவர். அதற்குப்பிறகு அவர் சென்னை வந்துசேர்ந்து பிரஸிடென்ஸி காலேஜில் வாசித்து 1871 வருஷத்தில் B. A. பட்டதாரியானார். உடனே அவர் அந்த காலேஜ் பிரின்ஸிபால் மிஸ்டர் தாம்ஸன் சிபார்சியின்மேல் அந்த காலேஜ் ஸ்கூல் டிபார்ட்மெண்டிலேயே வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். பல வருஷங்கழியுமுன் அந்தக்காலேஜில் ஓர் உதவி போதகர் ஸ்தானம் காலியாக ராயர் அவர்கள் அவ்வேலைக்கு நியமிக்கப்பட்டார். அப்புறம் சில வருஷங்கள் கழித்து அவர் இராஜமஹேந்திரபுரம் காலேஜிக்கு மாற்றப்பட்டார். அங்கு மிஸ்டர் E. P. மெட்காப் உடன் வேலைசெய்து அந்த காலேஜிக்கு மிகுந்த கீர்த்தியை யுண்டாக்கினார். 1886 ல் அவர் சில மாதங்களுக்கு சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜ் ஹெட்மாஸ்டராய்வேலை செய்ய நியமிக்கப்பட்டார். அங்கிருந்து அந்த வருஷக்கடைசியில் அவர் 8-வது டிவிஷன் (Godaveri Kristna Dts.) இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டார். ஸ்கூல் பக்கா இன்ஸ்பெக்டர் பதவியை பெற்ற முதல் இந்தியர் நமது ராயர் அவர்களே. இன்ஸ்பெக்டராக மிஸ்டர் நாகோஜிராவ் 2 வருஷம் வேலைபார்த்துவர மறுபடியும் ஒருமுறை அவர் இராஜமஹேந்திரபுரம் காலேஜுக்கு மாற்றப்பட்டார். ஆனால் அவர் அந்தவேலையைப்போய் ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியம் நேரவில்லை. இன்ஸ்பெக்டர் கிரேட்டிலேயே காலிகள் நேர்ந்துகொண்டிருந்தபடியால் அவர் மிஸ்டர் லோகனுக்கு பதிலாய் வடசர்க்கில் இன்ஸ்பெக்டராய் காயம் செய்யப்படுகிறவரை பக்கா இன்ஸ்பெக்டராகவே ஆக்ட் செய்து கொண்டிருந்துவிட்டார். வடசர்க்கிலிலிருந்து தென்சர்க்கிலுக்கும் அதிலிருந்து கும்பகோணம் காலேஜுக்கும் அவர் மாற்றப்பட்டதுண்டு. ஸ்கூல் இன்ஸ்பெக்டராய் வந்தபிறகுதான் அவர் பொதுஜனங்களுடன் பழகவும், பிரவேட் ஸ்கூல்மானேஜர்களுடன் கலக்கவும், ஹைஸ்கூல் உபாத்தியாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடன் நெருங்கிப் பழகவும் நல்லசமயங்கள் ஏற்பட்டன. அச்சமயங்களை அவர் வீணாக்கிக்கொள்ளவில்லை. பொதுஜனங்களும், பிரவேட் ஸ்கூல் மானேஜர்களும், ஹைஸ்கூல் உபாத்தியாயர்களும், ஹைஸ்கூல் மாணவர்களும், அவரை விசேஷமாய் மெச்சத்தலைப்பட்டார்கள். இப்படி அவர் 35-வருஷகாலம் இம்மாகாணக் கல்வி இலாகாவில் வேலைப்பார்த்துவிட்டு 1907-வருஷத்தில் பென்ஷன்பெற்றார். அந்த வருஷத்தில்தான் இம்மாகாண வித்தியாபிவிர்த்திக்காக ராயர் அவர்கள் மிகவும் உழைத்திருப்பதை கருதி கவர்ன்மெண்டார் அவருக்கு ராவ்பகதூர் பட்டம் அளித்தார்கள். பென்ஷன் பெற்று கோயமுத்தூரில் சுகஜீவியாயமர்ந்தபிறகும் ராவ் பகதூர் C. நாகோஜிராவ் வித்தியா விஷயத்திலும் மற்ற பொதுவிஷயங்களிலும் ஊக்கம் காட்டிவந்தார். அவர் கோயமுத்தூர் காலேஜ் கமிட்டிக்கு காரியதரிசியாகவிருந்தார். வேறு சில ஸ்தாபனங்களிலும் அவருக்கு சம்பந்தமிருந்தது. இம்மாகாண எலிமெண்டரி ஸ்கூல் பிள்ளைகளின் அபிவிருத்தியைக்கருதி அவர் ஸ்கூல் இன்ஸ்பெக்டராகவிருந்தபொழுதும் அதற்கு பிறகும் வெகு ஊக்கம் காட்டி வேலைசெய்து வந்ததுண்டு. அவர் பிரைமரி ஸ்கூல் பிள்ளைகளின் உபயோகத்திற்காக சில வாசக புஸ்தகங்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார். எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் சங்கீத சாஸ்திரம் முறைப்படி கற்பிக்கப்பட்டு வருவதை விருத்திசெய்ய அவர் வெகுபரிவுடன் உழைத்து வந்ததும் உண்டு. அவர் இறந்துபோகும் சமயத்தில் இந்திய சங்கீதமென்னும் விஷயத்தைப்பற்றி பரோடா சமஸ்தானத்தில் கூடுமொரு சபைக்கு ஒரு வியாஸம் எழுதிக்கொண்டிருந்ததாய் தெரிகிறது. அவருடைய குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் நாம் நமது அனுதாபத்தை தெரிவிக்கிறோம்.

T. S. KOTHANDARAMIER,

An Experienced Educationist.

"Is it the teacher only who is responsible for unsatisfactory progress in the Infant Standard?"

"பாலர் வகுப்பில் படிப்பேருப்பழிக்கு உத்தரவாதிகள் உபாத்தியாயர்கள் மாத்திரந்தானே?"

நமது "சற்குரு" 2-வது வால்யம் 85-ம் பக்கத்தில் பாலர் வகுப்புகளின் படிப்பழிவிருத்திக்கு உபாத்தியாயர்களாலேயே தடை நேரிடுகிறதென்றும், பரீக்ஷாதிகாரிகள் தணிக்கைக்கு ஆரம்பிக்கு முன்னரே ரிஜிஸ்டர்களை சரிவர பார்த்தாலொழிய இக்குறை நீங்காதென்றும், பாலர்வகுப்பில் சரியான உபாத்தியாயர் இல்லாதது ஒருகுறை யென்றும் கண்டிருக்கிறது. 3-வருடம் பாலர் வகுப்பில் படித்தும் அக்ஷரம் தெரிந்துகொள்ளாத பிள்ளையை போர்ட் பாடசாலையிலும் கூட கண்டிருக்கிறோம், என்றும் பிராகெட்டில் எழுதி இருக்கிறது. ஒரு வேலையைச் சரிவரச்செய்து முடிக்கவேண்டுவது அதை ஏற்றுக்கொண்டவனுடைய பொறுப்பே என்றாலும், அதுவிஷயமாய் அவனுக்கு இடம், பொருள், ஏவல் முதலிய சாதனங்கள் எம்மட்டில் உண்டு என்பதை, வேலையை இடுவோரேனும், அது விஷயமாய் யுக்திகளைச் சொல்லுவோரேனும், கவனித்தல் வேண்டாமா? என்பது தான் என் மனதை மிகவும் வாட்டுகிறது, "தன் மகன் ஆசான் மகனே மன் மகன், பொருள் கனிகொடுப்போன் வழிபடுவோனே, உரை கோளாளற் குரைப்பது நூலே," என்று கூறும் நன்னூற் சூத்திரக்கட்டளைப்படி இருந்தபோது படிப்பில் விருப்பமுள்ளவர்கள் உபாத்தியாயருடைய க்ஷேமலாபங்களை தங்களுடையதாகக் கவனித்து வந்தார்கள். விலைவாசிகள் தலைகீழாய், பஞ்சம் குடிகொண்ட இக்காலத்தில், கிராமாந்தரங்களில் பிழைக்கவரும் உபாத்தியாயன் செப்படி வித்தைக்காரனை நிகர்த்தான். இப்படிப்பட்டவனுக்கு ஏற்பட்டுள்ள வேலையோ கடவுளே செய்து முடிக்காமல் வைத்துக்கொண்டிருக்கும் வேலையென்று சொன்னாலும் பொருந்தும்.

என்றாலும், இப்பத்திரிகையின் 2-வது வால்யம் 100-ம் பக்கத்திற் கண்டபடி, என்பாடசாலையில் மாணுக்கர் சங்கத்தையும் ஏற்படுத்தியிருக்கிறேன். பாடசாலைக்கு வேண்டிய காகிதம் பென்சில் முதலியவைகளை அவ்வப்போது கடையில் சில்லரையாய் வாங்காமல், சில மாணுக்கர்களைக்கொண்டு, சிறு தொகை முதல்வைத்து, டி சாமான்களை மொத்தமாய் வாங்கி, குறைந்த லாபம் வைத்துவிற்று லாபம் கண்டுபிடிக்கவும், கிரமப்படி கணக்குவைக்கவும், ஏற்பாடு செய்திருக்கிறேன். அரசாங்கமுறையை பிரத்தியக்ஷமாய்ப் போதிக்க, மாணுக்கர்களிலேயே தக்கவர்களை வித்தியா இலாகா, போலீஸ் இலாகா அதி

காரிகளின் அந்தஸ்தாய் நியமித்து அவ்விலாகாக்களின் வேலைகளையும், ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து நடக்கும் வழக்கத்தையும் கற்பித்து வருகிறேன்.

இப்பத்திரிகையில் 2-வது வால்யம் 99-ம் பக்கத்தில் "பாலபாடத்தை முடிக்க இத்தனை மாதங்கள் செல்லும் என்று கூறினாலும் போதும்" என்ற கேள்விக்கு விடையாய், நன்றாய்ப் பேசத்தெரிந்து சற்றேறக்குறைய சொற்களின் அர்த்தங்களை தெரிந்துகொள்ளத் திறமையுள்ள ஒரு பையனுக்கு 3, 4, மாதங்கள் போதும் என்று திட்டமாய்ச் சொல்ல என்னாலாகும். ஆனால், அந்தப்பையல் காலங்கடவாமல் பள்ளிக்கூடம் வருவதற்கும் என் வயிற்றுவிஷயமாய் மனதுக்கு ஏற்படும் வேலையை ஏற்றுக்கொள்ளவும் யார் தயாராக இருக்கிறார்கள்? இல்லாவிட்டாலும் போகட்டும். பாடசாலையின் ஏற்பாட்டுக்குக் கட்டுப்பட்டு கிரமப்படி வரும் பையல்களைத் தடுக்காமல் இருந்தாற் போதுமே! "சர்க்காரிலே என்னமோ பணம் கொடுத்தார்களாமே எங்கபையனுக்கு ஒன்னுமில்லையா" என்று என்னைச் சில பெற்றோர்கள் கேட்டிருக்கிறார்கள், இதை யோசித்தால், நாட்டுப்புற உபாத்தியாயர்களின் நிலைமை இப்படிப்பட்டதென விளங்கும். மிற்க, கிளிப்பிள்ளைகளைப்போல் பரீக்ஷைக் கேற்ற சில கேள்விகள் மட்டும் பரீக்ஷைக்கு சமீபகாலத்தில் கற்பிக்கப்படுவதால் பாடசாலையில் வருடமுழுவதும் திருப்திகரமாய் வேலை நடப்பதில்லை யென்றும், இப்படிப்பட்ட கற்பிப்பு சில உபாத்தியாயர்களே செய்யக்கூடியவர்களாகையால், பெரும்பான்மையான உபாத்தியாயர்கள், 0—0—0 கூட கிராண்டு வாங்கவேண்டியவர்களாகிறார்கள். ஆகையால், கிராமங்களில் பாடசாலைகள் நிலைப்பதில்லை. சர்க்காரில் 3 ரூபாயாவது வருகிறதென்கிற நிச்சயமிருந்தால், அதற்கேற்ற ஒருவன் பையல்களை அடக்கிப் பள்ளிக்கூடம் என்று ஒன்று வைத்திருப்பான் என்று தானே இந்த ஏற்பாடு செய்தது, இதை நம்பியிருப்பவனிடம் பையல்களின் படிப்பைப்பற்றி, எவ்வளவு எதிர் பார்க்கலாம்? நான் செகன் இஸ்கூலில்படித்து சர்டிபிகேட்வாங்கிய 1903-ம் வருடத்தில், பகுதி என் வித்தியாசமில்லாத பின்னக் கூட்டலும் சாதாரண லாபநஷ்ட கணிதம், எழுத்து, வாசகம் கட்டாய பாடமாயும், பூகோளம், சுகாதாரம் இஷ்டபாடமாயுமிருந்தது என்பதை, ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் இப்போதைய வகுப்புவாரி பாட அளவு இப்படிப்பட்டதென்பது எளிதில் விளங்கும்.

பிரஸ்தாப விஷயம் பாலர்வகுப்புப் படிப்பைப்பற்றியதுதானே என்கிற வினா நிகழலாம், தற்கால ரீதியாய் அவ்வகுப்புக்கும் பின்னம் முதலிய கணக்குகளும் உயிர்நூல், தாவரநூல் முதலிய பொது அறிவு நூல்களும்போதிக்கப்பட வேண்டுமே; உபாத்திமைத் தொழிலில் ஏற்ற ஜீவனமும் தக்க கௌரவ

றுக்கிருப்பதாய் ஏற்பட்டால் என்றிறமையாளர்கள் வரமாட்டார்கள். பிள்ளைகளையும் உபாத்தியாயர்களாவது ஒரு விதத்தில் சுவயாதிகாரம் பெற்றவர்கள்; போர்ட்ஸ்கூல் உபாத்தியாயர்களோ அதிகாரிகளின் கட்டளைகளையும் அனுசரிக்கவேண்டும், கிராமத்தாரின் அபிமானத்தையும் பெறவேண்டும். கிராமத்தார்களில் பெரும்பான்மையோருக்குத் தங்களுக்கு வேலை சேரும்போது பிள்ளையை அனுப்பினால் தான் உபாத்தியாயன் நல்லவன். இப்படிப்பட்ட நிலைமையில் 5-வருடம் படித்தும் பையன் எழுதத் தெரியாமலிருப்பது என்ன ஆச்சரியம்? போதனை, உபதேசம் முதலியன செய்வோருக்கு பிறர் மனதை ஆகர்ஷிக்கும் சக்திவேண்டும். இச்சக்தியுண்டாவதற்கு தன்மனதை ஒரு நிலையில் நிறுத்தும் சக்தியை முன்னதாக உண்டாக்கிக் கொள்ளவேண்டும். இதற்காகவே முன்னாளில் இத்தொழிலை பிராமணரேனும் வகுப்பாரிடம் ஒப்புவித்து அவர்களுக்கு இதரவிஷயங்களில் மனக்கவலையுண்டாகாவண்ணம் அக்காலத்து ஆதரித்து வந்தார்கள். கவலையற்றமனம் வாய்த்திருக்கக்கேட்பானேன்?

"தாங்கொணுவறுமை வந்தால் சபைதனிற் செல்ல நாணும்,
வேங்கைபோல் வீரங்குன்றும் விருந்ினர்க்காண நாணும்,
பூங்கொடி மனையாட்கஞ்சம் புல்லருக்கிணக்கம் செய்யும்,
ஓங்கிய அறிவு குன்றும் உலகெலாம் பழிக்குந்தானே"

என்றபடி வறுமையால் பழிப்புக்குள்ளாயிருக்கும், இக்கிராமாந்தர உபாத்தியாயர்களது மன உறுதிக்கேற்றவாறு பிள்ளைகள் படிப்பென்னும் பிரதிபலனை யடைகிறார்கள், என்னும் உண்மை புணராது "உபாத்தியாயர் திறமையில்லை யாகையாலே மகற்குயர்கல்வி இல்லை என்பார்" என்று அறிவிலிகள் பாடிய பாட்டையே நாளும் பன்முறைப் பாடுவதால் பயன் யாது? அம்மை குத்துவதைக் கட்டாயமாக்கியபின் உண்டான சுலபம் முன்னிருந்ததா? அதுபோல் படிப்பையும் கட்டாயமாக்கி, ஏற்ற உபாத்தியாயர்களைப் பொறுக்கி அவர்களுக்குப் பசிநோய் அணுகாமல் பாதுகாத்துக் கிரமப்படி வேலைவாங்காமல் "ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயிலாண்டி" என்பதை யொக்க இவ்வுபாத்தியாயர்கள்மேல் விழுந்தழுவதில் பயனில்லை என்பதே எனது துணிபு.

உற்றதுரைப்போன்.

STUDENTS' ASSOCIATION

மாணவர் சங்கம்

அடியிற்காணும் விஷயத்தினை நமது பத்திராதிபர் அவர்கட்கும் ஏனைய ஆசிரிய நண்பர்கட்கும் தெரிவிக்க ஆவலுறுகின்றேன்.

சென்ற நவம்பர் மாத சஞ்சிகையின் 100-ம் பக்கத்திலுள்ள "மாணவர்சங்கம்" என்னும் அரியவிஷயத்தை வாசித்த யான், அதைப்பற்றிய விஷயங்களை எமது பாடசாலை மாணாக்கர்களுக்கு எடுத்துரைக்க, மிக்கஆவலுடன் எப்பொழுது நடத்தலாம்! எப்பொழுது நடத்தலாம்!! என உற்சாகங்கொண்டு உளங்களித்து ஆரவாரித்தனர். பின்னர் 27-11-15-ந் தேதியைக் குறிப்பிட்டு அன்று வழக்கம்போல் பாடம் ஆரம்பிக்கும் நேரத்திற்கு (காலையில்) சங்கம் கூட்டினேன். நடக்கப்போவதை அறிய மாணாக்கர்கள்கொண்ட ஆவலையும் சந்தோஷத்தையும் விட்டுரைக்க முடியாது.

உபாத்திமார்கள் உபாத்திமைச் சங்கத்திற்குப் போவது மாணவர்களாகிய உங்களுக்குத் தெரிந்த விஷயமாதலால், அவர்கள்போய் அங்குசெய்யும் காரியங்களைச் செவ்வனே எடுத்துரைத்து அவர்களைப்போலவே நீங்களும் பலவிஷயங்களைப்பற்றிப் (பலமீட்டிங்குகளில்) பேசித் தீர்மானித்து அவ்வழியே ஒழுகல் நன்றென்றுசொல்லி, மாணவர்சங்கமென்பதை, அடியிற்குறித்தவாறு விளக்கினேன்.

சபைத்தலைவர் (உபாத்தியாயர்.)—நீங்கள் இங்கு எதற்காகக் கூடியிருக்கிறீர்கள்.

பிள்ளைகள்.—மீட்டிங்குக்காகக்கூடி யிருக்கிறோம்.
ச-த.—இது யாருடைய மீட்டிங்?
பிள்ளைகள்.—பிள்ளைகளின் மீட்டிங்.
ச-த.—எந்தப்பிள்ளைகளின் மீட்டிங்?
பிள்ளைகள்.—பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் மீட்டிங்..

என உரைக்கவும், இதுமிகவும் நீளமா யிருக்கிறபடியால் பள்ளிக்கூடப் பிள்ளைகள் என்பதற்கு மாணவர் எனவும், மீட்டிங் என்ப

தற்குச் சங்கம் எனவும், "மாணவர்சங்கம்" என சுருக்கமாக வைத்துக்கொள்வோம் எனவும் தீர்மானித்து; ஒருகிராமத்தில் கிராம முனிசீபு, பெரிய குடித்தனக்காரர் என்னும் இவர்கள் மற்ற ஜனங்களுக்குத் தலைவர்களாயிருந்து, திருவிழா முதலிய காரியங்களை நடத்துகிறார்கள் அல்லவா? அதேமாதிரி உங்கள் மாணவர்சங்கத்தையும் நடத்துவதற்குத் தலைவரும் அவருக்கு உதவியாக மற்றொரு தலைவரும் வேண்டுமெனவும், அவர்கள் உத்தரவின்படி நீங்கள் நடந்தாலும் அக்காரியத்தை நடத்த ஒருவர் வேண்டுமாதலால் ஒரு காரியதரிசியும் அவருக்குதவியாக மற்றொரு உதவிக்காரியதரிசியும் வேண்டுமெனவும் பிள்ளைகளுக்கு அறிவித்து அவர்களின் அபிப்பிராயப்படி சீட்டு எழுதி, அதிகச்சீட்டு (ஓட்) விழுந்தவர்களை நியமித்தாம். அன்று சங்கத்தலைவரால் "உண்மை பேசுதல்" அத்தியாவசியகமெனத்தீர்மானிக்கப்படவும், (உதாரணமாக) நந்தமிழ் இராஜாக்களிலொருவரும் கீர்த்திமானுமாகிய "அரிச்சந்திர" மகிபருடைய சரித்திரத்தை, தேவலோகத்தில் நடந்தது முதல் கடைசிவரையில் ஒவ்வொரு விஷயத்தினையும் விபரமாகவும் சுருக்கமாகவும் எடுத்துவிரித்தார்கள். உரைக்கையில் சில சிறுமிகளுக்குக் கண்களில் ஜலம் கலங்கிவிட்டதென்றாலும் முடிவில் அரிச்சந்திரன் பொய்பேசாது இருந்து உண்மையை நிலைநிறுத்தியதைப்பற்றி ஒவ்வொரு சிறுமியும் ஆனந்தித்தாள்; சங்கத்திற்குக் காரியதரிசியாய் ஏற்படுத்தப்பட்ட சிறுமி "உண்மை" பேசுதலே மிகவும் நன்று எனப்பேசி, 'சபாபதியும் தனபாலனும்' என்றகதையைச்சொல்லி முடித்தாள்; உடனே சபைகலைந்தது.

ஒவ்வொரு பாடசாலையிலும் இம் "மாணவர்சங்கம்" ஏற்படுத்தி மாதந்தோறும் நடைபெறச்செய்து மாணவர்களின் பேசும் திறமையையும் தமிழ் வாசிப்பையும் அபிவிருத்தி செய்யும்படி நமது நண்பர்களைப் பெரிதும் வேண்டுகின்றேன்.

P. பரிமணப்பல்லவராயர்,

ஹெட்மாஸ்டர்,

போர்டு பெண்பாடசாலை,

லால்கல், திரிசிராப்பள்ளி ஜில்லா.

NALAN AND PUSHKARAN

நளனும் புஷ்கரனும்

சுயம்வரம்

(121-ம் பக்கத்தொடர்ச்சி)

அன்னஞ் சொல்லியதைக்கேட்ட நளமகாராசன், தூது பொருந்தாமைக்கு மிக்க வருத்தமுற்று மறைப்பு மையை முன்போல் நெற்றியிலிட்டுக்கொண்டு மாடத்தினின்றும் வெளியே வந்து அந்நால்வர் இருக்கும் இடத்தை நோக்கிச்சென்றான்.

நளமகாராசன் தூதுக்கு வெளிப்பட்டபோது இந்நால்வரும் வண்டுருக்கொண்டு தமயந்தியின் அந்தப்புரத்துட்சென்று நளமகாராசனுக்கும் தமயந்திக்கும் நடந்த வாக்குவாதத்தையும் பின்பு அன்னஞ் சொல்லியதையுங்கேட்டு உள்ளமகிழ்ந்து இவன் நன்னெறி யுடையானென்றே புகழ்ந்து மீண்டும் தமது சுயவடிவங்கொண்டு நளனுக்கு முன்னம் தாமிருந்த இடத்திற்போய் இருந்தார்கள். நளமகாராசன் அவர்களைக்கண்டு தான் தூது சென்ற காரியம் அவலமாய்ப்போனதை யறிவித்தான். அதற்கு இந்திரன் மகிழ்ந்து பல அரிய கணைகளைக்கொடுத்து ஆசீர்வதித்தான். தீக்கடவுளும் தீயில்லாமல் சமைக்கும் வகையைக் கற்பித்து அதற்கு நளபாகம் என்னும் பெயர் விளங்க வரங்கொடுத்தான். தென்றிசைக்கோன் கதாயுத மொன்றினையளித்து, வேண்டுமிடத்து அன்னரசம் பெறும்படியாக அநுக்கிரகித்தான். வருணன் நினைத்தவிடத்தில் தண்ணீரும் பூமாலையும் பெறும்படியாக வரந்தந்தான். பின்பு இவர்கள் மறைந்தனர். அதன்பின் ஆதித்தனும் அத்தமான கிரியை யடையச் சந்திரன் உதயமானான். அன்றிரவில் அறுசுவையோடுண்டு சயனித்தார்கள் - இதுநிற்க.

மறுநாட்காலையில் எல்லாவரசர்களும் இரத கச துரக பதாதிகளோடு சுயம்வர மண்டபத்தில் வந்து இறங்கினார்கள். வீமராசனும் அவரவர்க்குத் தக்க ஆசனம் அளித்து உபசரித்து உட்காரச்செய்தான். பின்னர் தமயந்தியை நல்ல நீராட்டி ஆபரணங்

களைப்பூட்டி, நெற்றிக்கு மைதீட்டி, கண்டவர் மனத்தை வாட்டி
ஏழையர்க்கு (=பெண்களுக்கு) ப் புகழீட்டி, இரதியும் இவ
ளுக்கு இணையல்ல வென்னுஞ் சொல்லைநாட்டி அன்னத்தைப்
பழிக்கும் நடையையுடைய அத்தமயந்தியைத் தாதியர் புடை
சூழ சுயம்வர மண்டபத்தி லழைத்துவந்து நிறுத்தினர். உடனே
அங்கிருந்த வயவேந்தருடைய கண்களாகிய வண்டுகள் அவட்
குப் பந்தரிட்டன.

மேலே சொன்ன பந்தரின்கீழிருந்த அணங்கிற்குக் குணவதி
யொருத்தி, அங்கு வந்திருக்கும் அரசர்களின் வமிசம், பெயர்,
நாடு, தன்மை முதலியவற்றை எடுத்துரைக்கத் தொடங்கி; முத
லில் சோழராஜனைச் சுட்டிக்காட்டி, "பெண்ணமுதே, இவர்,
பகைவர் கூட்டம் வீழ்வதற்கு ஏதுவான வேற்படையைத்தாங்
கினவர்; காவிரியாற்றினலைகள் பாக்குமரங்களின் உச்சியைத்தட
வத்தக்க நீர்வளப்பங்கொண்ட நாட்டை யுடையவர்" என்று
சொன்னாள்.

பிறகு பாண்டியனைக்காட்டி "இவர் பண்டொருநாள் பெரிய
மலையாகிய மேருவைச் செண்டாலடித்த பாண்டிய வமிசத்தவர்"
என்றுகூறினாள்.

அதன்பின் சேரராஜனைப் பார்த்தவண்ணமாய், "நின்ற புகழ்
மாதே, கொல்லிமலையையுடைய குடநாட்டை யாளுமிவர் தனி
த்த கொடிமரத்தின்மேல் விலையையேற்றி வைத்திருக்கும் அர
சர்" என்று மொழிந்தாள்."

பிறகு குருநாடர் மன்னவனைக்காட்டி அவன் தேசவளப்பத்
தினை யெடுத்துரைத்தாள்; பழனம் நிறைந்த மத்திரதேயத்தின்
அரசனைக் காட்டினாள்; மச்சநாட்டாருக்கு (மச்சநாடு - Dinajpur
and Rangpur) அரசனுடைய மகனைத் தெரிவித்தாள்; சங்கீத
ரசத்தில் பிரியமுள்ள குடிகளையுடைய அவந்தி (Malwa) நாட்டு
மன்னவனைக்காட்டினாள்; அப்படியே பாஞ்சாலர் (பாஞ்சாலம் -
Panjab) மன்னவனையும், கோசநாடன் (கோசலநாடு - The
Province of Oude) சேயையும், மகதவர்கோனையும், அங்கநாடா
ளுடையானையும், கலிங்கவேந்தனையும், கேகயர்கோனையும், காந்
தார நாட்டின் அரசனையும், சிந்து (Scinde) நாட்டானையும்காட்டி
அவர்களாற்றலையும், கீர்த்திப்பிரதாபத்தையும், புத்திரபட்பத்தை

யும் நீதியோடு செங்கோலோச்சும் திறத்தையும் முறையே
யெடுத்துரைத்துப் பின்பு நளமகாராச னிருக்குந்திசையைநோக்
கிப் பார்க்கையில் அவன்போலும் ஐந்து பேரிருக்கக்கண்டு திகை
த்து இஃதுஎன்ன வதிசயமென்றேங்கி நின்றனள். அதைக்கண்ட
தமயந்தி நளமகாராசனால் முன்னமே இவர்கள் செய்தியை யறிந்
திருப்பவளாதலால் மனங்கலங்காமல் திடசித்தங்கொண்டு இவர்க
ளாண்மையை யழிக்கக்கருதி, தன்சிரமேற் கைகூப்பி, "நான்
இச்சித்த நளமகாராசரே எனக்குக் கணவராவர்; மற்றவர் என்
னையீன்ற தந்தையே யாவர்" என்று முக்கட்பெருமானை மனத்
தெண்ணித்துதித்து, கண் இமைத்தலாலும், மார்பிலணிந்த மலர்
ம்மாலை வாடுதலாலும், காலடி பூமியிற்பொருந்துவதனாலும் உண்
மை நளன் இவர் என அறிந்து கையிலுள்ள மாலையை அந்நளமகா
ராசன் கழுத்திலிட்டாள். அதைக்கண்ட மற்றவரசர்கள் இரதி
யைப்பழிக்கும் கயல்போன்ற கண்ணையுடைய தமயந்திக்குத்தக்க
புருடன் இவனே யென்று கூறிப் புகழ்ந்தனர். தேவர்கள் ஆகா
யத்தினின்றும் புட்பமாரி பெய்தனர். பின்பு வீமராசன் நல்ல
சுபலக்கினத்தில் சாத்திர விதிப்படி நளமகாராசனைக் கொண்டு
தமயந்திக்குத் திருமங்கலியந்தரிப்பித்தான். நளமகாராசனோ
சிறிது நாள் அங்கிருந்து பின்பு தன்மாமனாரிடம் விடைபெற்று
நால்வகைப்படைகள் சூழத் தமயந்தியுடன் தன்னுடைய நிடத
நாட்டிற்குவந்து சுகித்திருந்தனன்.

சுயம்வரம் முற்றிற்று.

METHOD OF COLLECTING KOLINJI SEED AND DRESSING THE SAME BEFORE SOWING.

கொளிஞ்சி விதை சேகரிக்கும் விதமும், அதை விதைக்குமுன் செய்யவேண்டிய பக்குவமும்

விவசாய டிபார்ட்டுமெண்டார் கிருஷிகருக்கு சிபார்சு செய்யும் அநேக பசுந்தாள் உரப்பயிர்களில் கொளிஞ்சிப் பயிர் ஒன்று. "கொளிஞ்சி நெல் காட்டும்" அல்லது "கொளிஞ்சி குலைகாட்டும்" என்று வழங்கும் பழமொழி தமிழ் ஜில்லாவிலுள்ள எல்லா கிருஷிகருக்கும் சாதாரணமாய் தெரிந்த விஷயம் தற்காலம் சாதாரணமாய் கிருஷிகர் எருவுக்காக வாங்கும் இலைதழைகளின் விலை ஜாஸ்தியாகிக்கொண்டிருப்பதுமல்லாமல் தழை எருக்கள் தங்களுக்கு வேண்டும்போது சுலபமாய் கிடைக்கக்கூடாமலிருக்கிறது. ஆகையால் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் பசுந்தாள் எருப் பயிர்களை கிருஷிகர் தங்களுடைய நிலங்களிலேயே விளைவித்து பலனடைதல் மெத்த சலிசான விஷயமென்று போதிக்கிறார்கள். டிபார்ட்டுமெண்டார் சிபார்சு செய்யும் அநேகவித பசுந்தாள் உரப்பயிர்களில் வடிகால வசதியுள்ள ஒருபோக நன்செய் நிலங்களுக்கு கொளிஞ்சிப் பயிர்தான் கத்திரமானது. இக்கொளிஞ்சி மிகச்சிறந்ததென்ற விஷயத்தை உத்தேசித்து திருநெல்வேலி ஜில்லாவைத் தவிர மற்ற தமிழ் ஜில்லாக்களில் இக்கொளிஞ்சி விதைக்கு மெத்த கிராக்கி ஏற்பட்டுவிட்டது. இது காரணத்தினால் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து இதர ஜில்லாக்களுக்கு வருஷாவருஷம் ஏராளமான கொளிஞ்சி விதை ஏற்றுமதியாகிறது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளவர்களைப்போல் இதர ஜில்லாவிலுள்ள கிருஷிகரும் இக்கொளிஞ்சி விதை சேகரிக்காததினால் நாளுக்குநாள் திருநெல்வேலி ஜில்லாவில் இவ்விதைக்கு பிரியம் ஜாஸ்தி உண்டாகிக்கொண்டிருக்கிறது. இதர ஜில்லாக்களிலுள்ள கிருஷிகருக்கும் இவ்விதை சேகரிக்கும் விதம் தெரிந்துவிட்டால் யாதொரு கஷ்டமில்லாமல் கொளிஞ்சி விதை அங்கங்கே கிடைக்கும். திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து வருஷாவருஷம் தருவித்துக்கொள்ளவேண்டிய அவசியமும் நேரிடாது. கொளிஞ்சி விதை சேகரிக்கும் முறையில் யாதொரு கஷ்டமுமில்லை. அதை எளிதில் எல்லாரும் சுலபமாய் கையாடக்கூடியதுதான். கொளிஞ்சிச் செடிகளில் சாதாரணமாய் மார்ச், ஏப்ரல் மாதங்களில் புஷ்பம் பிடித்து ஜூன் ஜூலை மாதங்களுக்குள் காய் பிடித்து விதை முற்றியிருக்கும். முற்றின நெற்றிலிருந்து சூரிய உஷ்ணத்தினால் நெற்று வெடித்து விதைகள் செடிகளுக்கு அடியிலும் பக்கத்திலும் கொட்டிவிடும். இவ்விதம் கொட்டுண்டிருக்கும் விதைகளை திருநெல்வேலி கிருஷிகர் மண்ணுடன் கூட்டிப் பெருக்கி அப்பால் மண்ணைச் சல்லடைகளால் அப்புறப்படுத்தி தனி விதைகளை மாத்திரம் வேறே எடுத்து கட்டிவைப்பதுண்டு. இந்த விதை சேகரிக்கும் மாதங்களில் சாதாரணமாய் கூலிப் பெண்களுக்கும் கூலிப் பையன்களுக்கும் வேலை ஜாஸ்தியகப்படாததாகையால் அவர்கள் இவ்விதை சேகரிப்பதில் சிரத்தை

எடுத்து சேகரிப்பது சாதாரணம். அப்படி சேகரித்த ஒருபடி விதைக்கு பதிலாக ஒருபடி நெல்லை கூலியாக வாங்கும் வழக்கமுண்டு. மேலேசொன்ன மாதிரி விதை சேகரிக்க எல்லாவிடங்களிலும் சௌகரியப்படமாட்டாது. ஏனென்றால் செடிகளின்கீழிருக்கும் மண் இளகலாயும் மணல்வாட்டாயும் இருக்கும்பட்சத்தில் விதைகளை கூட்டிப் பெருக்கி எடுக்க கஷ்டப்படும். இவ்விதையை மேல்குறித்தமாதிரியன்றி வேறுவிதத்திலும் சேகரிக்கலாம்: கொளிஞ்சி செடிகளில் காய்பிடித்து காய்முற்றி வெடிக்கும் பருவத்திற்கு சில நாட்களுக்குமுன் அக்காய்களையும் நெற்றுகளையும் சாதாரணமாய் மொச்சைக்காய், சாராமணிக்காய்களை முற்றியிருக்கும் சமயத்தில் பொருக்கி எடுப்பதுபோல் இக்கொளிஞ்சிக் காய்களையும் உருவி சேகரிக்கலாம். சாதாரணமாய் ஒரு கூலிப்பெண் 16 படி நெற்றை ஒருநாளில் உருவி சேகரிக்கக்கூடும். அதிலிருந்து குறைந்தது ஒருபடி விதை அகப்படக்கூடும். இப்படி முற்றின காய்களையும் நெற்றுகளையும் பொருக்கி அதை இரண்டுநாள் காயப்போட்டுவிட்டால் வெயிலில் மேல்தோல் வெடித்து விதைகள் கீழே கொட்டுண்டுபோம். ஆகையால் மேல்குறித்த இரண்டுவிதங்களில் எந்தவிதம் சௌகரியமாய் காணப்படுகிறதோ அந்தவிதம் கையாடி கொளிஞ்சி விதையை சேகரிக்கும் வழக்கத்தை மற்ற ஜில்லாக்களிலும் அநுஷ்டித்துவிட்டால் திருநெல்வேலி ஜில்லாவைப்போல தூரமான ஜில்லாக்களிலிருந்து விதை வருஷாவருஷம் தருவிக்கவேண்டிய அவசியம் நேரிடமாட்டாது. விதையும் அங்கங்கே புதிதாயும் சேகரித்துக்கொள்ளலாமென்ற நிச்சயமுமிருக்கும்.

கொளிஞ்சிவிதைகளை வாங்கும் கிருஷிகர்கள் தாங்கள் வாங்கினவிதை சரியானபடி முளைக்கவில்லையென்றும் தங்களுக்கு அனுப்பிய விதைகள் நல்லதல்லவென்றும் சிலவேளைகளில் முறையிடுகிறார்கள். விதைகள் முளையாமலிருப்பது அநேகமாய் விதைப்பழுதினால் மாத்திரமல்ல. விதைகளை விதைக்குமுன் பக்குவப்படுத்தி விதையாததே இதற்கு முக்கிய காரணம். கொளிஞ்சி விதையின் மேல்தோல் புரையானது மிகவும் கெட்டியாயிருக்கும் சுபாவமுடையதால் அக்கெட்டித்தோல் மெதுவடைந்து அந்த விதையிலுள்ள முளை வெளிவர மெத்த நாளாகிறது. ஆகையால் விதை ஜல்தி முளைக்கவேண்டுமானால், கெட்டியாயிருக்கும் மேல் தோலை மெதுவடையச்செய்யும் பக்குவங்களை கையாடவேண்டியதவசியம். இப்பக்குவங்கள் விதை விதைக்குமுன்னமே விதைகளுக்கு செய்யவேண்டும். கொளிஞ்சி விதை தீவிரமாய் முளைக்கும் பொருட்டு அநேகவிதங்களில் விதையை பக்குவப்படுத்தும் வழக்கங்களிருக்கின்றன. அவைகளில் சாதாரணமாய் கையாடக்கூடியதும் சுலபமானதும் சில இதனடியில் குறிப்பிட்டிருக்கிறது:—

(1) விதைகளை கொளிஞ்சி செடிகளின் கீழிருந்து மண்ணுடன்கூட்டிப் பெருக்கி வந்தவுடன் விதையுடன் கலந்த மணலை முதலில் போக்காமல் அத்துடன் கொஞ்சம் செம்மண் கலந்து அதை கல்லுரலிலாவது, மர உரலிலாவது நெல் குத்துவதுபோல் உலக்கைகள் கொண்டு லேசாய் சற்றுநேரம்

குத்தி, விதையின் மேல் தோல் சற்று உராஞ்சியிருப்பதுபோல் காணும்வரை குத்தி எடுத்து அதிலுள்ள மண், கருப்பு விதைகள், பொக்கு விதைகள் முதலானவைகளை செவ்வையாய் போக்கி விதையை காயப்போட்டு பத்திரப்படுத்தி விதைக்கவேண்டும்.

(2) செடிகளின் அடியில் தரை கெட்டியாயிருக்குமிடங்களிலிருந்து சேகரித்த கொளிஞ்சி விதையை கொஞ்சம் நெல் பதருடன் சம்பாகம் கலந்து முன்சொன்ன முறைப்படி குத்தி எடுத்து பதரை தூற்றிவிட்டு நல்ல விதைகளை அப்புறப்படுத்தி வெயிலில் காயப்போட்டு வைத்திருந்து விதைக்கவேண்டும்.

(3) வரகு தானியத்திலிருக்கும் உமியை அப்புறப்படுத்த உபயோகிக்கும் திருகியில் இந்த கொளிஞ்சி விதையையும் போட்டு வரகு அரிசி எப்படி தயார் செய்கிறார்களோ அதேபிரகாரம் லேசாய் திருகியை சுற்றி விதையின் தோல் உராஞ்சின சமயத்தில் அவ்விதைகளை அப்புறப்படுத்தி சுத்தப்படுத்தி பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு விதைக்கவேண்டும்.

(4) விதைகளை ஏராளமாய் தயார் செய்யவேண்டிய காலங்களில், விதைகளை பருமணலுடன் கலந்து ஒரு கெட்டியான களத்தில் விதையை லேசாய் பரப்பி அதன்மேல் சற்று வைக்கோலைப் பரப்பி அதன்பேரில் மாடுகள் கொண்டு நெல்லுக்கு தாம்புகட்டி அடிப்பதுபோல் சற்று நேரம் தாம்பு அடித்தால் விதைகளின் மேல்தோல் சற்று உராஞ்சிப்போகும். அதை எடுத்து ஒப்படிசெய்து பந்தோபஸ்து செய்து விதைக்கவேண்டும்.

இப்படி மேல் குறித்த எந்த விதத்திலாகிலும் ஒரு விதத்தில் விதைகளை பக்குவப்படுத்தி விதைத்தால் விதைகள் நன்றாய் முளைக்குமென்பதில் தடையில்லை. எந்த விதத்தில் விதைகளை பக்குவப்படுத்தும்போதும் விதைகள் நசுங்கிப்போகாமலும் விதைகளின் மேலிருக்கும் கெட்டித்தோல் மாத்திரம் சற்று உராஞ்சிப்போகும்படிக்கும் செய்யவேண்டியது தவிர விதைகள் நசுங்கிப் போகக்கூடாது. மேல் சொன்ன பிரகாரம் செய்வதின் கருத்து விதைகளின் மேலிருக்கும் கெட்டியான மேல் தோல் சற்று மெதுவடைவதற்காகத்தானே தவிர வேறொன்றிற்குமல்ல.

பரங்கிமலை,
1915 அக்டோபர் 26உ.

ஜெ. செல்வரங்க ராஜூ,
அஸிஸ்டன்ட் வியவசாய டைரெக்டர்,
ஸெண்ட்ரல் டிவிஷன்.

N. B.—This Leaflet No. VIII of 1915 is issued by Agricultural Department, Madras. We reproduce the same, in full, for the benefit of our readers.

ஸ்ரீ

சற்குரு

THE REGISTRAR ... REGISTERED 23 MAR 1915 MADRAS

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தர செந்தமிழ்ப் பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"—தமிழ்மறை

தொகுதி—உ	1916ஹு பிப்ரவரிமீ	பகுதி—அ

POPULAR HEALTH LECTURES

வெகுஜனப்பிரிய சுகாதாரப் பிரசங்கம்

"WHY DON'T YOU KEEP WELL"

உங்கள் தேகசுகத்தை ஏன்போற்றிக்கொள்ளப்படாது?

சென்ற நவம்பர்மீ 23உ சென்னை விக்டோரியா பொது மண்டபத்தில், நமது சென்னை கவர்னர் அவர்கள் பேராதரவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட "வெகுஜனப்பிரிய சுகாதாரப்பிரசங்கங்க"ளுள் முதலாவதாக, "உங்கள் தேகசுகத்தை ஏன் போற்றிக்கொள்ளப்படாது" என்னும் விஷயம் சர்ஜன் ஜெனரலாகிய பானர்மன் துரையவர்களால் பிரசங்கிக்கப்பட்டது. அச்சமயத்துக் கவர்னர் அவர்களுக்குப் பதிலாக கனம் - கார்டியூ மகானவர்கள் அக்கிராசனம் வகித்தனர்.

பானர்மன் துரையவர்கள் விநோதவிளக்கின் துணையைக்கொண்டு பிரசங்கிக்க ஆரம்பித்தனர். நமது தேசத்திலுள்ள, நோய்க்கு ஆதாரமான, சிறு ஜெந்துக்களை விநோத விளக்கொளிப்படங்களால் காட்டி விஷயத்தை இலேசாக்கினர்.

"கவர்னர் துரையவர்களால் ஆய்ந்து எடுக்கப்பட்ட இவ்விஷயத்தைப் பற்றி யான் பிரசங்கிக்கையில் உங்களிற் சிலர், 'யாங்கள் எக்காலத்தும் நோயுடன் கூடியிருக்கின்றோமோ? எமக்கு இப் பிரசங்கத்தால் அனுகூலமென்ன?' என்று கேட்பீர்கள். இவ்விந்தியதேசத்தில் வாழும் நமக்குள்ள ஆபத்துக்களையும் அவற்றைக்கடந்து யாம் எச்சரிக்கையுடன் பிழைத்தற்குரிய மார்க்கங்களையும் ஒருவாறு தொகுத்துரைக்கின்றேன் கேளும்.

இப்பொழுது வியாதி என்றழைக்கப்படுவது யாது என்பதே நமது கேள்வி. அக்கேள்விக்கு நமது இந்தியர், 'பழவினையால் நோய் உண்டாகின்றது' என்று சொல்வதனோடு, 'மாரி, முண்டகக்கண்ணி, கங்கை முதலிய தேவதைகள் தம்மை அன்புடன் ஆதரித்துப் போற்றவில்லையென்று கோபங்கொண்டு உயிர் வேட்டையாடத் துணிந்து அம்மையென்னும் வைசூரியாகவும் வாந்திபேதியாகவும் வருகிறார்கள்; அவர்கட்கு ஆடுவெட்டிப் பொங்கலிட்டு, பறையடித்துப் பூசைபோட்டால் அவர்கள் கோபந்தணியும், அதனால் மேற்சொல்லிய நோய்கள் விரைவில் அகலும்' என்றும் கூறுகிறார்கள்.

இவ்வித அஞ்ஞான நம்பிக்கை நமது மேனாட்டிலும் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்தது. அந்நம்பிக்கை சாஸ்திர ஆராய்ச்சியால் அவர்கள் மனத்தை விட்டகன்றது. நிற்க.

இப்பொழுது நமது யாக்கை எப்படி யாக்கப்பட்டுள்ளது என்பதைப்பற்றிச் சற்று ஆராய்வாம். 1830-வருடத்திற்குப் பின்னர்த்தான் நுண்ணிய ஜீவராசிகளால் விளையும் நன்மை தீமை ஆராய்ச்சிப் பிரியருக்குத் தெரியவந்தன. அதன்பிறகு அவர்கள் ஆராய்ச்சியினால் இச்சரீரம் பலவித ஜீவராசிகள் இருந்து உயிர்வாழ்தற்குரிய ஆலயம் என்னும் நம்பிக்கையுண்டானது. இவ்வாலயத்துள் நிலைத்துவாழும் ஒவ்வொரு நுண்ணிய ஜீவஜெந்துவும் தானே தொடக்கின்றி யுண்டுவளர்ந்து ஜீவிக்கவும் இறக்கவும் கூடுமான இயற்கையினை யுடைத்தாயிருக்கின்றது.

மனிதயாக்கைக்கு மூலகாரணமாயுள்ள என்பு, நரம்பு, தசை, மூளை முதலிய அனைத்தையும் காரியப்படுத்துந் தொழிலையுடையன இச் ஜீவராசிகள் என்னலாம். இச்ஜீவராசிகளின் சேர்க்கையால் என்பு, நரம்பு முதலிய காரியப்படுகின்றமையால் அவைகள் எப்பொழுதும் சேர்ந்தே இருக்குமோ என்னுங் கேள்வி பிறக்கலாம். அதற்கு யாம் சேர்ந்திருப்பனவும் உண்டு தனித்து இயங்குவனவும் உண்டு என்போம். தனித்தியங்குவன ஒன்றிரண்டாயிராமல் கோடிக்கணக்காகவே யிருக்கும். அவை யொவ்வொன்றிற்கும் தனித்தனி அறைகளுண்டு. ஜீவராசிகளிற் பெரும்பான்மையன உதிரத்துள் நுழைந்து உலாவும். அவைகளின் அறைகளிற் சில செந்நிறமாயும் சில வெண்ணிறமாயும் இருக்கும். இவ்வறைகளும் இவ்வறைகளில் வாழும் ஜீவராசிகளும் தம்முள் மாறுபட்ட இதர ஜீவராசிகளின் உழைப்பால் நிலைபெறவேண்டியனவாயிருக்கின்றன. உதாரணமாகக் கால்பெருவிரலிலிருக்கும் நுண்ணிய

ஜீவஜெந்து முதுகந்தண்டிலிருக்கும் ஜீவஜெந்துவின் உழைப்பால் உயிர்தரித்திருக்கவேண்டியது. தீனிப்பையிலுள்ள ஜீவஜெந்துக்கள் ஆகாரத்தை ஜீரணப்படுத்தி அதன் பின்னர் அன்னரசத்தை மற்ற அவயவத்துள்ள ஜீவராசிகளுக்கு அளிக்கின்றன.

இப்படிச் சொல்லிவந்தமையால், நோய் என்பது ஜீவஜெந்துக்களின் குழப்பத்தால் உண்டாவது என்பதும் ஜீவஜெந்துக்களுக்குச் சத்துருவாக ஏதேனும் தோன்றி அவைகளின் தொழிலைத் தடுப்பதால் விளைவது என்பதும் உங்கட்கு நன்றாகத் தெரியலாம்.

இனி, சத்துருவாகத் தோன்றும் ஜீவஜெந்து எப்படிப்பட்டது அது எங்குள்ளது என்று விசாரிப்பின், அது மற்றைய ஜீவஜெந்துக்களின் வாசஸ்தலத்தில் கீழ்நிலையிலிருக்கும் என்று சொல்வோம். அதை அணுதரிசனி என்னும் பூதக்கண்ணாடிகொண்டு பார்த்தாற் பார்க்கலாமே யொழிய மற்றப்படி பார்ப்பதரிது. இந்தச் சத்துரு ஜெந்துவினால் இந்த இராஜதானியில் அநேகம் ஆடுமாடுகள் இறக்கின்றன. வாணியம்பாடி முதலிய தோல்வியாபார ஸ்தலங்களிலும் இந்த ஜெந்துவின் அபிவிருத்தியால் மனிதர் மரிக்கின்றனர். அப்படி இறவாதிருத்தற்கு வழியேதேனும் உண்டோ வெனின் அம்மை குத்திக்கொண்டால் (inoculation) செய்துகொண்டால் பிழைக்கலாம் என்று சொல்வேன்" என்று சொல்லி பிளேக், காலரா, மலைசுரம் முதலிய நோய்கள் வருதற்குக் காரணமாயுள்ள இந்த ஜீவராசிகளையும், அவைகள் (inoculation) என்னும் அம்மை குத்தலால் குணமாவதையும் விநோதவிளக்கின் மூலமாகப் படத்தில் காட்டி விளக்கினர்.

பிறகு அக்கிராசனத்திருந்த கனம் கார்டியு மகானவர்கள் சர்ஜன் ஜெனரலாகிய பானர்மன் துரையவர்கட்கு வந்தனமொழி கூறிவிட்டு, ஈ, கொசுகு முதலியவைகளால் தொத்துநோய் உண்டாகும் விதத்தைப்பற்றிப் பேசினர்.

QUESTIONS AND ANSWERS

வினா உத்தரம்

Notes of Lessons
பாடக் குறிப்புக்கள்

சேலம் ஜில்லாவைச்சேர்ந்த இராசிபுரந்தாலுக்காவிலுள்ள புதுச் சத்திரம் உபாத்தியாய சங்கத்தின் காரியதரிசி வேலைபார்த்து வரும் உபாத்தியாயரொருவர், "நான்காவது வகுப்பை வைத்துக் கற்பிக்கும் மாதிரி பாடக்குறிப்பு, ஒரு உபாத்தியாயர் தயார் செய்யும் விதத்தினைப் பத்திரிகையில் பிரசுரிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று வேண்டுகின்றார். அவர் கேள்வியின் நோக்கம் இன்னதென்று எமக்கு விளங்கவில்லை; ஆயினும் ஒருவாறு பதிலளிக்கின்றோம்.

குறிப்பு:—நான்காவது வகுப்பிற்குக் கற்பிக்கவேண்டிய பாடங்கள் கிண்டர்கார்டன் முறையைத் தழுவாது, உலகவியாபாரத்திற்கு வேண்டிய விஷயங்களைத் தம்மிடத்துப் பொருந்தப்பெற்றனவாயிருக்க வேண்டும்.

மாதிரிப் பாடக்குறிப்பு

I. விஷயம்:—பனையோலையாற் செய்யப்பட்ட விசிறியைப்பற்றி வர்ணிக்கக் கற்பித்தல்.

II. நோக்கம்:—(1) பொது. வியாசம் எழுதும் முறையில் ஒழுங்குண்டென்று கற்பித்தல். [அதாவது, மாணவர் எதைப் பற்றியேனும் வியாசமொன்று எழுத ஆரம்பித்தால் மனத்துட் டோன்றுவனவற்றையெல்லாம் தோன்றியபடியே வரிசைப்படுத்தாது ஒழுங்கின்றி எழுதுவார்கள். அப்படி எழுதுவோருக்கு நல்லறிவு உண்டாகும்படி, வியாசம் எழுதுவதில் ஒழுங்குண்டு—விஷயங்களை ஒழுங்குபடுத்தித் தொடர்ச்சியாக நித்திலக்கோர்வை (முத்துச்சரம்) கோர்த்தாற்போல எழுதவேண்டுமென்று கற்பிப்பது முக்கிய அம்சமாகும். அப்பியாசங்கள் பல்வேறினத்தைச் சேர்ந்தனவாய்க் காணப்பட்டபோதிலும், அவற்றின் நோக்கம் மாத்திரம் ஒன்றாகவேயிருக்கும்]

(2) சிறப்பு:—சாதாரண பொருளைப்பற்றி வர்ணிக்கும் விதம்.

III. முறை:—(1) விசிறியைப்பற்றி வர்ணிக்கவேண்டிய அவசியம். [வியாபாரிகள் தமது சரக்குகளைச் சரியாக வர்ணித்தாலன்றி வெளியூர் வாசிகள் பொருள்களின் தன்மையையறிந்துகொள்வது அசாத்தியம். ஆனதுபற்றி, பொருள்களை உற்றுநோக்கி, அதன் தன்மையை ஆய்ந்தறிந்து செவ்வையாக வர்ணித்தல் வேண்டும். அப்படி வர்ணிக்குந் திறமையைப் பெறுதல் அத்தியாவசிகமே.]

(2) பனையோலை விசிறிகளின் வகை வேறுபாடுகள்:—
(a) வடிவிற் சிறியவை, பெரியவை;
(b) சாயம்பிடிக்கப் பெற்றவை, சாயம் பிடிக்கப் பெறாதவை;
(c) கைத்தொழில் வேலைப்பாடுற்றவை, கைத்தொழில் வேலைப்பாடற்றவை.

(3) உபயோகத்தைப்பற்றி யெடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை.

IV. கற்பிக்கும் விதம்:—

(1) மேற்கூறிய முறையின்படி மாணவர்களைக்கொண்டு ஒவ்வொரு வாக்கியமாகக் கரும் பலகையில் எழுதுவித்தல்.

[உதாரணமாக—(விசிறியைப்பார்த்து)
1. இது ஒரு சிறு விசிறி.
2. இதுபனையோலையாற் செய்யப்பட்டிருக்கிறது.
3. சாயம் பூசப்பெற்றதன்று.
4. வடிவில் வட்டமாயுள்ளது.
5. ஒரு மட்டையின் ஓலையை யெடுத்துச் சுத்தமாய் நறுக்கி, மட்டையைச்சீவி, ஓலையை வளைத்துக் கட்டுவார்கள்.
6. ஓலையின் ஓரம் ஈர்க்கினால் கட்டப்பட்டிருக்கிறது. விசிறிக்கு அழகினை உண்டுபண்ண அவ்வீர்க்கின்பேரில் ஓலையினால் பின்னல்வேலை செய்யப்பட்டிருக்கிறது.
7. வேலைப்பாடமைந்த விசிறியன்று.
8. குறைந்த விலைக்குப் பெறக்கூடியது.]

(2) வாக்கியங்களைத் தொடர்ச்சியாக எழுதும்படி விளக்குதல்.

[உதாரணமாக—1. வட்டவடிவமான இச்சிறு விசிறி பனையோலையாற் செய்யப்பட்டுள்ளது.]

(3) மாணவர்களுக்கு அப்பியாசம்—விசிறிகளைப்பற்றி ஒரு வியாபாரி இன்னொரு வியாபாரிக்குக் கடிதம் எழுதுவதுபோலக் கடிதம் எழுதும்படி செய்தல்.

(4) திருத்தங்கள்.

இவ்வாறு விரிவாக பாடத்துக்குக் குறிப்புக்கள் எழுதினல் அவ்வினத்தைச் சேர்ந்த ஏனைய பாடங்களுக்குச் சுருக்கமாகவே குறிப்புக்களை யெழுதிக்கொள்ளலாம்.

* * * * * *

I பாடக்குறிப்பு எழுத ஆரம்பிப்பதற்கு முன்னர் உபாத்தியாயர் செய்யவேண்டிய சூழ்ச்சி வருமாறு:—

(1) நோக்கம். இனி நாம் கற்பிக்கப் போவதன் பொது நோக்கம் என்ன?—அதாவது, இப்பாடக் கோர்வையிற் சொல்லப் போகும் பாடங்கள் என்ன அபிப்பிராயத்தோடு கற்பிக்கப்படவேண்டும்?

(2) அவசியம். நம்மால் கற்பிக்கப்படுவது முக்கியமான விஷயமென்று மாணவர்கள் உணருமாறு கற்பிப்பதெப்படி? [சிறுவர்களுக்கு விளையாட்டுச் சம்பந்தமான பாடங்களைக் கற்பிப்பது; பெரிய பிள்ளைகளுக்கு உலகத்தில் நடைபெறும் சங்கதிகளை யொத்த விஷயங்களை ஏதோ ஒரு கௌரவந் தோன்றக் கற்பிப்பது.]

கற்பனையின் நோக்கத்தினையும் கற்பிக்கும் விதத்தினையும் நன்கறிந்து உபாத்தியாயர் பாடங்களை ஒரு கோர்வையாய்க் குறித்து வைக்கவேண்டும்.

II. இது வரையிற் பாடப்பட்டி குறித்தாய்விட்டது. இனி நாடோறும் கற்பிக்கவேண்டிய பாடங்களின் சிறப்பு நோக்கங்களைப்பற்றிச் சில குறிப்புகளைத் தமது ஞாபகார்த்தத்திற்காகக்குறித்து வைத்துக்கொள்ளலாம். உதாரணமாக:—

விசிறியை வர்ணித்தானபிறகு ஒரு பையனுடைய குல்லாவை வர்ணிக்கக் கற்பிக்கலாம். பாடக்குறிப்பு இதனடியிற் குறித்தவாறு யிருந்தாற் போதும்.

"மேற்குறித்த முறையின்படி பாடம் கற்பிக்கப்படும்.

அப்பியாசம்—பையல் தாது தகப்பனுருக்குக் கடிதம் எழுதித் தனக்குக் குல்லா வாங்கி அனுப்பும்படி கேட்பதுபோல ஒரு கடிதம் எழுதவேண்டும்." இதற்கு அடுத்த நாள் திருத்தங்களைப்பற்றிக் குறிப்புக்கள் எழுதலாம்.

"இதனடியிற் குறித்த பிழைகளைக் கரும்பலகையிற் போட்டுக் காட்டியவாறு திருத்துதல்—"

* * * * * *

'உற்றதுரைப்போன்' என்னும் பெயர் பூண்ட உபாத்தியாய நண்பர் ஒருவர் அடியிற் கண்டவாறு எழுதியுள்ளனர். கிராமங்களிலிருக்கும் பள்ளிக்கூடத்திய உபாத்தியாயர்கள் படும் கஷ்டங்களை விரிவாகவும் சுயமாகவும், திறமையுடனும் தெரிவித்திருக்கின்றார். இந்த விஷயத்தைப்பற்றி யாமும் எழுத உத்தேசித்திருக்கின்றமையினால், அனுப்பப்பட்ட விஷயத்தினை முற்றும் அச்சிடலானோம். அவர் செய்த னல் ஸ்கூலில் மாத்திரம் வாசித்ததாகத் தெரிகின்றது. அவர் படிப்பினையொத்த படிப்பு எல்லாக் கிராமாந்தர உபாத்திமார்களுக்கு மிருப்பின், கல்வி செழித்தோங்குவதற்கு யாதொரு குறையுமிராது. யாம் கவனிக்கத்தக்க விஷயம் மாத்திரம் ஒன்றுண்டு. புது அட்டவணையின்படி அநேக புதுப்பாடங்கள் ஏற்படுத்தியிருக்கின்றன; ஆனல் அவைகளையெல்லாம் கற்பிக்கவேண்டுமென்னும் அவசியமில்லை. இங்கிலாந்திற்கூட கிராமங்களிலும் பெரிய பட்டணங்களிலும் அட்டவணையிற் கண்ட பாடங்கள் முற்றும் நடத்தேறவதில்லை. சில பள்ளிக்கூடங்களில் தாய்ப்பாஷை, கணிதம் என்கின்ற இவ்விரண்டு பாடங்களைத் தவிர வேறு பாடங்கள் போதிக்கப்படவில்லை. அட்டவணை விஷயமாக நண்பர்கள் கவலைப்படவேண்டியதில்லை தாய்ப்பாஷை கணிதம் என்னும் இவ்விரண்டு பாடங்கள் திருப்திகரமாயிருந்தால் பள்ளிக்கூடத்தின் பொது நிலைமை திருப்திகரமாயிருக்கிறதென்று சொல்வதற்கு நியாயமில்லையோ? நிற்க. உபாத்தியாயருக்கு வேறொரு கடமையுமுண்டு; அதாவது, தாமே புதுவிஷயங்களைத் தெரிந்துகொண்டு தமது மாணவர்களுக்குக் கற்பித்தலே. இந்நோக்கத்தைக்கொண்டே உபாத்தியாய சங்கங்களும் பத்திரிகைகளும் நடைபெற்று வருகின்றன. தமிழ் அறிவு முதிரப்பெற்ற உபாத்தியாயர்கள் தமிழினை விருத்திசெய்வதை முக்கியமான நோக்கமாக வைத்துக்கொண்டு மற்ற விஷயங்களைக் கூடியவரையிற் கவனித்துவருவார்கள்.

The lot of the 'aided' school master

எயிடட் ஸ்கூல் உபாத்தியாயரின் கஷ்ட நஷ்டங்கள்

* * * * * *

II. ஆம் வாக்யம், 32 ஆம் பக்கத்திலுள்ள அப்பியாசக் கேள்விகளுக்கு தாராபுரம் தாலூகா வேலாயுதம் பாளையம் போர்டு ஸ்கூல் உபாத்தியாயராகிய ம-ா-ா-ஸ்ரீ, K. S. ஆறுமுகமவர்கள் விடை எழுதி யனுப்பியுள்ளனர். அவற்றுள் முதல் இரண்டினை இதனடியில் அச்சிடுகின்றோம்.

Questions on Method

போதனமுறைக் கேள்விகள்.

I. காகிதங்களின் நிறைகளை அநுசரித்த (அதாவது 1 டஜன் காகிதங்களின் நிறை "இவ்வளவு" தோலா, என்றால், 1 ஸ்கோர் காகிதங்களின் நிறை எவ்வளவு? என்பதுபோன்ற) வியாபாரக்கணக்குகளைக் கற்பிக்கநேர்ந்.

தால் மாத்திரம், அடுத்து நடத்தும் பொருட்பாடத்தில் காகிதத்தின் தன்மை) (நிறை) யைப்பற்றித் தெரிவிப்பதத்தியாவசியம். [எங்ஙனமெனில், 1 காகிதம் லேசாயிருக்கும், நிறை சுலபம்; ஒன்றுக்குமேலிட்ட பல காகிதங்களோ, முறையே கனமாயிருக்கும், நிறையும் அதிகமாயிருக்கும். இத் தகைய விஷயத்தை, காகிதங்களைக்கொண்டு பிரத்தியக்ஷப்படுத்துதல் மிகவும் அவசியமானவைகளுள் ஒன்றாயிருப்பதால் இதனை அடுத்து நடத்துதல் மேன்மையே.] அங்ஙனமின்றி, எண்ணிக்கைகளை அநுசரித்த (அதாவது, 1 டஜனுக்கு 2 அணா விலை என்றால் 1 குயருக்கு விலை என்ன? என்பதுபோன்ற) வியாபாரக்கணக்குகளைக் கற்பிக்க நேரிடின், அதற்குக "காகிதப் பொருட்பாடம்" அடுத்து நடக்கவேண்டும் என்பது அழகான முறையல்ல.

II. அடி, (அங்குலம்) முதலியவைகளின் அளவைப்பற்றிய ஞானத்தைச், சிறார்கள் உணர்ந்த பின்னரே; வாசகபாடத்தில் "அடி" என்ற அளவுச் சொல்கலந்த பாடத்தைநடத்தலது முறை. ஆதலால், வாசகபுஸ்தகத்தை வாசிக்கும்பொழுது, "பாம்பு 15 அடி நீளம்" என்றவுடன் நீளத்தின் அளவைப்பற்றிய ஞானம் சிறார்களின் மனத்தில் ஏற்பட்டுவிடும். என்றாலும் (தொடர்முறைப் போதனையின் பொது நோக்கத்தின்படி) அடுத்து நடக்கும் க்ஷேத்திர கணிதபாடத்தில் "15 அடி நீளத்தை" கயிற்றால் (அளந்து) உதாகரித்துக்காட்டி விட்டால், முன் வாசகபாடத்தில் மனதிற் பதித்த "அளவு ஞானம்" பலமாக வேரூன்றிவிடும். மனச்சந்துஷ்டியும் ஏற்படும். ஆகையால் வாசகபாடத்தில் ரூபித்துக்காட்டாமல், கணிதபாடத்தில் ரூபித்துக்காட்டவேண்டும் என்பது நல்லமுறை.

WHY LEAVES FALL?

இலைகள் உதிர்வதற்குக் காரணம் யாது?

இயற்கைப் பாடத்தின் முக்கியமான நோக்கமோ நாம் பார்க்கிற பொருள்களைக் குறிப்பாய்ப் பார்க்கவும், பின்னும் அவைகளைப்பற்றி யோசிக்கவும், அறியவேண்டியதைச் சுலபமாய் நமது சுய அறிவினைச் செலுத்திக் கண்டுபிடிக்கவுஞ் செய்வதே - இப்பாடத்தினைச் சரியான முறைப்படி நடத்துவதற்கு விஷயம் எங்கும் உண்டு; ஆனால் அவை சாஸ்திரப்பயிற்சி யுடையவர்களுடைய அறிவுக்கே புலனாகும்.

(1) சாதாரணமாய் மரஞ்செடிகள் தம்மிடத்துள்ள இலைகளை உதிர்ப்பதைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம். அவைகள் இலைகளைக் கொட்டுவதற்குக் காரணம் யாதென்று வினவுவோமானால், மாணவர்கள் உற்சாகத்துடனே விடைகள்கூற முன்னெழுவார்கள். அப்படி முன்னெழுந்து கூறினாலும் சரியான விடைகூறுதல் அவர்களுக்குச் சாத்தியமன்று. இலைகள், மற்ற ஜீவ ஜெந்துகளைப்போலக் காலக்கழிவால் வாடி கீழே விழுகின்றன வென்று பொதுஜனங்கள் அபிப்பிராயப் படுகின்றனர். மாணவர்களும் இதனையே பின்பற்றுகின்றனர்.

(2) ஆனதுபற்றி, உபாத்தியாயர் செய்யவேண்டியது ஒன்றுண்டு. அஃதாவது, ஒரு கிளையை வெட்டி, மரத்தடியில் உலரவைப்பதே. அப்படி உலரவைப்பதால் இலைகள் வாடினாலும், கிளையைவிட்டு உதிராமலிருப்பது தெரியவரும். அதனால் வெட்டப்பட்ட கிளையினின்று இலைகள் கொட்டாமலிருக்க, வெட்டுணாது பசுமையோடிருக்கும் மரத்தினின்று இலைகள் கொட்டுண்பதற்குக் காரணம் யாது என்னும் கேள்விபிறக்கும்.

(3) வேனிற்கால ஆரம்பத்தில் இலைகள் கொட்டுண்பது யாவருக்குந் தெரிந்த விஷயமே. இதனைக் கவனிக்கும்படி மாணவர்களைச் செய்யவேண்டும்.

(4) பின்னர், நாம் வாயினால் சுவாசம் விடுவதுபோல மரஞ்செடிகள் இலைகளின் மூலமாகச் சுவாசம் விடுவதை ஞாபகப்படுத்தலாம்; அச்சுவாசமானது நீராகும். இலைகள் அதிகரிக்கவே

சுவாசமதிகரிக்கின்றது; அதாவது தாம் உட்கொள்ளும் தண்ணீரில் ஒரு பாகம் ஆவியாய்ப்போய் விடுகிறது. வேனிற்காலத்தில் மரஞ்செடிகளுக்கு நீர் அதிகமாய் வேண்டியிருப்பதால், சுவாசத்தினாலே நீர்கழிவது கெடுதியையுண்டுபண்ணவேண்டியிருக்கிறது. அதனால் இலைகளைக் கொட்ட நேரிடுகிறது. பட்டுப்போன கிளைக்கு இலைகளைக்கொட்ட வேண்டிய அவசியமில்லை.

(5) காரணந் தெரிந்த பின்னர், இலைகள் இருந்த இடங்களைக் கவனிக்கும்படி மாணவர்களுக்குச் சொல்லலாம். நீர் சுவாசத்தினாலே போகாவண்ணம் பட்டைமேலே மூடிக்கொண்டிருப்பதைக் காண்பிக்கலாம். இலை கிள்ளப்பட்ட இடத்துக்கும் இலை தானே விழுந்த இடத்துக்கும் வித்தியாசம் எளிதிற் றெரிய வரும்.

TO TEACH THE MONTHS

மாதங்களின் பெயர்களைக் கற்பித்தல்

மாதங்களின் பெயர்களைக் குருட்டுப் பாடமாய்க் கற்பியாமல் அடியிற்கண்டவாறு கற்பித்தல் நலமென்று எமக்குத் தோன்றுகிறது :—

ஒரு பெரிய காகிதத்தின் பேரில் பன்னிரண்டு விளக்குகளை வரைந்து, ஒரு மாதப்பிறப்பில் ஒரு விளக்கிற்குத் தீபமேற்றிப் படத்தின் அடியில் அம்மாதத்தின் பெயரை எழுதலாம். இதனடியிற் படம் எழுதியிருக்கிறோம்.

விளக்கைக் காகிதத்திற் கத்தரித்துப் பெரிய காகிதத்தில் ஒட்டவைத்தாலும் வைக்கலாம். சுவாலையை மஞ்சள் நிறமான காகிதத்திற் கத்தரித்து ஒட்டலாம்.



NOTES ON DRAWING

சித்திரம் வரைதலைப் பற்றிய சில குறிப்புக்கள்

(84-ஆம் பக்கத்தொடர்ச்சி)

பிள்ளைகள் தாமே செய்யக்கூடிய நல்லவேலையானது சித்திரம் வரைதலேயென்பது எமது அபிப்பிராயம். ஆனால் பிள்ளைகள் தாமே உற்சாகத்துடனே வேலையைச் செய்யும்படி அவர்களைச் செய்விப்பதெப்படியென்னின் கூறுவாம்.

(1) வரையப்போகும் பொருள்கள் பிள்ளைகள் பார்த்துச் சந்தோஷிக்கும்படியான பொருள்களாயிருக்கவேண்டும். அப்படிப்பட்ட பொருள்கள் பெரும்பாலும் உயிருள்ள பொருள்களாயிருக்கும். பிள்ளைகளை ஒருபுஷ்பத்தை மாத்திரம் வரையச் சொல்லாமல் புஷ்பத்தையும் தேனீயையும் வரையச் சொல்வது நலம். தேனீ புஷ்பத்தைச் சுற்றிப்பறந்து அதற்குள் செல்வதைப் பிள்ளைகள் அடிக்கடி பார்த்திருப்பார்கள். அந்த நல்ல காட்சியை வரையச்சொன்னால் அவர்களுக்கு ஒரு வித ஆனந்தமுண்டாகும்.

(2) வீட்டிலிருந்து சித்திரம் வரைந்து கொண்டு வரும்படி பிள்ளைகளுக்குச் சொல்லலாம். அப்படிச் சொல்வதால் அவர்கள் தமது வீட்டிலே அழகாகக் காணப்படும் பொருள்களை வரைய ஆரம்பிப்பார்கள். அதனால் சித்திரம் வரைதல் நாளடைவில் தலையெடுக்கும்.

(3) உபாத்தியாயர் என்றுங் கவனித்துக் கொண்டிருக்கவேண்டிய தொன்றுண்டு. அதாவது, பிள்ளைகள்தாமே வரையும் பொருள்கள் யாவை என்று கண்டறிந்து குறித்துவைப்பதே.

சித்திரம் வரையவேண்டிய விதத்தினைப் பற்றிச் சில விஷயங் கூறுவோம். பிள்ளைகள் வரையும் படங்கள் வெறுங் கோடுகளினாலான படங்களாயிருக்கக்கூடாது. (1) ஒவ்வொரு படமும்வர்ணங் கொடுத்த படமாயிருக்கவேண்டும்; வர்ணம் சுண்ணாம்பாயிருப்பினும் குற்றமில்லை; வர்ணம் மாத்திரம் அவசியம். இது உண்மைதானோவென்று நண்பர்கள் தாமே பரிசோதனை செய்து தெரிந்துகொள்ளல் உசிதம்.

அடியிற் குறித்துள்ள இரண்டு வித போஸ்ட் கார்ட்படங்களில் எது மாணவர்களுக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணுமென்று பார்ப்போம்; வர்ணப் பெட்டிகள் சொற்பவிலைக்கு அகப்பட

கூடும். அகப்படா விட்டாலும் சாதாரண பென்சில் கொண்டே அநேக விதமான படங்களை வரையலாம். கற்பலகையிற் (சிலேட் பலகையிற்) படங்கள் வரைவது உசிதமன்று. ஆயினும், அப்பலகையிற் கூடசுண்ணாம்பு கொண்டுபடம் வரையலாம்.



உபாத்தியாயர் கவனிக்க வேண்டியது வேறொன்றுண்டு. அதாவது, கெட்டியான - அழுத்தமான பொருளைக் கொண்டு பிள்ளைகள் சித்திரம் வரையாதிருக்கப்பார்த்தலே. சிறுவர்களுக்குக் கைவிரல்கள் மெதுவாயிருக்கிறபடியினாலே எழுதுங் கருவியும் மெதுவாயிருக்க வேண்டும். காகிதமில்லாத பள்ளிகளிற் பிள்ளைகள் சுண்ணாம்பு கொண்டு தமது சிலேட் பலகைகளில் எழுதலாம். பலப்பங்கொண்டு எழுதப்படாது.

விருத்தியென்ற ஒரு வார்த்தையில் கல்வியின் நோக்கம் அடங்குகிறது; எந்தப் பாடம் மாணவர்களின் மனத்தை விருத்தியடையச் செய்கிறதோ அந்தப் பாடம் விரும்பத்தக்கதென்று ஒரு பொது விதமாய் வைத்துக்கொள்ளலாம். சித்திரம் வரைதல் என்ற பாடம் மனம் விருத்திபெறும்படி செய்யுமோ வென்று விசாரிப்போமாகில், அது அவ்வாறு செய்யமுடியாதென்று நமக்குத் தோன்றினுந் தோன்றும். ஆனால், நாம் மேற்கூறியவாறு பொருள்களைக்கொண்டு பாடம் நடத்துவோமானால், மாணவர்களின் உற்றுநோக்குந் திறமை விருத்தியடையா மலிருக்குமா? சித்திரம் வரைதலென்ற பாடத்தின் துணையினால் எத்தனை பொருள்களைத்தான் நன்றாய்க் கவனிக்கும்படி பிள்ளைகளைச் செய்யலாம்? மாணவர்கள் தமது கவனத்தைத் தமக்கு எதிர்ப்பட்ட ஒவ்வொரு பொருளுக்குஞ் செலுத்த ஒரு வித மனவெழுச்சி யுண்டாகும். சித்திரம் வரைதலே கண்ணுக்கு ஒரு ஆனந்தக் கண்ணாடியாய் விளங்கும்.

ஆகையினால், (2) பாடத்தைப்பொருள்களைக் கொண்டே நடத்தவேண்டும்.

(இன்னும் வரும்)

INFORMATION FOR OBJECT LESSONS

பொருட் பாடங்களை நடத்துவதற்கான விஷயம்

(106-ம் பக்கத்தொடர்ச்சி)

மரஞ் செடிகள் தமக்கு வேண்டியவாறு பூசாரத்தை ஏற்றுக்கொள்ளுகின்றன. அதுபற்றியே, ஒவ்வொரு செடியிலிருந்து உண்டாகும் ஒவ்வொரு விளை பொருளும் ஒவ்வொருவிதமாகவே யிருக்கின்றது. அதனோடு ரசமும் ஒவ்வொரு விதமாகவே உற்பத்தியாகின்றது. சில செடிகளில் மரசத்து அதிகமாகி எண்ணெய் ரூபங்கொண்டிருப்பதையும் எண்ணெயானது காய்களிலிருந்தும், விதைகளிலிருந்தும் கிடைப்பதையும், இதற்குமுன் உள்ள இரண்டு சஞ்சிகைகளில் ஆராய்ச்சி செய்தோம். வேறு சில செடிகளில் தித்திப்பான ரசம் கிடைப்பதுண்டு. அந்த ரசம் தண்டிலும், வேரிலும், ஏராளமாய் இருக்கும். (உதாரணம்) கரும்பு, Beet-root என்னும் ஒருவகைக் கிழங்கு முதலியன. மற்றும் வேறு செடிகளின் தண்டை வெட்டினால் மரசத்தானது பால் போன்று வெண்மையாய்க் கிடைக்கும். காற்று பட்டமாத்திரத்தில் அது கெட்டியாய்க் கட்டிவிடும். (உ-ம்) பெருங்காயம், இந்தியாரப்பர். வேறுவிதமான மரசத்துகளுமுண்டு, (உ-ம்) கருப்பூரம், பிசின்கள், டர்ப்பன்டையின், தார், சாம்பிராணி முதலியன.

கருப்பூரம். இது வெண்மையாகவும் கட்டியாகவும் அதிக வாசனையுடன் கூடினதாகவும் ஒருவிதக் கசப்பான ருசியைக் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கும். காற்றில் வைத்தால் சீக்கிரம் பறந்துபோம். தண்ணீரில் வெகு நிதானமாகக்கரையும்; சாராயத்தில் வெகு வேகமாகக் கரையும். சாராயத்தில் கலந்த கருப்பூரத்தை நீரோடு சேர்த்தால் கருப்பூரம் தனியாய் வந்துவிடும்.

உபயோகம். இதன் வாசனை வேகமாயிருப்பதினால் சிறு பூச்சிகள் அணுகா. ஆதலால் கம்பலங்கள் முதலியவற்றைக் காப்பாற்றக் கருப்பூரம் உதவும். இதை மருந்திலுஞ் சேர்த்து உபயோகிக்கிறார்கள். 3 அல்லது 4 கருப்பூரம் கலந்த சாராயத்துளிகளுடன் கொஞ்சம் சர்க்கரையைக் கலந்து சாப்பிட்டால் ஜலதோஷம் (Cold) நீங்கிவிடும். புன்னைமா வினத்திலிருந்து இது கிடைக்கின்றது. சீனாவிலும், ஜப்பானிலும், விசேஷமாக இது கிடைக்கின்றது. இதனைத் தரும் மரம் கருப்பூரமரம் என்று அழைக்கப்படுகின்றது.

"கற்பூரம்போலக் கடலுப் பிருந்தாலும் கற்பூரமாமோ கடலுப்பு" என்னுஞ் செய்யுள் இவ்விடத்து அறியத்தக்கது.

(இன்னும் வரும்.)

K. R. RAMASAWMY AIYER, Head Master,
Board School & Secretary Teachers' Association,
Ramapatnam.

NOTES FOR LESSONS ON NARUNTHOGAI

நறுந்தொகை கற்பிப்பதற்கான சில குறிப்புக்கள்

(123 - ம் பக்கத்தொடர்ச்சி.)

நூல்

எழுத்தறிவித்தவ னிறைவனாகும்

அரும் பதம். இறைவன். இப்பதத்திற்கு 'கடவுள்' அல்லது 'தலைவன்' என்று பொருட்படவாக்கியத்திற்கு அருத்தங் கூறலாம். கடவுள் என்று பொருள் உரைத்தற்குச் சமாதானம்-எழுத்தறிதல் கடவுளை யறிதற்கும் வீடு பெறுதற்குங் காரணமாயிருத்தலால், அதனை அறிவித்தோர் கடவுளைப்போல மதிக்கத்தக்கவர் ஆவார்.

[இவ் வாக்கியம் மாணவருக்கு உபாத்தியாயரின் ஏற்றத்தை எடுத்துரைக்கின்றது.]

கல்விக்கழகு கசடறமொழிதல்

அரும்பதங்கள். கசடற=கசடு+அற; கசடு—குற்றம். இதற்குக் கீழ்மை, ஐயம் என்றும் அருத்தம் உண்டு; கசத்தல்-வெறுத்தல்; இதிலிருந்து உற்பத்தியான மற்றப் பதங்கள் - கசடர் (கீழ்மக்கள்), கசட்டை (கசப்பு, துவர்ப்பு, இளமை) : கசட்டைத்தயிர்-ஆடை நீக்கின தயிர், கசட்டைப்பிஞ்சு - கசப்புப் பிஞ்சு.

அற - அறும்படி, நீங்க, தீர; அறு என்னும் வினையடியாகப் பிறந்த வினையெச்சம். அற்றபொருள்; அறுபட்டகயிறு.

எழுத்தறிவிக்கப்பட்ட ஒருவனுடைய கல்விக்கு அழகாவது தன்னை வழிபட்டுக் கேட்போர்க்குக் குற்றமறச் சொல்லுதலாம். அவ்வாறு சொல்லாவிடின் அவ்வுபாத்தியாயன் இகழப்படுவானென்பது கருத்து.

[இவ் வாக்கியம் போதகாசிரியருக்குப் போதனா முறையின் தன்மையை எடுத்துரைக்கின்றது. எனவே, இவ்விரண்டு வாக்கியங்களை ஒரே நாளில் உதாரணங்களுடனே கற்பித்தல் நலம் என்பது ஏற்படுகின்றது.]

(இன்னும் வரும்.)

JUDGING HANDWRITING

கையெழுத்தினைத் தணிக்கைசெய்தல்

கையெழுத்தைத் தணிக்கை செய்யும்பொழுது கவனிக்க வேண்டியவைகளைப்பற்றி இஷ்டர்கள்—P. பரிமணப் பல்லவராயர் அவர்கள் (57 ப), ஜானகிராம் பிள்ளை அவர்கள், (102) உரைத்துள்ள, ஐந்து அம்சங்களினுள், "பெரிது, சிறிது, தூரம், இடம், ஆரம்பம், முடிவு, அளவு, ஒழுங்கு, நேர், சாய்வு" என்னும் பத்து விஷயங்களைக் கவனிக்கும்படி எடுத்துரைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. என்றாலும், "எழுத்துக்களை, இலே சாயும் அழுத்தமாயும் எழுதவேண்டிய இடங்களில் அவை அவ்விதமாக எழுதப்பட்டிருக்கின்றனவா? (அதாவது, ச. என்ற எழுத்தில் இடது புறம் லேசாயும் வலதுபுறம் அழுத்தமாயும் எழுதப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும்)" என்னும், எனது அபிப்பிராயத்திற் கிணங்கிய வாக்கியமும்; கையெழுத்தினைத் தணிக்கைசெய்வதற் கின்றியமையாவிஷயம்" என எண்ணுகிறேன்.

இங்ஙனம்

K. S. ARUMUGAM,

போர்டு ஸ்கூல்மாஸ்டர், வேலாயுதம் பாளையம்,

தாராபுரம் தாலுக்கா.

இந்தியமாதர் சரித்திரம் முதற்பாகம் விலை அணா. 5.

இப் புத்தகத்தில் நமது தேசசரித்திரத்தில் பிரக்யாதிபெற்று தோன்றுகிற ஸ்திரீரத்தினங்களாகிய பதிவிரதா சிரோமணிகளின் உண்மை சரித்திரங்களும் பெண்கல்வியும் மனையாள் முதலியனவற்றைக்குறித்து கூறுகின்றன. பெண்கள் பாடசாலைகளுக்கு ஒவ்வொரு உபாத்தியாயரும் இதைக் கற்பிப்பது உசிதம்.

இந்நூலாசிரியர் திருச்சிறாப்பள்ளி செயின்டு ஜோசப்காலேஜ் முன் தமிழ்ப்பண்டிதர் ம- ள-ள-ஸ்ரீ, வ. பி. வேங்கடராம சாஸ்திரியார் அவர்கள்.

இப்புத்தகம் சென்னை பவளக்காரத்தெரு 114 - ம் நெம்பரில் ஸ்ரீ திருமலை அண்டுகம்பெனியாரிடத்தில் கிடைக்கும்.